# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989 மே 2, செவ்வாய்க்கிழமை

சித்திரை 19, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு—2020

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை''

பிற உயிர்கள் படும் துன்பத்தை, தன் துன்பம்போல் கருதி காப்பாற்றாவிட்டால், பெற்றுள்ள அறிவினால் ஆகப் போகும் பயன்தான் என்ன ?

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

காவல்துறை மற்றும் நீதி நிர்வாகத்துறை மாவட்ட அதிகார வரம்பு மாற்றம்

169—(*வினா எண். 245)—திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 32-வது வட்டத்தைச் சார்ந்த கொளத்தூர் பகுதி, காவல்துறை மற்றும் நீதி நிர்வாகத் துறைகள் செங்கை அண்ணா மாவட்ட அதிகார வரம்பின் கீழே நீடிப்பது மாற்றியமைக்கப்பட்டு, சென்னை மாநகர காவல் மற்றும் நீதி நிர்வாக அதிகாரிகளின் வரம்பின் கீழ் கொண்டு வரப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 32-வது வட்டத்தைச் சார்ந்த கொளத்தூர் பகுதி, ஏற்கெனவே சென்னை நகர தலைமைக் குற்றவியல் நீதிபதியின் எல்லைக்குட்பட்டும் சென்னை செஷன்ஸ் நீதிபதியின் எல்லைக்குட்படுத்துவதற்குமான ஆணை—அரசாணை (நிலை) எண். 3154-உள்துறை, நாள் 14-11-1986ன்படி வெளியிடப்பட்டது. சென்னை நகர காவல் எல்லையின்கீழ் கொண்டு வருவதைப் பற்றி இப்போதுதான் வேறு 9 காவல் நிலையங்கள் சென்னை நகர காவல் எல்லையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதால், பிறகுதான் பரிசீலிக்க வேண்டும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் உட்பட, சில மாநகராட்சி வட்டங்கள் ஏற்கெனவே செங்கை-அண்ணா மாவட்டத்தில் சேர்ந்திருந்து, பிறகு சென்னை மாநகராட்சி 150 வட்டங்களாக உயர்த்தப்பட்ட போது, சென்னை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்டது. ஆகவே அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய இந்தக் காவல் நிலையங்கள் மற்றும் நீதித் துறையைச் சார்ந்த நிர்வாகம் சென்னை மாநகரத்தின் எல்லைக்குள் கொண்டு வரப்படுவதுதான் பொருத்தமாக இருக்கும். என்றுதான் இந்த வினா எழுப்பப்பட்டது. ஏற்கெனவே சில காவல் நிலையங்கள் சென்னை மாநகராட்சி காவல்துறை ஆணையரின் வரம்பின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிற காரணத்தால், இந்தப் பகுதியும் மற்றும் கொடுங்கையூர் போன்ற பகுதியும்கூட சென்னை மாநகர காவல் துறை ஆணையரின் நிர்வாகத்தின் கீழும், சென்னை நகர நீதி நிர்வாகத்தின்கீழும் கொண்டு வரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் இப்போதுதான் காவல்துறை மானியத்தின் போது அறிவித்தபடி வில்லிவாக்கம், ராஜமங்கலம், விருகம்பாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, பரங்கிமலை, மீனம்பாக்கம், கருணாநிதிநகர், ஆதம்பாக்கம் ஆகிய 9 காவல் நிலையங்களை செங்கை-அண்ணா மேற்கு மாவட்ட எல்லையிலிருந்து பிரித்து, சென்னைப் பெருநகர் காவல் சரகத்தோடு இணைவ சேர்க்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை குறித்து—அதாவது கொளத்தூர் பகுதியையும் இதில் இணைப்பது குறித்து, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவினாசியில் தீயணைப்பு நிலையம்

170—(*வினா எண். 523) திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அவினாசியில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கோவை மாவட்டம், அவினாசியில் ஓர் ஊர்தி கொண்ட தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்கும் பொருட்டு, அதனை முன்னுரிமைப் பட்டியலில் 46-வது

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் உட்பட, சில மாநகராட்சி வட்டங்கள் ஏற்கெனவே செங்கை-அண்ணா மாவட்டத்தில் சேர்ந்திருந்து, பிறகு சென்னை மாநகராட்சி 150 வட்டங்களாக உயர்த்தப்பட்ட போது, சென்னை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்டது. ஆகவே அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய இந்தக் காவல் நிலையங்கள் மற்றும் நீதித் துறையைச் சார்ந்த நிர்வாகம் சென்னை மாநகரத்தின் எல்லைக்குள் கொண்டு வரப்படுவதுதான் பொருத்தமாக இருக்கும். என்றுதான் இந்த வினா எழுப்பப்பட்டது. ஏற்கெனவே சில காவல் நிலையங்கள் சென்னை மாநகராட்சி காவல்துறை ஆணையரின் வரம்பின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிற காரணத்தால், இந்தப் பகுதியும் மற்றும் கொடுங்கையூர் போன்ற பகுதியும்கூட சென்னை மாநகர காவல் துறை ஆணையரின் நிர்வாகத்தின் கீழும், சென்னை நகர நீதி நிர்வாகத்தின்கீழும் கொண்டு வரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் இப்போதுதான் காவல்துறை மானியத்தின் போது அறிவித்தபடி வில்லிவாக்கம், ராஜமங்கலம், விருகம்பாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, பரங்கிமலை, மீனம்பாக்கம், கருணாநிதிநகர், ஆதம்பாக்கம் ஆகிய 9 காவல் நிலையங்களை செங்கை-அண்ணா மேற்கு மாவட்ட எல்லையிலிருந்து பிரித்து, சென்னைப் பெருநகர் காவல் சரகத்தோடு அவை சேர்க்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை குறித்து—அதாவது கொளத்தூர் பகுதியையும் இதில் இணைப்பது குறித்து, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அவினாசியில் தீயணைப்பு நிலையம்

170—(*வினா எண். 523) திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அவினாசியில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கோவை மாவட்டம், அவினாசியில் ஓர் ஊர்தி கொண்ட தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்கும் பொருட்டு, அதனை முன்னுரிமைப் பட்டியலில் 46-வது

*1989 மே 21*

இடத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. 1988–89 ஆம் ஆண்டில் மிகுந்த நிதி நெருக்கடியின் காரணமாக, அரசால் முன்னுரிமைப் பட்டியலில் உள்ள எல்லா இடங்களிலும் தீயணைப்பு நிலையங்கள் திறக்க முடியவில்லை. 1989–90 ஆம் ஆண்டிலும் நிதிநிலை நெருக்கடியைச் சமாளிக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலை உள்ளது என்றாலும்கூட, காவல்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, புதிதாக 10 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருக்கிறேன். அதில் அவினாசி இடம் பெறவிலலை. அடுத்து, இடம் பெறுவதற்கான பரிசீலனை செய்யப்படும்.

**திரு. ஆர். அண்ணாநம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி நகரம் மிகப் பெரிய நகரம். அதைச் சுற்றிலும் பல்வேறு பகுதிகளிலும் தீயணைப்பு நிலையங்கள் இல்லை. அங்கேயிருந்து 15 மைல் தொலைவில் உள்ள திருப்பூருக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. அவினாசி நகரத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு முதல்வர் அவர்கள்மீது மக்கள் பற்றும் பாசமும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். எனவேதான் என்னை எதிர்த்துப் போட்டியிட்ட—மாண்புமிகு முதல்வரால் நிறுத்திவைக்கப்பட்ட அந்த வேட்பாளருக்கு என்னைவிட கூடுதலான வாக்குகளை அவினாசி மக்கள் அளித்திருக்கிறார்கள். எனவே, முதல்வர் அவர்கள்மீது நமபிக்கை உள்ள அந்த அவினாசி நகரத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் உருவாக்கித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** முதல்வர் மீது அவர்களுக்கு மாத்திரமல்ல. அண்ணாநம்பிக்கும் நம்பிக்கை உண்டு என்று கருதுகிறேன் (சிரிப்பு). நம்பிக்கை வீண் போகாது.

**திரு. ஆர். அண்ணாநம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் எனது தொகுதி மக்கள் மீது வைத்து இருக்கிற நம்பிக்கைக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் எனக்கும் ஒரு ஊக்கம் ஊட்டுவதற்காகக் கூறியமைக்கு மீண்டும் நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. ஏஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு தலைவரவர்களே, இப்போது காற்று அதிகமாக இருக்கிறது. மழையும் இல்லை; வெயில் அதிகமாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் குடிசைகளில் பிடித்த நெருப்பு அவைகளைச் சுற்றி உடனடியாகப் பரவி விடுகிறது. எந்த நார்ம்ஸ்—ன் அடிப்படையில், எத்தனை மைல் சுற்றளவில் ஒரு தீயணைப்புப் படை அமைப்பதாக அரசிடம் உத்தேசம் இருக்கிறது? ஏற்கனவே நாம் ஆரம்பித்த தீயணைப்பு நிலையங்கள் எல்லாம், அவைகளின் வெகிக்கிள்களில் தண்ணீர் கொண்டுவருவதற்கான லாரிகள் சரியானபடி இயங்கவில்லை. இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதை மாண்புமிகு முதல்வரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே தமிழ்நாட்டிலே இப்போது 174 தீயணைப்பு நிலையங்கள் இருக்கின்றன. மேலும் தீயணைப்பு நிலையங்களை அதிகப்படுத்த வேண்டும் என்கின்ற ஆர்வம் அரசுக்கு இருக்கின்றது. அந்தக் காரணத்தினாலே தான் ஏற்கனவே 48 தீயணைப்பு நிலையங்கள் அறிவிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டு, அவைகளில் மூன்றே மூன்று தீயணைப்பு நிலையங்கள் தான் திறந்து இருந்த போதிலும்கூட இந்த அரசு இப்போது நெருக்கடியான நிதி நிலை நேரத்திலே கூட அதைப் பொருட்படுத்தாமல் 10 நிலையங்கள் ஏற்படுத்த அறிவிப்புக் கொடுத்து இருக்கிறது. இந்த ஆண்டு அந்த நிலையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. அந்தத் தீயணைப்பு நிலையங்களுக்கு அம்மையார் அவர்கள் கேட்டது போல தொடர் செலவினமாக 3,48,860 ரூபாய், மற்றும் தொடரா செலவினமாக 4,60,100 ரூபாய் செலவாகக் கூடும். அவைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தான் தீயணைப்பு நிலையங்களை நாம் அமைக்க வேண்டியிருக்கிறது.

**டாக்டர் எஸ். சுந்தரராஜ் :** பேரவைத் தலைவரவர்களே. தீயணைப்பு நிலையங்கள் இருந்தும், அங்கு வண்டி இல்லாமல் நிறைய நிலையங்கள் இருக்கின்றன. உதாரணமாக இராமநாதபுரத்தில் தீயணைப்பு நிலையம் உண்டு; வண்டி இல்லை, பரமக்குடியில் தீயணைப்பு நிலையம் உண்டு; வண்டி இல்லை தேவகோட்டையில் தீயணைப்பு நிலையம் உண்டு; வண்டி இல்லை. அதேமாதிரி வண்டி இல்லாத தீயணைப்பு நிலையங்களுக்கு வண்டிகள் கொடுக்கவேண்டும். அங்கு ஆட்கள் போடப்பட்டு சம்பளமாக அரசு பணம் வீணாவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ? அங்கு தீயணைப்பு நிலையங்கள் இருந்தும் வண்டிகள் இல்லாமல் இருப்பதால் உடனே வண்டி கொடுக்கப்படுமா என்று கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எல்லா தீயணைப்பு நிலையங்களிலும் இதுபோல் பரிசீலனை செய்து என்னென்ன குறைபாடுகள் இருக்கிறதோ அந்தக் குறைபாடுகள் உடனடியாக நீக்கப்பட வேண்டுமென்று துறை கேட்டுக்கொள்ளப் பட்டு இருக்கிறது.

**திரு. சி. கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தீயணைப்பு நிலையங்கள் இருக்கிற இடங்களிலே ஒன்றிரண்டு வண்டிகள் தான் இருக்கின்றன. அந்த வண்டிகளும் கூட, திடீரென்று தீ பிடித்து விட்டால் அவைகள் செல்கின்ற அளவுக்கு தகுதியானவையாக இல்லாமல் இருக்கின்றன. தள்ளிவிட்டு அந்த வண்டிகளை ஸ்டார்ட் பண்ண வேண்டிய நிலை பல இடங்களில் இருக்கிறது. ஆகவே அப்படிப் பட்ட வண்டிகளை நவீனப்படுத்துகிற முறையிலேயும், உயரமான இடங்களில் தீ பிடித்துவிட்டால் அதை அணைப்பதற்குத்

1989 மே 2]

தேவையான நவீன கருவிகள் இல்லாத நிலையில் இன்றைக்கு பல இடங்கள் இருக்கின்றன ; அவைகளும் நவீனப்படுத்தப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : : தீயணைப்பு நிலையங் களில் இருக்கின்ற குறைபாடுகளைத் தீர்க்க உடனடியாகத் தேவையானவற்றை அரசு அந்தத் துறையின் மூலமாகச் செய்யும். தொடர்ந்து ஒரு நீண்டகாலத் திட்டமாக அவை களைச் செய்வதற்காகத்தான் இரண்டாவது போலீஸ் கமிஷன் இப்போது அமைக்கப்படுகிறது. அதனுடைய பரிந்துரைகளின் படி இந்தக் காரியங்கள் நடைபெறும்.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தீயணைப்பு நிலையங்களிலிருந்து புறப்படுகிற வாகனங்கள் தீ பிடிக்கின்ற இடத்திற்கு உடனடியாகப் போய் சேரமுடியாமல் இரயில்வே கேட் போன்றவைகள் தடுப்பாக இருக் கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியில், கொருக்குப் பேட்டைப் பகுதியில் சமீபத்தில் தீ விபத்து ஏற்பட்டபோது அந்தத் தொல்லை ஏற்பட்டது. எனவே இரயில்வே கேட்டுக்கு அந்தப் புறம் ஒரு தீயணைப்பு வண்டி எப்போதும் நிறுத்தி வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல அவைகளை எல்லாம் போலீஸ் கமிஷன் ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 171 மற்றும் 172 மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

(முற்பகல் 9-10)

குளச்சல்-மூசைமன் காலனி இணைப்புப் பால வேலை.

173—(*வினா எண். 300) திரு. ஆ. பாலையா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

குளச்சல்-சைமன் காலனி இணைப்புப் பால வேலைய முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பால வேலையை விரைவில் முடிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1989 மே 2]

தேவையான நவீன கருவிகள் இல்லாத நிலையில் இன்றைக்கு பல இடங்கள் இருக்கின்றன; அவைகளும் நவீனப்படுத்தப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : : தீயணைப்பு நிலையங் களில் இருக்கின்ற குறைபாடுகளைத் தீர்க்க உடனடியாகத் தேவையானவற்றை அரசு அந்தத் துறையின் மூலமாகச் செய்யும். தொடர்ந்து ஒரு நீண்டகாலத் திட்டமாக அவை களைச் செய்வதற்காகத்தான் இரண்டாவது போலீஸ் கமிஷன் இப்போது அமைக்கப்படுகிறது. அதனுடைய பரிந்துரைகளின் படி இந்தக் காரியங்கள் நடைபெறும்.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தீயணைப்பு நிலையங்களிலிருந்து புறப்படுகிற வாகனங்கள் தீ பிடிக்கின்ற இடத்திற்கு உடனடியாகப் போய் சேரமுடியாமல் இரயில்வே கேட் போன்றவைகள் தடுப்பாக இருக் கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியில், கொருக்குப் பேட்டைப் பகுதியில் சமீபத்தில் தீ விபத்து ஏற்பட்டபோது அந்தத் தொல்லை ஏற்பட்டது. எனவே இரயில்வே கேட்டுக்கு அந்தப் புறம் ஒரு தீயணைப்பு வண்டி எப்போதும் நிறுத்தி வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல அவைகளை எல்லாம் போலீஸ் கமிஷன் ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 171 மற்றும் 172 மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

(முற்பகல் 9-10)

குளச்சல்-மூசைமன் காலனி இணைப்புப் பால வேலை.

173—(*வினா எண். 300) திரு. ஆ. பாலையா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

குளச்சல்-சைமன் காலனி இணைப்புப் பால வேலைய முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பால வேலையை விரைவில் முடிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### அனுமான் நதி மீது மேம்பாலம்.

174—(*வினா எண் 788)—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராதாபுரம் தொகுதி, வடக்கன்குளம் ரோட்டில் அனுமான் நதி மீது மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அனுமான் நதியிலே ஐரிஷ் பாலம் இருக்கின்ற காரணத்தினால் மழைக் காலங்களிலே சுமார் 75 கிராமங்கள் போக்குவரத்தில் பாதிக்கப்படுகின்றன. எனவே, இது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு அதிலே ஒரு பாலம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த அனுமான் நதியில், மழை பெய்தால் மட்டும் தான் ஏராளமான நீர் வருகிறது என்ற குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, மழை பெய்கின்ற காலத்திலேகூட அதிகமான தண்ணீர் வரும்பொழுது போக்குவரத்து நின்று போகின்றது என்பது உண்மைதான். எனவே, எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பால வேலை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி. (குறுக்கீடு) வேண்டியதில்லை, சரி ஒருவேளை அனுமான் நதி என்பதனால் அனைவரும் தாவியே போய்விடலாம் என்று கருதியிருப்பார்கள். (சிரிப்பு)

### நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து வசதி.

175—(*வினா எண். 821) திரு. ரவி அருணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையத்தில் இருந்து பொட்டல்புதூர் — பாப்பான்குளம்—இடைகால் — அரியநாயகிபுரம்—சேரன்மகாதேவி வழியாக நாகர்கோவில் செல்ல நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

அனுமான் நதி மீது மேம்பாலம்.

174—(*வினா எண் 788)—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராதாபுரம் தொகுதி, வடக்கன்குளம் ரோட்டில் அனுமான் நதி மீது மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அனுமான் நதியிலே ஐரிஷ் பாலம் இருக்கின்ற காரணத்தினால் மழைக் காலங்களிலே சுமார் 75 கிராமங்கள் போக்குவரத்தில் பாதிக்கப்படுகின்றன. எனவே, இது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு அதிலே ஒரு பாலம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த அனுமான் நதியில், மழை பெய்தால் மட்டும் தான் ஏராளமான நீர் வருகிறது என்ற குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, மழை பெய்கின்ற காலத்திலேகூட அதிகமான தண்ணீர் வரும்பொழுது போக்குவரத்து நின்று போகின்றது என்பது உண்மைதான். எனவே, எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பால வேலை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி. (குறுக்கீடு) வேண்டியதில்லை, சரி ஒருவேளை அனுமான் நதி என்பதனால் அனைவரும் தாவியே போய்விடலாம் என்று கருதியிருப்பார்கள். (சிரிப்பு)

நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து வசதி.

175—(*வினா எண். 821) திரு. ரவி அருணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையத்தில் இருந்து பொட்டல்புதூர் — பாப்பான்குளம்—இடைகால் — அரியநாயகிபுரம்—சேரன்மகாதேவி வழியாக நாகர்கோவில் செல்ல நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

1989 மே 2]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கேள்வியில் குறிப்பிடப்பெற்றுள்ள வழித் தடத்தின் பெரும்பகுதி கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக எல்லைக்குள் இருப்பதால், அந்தக் கழகத்தைக் கலந்து நேசமணி போக்கு வரத்துக் கழகம் மேற் சொன்ன தடத்தில் பேருந்து விடுவதற் கான நடவடிக்கை எடுக்கும், இந்தத் தடத்தில் எதிர் பார்க்கப் படும். பயணிகள் விகிதம், கழகத்தினுடைய நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நாகர்கோவிலிலிருந்து விடப்படுகின்ற பேருந்துகள் நேசமணி போக்குவரத்துக் கழகத்தால் தான் இயக்கப்படுகின்றன. ஆகவே, இதையும் நேசமணி போக்கு வரத்துக் கழகத்தின் மூலம் அரசு இயக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் கடையத்திலிருந்து சேரன்மகாதேவி வழியாக நாகர்கோயிலுக்குச் செல்லுகிற இந்தத் தடத்தின் மொத்த நீளம் 106 கிலோ மீட்டர். இதிலே நேசமணி போக்குவரத்துக் கழகத்தினுடைய எல்லை 19 கிலோ மீட்டர் தூரம் தான் இருக்கிறது. எனவே தான் இரண்டு போக்குவரத்துக் கழகங்களுடனும் கலந்து பேசி, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் இந்த வழித் தடத்தில் பேருந்து விடு வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கிறது.

திரு. ரவி அருணன் : பேரவைத் தலைவரவர்களே, மேற் கூறிய வழித் தடங்களின் வழியாக சேரன்மகாதேவி வரை நகரப் பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

திரு. வி. தம்புசாமி : பேரவைத் தலைவரவர்களே, இதற்கு முன் சென்னை—நாகப்பட்டினம் இடையில் கடலூரில் டிரைவர்கள், கண்டக்டர்கள் மாற்றுகின்ற நிலையம் ஒன்று இருந்தது. அது இடைக்காலத்திலே ரத்து செய்யப்பட்டிருக் கிறது. மீண்டும் அந்த நிலையம் ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூல வினாவுக்குத் தொடர்பற்றது.

திரு. ஆர். அண்ணாநம்பி : பேரவைத் தலைவரவர்களே. வட கோவை மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளது. இது எப்பொழுது தொடங்கப்படும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட கோவை மேம்பாலம் கட்டக் கூடிய திட்டம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் பத்து கோடி ரூபாய் செலவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அந்தப் பாலம் கட்டக் கூடிய இடத்தில் காட்டிலாக்காவிற்குச் சொந்தமான நிலம் தேவைப்படுகின்ற காரணத்தினாலே, கொஞ்ச நாள் தாமதப்பட்டு, தற்போது அந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சரவர்களும் அந்த இடத்தை நேரடியாக இரண்டு மாதங்களுக்கு முன்னாலே வந்து பார்வையிட்டு, வழங்குவதற்கான உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றார்கள். மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்தவுடன் அந்தப் பணிகள் விரைவாகத் தொடங்கப்படும்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பணிமனைக் கட்டிடம்.

176—(*வினா எண் 976)—திரு. ஏ. ஜி. சம்பத் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூரில் உள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நிறுவனத்திற்கென பணிமனைக் கட்டிடம் நிறுவப்படாததற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூரில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கென கிளை பணிமனை ஒன்று ஏற்கனவே நிறுவப்பட்டு 1–7–1985 முதல் இயங்கி வருகிறது.

இதைத் தவிர தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கென சொந்தமாக பணிமனை நிறுவுவதற்காக அருள்மிகு வீரடேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலம் திருக்கோயிலூர் வட்டம் மணம்பூண்டி கிராமத்தில் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டு மேற்படி நிலத்தை நேரடி விலைக்கு வாங்குவதற்கான முயற்சி நடைபெற்று வருகிறது. நிலம் கிடைத்தவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பணிமனைக் கட்டடம் கட்டுகிற போது அந்தப் பணிமனைக்காக கொடுக்கப்பட்டிருக்கிற சிமென்ட், ஜல்லி, கம்பிகள் அந்தத் துறையில் பணியாற்றுகிற

திரு. ஆர். அண்ணாநம்பி : பேரவைத் தலைவரவர்களே. வட கோவை மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளது. இது எப்பொழுது தொடங்கப்படும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட கோவை மேம்பாலம் கட்டக் கூடிய திட்டம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் பத்து கோடி ரூபாய் செலவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அந்தப் பாலம் கட்டக் கூடிய இடத்தில் காட்டிலாக்காவிற்குச் சொந்தமான நிலம் தேவைப்படுகின்ற காரணத்தினாலே, கொஞ்ச நாள் தாமதப்பட்டு, தற்போது அந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சரவர்களும் அந்த இடத்தை நேரடியாக இரண்டு மாதங்களுக்கு முன்னாலே வந்து பார்வையிட்டு, வழங்குவதற்கான உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றார்கள். மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்தவுடன் அந்தப் பணிகள் விரைவாகத் தொடங்கப்படும்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பணிமனைக் கட்டிடம்.

176—(*வினா எண் 976)—திரு. ஏ. ஜி. சம்பத் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூரில் உள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நிறுவனத்திற்கென பணிமனைக் கட்டிடம் நிறுவப்படாததற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூரில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கென கிளை பணிமனை ஒன்று ஏற்கனவே நிறுவப்பட்டு 1—7—1985 முதல் இயங்கி வருகிறது.

இதைத் தவிர தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கென சொந்தமாக பணிமனை நிறுவுவதற்காக அருள்மிகு வீரடேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலம் திருக்கோயிலூர் வட்டம் மணம்பூண்டி கிராமத்தில் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டு மேற்படி நிலத்தை நேரடி விலைக்கு வாங்குவதற்கான முயற்சி நடைபெற்று வருகிறது. நிலம் கிடைத்தவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பணிமனைக் கட்டடம் கட்டுகிற போது அந்தப் பணிமனைக்காக கொடுக்கப்பட்டிருக்கிற சிமென்ட், ஜல்லி, கம்பிகள் அந்தத் துறையில் பணியாற்றுகிற

1989 மே 2]

மானேஜிங் டைரக்டர், மானேஜர் ஆகியவர்களுடைய வீடு களுக்குப் பயன் படுத்துவது என்று அமைச்சர் அவர்களுக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா? அதன் மீது என்ன நட வடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் குறிப்பாக என் னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அப்படிப்பட்ட புகார் ஏதாவது தெரியு மானால், தனிப்பட்ட முறையில் சொன்னால் கூட கடுமையான நடவடிக்கையை மேற்கொள்வோம்.

திரு. அ. லே. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை வட்டத்தைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதியில் இன்னும் போதுமான பஸ் போக்கு வரத்து ஏற்படுத்தாத சூழ்நிலை இருக்கிறது. திருக்கோவி லூரைப் போன்று அங்கே கிளை பணி மனை ஒன்றை ஏற்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கிளை பணி மனைத் தொடங்குவதைப் பொறுத்த வரையில் ஆராய்ந்து தான் சொல்ல வேண்டும். ஆனால் தேவையான போக்குவரத்து வசதிகள் எந்தெந்த கிராமத்திற்கு வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக் கிறார்களோ, அவைகளையெல்லாம் சர்வே செய்து உடனடியாக பேருந்து விடுவதற்கான ஏற்பாடுகளை போக்கு வரத்துக் கழகங்கள் மூலம் செய்வோம்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கு பழனியில் ஒரு இடம் இருந்தது..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தென்னாற்காடு மாவட் டம் திருக்கோவிலூருக்குப் பக்கத்திலா பழனி இருக்கிறது? உட்காருங்கள். வினா எண்கள் 177 மற்றும் 178 இறுதியாக எடுத்துக்கொள்ளப்படும்.

### விவசாயப் பயிர்களுக்கு மருந்து அடித்தல்.

179---(*வினா எண். 805)--- திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நோயினால் விவசாயப் பயிர்கள் பாதிக்கப்படும்போது அரசே மருந்து அடித்துவிட்டு அதற்கான செலவை நிலவரியுடன் (கிஸ்து) வசூல் செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

1989 மே 2]

மானேஜிங் டைரக்டர், மானேஜர் ஆகியவர்களுடைய வீடு களுக்குப் பயன் படுத்துவது என்று அமைச்சர் அவர்களுக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா ? அதன் மீது என்ன நட வடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் குறிப்பாக என் னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அப்படிப்பட்ட புகார் ஏதாவது தெரியு மானால், தனிப்பட்ட முறையில் சொன்னால் கூட கடுமையான நடவடிக்கையை மேற்கொள்வோம்.

திரு. அ. லே. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை வட்டத்தைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதியில் இன்னும் போதுமான பஸ் போக்கு வரத்து ஏற்படுத்தாத சூழ்நிலை இருக்கிறது. திருக்கோவி லூரைப் போன்று அங்கே கிளை பணி மனை ஒன்றை ஏற்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கிளை பணி மனைத் தொடங்குவதைப் பொறுத்த வரையில் ஆராய்ந்து தான் சொல்ல வேண்டும். ஆனால் தேவையான போக்குவரத்து வசதிகள் எந்தெந்த கிராமத்திற்கு வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக் கிறார்களோ, அவைகளையெல்லாம் சர்வே செய்து உடனடியாக பேருந்து விடுவதற்கான ஏற்பாடுகளை போக்கு வரத்துக் கழகங்கள் மூலம் செய்வோம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கு பழனியில் ஒரு இடம் இருந்தது..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தென்னாற்காடு மாவட் டம் திருக்கோவிலூருக்குப் பக்கத்திலா பழனி இருக்கிறது? உட்காருங்கள். வினா எண்கள் 177 மற்றும் 178 இறுதியாக எடுத்துக்கொள்ளப்படும்.

### விவசாயப் பயிர்களுக்கு மருந்து அடித்தல்.

179---(*வினா எண். 805)--- திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா--

நோயினால் விவசாயப் பயிர்கள் பாதிக்கப்படும்போது அரசே மருந்து அடித்துவிட்டு அதற்கான செலவை நிலவரியுடன் (கிஸ்து) வசூல் செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, நோயினால் பாதிக்கப்பட்ட பயிர்கள் மீது மருந்து அடித்துவிட்டு அதற்கான செலவை நிலவரியுடன் வசூல் செய்வதற்கான செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு நெற்பயிர் 100 ஏக்கர், 200 ஏக்கர் என்ற அளவில் நிறைந்து இருக்கிறது. சில வசதி படைத்தவர் கள் உடனடியாக அந்த மருந்தை அடித்து விடுகிறார்கள். ஏழை களால் உடனடியாக மருந்தை வாங்கி அடிக்க முடியவில்லை. ஆகவே எல்லோருக்கும் சேர்ந்தே,---இதற்கு என்ன செலவானா லும் பரவாயில்லை---உணவு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய அள வில் தயவுசெய்து மீண்டும் மறு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு எங்கேயெல்லாம் நோயால் பாதிக்கப்படுகிறதோ அங்கே எல்லாம் மருந்தை அடித்துவிட்டு பின்னர் பணத்தை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க முடியுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏழைகள் செய்கிற விவசாயம் பாதிக்கப்படுகிறது என்பதைக் கருத்திற் கொண்டு சிறு விவசாயிகள், குறு விவசாயி கள் என்று பிரித்து அவர்களுக்கு மானியம் தரப்பட்டு, பூச்சி மருந்துகள் கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு கிறது. இருந்தாலும் முன்பு ஒருமுறை இப்படிப்பட்ட நட வடிக்கையை எங்கள் அரசு எடுத்த போது இந்த அவையில் எவ்வளவு பெரிய குற்றச்சாட்டுகள் எல்லாம் சுமத்தப்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார் கள். ஆகவே, அது பற்றிய பரிசீலனை அவ்வளவு விரைவாக எடுப்பதற்கு இல்லை. இது சம்பந்தமான யோசனைகள் இன் இன்றைக்கு இருக்கிற கொள்கை அளவில் ஏதாவது சொல்வார் களானால் திருத்தி, மாற்றி செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உணவு உற்பத்தியைப் பெருக்கக் கூடிய அளவில் தான் நான் சொல்கிறேன். நீங்கள் என்ன செய்கிறீர்களோ அது வேறு விஷயம். ஆனால் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். பாதிக்கப்படுகிற ஏழைகள் உடனடியாக எங்கே மானியம் கொடுக்கிறார்கள் என்று அலைந்து பார்ப்பதற்குள் ளாக அந்த விவசாயம் நாசமாகப் போய் விடும். இதை மீண்டும் மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். நாங் கள் எல்லாம் மருந்தை அடித்துவிட்டால் பணத்தை திருப்பிக் கட்டக்கூடாது என்ற அளவிற்கு இருக்க மாட்டோம். எனவே, மருந்தை அடித்தால் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கிற அளவில் இதை மீண்டும் மறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1989மே 2]

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,, இப்படிப்பட்ட ஒரு தோராயமான செலவை எல்லோர் தலையிலும் கட்டுவது என்பது அவ்வளவு நல்லதல்ல. நோய் வந்த இடங்களுக்கும், வராத இடங்களுக்கும் சேர்த்து அடிக்கிற காரணத்தால், சில புதிய நோய் வருவதாக நிபுணர்கள் சொல்கிறார்கள். எல்லாவற்றிற்கும் எப்போதுமே மருந்தடிக்க வேண்டும் என்ற நியதி இல்லை. ஆகவே அப்படிப்பட்டவைகளிடமிருந்து காப்பாற்றுவதற்காகவாவது தயவு செய்து இந்தத் திட்டத்தை கைவிட வேண்டும் என்று உறுப்பினர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் பூச்சி மருந்துகள் அடித்தும் எல்லா இடங்களிலும் பூச்சிகள் சாவது இல்லை. பூச்சி மருந்துகள் தயாரிக்கின்ற கம்பெனிகள் சரியாகத் தயாரிப்பதில்லை. கலப்படம் இருக்கிறது. ஆகவே அரசு நேரடியாக அந்த பூச்சி மருந்தைத் தயார் செய்து கொடுததால், விவசாயிகள் பலன் பெறுகின்ற வகையில் அது சிறப்பாக அமையும் என்று நான் கருதுகிறேன். அமைச்சர் அவர்களைக் கேட்டால் எந்தக் கம்பெனி என்று கேட்பார். நான் அதற்கும் பதில் சொல்வேன். ஒரு கம்பெனி மட்டும் பாக்கியல்ல, எல்லாக் கம்பெனிகளுமே இதைச் சரியாகத் தயாரிப்பதில்லை என்று நான் கூறிக் கொண்டு, பூச்சி மருந்துகளைத் தயாரிப்பதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, அரசாங்கம் சில இடங்களில் சில மருந்துகளைத் தயாரித்து வருகிறது. போதுமான அளவிற்கு அது இல்லை. ஆகவே வெளியிலே வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு நிச்சயமாக அப்படிப்பட்ட குறைகள் எல்லாம் ஏற்படக் கூடாது என்பதைக் கருத்தி கொண்டு, ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு, ஆரம்பத்திலேயே இதைப் பற்றி பரிசோதனை செய்து, எந்த நேரத்திலும் அந்த மருந்துகள் பரிசோதனைக்கு உட்பட்டது என்ற காண்ட்ராக்ட் மூலம் நிபுணர் குழு மூலமே பரிசீலித்து, வாங்குவதற்கான திட்டத்தை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. கூடுமான வரையில் இடையில் அப்படிப்பட்ட புகார்கள் வந்தால், அப்போது அந்தக் கம்பெனியை நீக்கிவிட்டு, வேறு கம்பெனியிலே வாங்குவதற்கான உத்தேசம் இந்த அரசுக்குத் தற்போது இருக்கிறது.

[1989 மே 2

திரு. எல். மூக்கையா : தலைவர் அவர்களே, பூச்சி மருந்துகள் வாங்கி அடிக்க முடியாத நிலையில் இருக்கக் கூடிய ஏழை சிறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் உரம், பூச்சி மருந்து வழங்குகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, இபபோதும் அந்தத் திட்டம் இருக்கிறது. ஆனால் எல்லோருக்கும் என்று இல்லாமல் ஆதி திராவிட விவசாயிகள், சிறு விவசாயிகள சிறு விவாசாயிகள் என்று இருக்கிறது. இன்னும் எல்லா விவசாயிகளுக்கும் கட்டுப்படியாகக் கூடிய அளவிற்கு மானியம தருவது ஒரு சிறப்பு உணவுத் திட்டததின் அடிப்படையில் வழங்கப்பட்டும் வருகிறது. கூடுமான வரையில் இந்த ஆண்டு 60 இலட்சம் ரூபாய் இந்தத் துறைக்கு என கொஞ்சம் அதிகமான அளவிற்கு நிதியை ஒது கி இருக்கிறோம். சென்ற ஆண்டை விட 2 லட்சத்து 85 ஆயிரம் ஹெக்டேருக்குப் பயன்படுத்த திட்டமிடப்பட்டு இருக்கிறது. அந்தக் குறை இந்த ஆண்டு இருக்காது என்று நான் கருதுகிறேன்.

விவசாயக் கிணறுகளுக்கு இடையே இடைவெளி.

180—(*வினா எண். 577)—திரு. ஈஸ்வரன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயக் கிணறுகளுக்கு ஒரு கிணறுக்கும் மற்றொரு கிணறுக்கும் 700 அடி இடைவெளி இருக்க வேண்டும் என்றிருப்பதை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாநிலத்தில் பல்வேறு பகுதிகளுக்கான நிலநீர் ஆய்வை மேற்கொண்டு, அதன் அடிப்படையில் நிலநீர் ல குகளு, இரண்டு கிணறுகளுக்கிடையே அனுசரிக்கப்பட வேண்டிய இடைவெளி தூரமும் நிர்ணயிக்கப்படுகின்றது. இதை மாற்ற அரசுக்கு உத்தேசமில்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த 700 அடி இடைவெளி என்பது கடன் பெற்று கிணறு தோண்டுகிறவர்களுக்கு மட்டும்தானா ? அப்படி என்று சொன்னால் பணம் படைத்தவர்கள் யாரையும் கேட்காமல் அதிகமான கிணறுகளைத் தோண்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே இப்போது இருக்கின்ற அந்த நிலையினை சற்று அதிகமாக விளக்கி எங்களுக்கு அறிவு ஒளி தருவாரா ?

திரு. எல். மூக்கையா : தலைவர் அவர்களே, பூச்சி மருந்துகள் வாங்கி அடிக்க முடியாத நிலையில் இருக்கக் கூடிய ஏழை சிறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் உரம், பூச்சி மருந்து வழங்குகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, இபபோதும் அந்தத் திட்டம் இருக்கிறது. ஆனால் எல்லோருக்கும் என்று இல்லாமல் ஆதி திராவிட விவசாயிகள், சிறு விவசாயிகள சிறு விவாசாயிகள் என்று இருக்கிறது. இன்னும் எல்லா விவசாயிகளுக்கும் கட்டுப்படியாகக் கூடிய அளவிற்கு மானியம தருவது ஒரு சிறப்பு உணவுத் திட்டததின் அடிப்படையில் வழங்கப்பட்டும் வருகிறது. கூடுமான வரையில் இந்த ஆண்டு 60 இலட்சம் ரூபாய் இந்தத் துறைக்கு என கொஞ்சம் அதிகமான அளவிற்கு நிதியை ஒது கி இருக்கிறோம். சென்ற ஆண்டை விட 2 லட்சத்து 85 ஆயிரம் ஹெக்டேருக்குப் பயன்படுத்த திட்டமிடப்பட்டு இருக்கிறது. அந்தக் குறை இந்த ஆண்டு இருக்காது என்று நான் கருதுகிறேன்.

விவசாயக் கிணறுகளுக்கு இடையே இடைவெளி.

180—(*வினா எண். 577)—திரு. ஈஸ்வரன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயக் கிணறுகளுக்கு ஒரு கிணறுக்கும் மற்றொரு கிணறுக்கும் 700 அடி இடைவெளி இருக்க வேண்டும் என்றிருப்பதை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாநிலத்தில் பல்வேறு பகுதிகளுக்கான நிலநீர் ஆய்வை மேற்கொண்டு, அதன் அடிப்படையில் நிலநீர் ல குகளு, இரண்டு கிணறுகளுக்கிடையே அனுசரிக்கப்பட வேண்டிய இடைவெளி தூரமும் நிர்ணயிக்கப்படுகின்றது. இதை மாற்ற அரசுக்கு உத்தேசமில்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த 700 அடி இடைவெளி என்பது கடன் பெற்று கிணறு தோண்டுகிறவர்களுக்கு மட்டும்தானா ? அப்படி என்று சொன்னால் பணம் படைத்தவர்கள் யாரையும் கேட்காமல் அதிகமான கிணறுகளைத் தோண்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே இப்போது இருக்கின்ற அந்த நிலையினை சற்று அதிகமாக விளக்கி எங்களுக்கு அறிவு ஒளி தருவாரா ?

1989 மே 2]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் சொன்னது உண்மை. கடன் வாங்குகின்றவர்களுக்குத்தான் இந்த இடைவெளி தூரம் இது வரையில் நிர்ணயிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் வசதி படைத்தவர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப 100 அடிக்கு இடையிலே கூட கிணறுகளை எடுக்கக்கூடிய ஒரு வாய்ப்பு தமிழகத்திலே இருந்து கொண்டு இருக்கிறது. அதனாலே கடன் வாங்கிக் கிணறு எடுக்கின்றவர்களுடைய கிணறுகள் பொய்த்துப் போகின்றன. இதையெல்லாம் மனதிலே கொண்டு தனிப்பட்ட முறையில் தனது சொந்த நிதி வசதியைப் பயன்படுத்தி அமைக்கும் கிணறுகளுக்கு இடைவெளி தூர நிபந்தனைகள் விதிக்கப்படுவது அவசியம் என இந்த அரசு கருதுவதால், அதற்காக நிலநீர் கட்டுப்பாடு சட்டம், கிரவுண்ட் வாட்டர் லெஜிஸ்லேஷன், ஒன்றைக் கொண்டு வர அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது.

திரு. கோ. வீரையன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இடைவெளி தூரம் 700 அடி என்பதைச் சொந்தமாகக் கிணறு வெட்டக்கூடியவர்களுக்கும் பொருந்தக்கூடிய முறையிலே கொண்டு வர இருப்பதாக. அதோடு வசதி படைத்தவர்கள் நிலத்தில் எவ்வளவு ஆழம் போக முடியுமோ, அவ்வளவு ஆழம் போய் நிலத்தடி நீர் பூராவையும் எடுத்துவிடுவதால், சாதாரண ஏழை, நடுத்தர விவசாயிகள் அந்த அளவிற்குப் போக நிதி வசதி இல்லாததும், கடன் பெற முடியாத நிலையிலும் இருக்கக்கூடிய அவர்களுடைய கிணறுகள் எல்லாம் வற்றி ஏழை, மற்றும் மத்திய தர விவசாயிகள் எல்லாம் பாதிக்கப்படுகிற நிலைமையிருக்கிறது. அதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு முடிவு காண முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அதையும் அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதியில் நிலத்தடி நீர் ஒவ்வொரு ஆண்டும் நீர்ப் பிடிப்பு ரீ-சார்ஜ் ஆகிவிடுகிறது. எனவே காவிரி டெல்டா பகுதியிலே மட்டுமாவது, இந்த 700 அடி இடைவெளி என்பதை மாற்றியமைத்து, இடைவெளி இந்த அளவு இருக்கவேண்டும் என்ற அந்த நடைமுறை விதிகளைத் தளர்த்தி அரசு அறிவிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தூரம் இந்த இடைவெளி தஞ்சை மாவட்டம் முழுவதற்கும் குறைக்கப்பட்டு இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே மட்டும் நீர்வளம் அதிகமாகவும் அதே நேரத்தில் அதிகக் கிணறுகள் இல்லாமலும் இருக்கிற காரணத்தால் இந்த இடைவெளி 150 மீட்டராக, அதாவது ஏறக்குறைய 500 அடி அளவிற்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் நிலைமையை எண்ணிப் பார்த்தால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே நான் பவன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக் கொள்வது—மிகவும் திறமையாகச் செய்வார்கள் என்ற நம்பிக்கையில் கேட்டுக் கொள்கிறேன். 700 அடி என்று இருப்பதையெல்லாம் ரத்து செய்து விட்டு, விவசாயிகளுக்கு நிலத்தடி நீரை அரசாங்கத்தின் மூலமாக அல்லது ஊராட்சி ஒன்றியங்களில் அதிகாரிகளை நியமித்து, எந்தெந்த விவசாயிகள் கிணறுகள் வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவர்களுக்கு நிலத்தடி நீரை ஆய்வு செய்து ஆழ் குழாய்களை அமைத்து, மின் இணைப்பையும் கொடுக்கின்ற நிலைமையை உருவாக்கினாலொழிய, விவசாயிகள் வாழ்கின்ற நிலைமை தமிழ்நாட்டில் நிச்சயமாக இருக்க முடியாது என்ற எண்ணம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப் போல் இரண்டு கிணறுகளுக்கும் இடையே உள்ள தூரத்தை நிர்ணயிப்பது என்பது ஏதோ கூட்டுறவுத் துறை அல்ல. நிலநீர் தலைமைப் பொறியாளர்தான் இதை நிர்ணயிக்கிறார். அவர் கூட தொழில் நுட்ப ரீதியில் ஒவ்வொரு பஞ்சாயத்துப் பகுதியிலும் ஆய்வு மேற்கொண்டு, அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஒன்றியப் பகுதியிலும் அதன் நீர் வளத்தை கருத்திற்கொண்டு, அதற்கேற்றவாறு இடைவெளி தூரம் நிர்ணயம் செய்யப்பட்டு முடிவுகள் எடுக்கப்படுகின்றன. எனவே அந்தப் பொறியாளர் தான்எந்தெந்த ஒன்றியங்களிலே 700 அடி இடைவெளி இருக்கலாம்எந்தெந்த ஒன்றியங்களிலே 500 அடி இடைவெளிஇருக்கலாம் என்று தான் முடிவு செய்கிறார். அப்படி முடிவு செய்கின்ற நேரத்திலேகூட 20 சதவீதம் டிஸ்கிரிஷனரி பவர் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதாவது 500 அடி என்றால், ஒரு குறிப்பிட்ட இடத்திலே 400 அடி இருந்தால்கூட, அதற்காக லோன் சாங்ஷன் செய்வதற்கு டிஸ்கிரிஷனரி பவர் கொடுத்திருக்கிறார்கள். அதையும் இந்த அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போன்று இப்போது தமிழகத்தில் எத்தனை கிணறுகள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, 1988 நவம்பர் வரையில் தமிழகத்திலே ஏறத்தாழ 17 இலட்சம் பாசன பணிகளுக்கான கிணறுகள் பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

1989 மே 2]

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக வெட்டப்படுகின்ற கிணறுகளுக்கு இந்த குறைந்தபட்ச இடைவெளி இருக்கலாம் என்று அரசு நிர்ணயிப்பதிலே எந்தவித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் ஏற்கனவே இருக்கின்ற கிணறுகளுக்கு மின்சார இணைப்பு கேட்டாலோ அல்லது ஆயில் இஞ்சின் வேண்டுமென்று வங்கிகளிலே கடன் கேட்டாலோ, அவர்கள் கூட அந்த குறைந்தபட்ச தூரம் இருக்கவேண்டுமென்று வலியுறுத்துகிறார்கள். 50, 60 வருடங்களாக இருக்கின்ற கிணறுகளுக்காவது இந்த விதி விலக்கை அளித்து, அவர்கள் அந்தக் கடன் தொகையைப் பெற அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் குறிப்பிட்ட 17 இலட்சம் பாசனக் கிணறுகளில் 10.8 இலட்சம் கிணறுகள் ஏற்கனவே மின்சார வசதி பெற்று இருக்கின்றன. அந்தக் கிணறுகளுக்கு இப்போது இந்த இடைவெளியைப் பற்றி யாரும் வலியுறுத்துவது இல்லை.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: தலைவர் அவர்களே, கேட்ட கேள்வியினை என்னால் அமைச்சருக்கு சரியாக புரியவைக்க முடியவில்லை என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு ஏதோ இன்னும் பதில் வரவில்லை என்று கருதுகிறார்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இரண்டு கிணறுகள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு கிணற்றுக்கு அடுத்தாற்போல இன்னொரு கிணறு. ஒரு கிணறு மின்சார இனைப்பை பெற்றுள்ளது. பக்கத்தில் இருக்கின்ற கிணற்றுக்கு மின்சார இணைப்பைக் கேட்டு, மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் மோட்டார் வாங்குவதற்காக அந்த விவசாயி வங்கிக்குச் சென்று விசாரித்தால், இந்த குறைந்தபட்ச தூரம் இல்லை. அதற்காக உங்களுக்குத் தர மாட்டோம் என்று சொல்கிறார்கள். ஆகவே ஏற்கனவே இருக்கின்ற கிணறுகளுக்கு மின்சார இணைப்பைக் கொடுக்கின்றபோதோ, அல்லது ஆயில் இஞ்சின் வாங்குகின்றபோதோ இந்த குறைந்தபட்ச தூரத்தினுடைய விதியைத் தளர்த்தமுடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அப்படி தளர்த்துவதற்கு இப்போது சட்டத்திலே இடம் இல்லை. ஏனென்றால் இந்த இடைவெளி குறைவாக இருந்து அரசு பணத்தை கடனாகக் கொடுத்து, அதற்குப்

பிறகு 3 மாதம் 4 மாதத்திலே அந்தக் கிணறு வற்றிவிடு மானால் மறுபடியும் பம்ப் செட்டும் வேலை செய்யாது கிணற்றிலேயும் தண்ணீர் இருக்காது. எனவேதான் குறைந்தது 500 அடியிலிருந்து 700 அடி இடைவெளி இருக்க வேண்டு மென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள். அது மட்டும் அல்ல. இன்னொரு விளக்கம் தந்தால் மாண்புமிகு உறுப்பினர் விடை அளித்ததாகத் திருப்தி அடைவார் என்று நினைக்கிறேன். கடன் கொடுக்கக் கூடிய அந்தப் பணத்தை நம்முடைய அரசாங்கம் நாபார்டிலிருந்து பெற்றுதான் கொடுக்கிறது. அந்த விதிமுறைகளைக் கட்டாயமாக அமல் படுத்த வேண்டும் என்று சொல்வதே நாபார்ட்தான். எனவே நாபார்ட் தான் அதை பரிசீலிக்க வேண்டுமே தவிர நம்முடைய அரசு பரிசீலிக்க முடியாது.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பிரதேசங்களில் அமையும் விவசாயக் கிணறுகளுக்கு இடையில் இருக்க வேண்டிய இடைவெளிக்கு ஏதேனும் சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவ ரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போல நீலகிரி மற்றும் கொல்லிமலைப் போன்ற மலைப் பாங்கான பிரதேசங்களில் நல்ல நீர் வளம் இருக்கிற காரணத்தால் அந்தப் பகுதிகளுக்கு இடைவெளி தூரம் 100 மீட்டராக நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடனை ஏழை விவசாயிகளுக்கு அளிக்கிறோம். ஒரு ஏழை விவசாயி தண்ணீர் பாய்கின்ற அள வைப் பார்த்து தன்னுடைய எல்லையிலே கிணறு எடுத்து விடுகிறார். பக்கத்திலே இருக்கிற ஏழை விவசாயிக்கு 700 அடி வீஸ்தீரணமே இல்லாத போது அந்த விவசாயி எப்படி கிணறு எடுக்க முடியும் என்ற காரணத்தால் இது போன்ற விவசாயிகளுக்காவது அந்தச் சலுகை வழங்கப்படுமா என்று அறிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அந்த மாதிரி சலுகைகள் வழங்குதாக இப்போது உத்தேசம் இல்லை.

### ஆதி திராவிடர் நலப்பள்ளி துவக்குதல்.

181—(*வினா எண். 66) திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம் சவரம்பாக்கம் கிராமத்தில் ஆதி திராவிடர் நலப்பள்ளி துவக்கக் கோரி மனு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

பிறகு 3 மாதம் 4 மாதத்திலே அந்தக் கிணறு வற்றிவிடுமானால் மறுபடியும் பம்ப் செட்டும் வேலை செய்யாது கிணற்றிலேயும் தண்ணீர் இருக்காது. எனவேதான் குறைந்தது 500 அடியிலிருந்து 700 அடி இடைவெளி இருக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள். அது மட்டும் அல்ல. இன்னொரு விளக்கம் தந்தால் மாண்புமிகு உறுப்பினர் விடை அளித்ததாகத் திருப்தி அடைவார் என்று நினைக்கிறேன். கடன் கொடுக்கக் கூடிய அந்தப் பணத்தை நம்முடைய அரசாங்கம் நாபார்டிலிருந்து பெற்றுதான் கொடுக்கிறது. அந்த விதிமுறைகளைக் கட்டாயமாக அமல் படுத்த வேண்டும் என்று சொல்வதே நாபார்ட்தான். எனவே நாபார்ட் தான் அதை பரிசீலிக்க வேண்டுமே தவிர நம்முடைய அரசு பரிசீலிக்க முடியாது.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பிரதேசங்களில் அமையும் விவசாயக் கிணறுகளுக்கு இடையில் இருக்க வேண்டிய இடைவெளிக்கு ஏதேனும் சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போல நீலகிரி மற்றும் கொல்லிமலைப் போன்ற மலைப் பாங்கான பிரதேசங்களில் நல்ல நீர் வளம் இருக்கிற காரணத்தால் அந்தப் பகுதிகளுக்கு இடைவெளி தூரம் 100 மீட்டராக நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடனை ஏழை விவசாயிகளுக்கு அளிக்கிறோம். ஒரு ஏழை விவசாயி தண்ணீர் பாய்கின்ற அளவைப் பார்த்து தன்னுடைய எல்லையிலே கிணறு எடுத்து விடுகிறார். பக்கத்திலே இருக்கிற ஏழை விவசாயிக்கு 700 அடி வீஸ்தீரணமே இல்லாத போது அந்த விவசாயி எப்படி கிணறு எடுக்க முடியும் என்ற காரணத்தால் இது போன்ற விவசாயிகளுக்காவது அந்தச் சலுகை வழங்கப்படுமா என்று அறிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அந்த மாதிரி சலுகைகள் வழங்குதாக இப்போது உத்தேசம் இல்லை.

### ஆதி திராவிடர் நலப்பள்ளி துவக்குதல்.

**181—(*வினா எண். 66) திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம் சவரம்பாக்கம் கிராமத்தில் ஆதி திராவிடர் நலப்பள்ளி துவக்கக் கோரி மனு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

1989 மே 2]

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) செங்கை—அண்ணா மாவட்டம் மதுராந்தகம் வட்டம் சவரம்பாக்கம் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலப் பள்ளி துவக்கக் கோரி மனு ஏதும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆதி திராவிட மாணவ மாணவியர்கள் கல்வி உபகாரச் சம்பளம் பெறுவதற்கு வருமான வரம்பை உயர்த்துதல்

182—(*வினா எண். 2061) திரு. இளம்வழுதி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிட மாணவ, மாணவி யர்கள் கல்வி உபகாரச் சம்பளம் பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பை உயர்த்த அரசுக்குக்கோரிக்கைவந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவா அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட பெற்றோர் பாது காவலரின் ஆண்டு வருமான உச்ச வரம்பாகிய ரூ. 12,000-ஐ உயர்த்துவதற்கு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மாநில அரசின் கல்வி உதவித் தொகை பெறுவதற்காக நிர்ண யிக்கப்பட்ட பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான உச்ச வரம்பினை 1989-90ஆம் கல்வியாண்டிலிருந்து ரூ. 12,000-ல் இருந்து ரூ. 15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழுது முடிக்கும் முன்னரே குழந்தையின் பசி அறிந்து பாலூட்டும் தாயைப் போல் விளங்குகின்ற நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நான் இந்தக் கேள்வியைக் கேட்டு அது அட்மிட் ஆவதற்குள் இந்த 12,000-மாக இருந்த வருமான வரம்பை ரூ. 15,000-மாக உயர்த்தி அறிவித்து விட்டார்கள். அதற்காக எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அடுத்து மத்திய அரசு நிர்ணயித்து உள்ள வருமான வரம்பை மேலும் உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) செங்கை—அண்ணா மாவட்டம் மதுராந்தகம் வட்டம் சவரம்பாக்கம் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலப் பள்ளி துவக்கக் கோரி மனு ஏதும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆதி திராவிட மாணவ மாணவியர்கள் கல்வி உபகாரச் சம்பளம் பெறுவதற்கு வருமான வரம்பை உயர்த்துதல்

182—(*வினா எண்: 2061) திரு. இளம்வழுதி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிட மாணவ, மாணவி யர்கள் கல்வி உபகாரச் சம்பளம் பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பை உயர்த்த அரசுக்குக்கோரிக்கைவந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவா அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட பெற்றோர் பாது காவலரின் ஆண்டு வருமான உச்ச வரம்பாகிய ரூ. 12,000-ஐ உயர்த்துவதற்கு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மாநில அரசின் கல்வி உதவித் தொகை பெறுவதற்காக நிர்ண யிக்கப்பட்ட பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான உச்ச வரம்பினை 1989-90ஆம் கல்வியாண்டிலிருந்து ரூ. 12,000-ல் இருந்து ரூ. 15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழுது முடிக்கும் முன்னரே குழந்தையின் பசி அறிந்து பாலூட்டும் தாயைப் போல் விளங்குகின்ற நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நான் இந்தக் கேள்வியைக் கேட்டு அது அட்மிட் ஆவதற்குள் இந்த 12,000-மாக இருந்த வருமான வரம்பை ரூ. 15,000-மாக உயர்த்தி அறிவித்து விட்டார்கள். அதற்காக எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அடுத்து மத்திய அரசு நிர்ணயித்து உள்ள வருமான வரம்பை மேலும் உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இதற்கு மேலே அந்த உச்ச வரம்பை உயர்த்த முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகப்பேறு இல்லங்களுக்கு செவிலியர்கள் நியமித்தல்

183—(*வினா எண். 113)—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் உள்ள மகப்பேறு இல்லங்களுக்கு செவிலியர்கள் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, தற்பொழுது 8,558 கிளை சுகாதார நிலையங்கள் (மகப்பேறு இல்லங்கள்) தமிழ் நாட்டில் செயல்பட்டு வருகின்றன. எல்லா கிளை சுகாதார நிலையங்களிலும் மகப்பேறு உதவியாளர் (செவிலியர்கள்) ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய செங்கற்பட்டு தொகுதியில் பாண்டூர், அஞ்சூர், மழுவதூர் போன்ற பகுதிகளில் மகப்பேறு இல்லங்கள் நிறுவப்பட்டு கடந்த 4, 5 ஆண்டுகளாக அவை திறக்கப்படாமலே இருப்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா செவிலியர் நியமனத்தை குறித்தது. இருந்தாலும் அங்கே மருத்துவமனைகள் திறக்கப்படுமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். நான் முன்பே இந்த மன்றத்திலே பதில் அளித்திருக்கிறேன். பல இடங்களில் இதுபோன்ற மருத்துவமனைகள் திறக்கப்படாமல் இருப்பதாக குறிப்புகள் வந்த வண்ணம் இருக்கின்றன. அவைகளைத் திறப்பதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும், எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வீ. தமிழ்மணி : துணைக் கேள்வி செவிலியர் தொடர்பாக வரவேண்டும்.

திரு. வீ. தமிழ்மணி : தலைவர் அவர்களே, கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்பாக ஐ.என்.பி திட்டத்தின் மூலமாக இந்த மகப்பேறு இல்லங்கள் கட்டப்பட்டு 5, 6 ஆண்டுகளாக அவை திறக்கப்படாமல் இருக்கின்றன. அதற்கு செவிலியர்கள் இதுவரையில் நியமிக்கவில்லை. என்பதையாவது அரசு அறியுமா? அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதைஅறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இதற்கு மேலே அந்த உச்ச வரம்பை உயர்த்த முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகப்பேறு இல்லங்களுக்கு செவிலியர்கள் நியமித்தல்

183—(*வினா எண். 113)—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் உள்ள மகப்பேறு இல்லங்களுக்கு செவிலியர்கள் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, தற்பொழுது 8,558 கிளை சுகாதார நிலையங்கள் (மகப்பேறு இல்லங்கள்) தமிழ் நாட்டில் செயல் பட்டு வருகின்றன. எல்லா கிளை சுகாதார நிலையங்களிலும் மகப்பேறு உதவியாளர் (செவிலியர்கள்) ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய செங்கற்பட்டு தொகுதியில் பாண்டூர், அஞ்சூர், மழுவதூர் போன்ற பகுதிகளில் மகப்பேறு இல்லங்கள் நிறுவப்பட்டு கடந்த 4, 5 ஆண்டுகளாக அவை திறக்கப்படாமலே இருப்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா செவிலியர் நியமனத்தை குறித்தது. இருந்தாலும் அங்கே மருத்துவ மனைகள் திறக்கப்படுமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். நான் முன்பே இந்த மன்றத்திலே பதில் அளித்திருக்கிறேன். பல இடங்களில் இதுபோன்ற மருத்துவமனைகள் திறக்கப்படாமல் இருப்பதாக குறிப்புகள் வந்த வண்ணம் இருக்கின்றன. அவைகளைத் திறப்பதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும், எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வீ. தமிழ்மணி : துணைக் கேள்வி செவிலியர் தொடர்பாக வரவேண்டும்.

திரு. வீ. தமிழ்மணி : தலைவர் அவர்களே, கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்பாக ஐ.என்.பி திட்டத்தின் மூலமாக இந்த மகப்பேறு இல்லங்கள் கட்டப்பட்டு 5, 6 ஆண்டுகளாக அவை திறக்கப்படாமல் இருக்கின்றன. அதற்கு செவிலியர்கள் இதுவரையில் நியமிக்கவில்லை. என்பதையாவது அரசு அறியுமா? அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதைஅறிய விரும்புகிறேன்.

1989 மே 2]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, திறக்கப்படுகின்றபோது செவிலியர்கள் நியமிக்கப்பட்டு, அது நடைமுறைக்கு கொண்டு வரப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் மகப்பேறு இல்லங்கள் இருக்கின்றன. செவிலியர் இருப்பது இல்லை. இரவு நேரத்தில் அவசரமாக வருகின்றபோது பல இடங்களில் இருப்பது இல்லை. பொதுவாக கிராமப்புறங் களில் குழந்தை இறப்பு அதிகமாக இருப்பதாகச் சொல்லப் படுவதால், இந்த முறையில் செவிலியர்கள் இருப்பதற்கும் ஒரு அவசரமான கேஸ் என்று சொன்னால் பெரிய மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லக்கூடிய ஏதாவது ஒரு வாகன ஏற்பாடும் மைய மான ஒரு இடத்தில் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர்கள் இருப்பது இல்லை என்று சொல்கின்றபோது நியமிக்கப்பட்ட செவிலியர்கள் பணிக்கு வருவதில்லை என்ற புகார் சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். அவ்வாறு செவிலியர்கள் மருத்துவ மனை களில் இல்லை என்று சொல்லி தனிப்பட்ட இடங்களிலிருந்து புகார்கள் வரும் என்று சொன்னால் இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்

திரு. எம். சீரங்கன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மகப்பேறு இல்லங்கள் இருக்கும்படியான பல இடங் களில் அது முறையாக இயங்குவதற்கு பாதுகாப்பான வசதிகளும் தண் ணீர் போன்ற வசதிகள் கூட இல்லாமல் பாதுக்காப்பற்ற நிலையில் இருக்கிறது. அதை அரசு அறியுமா ? அதற்கு விரைவில் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட சில இடங்களில் இதுபற்றிய பிரச்சினைகள் எழுப்பப்பட்டு அவைகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

பத்மநாபபுரம் நகராட்சிக்கு குடிநீர் வழங்கல்.

184—(*வினா எண். 420) திரு. செ. நூர்முகமது : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் நகராட்சிக்கென குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயற்படுத்தப் படும் ?

*1989 மே 2]*

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, திறக்கப்படுகின்றபோது செவிலியர்கள் நியமிக்கப்பட்டு, அது நடைமுறைக்கு கொண்டு வரப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் மகப்பேறு இல்லங்கள் இருக்கின்றன. செவிலியர் இருப்பது இல்லை. இரவு நேரத்தில் அவசரமாக வருகின்றபோது பல இடங்களில் இருப்பது இல்லை. பொதுவாக கிராமப்புறங் களில் குழந்தை இறப்பு அதிகமாக இருப்பதாகச் சொல்லப் படுவதால், இந்த முறையில் செவிலியர்கள் இருப்பதற்கும் ஒரு அவசரமான கேஸ் என்று சொன்னால் பெரிய மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லக்கூடிய ஏதாவது ஒரு வாகன ஏற்பாடும் மைய மான ஒரு இடத்தில் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர்கள் இருப்பது இல்லை என்று சொல்கின்றபோது நியமிக்கப்பட்ட செவிலியர்கள் பணிக்கு வருவதில்லை என்ற புகார் சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். அவ்வாறு செவிலியர்கள் மருத்துவ மனை களில் இல்லை என்று சொல்லி தனிப்பட்ட இடங்களிலிருந்து புகார்கள் வரும் என்று சொன்னால் இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்

திரு. எம். சீரங்கன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மகப்பேறு இல்லங்கள் இருக்கும்படியான பல இடங் களில் அது முறையாக இயங்குவதற்கு பாதுகாப்பான வசதிகளும் தண்ணீர் போன்ற வசதிகள் கூட இல்லாமல் பாதுக்காப்பற்ற நிலையில் இருக்கிறது. அதை அரசு அறியுமா ? அதற்கு விரைவில் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட சில இடங்களில் இதுபற்றிய பிரச்சினைகள் எழுப்பப்பட்டு அவைகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

பத்மநாபபுரம் நகராட்சிக்கு குடிநீர் வழங்கல்.

*184*—(*வினா எண். *420*) திரு. செ. நூர்முகமது : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் நகராட்சிக்கென குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயற்படுத்தப் படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பத்மநாபபுரம் நகராட்சி மற்றும் இருபது வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ. 231.10 இலட்சங்களுக்கான உத்தேச மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இக் குடிநீர்த் திட்ட செயலாக்கத்திற்கான நகர்மறன்ற ஒப்புதல் தீர்மானம் எதிர்பார்க்கப்படுகிறது. இத்தீர்மானம் கிடைக்கப் பெற்ற பின், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக இத்திட்டம் பற்றிய செயற்குறிப்பு அனுப்பி வைக்கும் அரசின் ஒப்புதல் பெற்றபின், திட்ட செயலாக்கப் பணிகள் தொடங்கப்படும்.

கூட்டுக் குடிதண்ணீர் திட்டம்.

185—(*வினா எண். 994) திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா !

பொன்மலை நகராட்சி, (அ) ஆலத்தூர், கோ. அபிஷேகபுரம், அரியமங்கலம் பேரூராட்சிகளின் பகுதிகளுக்கான கூட்டுக் குடி தண்ணீர் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ?

(ஆ) அதற்கான மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான பணிகள் நடை பெற்று வருகின்றன.

(ஆ) திட்டச் செலவு ரூ. 421.97 இலட்சம், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ. 15.53 இலட்சம்.

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பற்றி, இது மிக விரைவாக இருக்க வேண்டும் என்ற நிலைமையில் தான் இந்தத் திட்டம் ஒவ்வொரு முறையும் ஒத்தி வைக்கப்படுவதும், பிறகு கிணறு வெட்டி அது பெயிலியர் ஆகி மறுபடியும் வெட்டக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, ஜனங்கள் ஏற்கனவே பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்படு வதால், மிகவும் விரைவாக அதைத் துவக்கி அமல் நடத்து வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண். மிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முதல் நாள் நான் திருச்சிக்கு சென்ற பொழுதுகூட அங்கிருந்த குடிநீர் வடி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பத்மநாபபுரம் நகராட்சி மற்றும் இருபது வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ. 231.10 இலட்சங்களுக்கான உத்தேச மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இக் குடிநீர்த் திட்ட செயலாக்கத்திற்கான நகர்மறன்ற ஒப்புதல் தீர்மானம் எதிர்பார்க்கப்படுகிறது. இத்தீர்மானம் கிடைக்கப் பெற்ற பின், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக இத்திட்டம் பற்றிய செயற்குறிப்பு அனுப்பி வைக்கும் அரசின் ஒப்புதல் பெற்றபின், திட்ட செய லாக்கப் பணிகள் தொடங்கப்படும்.

**கூட்டுக் குடிதண்ணீர் திட்டம்.**

185—(*வினா எண். 994) திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா !

பொன்மலை நகராட்சி, (அ) ஆலத்தூர், கோ. அபிஷேகபுரம், அரியமங்கலம் பேரூராட்சிகளின் பகுதிகளுக்கான கூட்டுக் குடி தண்ணீர் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ?

(ஆ) அதற்கான மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான பணிகள் நடை பெற்று வருகின்றன.

(ஆ) திட்டச் செலவு ரூ. 421.97 இலட்சம், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ. 15.53 இலட்சம்.

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர் களே, இந்தத் திட்டத்தைப் பற்றி, இது மிக விரைவாக இருக்க வேண்டும் என்ற நிலைமையில் தான் இந்தத் திட்டம் ஒவ்வொரு முறையும் ஒத்தி வைக்கப்படுவதும், பிறகு கிணறு வெட்டி அது பெயிலியர் ஆகி மறுபடியும் வெட்டக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, ஜனங்கள் ஏற்கனவே பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்படு வதால், மிகவும் விரைவாக அதைத் துவக்கி அமல் நடத்து வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண். மிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முதல் நாள் நான் திருச்சிக்கு சென்ற பொழுதுகூட அங்கிருந்த குடிநீர் வடி

கால் வாரிய அதிகாரிகளை அழைத்து இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நேரிடையாகவே சொல்லி இருக்கிறேன். இது குறித்து விரைவாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.40)

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டம் சம்பந்தமாக பல மாவட்டங்களில் ஏராளமான பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. கோவையியிலேயும் அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? அங்கே பல பஞ்சாயத்துகளுக்கு இந்தத் திட்டம் கொண்டு வருவதாக இருக்கின்றது. மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. வறட்சிப் பகுதியாதலால், தண்ணீர் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக, அத்திக்கடவு திட்டத்தைச் செயலாக்கி, அந்தக் கோவை பகுதி மக்களுக்குக் குடிநீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலிருந்து கோவைக்கு விமானத்தில் செல்ல வேண்டும் என்று சொன்னால் கூட, குறைந்த பட்சம் இரண்டு மணி நேரம் ஆகும் என்று கருதுகிறேன். எனவே, திருச்சி சம்பந்தப்பட்ட கேள்விகளைக் கேட்டால் பதில் அளிக்க முடியும்.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ. அபிஷேகபுரம் பஞ்சாயத்து என்னுடைய தொகுதியில் அடங்கியிருப்பதால், இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். கோ. அபிஷேகபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக இந்த ஆண்டு இரண்டு கோடியே, 37 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடுகள் போடப்பட்டு, நம்முடைய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அது வந்திருக்கிறது. இந்த ஆண்டு, அந்தத் திட்டம் விரைவில் முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து தனி வினா எழுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### காஞ்சி கிராமத்தில் துணை மின் நிலையம் விரிவுப்படுத்துதல்

186—*வினா எண். 39—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், காஞ்சி கிராமத்தில் உள்ள துணை மின் நிலையத்தை விரிவு படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில்உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1989 மே 2]

கால் வாரிய அதிகாரிகளை அழைத்து இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நேரிடையாகவே சொல்லி இருக்கிறேன். இது குறித்து விரைவாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.40)

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டம் சம்பந்தமாக பல மாவட்டங்களில் ஏராளமான பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. கோவையிலேயும் அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? அங்கே பல பஞ்சாயத்துகளுக்கு இந்தத் திட்டம் கொண்டு வருவதாக இருக்கின்றது. மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. வறட்சிப் பகுதியாதலால், தண்ணீர் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக, அத்திக்கடவு திட்டத்தைச் செயலாக்கி, அந்தக் கோவை பகுதி மக்களுக்குக் குடிநீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலிருந்து கோவைக்கு விமானத்தில் செல்ல வேண்டும் என்று சொன்னால் கூட, குறைந்த பட்சம் இரண்டு மணி நேரம் ஆகும் என்று கருதுகிறேன். எனவே, திருச்சி சம்பந்தப்பட்ட கேள்விகளைக் கேட்டால் பதில் அளிக்க முடியும்.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ. அபிஷேகபுரம் பஞ்சாயத்து என்னுடைய தொகுதியில் அடங்கியிருப்பதால், இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். கோ. அபிஷேகபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக இந்த ஆண்டு இரண்டு கோடியே, 37 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடுகள் போடப்பட்டு, நம்முடைய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அது வந்திருக்கிறது. இந்த ஆண்டு, அந்தத் திட்டம் விரைவில் முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து தனி வினா எழுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சி கிராமத்தில் துணை மின் நிலையம் விரிவுப்படுத்துதல்

186—*வினா எண். 39—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், காஞ்சி கிராமத்தில் உள்ள துணை மின் நிலையத்தை விரிவு படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில்உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டம் காஞ்சியில் இருக்கும் 33/11 கே.வி. துணை மின் நிலையத்தை 110/11 கே.வி. துணை மின் நிலையமாக மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத் துணை மின் நிலையத்தில் 10 மெகா வோல்ட் ஆம்பியர் திறன் கொண்ட இரண்டு மின் மாற்றிகள் நிறுவப்பட உள்ளன. இதற்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, வடஆற்காடு மாவட்டம் காஞ்சியிலே அந்தத் துணை மின் நிலையம் விரிவு படுத்தப்படவுள்ளதாக மாண்புமிகு அமைசர் அவர்கள் அறிவிக்கிறார்கள். அந்தத் திட்டத்தை எப்போது செயல்படுத்த அரசு முயற்சி எடுத்தது ? நிலம் ஆர்ஜிதப் படுத்துவதில் மிக மந்தமாக அந்த மின் துறையினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறதே, அதை விரைவு படுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1987 ஆம் ஆண்டிலிருந்தே நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. 1987 ஆம் ஆண்டு தான் அறநிலையத்திற்குச் சொந்தமான அந்த நிலத்தை தருவதாக அதைச் சார்ந்த அதிகாரி சான்றிதழ் வழங்கியிருக்கிறார். இன்னும் நமது அரசாங்க நிலம் ஒரு 88 சென்ட் அதில் எடுக்க வேண்டியிருக்கிற காரணத்தால் அது தாமதப் பட்டுக் கொண்டு இருந்தது. விரைவாக நிலம் கையகப்படுத்தப்பட்டு, 1990 ஆம் ஆண்டிலேயே அதை ஆரம்பித்து, அந்த ஆண்டிலே முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் 1987-லே போடப்பட்டது, இன்று 1989. மின்சாரப் பற்றாக் குறையால், விவசாயிகள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அரசு அறியும். ஆனாலும் ஏற்கெனவே கூட, ஒரு திட்டத்திற்கு நிலம் ஆர்ஜிதப்படுத்துவது தான் கால தாமதம் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எல்லா இடங்களிலும் இது போன்று திட்டங்களை விரைவாகச் செயல் படுத்த இந்த மின் துறை இலாக்காவை மிக வேகமாக செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

1989 மே 2]

மாண்புமிகு திரு. கே. என். நேரு : உறுப்பினர் அவர்களுடைய அவசரத்தைப் பற்றி எனக்கு நன்கு தெரிகிறது. கேட்க வேண்டியவர்களிடம் கேட்டு இருக்க வேண்டும், ஏன் இவ்வளவு தாமதம் என்று. வந்து மூன்று மாதம் தான் ஆகிறது. நிச்சயமாக உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மைய வேலைகள்

187—(*வினா எண் 445) திரு. மா. சுந்தரதாஸ், திரு. பொன். விஜயராகவன் திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மையத்தின் வேலைகள் முடிவடைந்துவிட்டதா?

ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மையத்தின் வேலைகள் முழுவதுமாக இன்னும் முற்றுப்பெறவில்லை.

(ஆ) கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மூன்று பெரிய அங்காடிகளாகக் கட்டப்பட்டு வருகின்றது. பூக்கள், காய்கள், பழங்கள் அங்காடியும், துணி அங்காடியும், நவதானிய அங்காடியும் ஆக, மூன்று அங்காடிகள் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. தற்போது அந்தப் பகுதியின் அடிப்படை வசதிகளைச் செய்கின்ற அளவில், குடிநீர் வசதி, கழிவு நீர் வசதி, மின்சார வசதி, அனைத்தும் தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது. பூ மற்றும் காய்கறி அங்காடி 1990 ஆம் ஆண்டுக்குள் நிறைவு பெறும் திட்டமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. துணி மற்றும் தானிய அங்காடி அதனுடைய திட்ட ஆரம்ப நிலையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொன். விஜயராகவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மொத்த வணிக அங்காடி எப்போது கட்ட ஆரம்பிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடம் துவக்கப்பட்ட தேதி குறிப்பிடப்படவில்லை, தனி வினா எழுப்பினால் விவரமாக இந்த அவைக்குத் தெரிவிக்கின்றேன்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாகவே இந்தக் கட்டட வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. கால

1989 மே 2]

மாண்புமிகு திரு. கே. என். நேரு : உறுப்பினர் அவர்களுடைய அவசரத்தைப் பற்றி எனக்கு நன்கு தெரிகிறது. கேட்க வேண்டியவர்களிடம் கேட்டு இருக்க வேண்டும், ஏன் இவ்வளவு தாமதம் என்று. வந்து மூன்று மாதம் தான் ஆகிறது. நிச்சயமாக உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மைய வேலைகள்

187—(*வினா எண் 445) திரு. மா. சுந்தரதாஸ், திரு. பொன். விஜயராகவன் திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மையத்தின் வேலைகள் முடிவடைந்துவிட்டதா?

ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மையத்தின் வேலைகள் முழுவதுமாக இன்னும் முற்றுப்பெறவில்லை.

(ஆ) கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மூன்று பெரிய அங்காடிகளாகக் கட்டப்பட்டு வருகின்றது. பூக்கள், காய்கள், பழங்கள் அங்காடியும், துணி அங்காடியும், நவதானிய அங்காடியும் ஆக, மூன்று அங்காடிகள் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. தற்போது அந்தப் பகுதியின் அடிப்படை வசதிகளைச் செய்கின்ற அளவில், குடிநீர் வசதி, கழிவு நீர் வசதி, மின்சார வசதி, அனைத்தும் தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது. பூ மற்றும் காய்கறி அங்காடி 1990 ஆம் ஆண்டுக்குள் நிறைவு பெறும் திட்டமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. துணி மற்றும் தானிய அங்காடி அதனுடைய திட்ட ஆரம்ப நிலையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொன். விஜயராகவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மொத்த வணிக அங்காடி எப்போது கட்ட ஆரம்பிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடம் துவக்கப்பட்ட தேதி குறிப்பிடப்படவில்லை, தனி வினா எழுப்பினால் விவரமாக இந்த அவைக்குத் தெரிவிக்கின்றேன்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாகவே இந்தக் கட்டட வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. கால

தாமதம் ஆகிறது என்பதற்காக இதை குறிப்பிடுகிறேன். எவ்வளவு மதிப்பீட்டில் இந்தப் பணி நடக்கப் போகிறது? இதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 40 கோடி ஆகும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அங்காடி கட்டுவதற்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தாலும், இதைக் கட்டுவதில் ஆண்டுக் கணக்காக காலதாமதம் ஆகிறது. இன்றைய தினம் விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிற காரணத்தால் அதனுடைய மதிப்பீடு உயராதா? ஆகவே அதை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அங்காடிகள் கட்டுவதற்கு நில ஆர்ஜிதம் செய்வதிலே பல ஆண்டு காலமாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்தது. சிலர் நீதிமன்றங்களுக்கு சென்றார்கள். அந்த நீதிமன்றங்களுக்குச் சென்ற வழக்குகள் எல்லாம் இன்றைய தினம் திரும்பப் பெறப்பட்டு, எம். எம். டி. ஏ. அதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டு, இப்போது அந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அந்த அங்காடிகள் கட்டி முடிக்கப்படும்.

## திருப்பூர் அபிவிருத்தித் திட்டம்

188—(*வினா எண் 963)—திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவியுடன் திருப்பூரில் அபிவிருத்தித் திட்டம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) உலக வங்கி உதவியுடன் ''நகர வளர்ச்சித் திட்டம்'' தமிழ்நாட்டில் 10 நகரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இதில் திருப்பூர் நகரமும் அடங்கும். இத் திட்டத்தின் கீழ் வீட்டுமனைத் திட்டம், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், வழிமுறைப்படுத்தப்பட்ட வளர்ச்சித் திட்டம் மற்றும் போக்குவரத்து நிர்வாகம், சாலை அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் அடங்கும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தாமதம் ஆகிறது என்பதற்காக இதை குறிப்பிடுகிறேன். எவ்வளவு மதிப்பீட்டில் இந்தப் பணி நடக்கப் போகிறது? இதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 40 கோடி ஆகும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அங்காடி கட்டுவதற்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தாலும், இதைக் கட்டுவதில் ஆண்டுக் கணக்காக காலதாமதம் ஆகிறது. இன்றைய தினம் விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிற காரணத்தால் அதனுடைய மதிப்பீடு உயராதா? ஆகவே அதை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அங்காடிகள் கட்டுவதற்கு நில ஆர்ஜிதம் செய்வதிலே பல ஆண்டு காலமாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்தது. சிலர் நீதிமன்றங்களுக்கு சென்றார்கள். அந்த நீதிமன்றங்களுக்குச் சென்ற வழக்குகள் எல்லாம் இன்றைய தினம் திரும்பப் பெறப்பட்டு, எம். எம். டி. ஏ. அதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டு, இப்போது அந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அந்த அங்காடிகள் கட்டி முடிக்கப்படும்.

## திருப்பூர் அபிவிருத்தித் திட்டம்

188—(*வினா எண் 963)—திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவியுடன் திருப்பூரில் அபிவிருத்தித் திட்டம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) உலக வங்கி உதவியுடன் ''நகர வளர்ச்சித் திட்டம்'' தமிழ்நாட்டில் 10 நகரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இதில் திருப்பூர் நகரமும் அடங்கும். இத் திட்டத்தின் கீழ் வீட்டுமனைத் திட்டம், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், வழிமுறைப்படுத்தப்பட்ட வளர்ச்சித் திட்டம் மற்றும் போக்குவரத்து நிர்வாகம், சாலை அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் அடங்கும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 மே 2]

இத்திட்டத்தின் கீழ் திருப்பூர் நகரில் 1,750 வீட்டு மனைகளும், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 800 குடிசை வாழ் குடும்பங்களும் பயனடைவர். இவற்றுடன் நகராட்சி நகர வளர்ச்சி நிதியின் உதவியுடன் புதிய திட்டத்தின் மூலமாக சில சிறப்புத் திட்டங்கள் நகராட்சி அமைப்பு இயக்குநரின் பரிந்துரையின் பேரில் பெறப்பட்டு திட்ட மேலாண்மைக் குழுவின் ஒப்புதலின்படி நகரங்களுக்கு அபிவிருத்தி செய்கின்ற பல்வேறு பணிகள் நடைபெற இருக்கின்றன. அந்தப் பணிகளில் வார அங்காடி, மொத்த விற்பனை அங்காடிகள் அமைத்தல், ஆடு தொட்டிகள் அமைத்தல், பேருந்து நிலையம் மற்றும் ஈஸ்வரன் கோயில் தெருவில் புதிய தின அங்காடிகள் அமைத்தல், பேருந்து நிலையத்தில் கூடுதல் அங்காடி அமைத்தல்; திடக்கழிவு மேன்மைப் படுத்துதல்; சாலைகள் மேம்பாடு செய்தல்; மழைநீர் வடிகால்கள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக திருப்பூர் நகரத்திலே போக்குவரத்துக்கு மிகப் பெரிய நெருக்கடியாக இருக்கிற மிக குறுகிய பாலமாக இருக்கிற ரயில்வே மேம்பாலத்தில் மேலும் ஒரு பாலம் அங்கே விரிவுபடுத்துகின்ற திட்டம் இதில் சேர்க்கப்படுமா என அறிய விரும்புகிறேன்? மிகக் குறுகிய சாலையாக இருக்கிற காரணத்தால் அதிகபடியான மக்கள் தொகை அந்த நகரத்தில் இருப்பதால் மிகக் கடுமையான போக்குவரத்து நெரிசல் காரணமாக பல விபத்துகள் தொடர்ந்து நடைபெறுகிற காரணத்தால் நகர எல்லைகளில் உள்ள அனைத்து ரோடுகளையும் இணைக்கின்ற ஒரு ரிங் ரோடு உருவாக்குகின்ற திட்டம் அதிலே சேர்க்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்து பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக திருப்பூர் நகரத்திலே பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா? அது இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு . ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மழை நீர் வடிகாலும், திடக் கழிவு மேம்படுத்தல் போன்ற பணிகளும் நடைபெற இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 10 நகரங்கள் என்று சொன்னார்கள். அந்த 10 நகரங்கள் எது எது என்ற விவரம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள நகராட்சிகள், மதுரை, சேலம், கோயம்பத்தூர், திருச்சி, வேலூர், ஈரோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர் போன்ற 10 நகரங்கள் ஆகும்.

(முற்பகல் 9-50.)

ஏலகிரி மலையை சுற்றுலா மையமாக்கல்.

177—(*வினா எண் 135)—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏலகிரி மலையை சுற்றுலா மையம் ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்பொழுது செயற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி மலை மாவட்ட உலாத் தலமாக 1980 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் மேம்பாட்டு பணிகளுக்காக சுமார் ரூ. 8 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர்கள் வீடு கட்டிக்கொள்ளக் கடன்.

178—(*வினா எண் 599)—திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்கள் வீடு கட்டிக்கொள்வதற்காக வழங்கப்பட்டு வந்த கடன் தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது என்பதை அரசு அறியுமா ?

(ஆ) கடனைத் தொடர்ந்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள நகராட்சிகள், மதுரை, சேலம், கோயம்பத்தூர், திருச்சி, வேலூர், ஈரோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர் போன்ற 10 நகரங்கள் ஆகும்.

(முற்பகல் 9-50.)

ஏலகிரி மலையை சுற்றுலா மையமாக்கல்.

177—(*வினா எண் 135)—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏலகிரி மலையை சுற்றுலா மையம் ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்பொழுது செயற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி மலை மாவட்ட உலாத் தலமாக 1980 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் மேம்பாட்டு பணிகளுக்காக சுமார் ரூ. 8 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர்கள் வீடு கட்டிக்கொள்ளக் கடன்.

178—(*வினா எண் 599)—திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்கள் வீடு கட்டிக்கொள்வதற்காக வழங்கப்பட்டு வந்த கடன் தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது என்பதை அரசு அறியுமா ?

(ஆ) கடனைத் தொடர்ந்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1989 மே 2

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள நகராட்சிகள், மதுரை, சேலம், கோயம்பத்தூர், திருச்சி, வேலூர், ஈரோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர் போன்ற 10 நகரங்கள் ஆகும்.

(முற்பகல் 9-50.)

ஏலகிரி மலையை சுற்றுலா மையமாக்கல்.

177—(*வினா எண் 135)—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏலகிரி மலையை சுற்றுலா மையம் ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்பொழுது செயற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி மலை மாவட்ட உலாத் தலமாக 1980 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் மேம்பாட்டு பணிகளுக்காக சுமார் ரூ. 8 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர்கள் வீடு கட்டிக்கொள்ளக் கடன்.

178—(*வினா எண் 599)—திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்கள் வீடு கட்டிக்கொள்வதற்காக வழங்கப்பட்டு வந்த கடன் தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது என்பதை அரசு அறியுமா ?

(ஆ) கடனைத் தொடர்ந்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1989 மே 2]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் இலவசமாக வீட்டு வசதியைத் தொடர்ந்து பெற்று வருவதால, 1985-86-ம் ஆண்டிலிருந்து கிராமிய வீடடுவசதித திட்டத்தின்கீழ் கடன் உதவி அளிப்பது நிறுத்தப்பட்டுள்ளது.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டும் திட்டம் என்பதிலே ஒரு குறிப்பிட்ட பகுதியிலே இருக்கக்கூடியவர்களுக்கு குரூப் ஹவுசிங் சிஸ்டத்தின் கீழ் கட்டிக்கொடுக்கப்படுகிறது. பொதுவாக கடன் வசதி பெற்று வீடு கட்டக்கூடிய, கிராமங்களிலேயுள்ள அரிசனங் களுக்காகத்தான் நான் கேட்கிறேன். ஆகவே, அவர்களுக்கு கடன் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985-86-லே இந்தத் திட்டம் நிறுத்தப்பட்ட போது, அந்த நேரத்திலே தொடங்கப்பட்டு ஏறத்தாழ 12 ஆயிரம் வீடுகளுக்கு மேல் நிலுவையில் இருந்தது. அந்த வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு ஏறத்தாழ 10 கோடி ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குபபிறகு நலிவுற்ற ஆதி திராவிட மக்களுக்கு மட்டும், பொருளாதாரத்திலே நலி வுற்ற ஆதி திராவிட மக்களுக்கு மட்டும் ஆதி திராவிட நலத் துறையின் மூலமாகவும், ஏனைய துறைகளின் மூலமாகவும் இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் நடுத்தர வருவாய் உள்ளவர்கள், அதற்குமேலே வருவாய் உள்ள ஏனைய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடனைப் பெறுகிறார்கள் ஆகவே, அரிசன மக்கள் இந்த ஆண்டிலேயிருந்து, 1989-90 ஆம் ஆண்டிலிருந்து அந்தக் கடனைப் பெற்றுக்கொள்ள முடியும்

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, கடன் வழங்குகின்றபோது 6 ஆயிரம் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. அந்தக் கடன் இப்போது எவ்வளவு உயர்த்திக் கொடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் 6 ஆயிரத்திலிருந்து, 8 ஆயிர மாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் மலைவாசி மக்களுக்கும் இராமேஸ்வரம் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கும் இது 10 ஆயிரமாகக் கொடுக்கப்படுகிறது.

திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற வீடு கட்டும் சங்கம் தமிழ் நாட்டில் ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒன்று இயங்கி வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் நலிவுற்ற ஏழை மக்களுக்கு ஒவ்வொரு பகுதியிலும் ஓராண்டுக்கு எவ்வளவு தொகை இந்தச் சங்கத்தின் மூலமாக கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதிலும் வட்டத்திற்கு ஒன்றாக ஏறத்தாழ 165 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்தச் சங்கங்கள் மூலமாக இந்த ஆண்டு மட்டும் ஏறத்தாழ 30 கோடி ரூபாய் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டு காலமாக இந்த வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் பல வகையில் ஊழலுக்கு ஆளாகி, பாழாகி நிற்கின்றன. அவற்றுக்கு உடனடியாகத் தேர்தல் நடத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், அது வீடு கட்டுகின்ற சங்கமாக இருந்தாலும் சரி, அல்லது நெசவாளர்ச் சங்கமாக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் அத்தனைக்கும் விரைவில் தேர்தல் நடத்த அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் போது ஆதி திராவிட மக்களுக்கு, மிகவும் பின்தங்கிய நிலையில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடிய மக்களுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கக் கூடிய திட்டம் இருப்பதனாலே இந்தக் கடன் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டம் என்பது எவ்வளவு காலத்திலே அனைத்து அரிசனப் பொது மக்களுக்கும் கிடைக்கச் செய்ய முடியும் என்பதையும், அதே போல், இந்த வீடு கட்டும் சங்கங்கள் மூலமாக கடன் கொடுப்பவர்கள் 3 தவணைகளிலே கொடுக்கிறார்கள். அப்படி ஒரு தவணை, இரண்டு தவணை பெற்று, நிலுவையில் இருப்பவர்கள் வீடு கட்ட முடியாமல் பரிதவிக்கிறார்களே, அதைப் போக்க அந்தக் கடன் பெற்றவர்களுக்கு முழுத் தொகையையும் கொடுத்து, அவர்கள் வீடு கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

1989 மே 2]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, வீட்டு வசதித் துறையின் மூலமாக கூட்டுறவுச் சங்கங்கள் ஆங்காங்கே கிராமப்புறங்களில் வட்டத்திற்கு ஒன்றாகத் தொடங்கப்பட்டு, கடன் கேட்பவர்களுக்கு கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. மொத்தமாக ஆங்காங்கே இருக்கிற ஆதி திராவிட மக்கள் அனைவருக்கும் எப்போது வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சரிடம் தான் கேட்க வேண்டும். இப்போது இருக்கிற முறைப்படி கடனாகக் கொடுக்கப்படும் பணம் தவணை மூலமாகத் தான் கொடுக்கப்படும்; கொடுக்கப்பட வேண்டும். ஏனென்றால் மொத்தமாகக் கொடுத்துவிட்டால் வீடு கட்டி முடிக்கமாட்டார்கள்; தவணை முறையில் கொடுக்கும் போதே சில முறைகேடுகள் நடைபெற்று வந்திருக்கின்றன. ஆகவே, கடனை மொத்தமாகக் கொடுக்கும் திட்டம் இல்லை. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரும் நேருக்கு நேர் பேசக் கூடாது. தலைவரைப் பார்த்துத் தான் பேச வேண்டும்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வீடு கட்டுவதற்குக் கொடுக்கின்ற கடனை திரும்ப இந்த ஆண்டு புதுப்பித்திருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே வாங்கிய கடனை 3, 4 ஆண்டுகளாக மழை பொய்த்துவிட்ட காரணத்தால், திருப்பிச் செலுத்த முடியவில்லை. ஆகவே, அந்தக் கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்கிறார்கள். சில பகுதிகளில் யாரோ ஒருவர் அரிசன மக்களைப் பயன்படுத்தி வீடு கட்டி பயன்பெற்றிருக்கிறார்கள்; பின்னாலே இப்போது தான் அந்த அரிசன மக்களுக்கு தன் பெயரில் கடன் இருக்கிறதென்பது தெரிய வந்திருக்கிறது. ஆகவே, அவர்கள் கட்ட முடியாமல் இருக்கிற கடன்களை மொத்தமாகத் தள்ளுபடி செய்து கொடுக்க அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, கடந்த 10 ஆண்டு காலமாக இப்படிப்பட்ட முறைகேடுகள் தமிழ்நாடு முழுவதும் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன. ஆனால் வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் அமைச்சரவை தான் இது பற்றி முடிவு செய்ய வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. மாரப்பன் : தலைவரவர்களே, அரிசனங்களுக்கு கூட்டுறவுத் துறையின் மூலம் கடன் வழங்கும்போது, அந்தக் கடனைப் பெறுவதற்கு கூட்டுறவுத் துறையில் போட்டிருக்கிற கண்டிஷன்களே பத்து பக்கங்களுக்கு இருக்கிறது. அந்தக் கண்டிஷன்களை படித்துப் பார்த்து அவ்வளவு சுலபத்தில் புரிந்து கொள்ள முடியாது. அந்தக் கண்டிஷன்படி பார்த்தால் யாரும் கடனே வாங்க முடியாது. அந்தக் கண்டிஷனை சுலபமாக்க

வேண்டும். கடன் வாங்குகிறவர்களுக்கு பட்டா இருந்தால் போதும். அரசாங்கம் வழங்கியிருக்கிற நத்தம் புறம்போக்கு நிலப் பட்டாவைக் காட்டினாலும் போதும் என்று இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: '' Condition ''-ஐ படிக்கத்தான் ரொம்ப நேரமாகும் என்றால் கேள்விக்குமா அப்படி ஆக வேண்டும்? சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. பி. மாரப்பன்: பேரவைக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக விரிவாகச் சொன்னேன்; சுருக்கமாகவே இப்போது கேட்கிறேன். இப்போது இருக்கின்ற முறைப்படி கடன் பெறுவதற்கான வழிமுறைகளை, கண்டிஷன்களை ஏழை அரிசனங்கள் படித்துத் தெரிந்துகொள்வதற்கு ஆறு மாதம் ஆகும். ஆகவே, அதை எல்லாம் தளர்த்தி, பட்டா இருந்தால் கடன் கொடுக்கப்படும்—அது எந்தப் பட்டாவாக இருந்தாலும் கடன் பெறுகின்றவர் பெயரில் இருந்தால்—என்று அறிவிக்கப்பட்டு, கடன் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவரவர்களே, ஏழை அரிசனங்களுக்கு இப்படிப்பட்ட கடன் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் அரசே இலவசமாக வீடு கட்டித் தருகிறது. ஆனால் நல்ல வசதியுள்ள அரிசனங்களுக்கு கடன் பெற வேண்டுமென்றால் இதுவரையில் அவர்களுடைய நிலத்தை அடமானம் செய்யக்கூடிய அளவுக்கு நிபந்தனை இருந்தது. அதைத் தளர்த்தி, அந்தந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் தங்களுடைய பத்திரத்தை வைத்து, கடனைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதன் மூலம் 60 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை மிச்சப்படுத்த முடியும்.

திரு. கே. ஏ. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என். ஆர். இ. பி., ஆர். எல். இ. ஜி. பி. திட்டங்களின் மூலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அதே நேரத்தில் அரசின் மூலமாக கடன் கொடுத்தும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஒரே கிராமத்தில் ஒரு சிலருக்கு கடன் கொடுத்து வீடுகள் கட்டும் நிலைமையும், ஒரு சிலருக்கு இலவசமாக வீடுகள் கட்டும் நிலைமையும் இருக்கிறது. இப்படிப்பட்ட வித்தியாசமான நிலைமை இல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக வீடு கட்டும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவரவர்களே, இப்படி முரண்பட்ட ஒரு நிலை கிராமங்களில் இருப்பதை இந்த அமைச்சரவை அறிந்திருக்கிறது. அதனால் தான் இது பற்றி ஏற்கெனவே சொல்லுகின்ற போது ஏதாவது ஒரு பகுதியை மானியமாகக் கொடுக்க முடியுமா என்று பரிசீலனை செய்வதாகச் சொன்னேன். பொருளாதாரத்தில் நலிந்தவர்கள், வறுமைக்

1989 மே 2]

கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடிய அத்தனை பேர்களுக்கும் ஏதாவது ஒரு பகுதியை மானியமாகக் கொடுக்கலாமா என்பதை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீடு கட்டும் திட்டத்திலே, அதாவது நாம் கடன் கொடுக்கிறோம். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். 8 ஆயிரம் ரூபாய் வரைக்கும் கொடுக்கலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே எல்லா பகுதி மக்களுக்கும், எல்லோருக்கும் நாம் இலவசமாக வீடு கட்டிக்கொடுக்க முடியாது. ஏனென்றால் என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. திட்டம் எல்லாம் மத்திய அரசு பணம். அதிலே பாதி பணம் நம்முடையது என்.ஆர்.ஈ.பி.யில். மிச்சம் எல்லாம் 'The entire amount is spent by the Central Government ஆக இருக்கிறது. ஆகையால் நாம் வீடு கட்டக்கூடிய நிலைமையில், சில இடங்களிலே அந்த அர்பன் அவுசிங், டார்மென்ட்-ஆக ஆகி விட்டது. அதையும் சேர்த்து இந்த கடன் கொடுக்கும் பணத்தை இந்த ரூரல் அவுசிங் ஸ்கீம் மூலமாக, 'அதாவது டிபென்டிங் அப்பான் தி கேபாசிடி' எந்த அளவுக்கு அவர்களால் திருப்பிக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குக் கொடுக்கலாம். இப்போது நான் 30 ஆயிரம் ரூபாய் அளவில் வீடு கட்டிக்கொள்ள நினைக்கிறேன் என்றால் அதை இந்த சொசைட்டி மூலமாக கொடுத்து உதவுவதற்கான வழிவகை செய்யப்படுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு ஏறத்தாழ 29 ஆயிரம் ரூபாயும், நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு ஏறத்தாழ 36 ஆயிரம் ரூபாயும் கடன் கொடுத்துதவக்கூடிய திட்டம் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

வேனூர் இராமாமிர்த அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் ஈ. வெ. ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம் ஆகிய நலத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளது குறித்து.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது பேரவைக்கு ஓர் அறிக்கை படைப்பார்கள்.

1989 மே 2]

கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடிய அத்தனை பேர்களுக்கும் ஏதாவது ஒரு பகுதியை மானியமாகக் கொடுக்கலாமா என்பதை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

(முற்பகல் 10-00)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீடு கட்டும் திட்டத்திலே, அதாவது நாம் கடன் கொடுக்கிறோம். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். 8 ஆயிரம் ரூபாய் வரைக்கும் கொடுக்கலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே எல்லா பகுதி மக்களுக்கும், எல்லோருக்கும் நாம் இலவசமாக வீடு கட்டிக்கொடுக்க முடியாது. ஏனென்றால் என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. திட்டம் எல்லாம் மத்திய அரசு பணம். அதிலே பாதி பணம் நம்முடையது என்.ஆர்.ஈ.பி.யில். மிச்சம் எல்லாம் 'The entire amount is spent by the Central Government ஆக இருக்கிறது. ஆகையால் நாம் வீடு கட்டக்கூடிய நிலைமையில், சில இடங்களிலே அந்த அர்பன் அவுசிங், டார்மென்ட்-ஆக ஆகி விட்டது. அதையும் சேர்த்து இந்த கடன் கொடுக்கும் பணத்தை இந்த ரூரல் அவுசிங் ஸ்கீம் மூலமாக, 'அதாவது டிபென்டிங் அப்பான் தி கேபாசிடி' எந்த அளவுக்கு அவர்களால் திருப்பிக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குக் கொடுக்கலாம். இப்போது நான் 30 ஆயிரம் ரூபாய் அளவில் வீடு கட்டிக்கொள்ள நினைக்கிறேன் என்றால் அதை இந்த சொசைட்டி மூலமாக கொடுத்து உதவுவதற்கான வழிவகை செய்யப்படுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு ஏறத்தாழ 29 ஆயிரம் ரூபாயும், நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு ஏறத்தாழ 36 ஆயிரம் ரூபாயும் கடன் கொடுத்துதவக்கூடிய திட்டம் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

வேனூர் இராமாமிர்த அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் ஈ. வெ. ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம் ஆகிய நலத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளது குறித்து.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது பேரவைக்கு ஓர் அறிக்கை படைப்பார்கள்.

[1989 மே 2

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் தருகிற மற்றுமொரு ஏற்பாடாக, வறுமையில் உழலும் குடும்பங் களைச் சேர்ந்த பெண்கள், எட்டாம் வகுப்பு அல்லது அதற்கு மேலும் படித்துத் தேறியிருந்தால், அவர்களின் திருமணச் செலவுக்காக ரூ. 5,000 உதவித் தொகை வழங்க திட்டமிடப் பட்டுள்ளது. இத்திட்டம் ''மூவாலூர் இராமாமிர்தம் அம்மை யார் நினைவு திருமண உதவித் திட்டம்'' எனப் பெயரிடப் பட்டு அரசாணை நிலை எண் 368, பிற்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறை, நாள் 13–4–1989-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் மற் றும் இத்திட்டத்தினால் பயனடைவோருக்கு இந்த உதவித் தொகையைப் பெற என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டும் என்பன பற்றி விளக்கங்களைக் கொண்ட விரிவான அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

2. நகர்ப்புறத்திலும், கிராமப்புறத்திலும் வறுமையில் வாடும் ஏழை எளிய பெண்கள் கர்ப்பவதியாகும்பொழுதும், குழந்தை பெற்ற பின்னரும், உழைக்க முடியாமல், ஊதியம் ஈட்ட முடியாமல் இருப்பதால், அவர்களின் குடும்பங்கள் மே லும் ஏழ்மையில் தவிக்கும் நிலையில் இருந்து வருகின்றன. இதை நிவர்த்தி செய்வதற்காக, அவர்களுக்கு கர்ப்பவதியான 8-வது மாதத்திலிருந்து குழந்தை பெறும் வரையிலும், குழந் தை பிறந்த பின்னர் 2 மாத காலத்திற்கும், மாதம் ரூ. 50 உதவித் தொகை மூலம் மொத்தம் ரூ. 200 வழங்க திட்டமிடப் பட்டுள்ளது. முதல் இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே இவ் உதவி அளிக்கப்படும். இத்திட்டம் ''டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்'' எனப் பெயரிடப் பட்டு அரசாணை நிலை எண் 369, பிற்பட்டோர் நலம், சத் துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறை, நாள் 13–4–1989-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடை முறைப்படுத்த வேண்டிய விதிமுறைகள் மற்றும் இத் திட்டத்தினால் பயனடைவோருக்கு இந்த உதவித் தொகையைப் பெற என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டும் என்பது பற்றிய விளக்கங்களைக் கொண்ட விரிவான அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

3. ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த கல் லூரி மாணவியருக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங் கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த கல்லூரி மாணவி யருக்குப் பட்டப்படிப்பில் 1989–90 ஆம் கல்வியாண்டில் முத லாண்டு பட்டப்படிப்பு மாணவியருக்கு அமுல்படுத்தப்படும் இத்திட்டம் ''ஈ. வெ. ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவச பட்டப் படிப்புத் திட்டம்'' எனப் பெயரிடப் பட்டு அரசாணை நிலை எண் 412, கல்வித் துறை, நாள் 13–4–1989-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டம் அரசு மற்றும் உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும்

மாணவியருக்கு அமுல்படுத்தப்படும் எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் பயன்பெறும் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமானத்தை நிர்ணயித்துத் தனியாக ஆணை பிறப்பிக்கப்படும்.

### 3. தகவல் கோரல்.

(அ) காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலுக்குள் ஒரு சடலம் கிடந்ததால் பூசைகள் நடைபெறாமல் இருப்பது குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சாபாநாயகர் அவர்களே, காஞ்சீபுரத்தில் இருக்கின்ற மிகப் புகழ் பெற்ற கோவில் ஏகாம்பரநாதர் திருக்கோயில் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆண்டுகொண்டிருந்த வெள்ளை ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி கிளைவ் கூட அந்த ஆண்டவனுக்கு ஒரு அருமையான பதக்கம் அளிக்கின்ற அளவிற்கு உலகமெங்கும் பக்தி மணம் பரப்பும் கோவில் அந்தத் திருக்கோவில். அந்தத் திருக்கோவிலிலே ஒருவருடைய சடலம் இருப்பதாகவும், அந்தச் சடலம் இருக்கிற காரணத்தாலே கோவில் மங்கலம் இழந்ததாகவும், அதனாலே பூசைகள் நடக்காமல், பக்தர்கள் மன வேதனை உற்றிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறதே, அரசு அதனைக் கருத்திற் கொண்டு, பக்தர்களுடைய உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படும் அளவுக்கு செயற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் எடுத்துக் கூறியதுபோல, புகழ் பெற்றதும், ராபர்ட் கிளைவ் அவர்களாலே பாராட்டப்பட்டதுமான காஞ்சி ஏகாம்பரநாதர் கோவிலில் ஒரு சடலம் இருந்தது என்பதோடு செய்தி முடிந்து விடவில்லை. அந்தச் சடலத்திற்குச் சொந்தக்காரர், ஒரு சித்து விளையாடுகிற சாமியாராக அந்தத் திருக்கோவிலில் 50 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்திருக்கிறார். அவர் அந்தக் கோவிலிலே தங்கி, பக்தர்களுக்கு அருள் பாலித்து வந்துள்ளார் என்றும் சொல்லப்படுகிறது. அவர் கடவுள் அருள் பெற்றவர் என்று நம்பிய காரணத்தால் மக்கள் அவரைநம்பிப் பாராட்டி, வணங்கி வந்திருக்கிறார்கள். அவர் ஞாயிற்றுக்கிழமை இறந்துவிட்டார். நீண்டகாலமாக அவர் அந்தக் கோவிலில் இருந்து வந்ததால், அவரது உடலை அந்தக் கோவிலுக்குள்ளே புதைக்க வேண்டுமென்று அவருடைய பக்தர்கள் தீர்மானித்து, அதன்படி அந்த உடலை அந்தக் கோவில் வளாகத்திற்குள் புதைத்துவிட்டார்கள். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த கோவில் அர்ச்சகர்கள் கோவிலை மூடிவிட்டார்கள். பூசை, நைவேத்யங்கள் நடைபெறாது என்று அறிவித்துவிட்டார்கள். தகவல் அரசுக்குத் தெரிய வந்ததும், உடனடியாக அறநிலையத் துறை சம்பந்தப்பட்டவர்கள் காஞ்சீபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, நேரடியாக அவர்கள் இந்தப் பிரச்சினையிலே தலை

மாணவியருக்கு அமுல்படுத்தப்படும் எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் பயன்பெறும் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமானத்தை நிர்ணயித்துத் தனியாக ஆணை பிறப்பிக்கப்படும்.

### 3. தகவல் கோரல்.

(அ) காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலுக்குள் ஒரு சடலம் கிடந்ததால் பூசைகள் நடைபெறாமல் இருப்பது குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சாபாநாயகர் அவர்களே, காஞ்சீபுரத்தில் இருக்கின்ற மிகப் புகழ் பெற்ற கோவில் ஏகாம்பரநாதர் திருக்கோயில் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆண்டுகொண்டிருந்த வெள்ளை ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி கிளைவ் கூட அந்த ஆண்டவனுக்கு ஒரு அருமையான பதக்கம் அளிக்கின்ற அளவிற்கு உலகமெங்கும் பக்தி மணம் பரப்பும் கோவில் அந்தத் திருக்கோவில். அந்தத் திருக்கோவிலிலே ஒருவருடைய சடலம் இருப்பதாகவும், அந்தச் சடலம் இருக்கிற காரணத்தாலே கோவில் மங்கலம் இழந்ததாகவும், அதனாலே பூசைகள் நடக்காமல், பக்தர்கள் மன வேதனை உற்றிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறதே, அரசு அதனைக் கருத்திற்கொண்டு, பக்தர்களுடைய உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படும் அளவுக்கு செயற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் எடுத்துக் கூறியதுபோல, புகழ் பெற்றதும், ராபர்ட் கிளைவ் அவர்களாலே பாராட்டப்பட்டதுமான காஞ்சி ஏகாம்பரநாதர் கோவிலில் ஒரு சடலம் இருந்தது என்பதோடு செய்தி முடிந்து விடவில்லை. அந்தச் சடலத்திற்குச் சொந்தக்காரர், ஒரு சித்து விளையாடுகிற சாமியாராக அந்தத் திருக்கோவிலில் 50 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்திருக்கிறார். அவர் அந்தக் கோவிலிலே தங்கி, பக்தர்களுக்கு அருள் பாலித்து வந்துள்ளார் என்றும் சொல்லப்படுகிறது. அவர் கடவுள் அருள் பெற்றவர் என்று நம்பிய காரணத்தால் மக்கள் அவரைநம்பிப் பாராட்டி, வணங்கி வந்திருக்கிறார்கள். அவர் ஞாயிற்றுக்கிழமை இறந்துவிட்டார். நீண்டகாலமாக அவர் அந்தக் கோவிலில் இருந்து வந்ததால், அவரது உடலை அந்தக் கோவிலுக்குள்ளே புதைக்க வேண்டுமென்று அவருடைய பக்தர்கள் தீர்மானித்து, அதன்படி அந்த உடலை அந்தக் கோவில் வளாகத்திற்குள் புதைத்துவிட்டார்கள். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த கோவில் அர்ச்சகர்கள் கோவிலை மூடிவிட்டார்கள். பூசை, நைவேத்யங்கள் நடைபெறாது என்று அறிவித்துவிட்டார்கள். தகவல் அரசுக்குத் தெரிய வந்ததும், உடனடியாக அறநிலையத் துறை சம்பந்தப்பட்டவர்கள் காஞ்சீபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, நேரடியாக அவர்கள் இந்தப் பிரச்சினையிலே தலை

யிட்டு, நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் நேற்று இரவே காஞ்சீபுரம் சென்று வருவாய்த் துறையினரோடும், கோவில் அதிகாரிகளோடும், மற்றும் அந்தப் பக்தர்களோடும் கலந்து பேசி, அனைவரின் ஒப்புதலோடும் இராமசாமி என்று சொல்லப்படுகிற அந்த மகான் என்று அழைக்கப்பட்டவருடைய உடலை மீண்டும் கோவில் பிராகாரத்திற்குள்ளே இருந்து எடுத்து, கோவிலுக்கு வெளியிலே கொண்டு போய், வேறொரு இடத்திலே இப்போது புதைத்துவிட்டார்கள். இப்போது உடல் கோவிலிலே இல்லை. ஒருவேளை உயிர் இருக்கிறதோ, இல்லையோ எனக்குத் தெரியாது. இப்போது அங்கே எந்தப் பிரச்சினையும் எழவில்லை. பூசைகள் வழக்கம்போல் நடக்கத் தொடங்கிவிட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

**(ஆ) வன்னியர் சங்கத் தலைவர் பலாத்காரப் போராட்ட அறிவிப்புச் செய்துள்ளது குறித்து.**

திரு. கே. ரமணி: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, தமிழகத்திலே ஒரு முக்கியமான செய்தி பத்திரிக்கையிலே வந்திருப்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டிய ஒரு தேவையை உத்தேசித்துத்தான் இந்த விஷயத்தை நான் அவை முன் வைக்கிறேன். வன்னியர் சங்கத்தினுடைய தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையிலே என்ன கூறியிருக்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். அரசாங்கம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 சதமானம் ஒதுக்கீடு செய்திருப்பது பற்றி அவர்களுக்கு எதிர்ப்பான கருத்து இருக்கிறது. இருக்கட்டும். அதனால் போராட்டங்கள் நடத்த வேண்டியிருக்கிறது. அந்தப் போராட்டங்கள் இது வரைக்கும் நடந்த மாதிரி போராட்டங்களாக இருக்காது, சமாதான முறையில் போராட்டங்கள் நடத்தி எந்தப் பிரச்சினையையும் அரசு தீர்க்க முடியாது என்று தெளிவாகக் குறிப்பிட்டு, போராட்டம் பலாத்காரமாக இனிமேல் நடத்தப்படுமென்று பட்டவர்த்தமான அந்த அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே அரசின் சார்பிலே வெளியிட்டுள்ள அறிக்கைகளைக் கொளுத்துவது என்ற நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். அடுத்தபடியாக பலாத்காரப் போராட்டம்தான் நடத்தப்படுமென்று பகிரங்கமாக அறிக்கை வெளியிடும்போது, இது சம்பந்தமாக மக்கள் மத்தியிலே ஒரு விதமான கவலையும், மோசமான நிலை ஏற்படுமோ என்கின்ற எண்ணமும் மக்கள் மத்தியிலே உருவாகிக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே இதுபோன்ற பலாத்காரப் போராட்டங்கள் நடத்தப்பட்டு, பல நாட்கள் தென் பகுதி மாவட்டங்களிலே போக்குவரத்து அடியோடு ஸ்தம்பித்து நூற்றுக்கணக்கான மரங்களை வெட்டி, ரோட்டிலே போட்டு, எந்தவிதமான போக்குவரத்தும் இல்லாதபடிக்கு தடுக்கப்பட்ட நிகழ்ச்சி நடந்திருக்கிறது. இது தமிழகத்தில் உள்ள மக்கள் அனைவருக்கும் தெரியும்.

யிட்டு, நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் நேற்று இரவே காஞ்சீபுரம் சென்று வருவாய்த் துறையினரோடும், கோவில் அதிகாரிகளோடும், மற்றும் அந்தப் பக்தர்களோடும் கலந்து பேசி, அனைவரின் ஒப்புதலோடும் இராமசாமி என்று சொல்லப்படுகிற அந்த மகான் என்று அழைக்கப்பட்டவருடைய உடலை மீண்டும் கோவில் பிராகாரத்திற்குள்ளே இருந்து எடுத்து, கோவிலுக்கு வெளியிலே கொண்டு போய், வேறொரு இடத்திலே இப்போது புதைத்துவிட்டார்கள். இப்போது உடல் கோவிலிலே இல்லை. ஒருவேளை உயிர் இருக்கிறதோ, இல்லையோ எனக்குத் தெரியாது. இப்போது அங்கே எந்தப் பிரச்சினையும் எழவில்லை. பூசைகள் வழக்கம்போல் நடக்கத் தொடங்கிவிட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

**(ஆ) வன்னியர் சங்கத் தலைவர் பலாத்காரப் போராட்ட அறிவிப்புச் செய்துள்ளது குறித்து.**

திரு. கே. ரமணி: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, தமிழகத்திலே ஒரு முக்கியமான செய்தி பத்திரிக்கையிலே வந்திருப்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டிய ஒரு தேவையை உத்தேசித்துத்தான் இந்த விஷயத்தை நான் அவை முன் வைக்கிறேன். வன்னியர் சங்கத்தினுடைய தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையிலே என்ன கூறியிருக்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். அரசாங்கம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 சதமானம் ஒதுக்கீடு செய்திருப்பது பற்றி அவர்களுக்கு எதிர்ப்பான கருத்து இருக்கிறது. இருக்கட்டும். அதனால் போராட்டங்கள் நடத்த வேண்டியிருக்கிறது. அந்தப் போராட்டங்கள் இது வரைக்கும் நடந்த மாதிரி போராட்டங்களாக இருக்காது, சமாதான முறையில் போராட்டங்கள் நடத்தி எந்தப் பிரச்சினையையும் அரசு தீர்க்க முடியாது என்ற தெளிவாகக் குறிப்பிட்டு, போராட்டம் பலாத்காரமாக இனிமேல் நடத்தப்படுமென்று பட்டவர்த்தமான அந்த அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே அரசின் சார்பிலே வெளியிட்டுள்ள அறிக்கைகளைக் கொளுத்துவது என்ற நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். அடுத்தபடியாக பலாத்காரப் போராட்டம்தான் நடத்தப்படுமென்று பகிரங்கமாக அறிக்கை வெளியிடும்போது, இது சம்பந்தமாக மக்கள் மத்தியிலே ஒரு விதமான கவலையும், மோசமான நிலை ஏற்படுமோ என்கின்ற எண்ணமும் மக்கள் மத்தியிலே உருவாகிக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே இதுபோன்ற பலாத்காரப் போராட்டங்கள் நடத்தப்பட்டு, பல நாட்கள் தென் பகுதி மாவட்டங்களிலே போக்குவரத்து அடியோடு ஸ்தம்பித்து நூற்றுக்கணக்கான மரங்களை வெட்டி, ரோட்டிலே போட்டு, எந்தவிதமான போக்குவரத்தும் இல்லாதபடிக்கு தடுக்கப்பட்ட நிகழ்ச்சி நடந்திருக்கிறது. இது தமிழகத்தில் உள்ள மக்கள் அனைவருக்கும் தெரியும்.

1989 மே 2] [திரு. கே. ரமணி]

(முற்பகல் 10-10)

இந்த சூழ்நிலையில் — பகிரங்கமாக, பலாத்காரப் போராட்டத்திற்கு — எல்லா சட்ட வழிகளையும், அமைதியான முறைகளையும், ஜனநாயக வழிமுறைகளையும் — சகலத்தையும் நிராகரித்து விட்டு இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாக்கப்படுவதை தவிர்க்க — மக்கள் ஒழுங்கான முறையில் வாழ்க்கை நடத்தவும், பயம் பீதி இல்லாமல் வாழ்க்கை நடத்தவும், அரசு தரப்பிலிருந்து என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதே மன்றத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியக் கொள்கைக் குறிப்புகளின் மீது விவாதம் நடைபெற்ற போது — நான் மிக விளக்கமாக ஒரு வேண்டுகோளை விடுத்திருக்கிறேன்.

தமிழ் நாட்டிலே 65 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வன்னியப் பெருங்குடி மக்களாக இருக்கிறார்கள் என்றாலும் கூட, 5 கோடி மக்களுடைய பிரச்சினைகளையும் இந்த அரசு கவனிக்க வேண்டியிருக்கிறது என்பதையும் மறந்து விடக் கூடாது. ஏற்கனவே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உள்ள இட ஒதுக்கீடு 50 சதவீதம் என்று இருக்கிறது. அந்த 50 சதவீதத்தில், சற்றொப்ப 2 கோடிக்கு மேற்பட்டவர்களுக்கு 30 சதவீதமும், சற்றொப்ப ஒரு கோடி சொச்சம் பேர் — வன்னியப் பெருமக்கள் உள்ளிட்ட — மிகவும் பிற்பட்டவர்களுக்கு 20 சத வீதமும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு கோடி சொச்சத்திற்கு 20 சதவீதமும் — இரண்டு கோடி சொச்சத்திற்கான மக்களுக்கு 30 சத வீதமும் இடம் ஒதுக்கியிருக்கிறோம். இதிலே கூட அவர்கள் எதிர்பார்க்கிற அந்தக் குறியீட்டை எட்டவில்லை என்றால் — இந்த ஆண்டு பரீட்சார்த்தமாக அதைப் பார்த்துவிட்டு — தேவைப்பட்டால் மீண்டும் திருத்திக் கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறது என்று இந்த அவையிலேயே — மாண்புமிகு உறுப்பினர்களின் முன்னிலையிலேயே நான் அறிவித்து — அது ஏடுகளில் வெளிவந்திருக்கிறது. அதற்குப் பிறகும் கூட, போராடியே தீருவது என்கிற முடிவுக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள்.

அண்மையில் வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்த பெண்களைக் கொண்ட ஆர்ப்பாட்டங்கள் பல இடங்களில் நடைபெற்றன. அவைகள் அமைதியாக நடந்து முடிந்த பிறகு, ஒரு வன்முறைக் கிளர்ச்சியை நடத்த வேண்டும் என்ற திட்டத்தோடு கூட்டங்களில் வன்முறையைத் தூண்டிவிடுகிற வகையில் — டாக்டர் இராமதாஸ் அவர்களும் அவரைச் சார்ந்தவர்களும் பேசி வருகிறார்கள். பேச்சோடு நிற்காமல் அது செயலிலும் இன்றைக்குக் காட்டப்பட்டுள்ளது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மே 2

நேற்றைய தினம் மே தினத்தில் — தமிழ்நாடு முழுவதும் மே தினத்தை மகிழ்ச்சியாக எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் — எல்லாக் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்க வாதிகளும் — நல்ல முறையில் நடத்தியிருக்கிற நேரத்தில் விழுப்புரம் பகுதியிலே அவர்கள் ஒரு ஊர்வலத்தை எடுத்து — அந்த ஊர்வலத்தில் மிகக் குறைவானவர்கள்தான் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்றாலும் கூட, ஊர்வலத்தில் சென்றவர்கள் வழியில் இருக்கிற அரசியல் கட்சிகளின் கொடிகளையெல்லாம் வெட்டி வீழ்த்தியிருக்கிறார்கள். அப்போது கூட போலீசார் தலையிடாமல் — அசம்பாவிதம் எதுவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு வழியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த—ஓரமாக ஊர்வலத்திற்கு வழிவிட்டு—ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துகளையெல்லாம் அடித்தும் உடைத்தும் கொளுத்தியும் வன்முறைகளில் அவர்கள் ஈடுபட்டு — அதன் காரணமாக அதைத தடுக்க போலீசார் தடியடி செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை யொட்டி, நேற்றிரவு சில பஸ்கள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. தனியாருடைய கார்கள் எல்லாம் சாலையில் சென்றபோது அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. காலையில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு இராஜமாணிக்கம் அவர்கள் கூட முறையிட்டு ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார்.அவர் ஏறி வந்த பஸ்ஸூம் கூட கொளுத்தப்பட்டு, அவர் ஒருநூலிழையில் உயிர் தப்பியிருக்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்படிப்பட்ட வன்முறைகள் மூலமாக அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று அவர்கள் கருதுவது மிகமிகத் தவறு. இதை விடப் பணிவாக — இறங்கி வந்து—வேண்டுகோள் விடுத்து — மீண்டும் கூட பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம்—ஒரு முறை பரீட்சார்த்தமாக நாம் எடுத்திருக்கிற இந்த முடிவைச் சோதிததுப் பார்ப்போம் என்று சொன்ன பிறகும் கூட போராடியே தீருவது என்கின்ற ஒரு குறிக்கோளோடு நடைபெறுகின்ற வன்முறைக் கிளர்ச்சியை இந்த அரசு இனியும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதை மாத்திரம் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் தமிழ்நாட்டில் இருக்கிற 5 கோடி மக்களின் — அதிலும் எத்தனையோ பிற்படுத்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள்— இன்னும் இட ஒதுக்கீட்டின் பலனை அனுபவிக்க முடியாத பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பலர் இருக்கிறார்கள் — அவர்களையும் மனதில் வைத்துதான் எந்த ஒரு திட்டத்தையும் இந்த அரசு நிறைவேற்ற முடியும் — அறிவிக்க முடியும்— என்பதையும் நான் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி இந்த அளவிலாவது அவர்கள் தங்களுடைய போராட்டங்களைக் கை

விட்டு, நல்ல முடிவு காண்பதற்கு ஒத்துழைக்க வேண்டும் — நான் சொன்ன வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை இந்த அவையின் மூலமாக நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய ரமணி அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல மேடைகளிலே அவர்கள் பேசுகின்ற பேச்சுக்கள் சில நேரங்களிலே சொற்பொழிவாளர்கள் வேகமாகப் பேசுவது உண்டு; ஆவேசமாகப் பேசுவது உண்டு; அது மேடை அலங்காரத்திற்காக அல்லது அவர்களுடைய கட்சியை சேர்ந்த தொண்டர்கள் இருந்தால் அவர்களை மகிழ்ச்சி அடையச் செய்வதற்காகப் பேசுவது உண்டு. ஆனால் இது அப்படி அல்ல; அந்தப் பேச்சு உடனடியாக செயல்படுத்தப்படுகின்ற பேச்சாக இருக்கின்ற காரணத்தால் அந்த வன்முறைகளை இந்த அரசு நிச்சயமாக அனுமதிக்காது; சட்டப்படி எல்லா நடவடிக்கைகளையும் எடுங்கள் என்று அதிகாரிகளுக்கு அரசு ஆணையிட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) தேசிய மீனவர் பேரவையினர் கன்னியாகுமரியில் பேரணி நடத்தியபோது ஏற்பட்ட கலவரத்தினால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை.

**திரு. பொன். விஜயராகவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர் தினமாகிய நேற்று கன்னியாகுமரியிலே ஒரு துப்பாக்கிச் சூடு நடைபெற்று இருக்கிறது. தேசிய மீனவர் பேரணிக்காகச் சென்ற மீனவர்களுக்கும், அங்கு இருக்கக் கூடிய மீனவர்களுக்கும் இடையிலே ஏற்பட்ட சில தகராறுகளின் காரணமாகவோ அல்லது அங்கு இருக்கக் கூடிய இடிந்த கரை, கூத்தங்குளி ஆகிய இரண்டு மீனவ கிராம மக்கள் மத்தியில் ஏற்பட்ட பிரச்சினை குறித்தோ எழுந்த தகராறில் மிகப் பெரிய கலவரம் மூண்டு அந்த கலவரத்தின் அடிப்படையில் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தி இருக்கின்றார்கள். அந்த துப்பாக்கிச் சூட்டில் ஏறத்தாழ 10 பேர் காயமடைந்து இருப்பதாகவும், சில பேருடைய நிலைமை கவலைக்கு இடமாக உள்ளது என்றும் தகவல் வந்து இருக்கிறது. அந்தப் பேரணி பற்றி செய்தி சேகரிப்பதற்காகச் சென்ற இந்து பத்திரிகையின் நிருபர் வாஸ் மாத்யூ என்பவரும், ஜூனியர் விகடன் பத்திரிகையைச் சேர்ந்த அருள் செழியன் என்கிற நிருபரும் தாக்கப்பட்டு அவர்களும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருப்பதாக செய்திகள் வந்து இருக்கிறது. இது குறித்து அரசாங்கத்தின் சார்பில் அதனுடைய கருத்தையும், இந்த நிலைமையையும் விளக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் முதலமைச்சரைக் கேட்டு அமைகிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** சபாநாயகர் அவர்களே, இன்று காலையிலே இந்தத் தகவல் வந்த உடனேயே தங்களுடைய கவனத்திற்கு நாங்கள் கொண்டு வந்தோம். தேசிய மீனவர்

விட்டு, நல்ல முடிவு காண்பதற்கு ஒத்துழைக்க வேண்டும் — நான் சொன்ன வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை இந்த அவையின் மூலமாக நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய ரமணி அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல மேடைகளிலே அவர்கள் பேசுகின்ற பேச்சுக்கள் சில நேரங்களிலே சொற்பொழிவாளர்கள் வேகமாகப் பேசுவது உண்டு; ஆவேசமாகப் பேசுவது உண்டு; அது மேடை அலங்காரத்திற்காக அல்லது அவர்களுடைய கட்சியை சேர்ந்த தொண்டர்கள் இருந்தால் அவர்களை மகிழ்ச்சி அடையச் செய்வதற்காகப் பேசுவது உண்டு. ஆனால் இது அப்படி அல்ல; அந்தப் பேச்சு உடனடியாக செயல்படுத்தப்படுகின்ற பேச்சாக இருக்கின்ற காரணத்தால் அந்த வன்முறைகளை இந்த அரசு நிச்சயமாக அனுமதிக்காது; சட்டப்படி எல்லா நடவடிக்கைகளையும் எடுங்கள் என்று அதிகாரிகளுக்கு அரசு ஆணையிட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) தேசிய மீனவர் பேரவையினர் கன்னியாகுமரியில் பேரணி நடத்தியபோது ஏற்பட்ட கலவரத்தினால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர் தினமாகிய நேற்று கன்னியாகுமரியிலே ஒரு துப்பாக்கிச் சூடு நடைபெற்று இருக்கிறது. தேசிய மீனவர் பேரணிக்காகச் சென்ற மீனவர்களுக்கும், அங்கு இருக்கக் கூடிய மீனவர்களுக்கும் இடையிலே ஏற்பட்ட சில தகராறுகளின் காரணமாகவோ அல்லது அங்கு இருக்கக் கூடிய இடிந்த கரை, கூத்தங்குளி ஆகிய இரண்டு மீனவ கிராம மக்கள் மத்தியில் ஏற்பட்ட பிரச்சினை குறித்தோ எழுந்த தகராறில் மிகப் பெரிய கலவரம் மூண்டு அந்த கலவரத்தின் அடிப்படையில் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தி இருக்கின்றார்கள். அந்த துப்பாக்கிச் சூட்டில் ஏறத்தாழ 10 பேர் காயமடைந்து இருப்பதாகவும், சில பேருடைய நிலைமை கவலைக்கு இடமாக உள்ளது என்றும் தகவல் வந்து இருக்கிறது. அந்தப் பேரணி பற்றி செய்தி சேகரிப்பதற்காகச் சென்ற இந்து பத்திரிகையின் நிருபர் வாஸ் மாத்யூ என்பவரும், ஜூனியர் விகடன் பத்திரிகையைச் சேர்ந்த அருள் செழியன் என்கிற நிருபரும் தாக்கப்பட்டு அவர்களும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருப்பதாக செய்திகள் வந்து இருக்கிறது. இது குறித்து அரசாங்கத்தின் சார்பில் அதனுடைய கருத்தையும், இந்த நிலைமையையும் விளக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் முதலமைச்சரைக் கேட்டு அமைகிறேன்.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, இன்று காலையிலே இந்தத் தகவல் வந்த உடனேயே தங்களுடைய கவனத்திற்கு நாங்கள் கொண்டு வந்தோம். தேசிய மீனவர்

[திரு. குமரி அனந்தன்] [1989 மே 2

பேரணி என்று கல்கத்தாவிலிருந்து ஒன்றும், மகாராஷ்டிரத்திலிருந்து ஒன்றுமாக வந்தவர்கள் காந்தி நினைவு மண்டபம் வரை அமைதியாகவே சென்று இருக்கிறார்கள் பத்திரிகைச் செய்திப் படி. பிறகு அவர்கள் மீண்டும் வருகிற நேரத்திலே தான் அந்தத் தகராறு என்று சொல்லுகிறார்கள். காயம் பட்டவர்களைப் பார்த்தால் எல்லாம் உள்ளூர் வாசிகளாகவே இருக்கிறார்கள். வெளியூரிலே இருந்து வந்தவர்கள் ஊர்வலத்தை நடத்துகின்ற போது உள்ளூர் வாசிகள் மட்டுமே காயப்பட்டது போன்று தகவல் வந்து இருக்கிறது. அதன் பிறகு துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பொன். விஜயராகவன் சொன்னதைப் போல, இங்கே இந்து பத்திரிகையின் செய்தியாளரும், ஜூனியர் விகடன் செய்தியாளரும் கூட அதிலே பாதிக்கப்பட்டு இருக்கிற செய்தி இருக்கிறது. நீரைக் காப்போம்; உயிரைக் காப்போம் என்று வந்த அந்த ஊர்வலம் மற்ற ஜீவசந்துக்களோடு சமாதானமாக வாழ வேண்டுமென்று வந்த ஊர்வலத்திலே, மனிதனுக்கு மனிதனே சண்டை வருகின்ற ஒரு சூழ்நிலை ஏன் வந்தது? அதனாலே மீனவர்களை துப்பாக்கியாலே சுடுகின்ற சூழ்நிலை ஏன் வந்தது? எனவே அந்தப் பகுதியில் இருக்கின்ற பதட்ட நிலையைப் போக்குவதற்கு என்னென்ன நடவடிக்கையை அரசு எடுத்து இருக்கிறது என்பதை நானும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, சமுதாய சமத்துவம் என்ற தலைப்பிலே ஒரு ஊர்வலம் கன்னியாகுமரியிலே நடைபெற்று இருக்கின்றது. அந்த ஊர்வலத்தில் பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்த பலர் கலந்து கொண்டிருக்கிறார்கள். பெரும் பகுதியினர் மீனவப் பெருங்குடி மக்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் கூறியதைப் போலவும், மாண்புமிகு உறுப்பினர் பொன். விஜயராகவன் அவர்கள் கூறியதைப் போலவும் ஊர்வலத்திலே வந்தவர்கள், திரும்பிச் சென்றவர்கள், அவர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறோ, அது உள்ளூர், வெளியூர் தகராறோ அல்லது வேறு எந்தத் தகராறோ, அவர்களுக்குள்ளேயே ஏற்பட்ட தகராறு. இன்னும் சொல்லப்போனால் எனக்கு வந்த தகவல் படி திட்டமிட்டு நடைபெற்ற தகராறு கூட அல்ல; ஏதோ ஒரு அசம்பாவிதமாக, தற்செயலாக நடைபெற்ற தகராறு; ஒருவர் காலை ஒருவர் மிதித்து விட்டு ஊர்வலத்திலே செல்லும் போது இப்படி மிக சொற்பமான, அற்பமான காரணங்களுக்காக அந்தத் தகராறு மூண்டு, அதன் காரணமாக எழுந்த அடிதடி தகராறு முற்றிய இடம் போலீஸ் ஸ்டேஷன் வாசலாக இருக்கவே, போலீஸ் ஸ்டேஷன் வாசலிலே இருந்தவர்கள் ஸ்டேஷன் மீது தாக்குதல் நடத்தவும், போலீஸ் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தவுமான சம்பவம் நடைபெற்று இருக்கிறது.

(முற்பகல் 10-20)

அங்கேயிருந்த நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் பத்து, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இரண்டு, மற்றும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து

கள் உள்பட மொத்தத்திலே பதினெட்டு பேருந்துகள் சேதமடைந்தன. சேதமடைந்த மொத்த சொத்தின் மதிப்பு இருபதாயிரம் ரூபாய் இருக்குமென்று கூறப்படுகிறது. அங்கே இந்தத் தாக்குதலுக்குப் பெண்களும் விடுபடவில்லை. அவர்களும் அந்தத் தாக்குதலுக்கு அங்கே ஆளாகி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு நிலைமை கட்டுக்கு அடங்காமல் போன சூழ்நிலையில் அங்கிருந்த போலீசார் பக்ஷாட் என்கிற அந்தத் துப்பாக்கி பிரயோகத்தை நடத்த வேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டதாகவும் போலீசார் சொல்கின்றார்கள்.

இப்பொழுது நிலைமை அங்கே கட்டுக்கு அடங்கியிருந்தாலும் கூட, அதிலே எனக்கு உள்ள வருத்தம், அங்கே ஒரு பத்தாயிரம் பேர் திரண்டு ஊர்வலம் வருகிறார்கள் என்கிறபொழுது அந்த இடத்திற்கு எஸ்.பி. நிச்சயமாக ஆரம்பத்திலேயே சென்றிருக்க வேண்டும். அதற்கு அடுத்த நிலையிலுள்ள அதிகாரியாவது அங்கே சென்றிருக்க வேண்டும். அவர்கள் ஏன் சென்று, முன்கூட்டியே முன் ஜாக்கிரதையாக இருக்கவில்லை என்பதற்காக அவர்களிடத்திலே விளக்கம் கேட்குமாறு நான் அரசுத் துறையின் மூலமாகக் கூறியிருக்கிறேன்.

எனினும் இப்பொழுது அங்கு எந்தப் பதட்டமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) இலங்கை அரசுடன் விடுதலைப் புலிகள் நடத்தி வரும் பேச்சு வார்த்தை குறித்து.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரவர்களிடம் ஒரு தெளிவான தகவலைக் கேட்க விரும்புகிறேன். இதற்கு முன்னாலே இங்கே இந்தப் பிரச்சினை சம்பந்தமாகப் பேசிய நேரத்தில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூட அன்றைக்கு இந்த இலங்கை அரசிடம் விடுதலைப் போராளிகள் பேச்சு வார்த்தை பற்றி மகிழ்ச்சி தெரிவித்தார்கள். ஆனால், இன்றைய தினம் அது வேறுவிதமாகத் திரும்பி, இன்றைக்குத் தமிழ் மாநில அரசைக் கலைக்க வேண்டுமென்ற அளவிற்கு விடுதலைப் போராளிகள் டிமான்ட் வைப்பதாகவும், எனவே, நம்முடைய இந்திய அரசாங்கம், படைகளை வாபஸ் வாங்க மாட்டோம் என்று சொல்லுகின்ற அளவிற்கு ஒரு மோசமான சூழ்நிலை, ஒரு சுமுகமான சூழ்நிலை இல்லாத நிலை இன்றைக்கு இலங்கையிலே ஏற்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? தெரிந்தால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தப் பிரச்சினையைச் சுமுகமாக முடிப்பதற்கு மத்திய அரசாங்கத்திடமோ அல்லது விடுதலைப் புலிகளிடமோ பேசுவது போன்ற முயற்சிகளை செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

கள் உள்பட மொத்தத்திலே பதினெட்டு பேருந்துகள் சேதமடைந்தன. சேதமடைந்த மொத்த சொத்தின் மதிப்பு இருபதாயிரம் ரூபாய் இருக்குமென்று கூறப்படுகிறது. அங்கே இந்தத் தாக்குதலுக்குப் பெண்களும் விடு டவில்லை. அவர்களும் அந்தத் தாக்குதலுக்கு அங்கே ஆளாகி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு நிலைமை கட்டுக்கு அடங்காமல் போன சூழ்நிலையில் அங்கிருந்த போலீசார் பக்ஷாட் என்கிற அந்தத் துப்பாக்கி பிரயோகத்தை நடத்த வேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டதாகவும் போலீசார் சொல்கின்றார்கள்.

இப்பொழுது நிலைமை அங்கே கட்டுக்கு அடங்கியிருந்தாலும் கூட, அதிலே எனக்கு உள்ள வருத்தம், அங்கே ஒரு பத்தாயிரம் பேர் திரண்டு ஊர்வலம் வருகிறார்கள் என்கிறபொழுது அந்த இடத்திற்கு எஸ். பி. நிச்சயமாக ஆரம்பத்திலேயே சென்றிருக்க வேண்டும். அதற்கு அடுத்த நிலையிலுள்ள அதிகாரியாவது அங்கே சென்றிருக்க வேண்டும். அவர்கள் ஏன் சென்று, முன்கூட்டியே முன் ஜாக்கிரதையாக இருக்கவில்லை என்பதற்காக அவர்களிடத்திலே விளக்கம் கேட்குமாறு நான் அரசுத் துறையின் மூலமாகக் கூறியிருக்கிறேன்.

எனினும் இப்பொழுது அங்கு எந்தப் பதட்டமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) இலங்கை அரசுடன் விடுதலைப் புலிகள் நடத்தி வரும் பேச்சு வார்த்தை குறித்து.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரவர்களிடம் ஒரு தெளிவான தகவலைக் கேட்க விரும்புகிறேன். இதற்கு முன்னாலே இங்கே இந்தப் பிரச்சினை சம்பந்தமாகப் பேசிய நேரத்தில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூட அன்றைக்கு இந்த இலங்கை அரசிடம் விடுதலைப் போராளிகள் பேச்சு வார்த்தை பற்றி மகிழ்ச்சி தெரிவித்தார்கள். ஆனால், இன்றைய தினம் அது வேறுவிதமாகத் திரும்பி, இன்றைக்குத் தமிழ் மாநில அரசைக் கலைக்க வேண்டுமென்ற அளவிற்கு விடுதலைப் போராளிகள் டிமான்ட் வைப்பதாகவும், எனவே, நம்முடைய இந்திய அரசாங்கம், படைகளை வாபஸ் வாங்க மாட்டோம் என்று சொல்லுகின்ற அளவிற்கு ஒரு மோசமான சூழ்நிலை, ஒரு சுமுகமான சூழ்நிலை இல்லாத நிலை இன்றைக்கு இலங்கையிலே ஏற்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? தெரிந்தால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தப் பிரச்சினையைச் சுமுகமாக முடிப்பதற்கு மத்திய அரசாங்கத்திடமோ அல்லது விடுதலைப் புலிகளிடமோ பேசுவது போன்ற முயற்சிகளை செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் விளக்க வேண்டுமென்று எண்ணியிருந்த ஒன்றை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் இந்த வினாவின் மூலமாகத் துணை புரிந்து, அதை விளக்குகிற வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தி இருக்கின்றார்கள்.

அங்கே இலங்கைப் போராளிகள், குறிப்பாக விடுதலைப் புலிகள் தமிழ் மாநில அரசைக் கலைக்க வேண்டுமென்று சொன்னதாக அவர்கள் குறிப்பிட்டார்கள். பத்திரிகைக்காரர்களோ, பொது மக்களோ அதைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. தமிழ் மாநில அரசு என்றால், இங்கே இருக்கின்ற தமிழ் மாநில அரசு அல்ல, அங்கே ஏற்கனவே உருவாகி, வரதராஜப் பெருமாள் அவர்களுடைய தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மாநில அரசு-மாநில கவுன்சில் அதைக் கலைக்க வேண்டுமென்று சொன்னதாகப் பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது.

நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் முதல் காரியமாக, இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே இந்தியப் பிரதமர் அவர்கள், ஒரு சுமுகமான முடிவு காண, விடுதலைப் புலிகள் உள்ளிட்டு எல்லாத் தரப்பாரையும் அழைத்து பேச வேண்டும்; விடுதலைப் புலிகள் மாத்திரம் அல்ல; வரதராஜப் பெருமாள் மற்றும் உள்ள போராளி இயக்கங்கள் அனைத்தையும் அழைத்துப் பேச வேண்டும்; இலங்கை அரசினுடைய பிரதிநிதிகளோடும் பேச வேண்டும். அதற்கான வழிவகைகளை வகுக்க வேண்டுமென்று, நான்கு தடவை, இரண்டு முறை நான் டெல்லிக்குச் சென்றபோது, 4 தடவை இதற்காக இந்தியப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் அவர்களைச் சந்தித்து முறையிட்டுக் கொண்டேன். அவர்களும் அதற்கான வழிகளையெல்லாம் என்னிடத்திலே எடுத்து சொல்லி இந்தப் பேச்சுவார்த்தை உடனடியாக நடைபெறுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் குறிப்பிட்டவாறு நான் அதற்கான தாக்கீது வரும் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறபொழுது என்ன காரணத்தாலோ அது தடைப்பட்டு, அது என் அரசியல் காரணமோ அல்லது வேறு காரணமோ எனக்குத் தெரியாது—அது தடைப்பட்டு, எடுக்கப்பட்ட முயற்சிகள் திடீரென்று அடியோடு நிறுத்தப்பட்டுவிட்டன.

அதற்கிடையிலேதான் அங்கே இலங்கையினுடைய அதிபர் பிரேமதாசா விடுதலைப் புலிகளை அழைத்துப் பேசுகின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொண்டு, அவர்களோடு இன்றைக்குப் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தையிலே அவர்கள் போடுகின்ற நிபந்தனையை இலங்கை அரசு ஏற்றுக் கொள்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அங்கே இப்பொழுது நிலைமை நம்முடைய கையை விட்டுப் போய் விட்டதைப்போன்ற ஒரு சூழல் இருப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது.

1989 மே 2] (டாக்டர் மு. கருணாநிதி)

இதற்கு மேல் எப்படி பிரச்சினைகள் வளர்கின்றன என்பதை எண்ணிப் பார்த்துத்தான், அதைக் கவனித்துப் பார்த்துத்தான் மேலும் என்ன நடவடிக்கை எடுக்கலாம், இந்திய அரசை எப்படி அணுகலாம் என்பதைப் பற்றியெல்லாம் நாம் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

## 4. அறிவிப்புகள்.

சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை, மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவை, அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவை, அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக் கழகப் பேரவைகளுக்கு முன் மொழியப் பெற்ற உறுப்பினர்களின் பெயர்கள் பின் வருமாறு :

சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை :

திரு. எம். அப்துல் லத்தீப்.
திரு. எம். சேட்டு.
டாக்டர் கோ. நந்தகோபால கிருட்டிணன்.
டாக்டர் க. காஞ்சனா
திரு. அ. இரகுமான்கான்
திரு. எஸ். டி. உகம்சந்த்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவை :

திரு. பெ. சீனிவாசன்
திரு. அ. லெ. சுப்பிரமணியன்.
திரு. ஆர். சிங்காரம்.
திரு. எஸ். ஆர். இராதா

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை :

டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி
திரு. இ. புகழேந்தி.
திரு. குமரி அனந்தன்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1989 மே 2] (டாக்டர் மு. கருணாநிதி)

இதற்கு மேல் எப்படி பிரச்சினைகள் வளர்கின்றன என்பதை எண்ணிப் பார்த்துத்தான், அதைக் கவனித்துப் பார்த்துத்தான் மேலும் என்ன நடவடிக்கை எடுக்கலாம், இந்திய அரசை எப்படி அணுகலாம் என்பதைப் பற்றியெல்லாம் நாம் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

## 4. அறிவிப்புகள்.

சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை, மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவை, அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவை, அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக் கழகப் பேரவைகளுக்கு முன் மொழியப் பெற்ற உறுப்பினர்களின் பெயர்கள் பின் வருமாறு:

சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை:

திரு. எம். அப்துல் லத்தீப்.
திரு. எம். சேட்டு.
டாக்டர் கோ. நந்தகோபால கிருட்டிணன்.
டாக்டர் க. காஞ்சனா
திரு. அ. இரகுமான்கான்
திரு. எஸ். டி. உகம்சந்த்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவை:

திரு. பெ. சீனிவாசன்
திரு. அ. லெ. சுப்பிரமணியன்.
திரு. ஆர். சிங்காரம்.
திரு. எஸ். ஆர். இராதா

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை:

டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி
திரு. இ. புகழேந்தி.
திரு. குமரி அனந்தன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவை :

திரு. எம். இராமச்சந்திரன்.
திரு. எஸ். எஸ். தென்னரசு

அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு திரு. என். கணபதி அவர்களின் பெயர் முறையாக முன் மொழியப் பெற்றுள்ளது.

முன் மொழியப் பெற்றவர்களின் எண்ணிக்கையும், நியமிக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கையும் சமமாகவே இருப்பதால் மேற்குறிப்பிட்ட உறுப்பினர்கள் அந்த அந்தப் பல்கலைக் கழகப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பதை நான் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

**(அ) கோயம்புத்தூரில் ஒரு நிறுவனம் உயிர்காக்கும் '' குளுகோஸ் திரவத்தில் கலப்படம் செய்து விற்பனை செய்துள்ளது குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் உ. ரா. வரதராசன், யூ. கே. வெள்ளிங்கிரி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' கோயம்புத்தூரில் இயங்கும் ஒரு நிறுவனம் நோயாளிகளுக்கு உட்செலுத்தும் உயிர்காக்கும், ' குளுகோஸ் திரவத்தில் ' கலப்படம் செய்து 30,000 பாட்டில்களை விற்பனை செய்துள்ளது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

மருந்து மற்றும் அழகு சாதன சட்டத்தின் கீழ் திருவாளர்கள் ' ஆஸ்லர்ஸ் ' பார்மா லிமிடெட்., பேரூர் மெயின் ரோடு, கோவை அவர்களுக்கு ஊசி மூலம் உட் செலுத்தப்படும் உயிர் காக்கும் குளுகோஸ் திரவம் தயாரிக்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

(பேரவைத் தலைவர்) [1989 ...

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவை :

திரு. எம். இராமச்சந்திரன்.
திரு. எஸ். எஸ். தென்னரசு

அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு திரு. என். கணபதி அவர்களின் பெயர் முறையாக முன் மொழியப் பெற்றுள்ளது.

முன் மொழியப் பெற்றவர்களின் எண்ணிக்கையும், நியமிக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கையும் சமமாகவே இருப்பதால் மேற்குறிப்பிட்ட உறுப்பினர்கள் அந்த அந்தப் பல்கலைக் கழகப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பதை நான் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) கோயம்புத்தூரில் ஒரு நிறுவனம் உயிர்காக்கும் '' குளுகோஸ் திரவத்தில் கலப்படம் செய்து விற்பனை செய்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் உ. ரா. வரதராசன், யூ. கே. வெள்ளிங்கிரி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' கோயம்புத்தூரில் இயங்கும் ஒரு நிறுவனம் நோயாளிகளுக்கு உட்செலுத்தும் உயிர்காக்கும், ' குளுகோஸ் திரவத்தில் ' கலப்படம் செய்து 30,000 பாட்டில்களை விற்பனை செய்துள்ளது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

மருந்து மற்றும் அழகு சாதன சட்டத்தின் கீழ் திருவாளர்கள் ' ஆஸ்லர்ஸ் ' பார்மா லிமிடெட்., பேரூர் மெயின் ரோடு, கோவை அவர்களுக்கு ஊசி மூலம் உட் செலுத்தப்படும் உயிர் காக்கும் குளுகோஸ் திரவம் தயாரிக்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

1989 மே 2] (டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி)

2. 9—2—1989-ம் தேதிய டைம்ஸ் ஆப் இந்தியா புது டெல்லி பதிப்பில் . கோவை ' ஆஸ்லர்ஸ் ' பார்மா லிமிடெட் நிறுவனத்தினரால் தயாரிக்கப்பட்ட ஊசி மூலம் உட்செலுத்தப் படும் உயிர்காக்கும் குளுக்கோஸ் திரவம் சுமார் 30 முதல் 40 ஆயிரம் பாட்டில்கள் உபயோகத்திற்கு தகுதியற்றதாகக் கருதப் பட்டு புதுடெல்லி, ' எஸ். கே. பார்மஸூட்டிகல்ஸ் ' என்ற நிறுவனத்தில் கிடப்பில் உள்ளதென பிரசுரிக்கப்பட்டது. இத் தகவலை 9—2—1989 அன்று இந்திய துணை மருந்துக் கட்டுப் பாடு அலுவலர் (இந்தியா மத்திய மருந்து தர கட்டுப்பாடு அமைப்பு (தெற்கு மண்டலம்) சென்னை-6 அவரால் மாநில மருந்துக் கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டது. டெல்லி துணை மாநில மருந்து கட்டுப்பாடு அலுவலர், ' ஆஸ் லர்ஸ் ' பார்மா லிமிடெட் அவர்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களில் 11 மாதிரிகள் ஆய்வுக்கு எடுத்ததாகவும், ஆய்வின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன என்றும் தமிழ் நாடு மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலருக்குத் தெரி வித்துள்ளார்.

3. மருந்துகளின் விவரமும், தொகுப்பு எண்களும், மருந் தின் பெயரும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தயாரிப்புகளின் பெயர். | தொகுப்பு எண். |
|---|---|
| சோடியம் குளோரைடு இன்ஜெக்ஷன் .. | 80-பி-327 |
| சோடியம் குளோரைடு மற்றும் டெக்ஸ்ட்ரோஸ் இன்ஜெக்ஷன். | 80-பி-459 |
| சோடியம் லேக்டேட் இன்ஜெக்ஷன் .. | 80-பி-289 |
| ஈ. லைட்—எம். இன்ஜெக்ஷன் .. | 80-பி-287 |
| ஈ. லைட்—எம். இன்ஜெக்ஷன் .. | 80-பி-176 |
| ஈ. லைட்—பி. இன்ஜெக்ஷன் .. | 80-பி-258 |
| ஈ. லைட்—பி. இன்ஜெக்ஷன் .. | 80-பி-266 |
| சோடியம்குளோரைடு மற்றும் டெக்ஸ்ட்ரோஸ் இன்ஜெக்ஷன். | 80-பி-163 |
| டெக்ஸ்ட்ரோஸ் இன்ஜெக்ஷன்ஸ் | 80-பி-302 |

டெக்ஸ்ட்ரோஸ் மற்றும் சோடியம் குளோரைடு இன்ஜெக்ஷன். 80-பி-138

| | |
|---|---|
| ஷை | 80-பி-307 |
| ஷை | 80-பி-312 |
| ஷை | 80-பி-322 |

மேற்படி மருந்துகளின் சோடியம் குளோரைடு, இன்ஜெக்ஷன் மற்றும் சோடியம் லாக்டேட் இன்ஜெக்ஷன் தவிர மற்ற எல்லாவற்றிலும் குளுகோஸ் திரவம் ( Dextrose ) சேர்க்கப்பட்டுள்ளது.

4. இது சம்பந்தமாக கோயம்புத்தூரில் உள்ள தயாரிப்பு நிறுவனம் ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாய்விலிருந்து கீழ்க் கண்டவை தெரியவந்துள்ளன :—

(அ) இம்மருந்துகளின் கண்ட்ரோல் சாம்பிள்கள் பார்வைக்கு சுத்தமாக உள்ளது.

(ஆ) புகாரில் சம்பந்தப்பட்ட மருந்துகளின் பதிவேடுகள் தயாரிப்பு மற்றும் ஆய்வு செய்யப்பட்ட பதிவேடுகள் பார்வையிட்டதில் அவைகள் சரியாக வைக்கப்பட்டுள்ளன. மூலப் பொருட்களும் விற்ற மருந்துகளும் விற்பதற்கு முன்னர் தயாரிப்பாளரால் அவரது சொந்த ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்த பின்னரே விற்பனை செய்யப்பட்டுள்ளது, மேற்படி பதிவேடுகளின் மூலம் தெரியவருகிறது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப நிபுணர் மேற்பார்வையில் இயங்கும் தனியாக தரக்கட்டுப்பாடு ஆய்வகம் ஒன்று அவர்களிடம் உள்ளது.

(ஈ) அவர்கள் புதிய ( Type II ) கண்ணாடி புட்டிகளையே உபயோகப்படுத்துகின்றனர்.

(உ) புகாரில் கூறப்பட்ட தொகுப்புகளின் பகிர்மான விவரங்கள் சரிபார்க்கப்பட்டது. அதில் டெல்லியில் உள்ள சம்மந்தப்பட்ட வணிகர் தவிர மற்ற வணிகர்களுக்கும் மேற்படி மருந்து விற்கப்பட்டுள்ளது தெரியவந்தது. இது சம்பந்தமாக டெல்லி வணிகரை தவிர மற்ற எவரிடமிருந்தும் எந்தவிதமான (தரம்பற்றிய) புகார்களும் வரவில்லை.

(ஊ) பகுப்பாய்விற்கு மாதிரிகள் எடுத்த புகாரில் கூறப்பட்ட தொகுப்புகள் சம்பந்தப்பட்ட மருந்துகள் தயாரிப்பாளரிடம் இருப்பில் இருக்கவில்லை.

1989 மே 2] (டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி)

புகாருக்குப் பின் கோயம்புத்தூர் மண்டல முதுநிலை மருந்தாய்வாளரால் கீழே குறிப்பிட்டுள்ள மாதிரி மருந்துகள் எடுக்கப்பட்டன.

| மாதிரி மருந்து எடுக்கப்பட்ட நாள். | மாதிரி மருந்தின் பெயர். | தொகுதி எண். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 20–2–1989 | ரிங்கர் லாக்டேட் | 80-பி-551 |
| 14–3–1989 | இ. லைட்-இ. | 80-பி-417 |
| 14–3–1989 | டெக்ஸ்ட்ரோஸ் சலைன் | 80-பி-149 |
| 14–3–1989 | நார்மல் சலைன் (சோடியம் குளோரைட் இன்ஜெக்ஷன்) | 80-பி-142 |

மாதிரி மருந்துகள் கிண்டி கிங் இன்ஸ்டிடியூட்டில் உள்ள மருந்துகள் பகுப்பாய்வாளர் (சிறப்பு மருந்துகள்) அவர்களுக்கு அனுப்பப்பட்டு முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**திரு. உ. ரா. வரதராசன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, டெல்லியில் சிடப்பில் போடப்பட்டிருக்கக்கூடிய அந்த பாட்டில்கள் தகுதியற்றனவாக இருக்கின்றன என்று மட்டும் தான் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அது கலப்படம் செய்யப்பட்டதா ? எந்தமுறையில் தகுதியற்றவை என்பது தெரியவில்லை. இந்த மருந்துகளை கோயம்புத்தூரில் இருக்கிற தயாரிப்பு நிறுவனம் அதனுடைய கன்ட்ரோல் சாம்பிள் தயாரிப்பாளரால் அவரது சொந்த ஆய்வுக்கூடத்தில் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது என்றும், தொழில் நுட்ப நிபுணர்கள் மேற்பார்வையில் தரக்கட்டுப்பாடு ஆய்வகம் ஒன்று அவரிடத்திலே உள்ளது என்று மட்டும் தான் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அப்படி தகுதியற்ற, கலப்படம் செய்யப்படுகிற மருந்துகளை ஆய்வு செய்வதற்கு அரசுத் துறை சார்பாக என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? இது உயிர் காக்கும் மருந்தாக நரம்பின் உட்செலுத்தப்படுகிற காரணத்தால், இது உட்செலுத்தப்படுகிற போது நோயாளிகளின் உயிரை பாதிக்கக்கூடிய அளவிற்கு, பறிக்கக்கூடிய அளவிற்கு இருக்கிற காரணத்தால் இதுசம்பந்தமாக என்ன ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி** : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுகுறித்து 11 மாதிரிகள் ஆய்விற்கு எடுத்துக்கொண்டதாக மத்திய அரசின் துணை மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலர் மாநில அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த ஆய்வின் முடிவுகள் இன்னும்

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி] [1989 மே 2

தமிழக அரசால் பெறப்படவில்லை. மேலும் நம்முடைய மருந்து கட்டுப்பாடு அலுவலர்கள் அங்கே சென்று அதற்கான மாதிரி மருந்துகள் இருக்கின்றனவா என்று ஆய்ந்தபோது, அவைகள் இல்லாத காரணத்தால் ஆய்வு செய்ய இயலவில்லை. அங்கேயிருந்த வேறு சில மருந்துகளை ஆய்வு செய்தபோது அதற்கான ஆய்விற்கான மருந்துகள் கிங் நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதனுடைய முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இந்த முடிவுகள் வந்த பிறகு இதிலே கலப்படம் இருப்பதாகத் தெரிந்தால் அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே டெல்லியில் இருக்கக்கூடிய அந்த ஸ்தாபனம் கலப்படம் இருப்பதாக அறிவித்திருந்தும், அது தொடர்பாக இங்கே இருக்கக்கூடிய மருந்து பரிசோதனை செய்யக்கூடியவர்கள் 20—2—1989 முதல் 14—3—1989 முடிய நான்கு 'ஐட்டங்களை' பரிசோதனைக்காக எடுத்துச் சென்றிருக்கிறார்கள். மூன்றாவதாக 14—3—1989-ல் எடுத்துச் சென்றதைப் பொறுத்தவரையில் அந்தப் பரிசோதனை முடிவுகள் நமக்கு தெரியவில்லையென்று சொன்னால், அதற்கிடையில் இருக்கிற குளுக்கோஸ் மக்கள் உபயோகத்திற்கு அனுப்ப முயற்சி செய்தால் அதனால் விளைவுகள் ஏற்படுமே, ஏன் இவ்வளவு காலதாமதம் ஏற்படுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கிங் நிலையத்தில் இதுபோன்ற அறிவியல் சோதனைகளுக்கு எடுத்துச்செல்கிறபோது காலதாமதம் ஏற்படுவது இயற்கை தான். அதற்கான காலம் தேவைப்படுகிறது. தமிழகத்தில் விற்பனை செய்யப்படுகிற இதனுடைய மருந்துகளிலிருந்து இதுவரையில் எந்தவிதமான புகார்களும் அரசிற்கு வரவில்லை. மேலும் இது இரண்டு கம்பெனிகளுக்கு இடையேயுள்ள தகராறு காரணமாகவும் இருக்கலாம் என்ற ஐயப்பாடும் இருக்கிற காரணத்தால் உடனடியாக குளுக்கோஸ் விற்பனைக்கு தடை விதித்தால் மக்கள் அவதியுறுவார்கள் என்ற எண்ணத்தோடு, இது நிரூபிக்கப்பட்ட பிறகு இதன்மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது. இருந்தாலும், இப்போது மாதிரியாக எடுக்கப்பட்ட சாம்பிள்களில் இதுபோன்ற குறைபாடுகள் இல்லை என்பதையும் அவர்கள் ஊர்ஜிதம் செய்த பிறகே, இதை விற்பனைக்கு அனுமதித்து இருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையில்லை. ஆனால், முடிவுகள் தெரிந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.

1989 மே 2]

(முற்பகல் 10-30)

**(ஆ) திசையன்விளை நகர எல்லைக்குள் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுதல்.**

**திருமதி ரமணி நல்லதம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் திசையன்விளையில் 40 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட வீடுகள் மற்றும் கடைகளை நெடுஞ்சாலைத் துறையினர் இடித்தது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம், தொகுதியில், திசையன்விளை நகர எல்லைக்குள் செல்லும் நெடுஞ்சாலைகளான நாங்குநேரி—இடையன்குடி மற்றும் திசையன்விளை—உடன்குடி சாலைகளில் இரு புறமும் ஆக்கிரமிப்புகள் அதிகரித்து, போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் மற்றும் பொதுச் சுகாதாரத்திற்கும் பெரிதும் கேடு விளைவிப்பதாகவும், வாகனங்கள் செல்ல வழியில்லாமல் நீண்ட நேரம் தாமதப்படுவதாகவும், அடிக்கடி விபத்துக்கள் நடப்பதாகவும் பொது மக்களிடமிருந்தும், அரசியல் கட்சிகளிடமிருந்தும் நீண்ட நாட்களாக பரவலாக புகார்கள் வந்து கொண்டிருப்பதாலும், மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நடத்தும் மனு நீதி நாட்கள் கூட்டத்திலும் புகார் செய்யப்பட்டதாலும், மேலும் கூறப்பட்ட ஆக்கிரமிப்புகள் அனைத்தும் 15—3—89 மற்றும் 16—3—89 அன்று அகற்றப்பட்டன. அகற்றப்பட்ட ஆக்கிரமிப்புகள் அனைத்தும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி பாராபட்சமின்றியே எடுக்கப்பட்டன. மேலும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்போது முறையாக முன்பே நோட்டீஸ்கள் சார்பு செய்தும், டாம் டாம் விளம்பரம் செய்துமே அகற்றப்பட்டன. மேலும், ஆக்கிரமிப்புகள் அகற்றும்போது, சேரன்மாதேவி துணை ஆட்சித் தலைவர், வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் காவல் துறையினரும் உடன் இருந்து நில எல்லைகளை அளவு சரி பார்த்த பின்புதான் அகற்றப்பட்டுள்ளன. எனவே, இதில் எந்த முறைகேடும் நடைபெறவில்லை. இதில் இத்துறை அதிகாரிகள் எந்த தனிப்பட்டவரின் தூண்டுதல் பேரிலும் செயலாற்றவில்லை. பொது மக்களின் நன்மையை கருதியே ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள தகவல்கள் திருப்தித் தருவதாக இல்லை. ஏன் என்று சொன்னால், 4 சாலைகளிலும் ஆக்கிரமிப்பு என்று சொல்லி, அதை அகற்றுவதாகக் கூறினார்கள். உடன்குடி சாலை, இடையன் குடி சாலை, திருநெல்வேலி செல்லுகின்ற சாலை, இந்த மூன்று சாலைகளிலும் அகற்றியிருக்கிறார்கள். நான்காவது சாலையான இட்டமொழி சாலையில் அகற்றவேயில்லை. அதற்கு ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்று நான் சந்தேகப்படுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக சாலைக்குத் தேவையான இடங்கள் போக, தேவையில்லாத இடங்களை அகற்றியிருக்கிறார்கள். இதற்கு முன்னதாக ஒரு முறை ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்று முனைந்த வேளையிலே மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சுமார் 20 குடும்பத்தினர் சென்று முறையிட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த இடத்தை வந்து பார்த்து, இந்த இடங்களில் வாழ்கின்ற அந்த 20 குடும்பத்தினரும் சுமார் 40 ஆண்டுக்காலமாக வாழ்ந்து வருகின்ற காரணத்தாலேயும், இந்த இடம் சாலைக்கு எந்த வகையிலும் தேவையில்லாத அளவில் தள்ளி இருக்கின்ற காரணத்தாலும் , அவர்கள் இதிலே இருந்து கொள்ளலாம் இதை அகற்ற வேண்டிய தேவையில்லை, இந்த ஆக்கிரமிப்பை ரத்து செய்யலாம் என்று கூறியபோதிலும், அப்படிப்பட்ட உத்தரவு இருக்கிற போதிலும், அதிலே கை வைத்திருக்கிறார்கள். பிறகு 16 அடி சாலை என்று சொன்னால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன் மீது உரையாற்றிக் கொண்டு இருக்கிறீர்கள். வினா வடிவில் சிறு விளக்கம் தான் கேட்க வேண்டும்.

திருமதி ரமணி நல்லதம்பி : முடித்து விடுகிறேன். 3 கேள்வி தான். ஏன் இட்டமொழி சாலையில் ஆக்கிரமிப்பை அகற்றவில்லை? தேவையில்லை என்று சொன்ன, ஒரு கலெக்டருடைய உத்தரவை மீறி, ஏன் அந்த இடத்தில் அகற்றியிருக்கிறீர்கள். பிறகு சாலைக்குத் தேவையில்லாத இடங்களில் பட்டா கொடுக்கப்பட்டு உள்ளது. டவுன் பிளானிங் அப்ரூவலாகி உள்ளது. அதிலே 4, 5 லட்சம் பெறுமானமுள்ள கட்டிடங்களைக் கட்டியிருக்கிறார்கள். அதை ஏன் இடித்திருக்கிறீர்கள்? பிறகு சாலைக்கு எந்த வகையிலும் தேவையில்லாத தனி நபர்களுடைய உடமைகள் எல்லாம் பாதிக்கப்பட்டு, ஏறத்தாழ 1 கோடி ரூபாய்க்குச் சேதம் விளைந்திருக்கிறதே, அதற்கு பட்டாவும் கொடுக்கப்பட்டு இருக்கிறது, டவுன் பிளானிங் அப்ரூவல் இருக்கிறது. இப்படி தேவையில்லாத, ஆக்கிரமிப்புகளை அகற்றுகிறோம் என்ற போர்வையிலே ஏற்பட்ட இழப்புக்கு, அவர்களுக்கு ஈடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இந்த ஆக்கிரமிப்புகளைப் பொறுத்தவரையில், மாவட்ட வளர்ச்சி மன்றம் கூட்டத்திலேயே ஒருமனதாக முடிவு செய்யப்

பட்டு, அந்த முடிவினுடைய அடிப்படையிலே நீண்டகாலமாகவே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அரசியல் கட்சிகள், இன்னும் பல்வேறு பொதுமக்களுடைய நலம் காக்கின்ற நிறுவனங்கள் மூலம் வந்த புகாரினுடைய அடிப்படையிலேதான் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு எல்லாம் முறையாக நோட்டீஸ்கள் கொடுக்கப்பட்டு, டாம் டாம் மூலமாக முன்னாலே அறிவிக்கப்பட்டு, அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. அதோடு, சேரன்மாதேவியினுடைய துணை ஆட்சித் தலைவரும், வருவாய்த் துறை அதிகாரிகளும், காவல் துறையினரும் உடன் இருந்து, அங்கேயிருக்கக் கூடிய நிலங்களை, எந்தெந்த அளவு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு உள்ளது என்பதை சர்வே செய்ததற்குப் பின்னாலேதான் ஆக்கிரமிப்பு செய்து இருக்கின்ற பகுதிகளை மட்டுமே அகற்றியிருக்கிறார்களே தவிர, பட்டா நிலங்களிலே போய் அத்தகைய கெடுபிடிகள் ஏதும் செய்யவில்லை.

அதோடு இதிலே நாங்குநேரி, இடையன்குடி, திசையன்விளை, உடன்குடி ஆகிய எல்லா சாலைகளிலும் இருக்கிற ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தியிருப்பதாகத்தான் தகவல் தந்திருக்கிறார்கள். அப்படி ஏதாவது ஒரு பாதையில், குறிப்பிட்டுள்ளபடி ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை என்று சொன்னால், நிச்சயமாக அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

## 6. சட்டமுன்வடிவு.

### ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகின்றேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

பட்டு, அந்த முடிவினுடைய அடிப்படையிலே நீண்டகாலமாகவே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அரசியல் கட்சிகள், இன்னும் பல்வேறு பொதுமக்களுடைய நலம் காக்கின்ற நிறுவனங்கள் மூலம் வந்த புகாரினுடைய அடிப்படையிலேதான் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு எல்லாம் முறையாக நோட்டீஸ்கள் கொடுக்கப்பட்டு, டாம் டாம் மூலமாக முன்னாலே அறிவிக்கப்பட்டு, அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. அதோடு, சேரன்மாதேவியினுடைய துணை ஆட்சித் தலைவரும், வருவாய்த் துறை அதிகாரிகளும், காவல் துறையினரும் உடன் இருந்து, அங்கேயிருக்கக் கூடிய நிலங்களை, எந்தெந்த அளவு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு உள்ளது என்பதை சர்வே செய்ததற்குப் பின்னாலேதான் ஆக்கிரமிப்பு செய்து இருக்கின்ற பகுதிகளை மட்டுமே அகற்றியிருக்கிறார்களே தவிர, பட்டா நிலங்களிலே போய் அத்தகைய கெடுபிடிகள் ஏதும் செய்யவில்லை.

அதோடு இதிலே நாங்குநேரி, இடையன்குடி, திசையன்விளை, உடன்குடி ஆகிய எல்லா சாலைகளிலும் இருக்கிற ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தியிருப்பதாகத்தான் தகவல் தந்திருக்கிறார்கள். அப்படி ஏதாவது ஒரு பாதையில், குறிப்பிட்டுள்ளபடி ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை என்று சொன்னால், நிச்சயமாக அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

## 6. சட்டமுன்வடிவு.

### ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகின்றேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. மானியக் கோரிக்கைகள், 1989–90 – விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண். 10— பால்வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 10-பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,48,61,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,48,61,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை பால் உற்பத்தி மற்றும் விற்பனை கூட்டுறவுச் சங்கத்தின் சொந்த உற்பத்தியான பாலை விற்கவிடாமல் தடுத்து, திருநெல்வேலி பால் வள நிறுவனம் கட்டாயக் கொள்முதல் செய்வதின் காரணமாக, அதில் வேலை பார்க்கும் பணியாளர்கள் வேலை இழக்கும் அபாயத்தைத் தவிர்க்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,48,61,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்''.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் கொற்கை பசு வளர்ப்புப் பண்ணையை அபிவிருத்தி செய்து பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நாம் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,48,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

1989 மே 2]

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை ஒன்றியத்தின் ஆதி திராவிடர்களுக்கு பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று துவங்கப்படவேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,48,61,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண். 21.—மீனளம்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,34,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 9,34,90,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பிடித் தொழிலாளர்களுக்குத் தேவையான வசதிகளைத் செய்து கொடுப்பது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,34,90,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் கடற்கரையிலுள்ள மீனவர்களுக்கு குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு, கடல் நீரைக் குடிதண்ணீராக மாற்றுவது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,34,90,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(இ) கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 39,77,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 39,77,17,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூரில் உள்ள கால்நடை மருத்துவமனை தேவைகளை பூர்த்தி செய்வது குறித்து விவாதிக்க, நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 39,77,17,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை களும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரை யாக ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பு * அவைக்குறிப்பில் ஏற்றுக் கொள்ள வேண்டும். உறுப்பினர்களின் கருத்துக்களை அறிந்த பிறகு, என்னுடைய உரையை ஆற்றுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் * மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றை அவைக் குறிப்பில் ஏற்றுக் கொள்ளவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கள் வழங்குகின்ற கருத்துக்களின் அடிப்படையில் என்னுடைய பதிலுரையை அமைத்துக் கொள்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

---

**குறிப்புகள் இணைப்புகளாக அச்சிடப்பெற்றுள்ளன.

[1989 மே 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய விவாதத்தில் பங்கு பெறுகின்ற உறுப்பினர்கள் பால் வளம் குறித்து, கால்நடை வளம் குறித்துப் பேச இருக்கிறார்கள். பாலை ஒரேயடியாக ஒட்டக் கறக்க வேண்டுமென்று விரும்பாமல் மற்றவர்களுக்கும் கொஞ்சம் விட்டுக் கொடுத்து, உரையைச் சுருக்கமாக முடிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–40)

*திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வாய்ப்பளித்த அகில இந்திய அண்ணா தி. மு. க. பொதுச் செயலாளர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், கே. கே. எஸ். எஸ். ஆர். அவர்களுக்கும் என்னை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்த எடப்பாடி தொகுதி மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

தமிழ்நாட்டில் 70 சதவீத மக்கள் கிராமப்புறங்களிலே வாழ்கின்றார்கள். அவர்களுக்கு அடிப்படையான தொழில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு. கிராமப்புற விவசாயிகளுடைய வாழ்க்கை மேம்பாட்டிற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் கால்நடைகள் பெரிதும் பயன் தரக்கூடியதாக இருக்கின்றன. தற்போது கால்நடை வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. வறட்சியின் காரணமாக கால்நடைகளுக்குத் தேவையான தீவனம் இல்லாமல் மாடு எருமைகளையெல்லாம் விற்கக் கூடிய நிலை ஏற்பட்டு விட்டது. ஆகவே வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு இலவசமாக தீவனம் வழங்க வேண்டுமாய் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறத்திலே உள்ள பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பாலூற்றி வாழக்கூடியவர்களாக இருக்கிறார்கள். தற்போது வறட்சியின் காரணமாக பச்சைத் தீவனம் குறைந்து விட்டதால் கறவை மாடு எருமைகளுக்கும் போதுமான பச்சைத் தீவனம் இல்லாததால் அவைகள் கொடுக்கும் பாலின் அளவும் குறைந்து விட்டது. அத்துடன் பராமரிப்பு செலவும் அதிகரித்து விட்டது. ஆகவே பாலின் விலையை உயர்த்திக் தர வேண்டுமாய் அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். எனது எடப்பாடி தொகுதியில் வறட்சியின் காரணமாக கால்நடைகளுக்கும் மக்களுக்கும் குடிதண்ணீர் தட்டுப்பாடு கடுமையாக ஏற்பட்டுள்ளது. ஆகவே உடனடியாக போர்க்கால அடிப்படை மூலமாக ஆழ் துளை கிணறுகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெடுங்குளத்திலிருந்து ராசிபுரம் வரை கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் போவதாக தெரிகிறது. இத்திட்டம் எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஒன்றி

யத்தின் வழியாக செல்லுவதால் இதில் அடங்கியுள்ள அனைத்து கிராமங்களுக்கும் குடிதண்ணீர் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்றும் பூனாம்பட்டியிலிருந்து எடப்பாடி நகரத்திற்கு தண்ணீர் கொண்டு வரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. அதையும் உடனடியாக அரசு நிறைவேற்றி கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். பேரூராட்சிகளில் உள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு ஐ. ஆர். டி. பி. மூலமாக ஆடு, மாடு, எருமைகள் போன்ற கால்நடைகள் வாங்க லோன் தரப்படுவதில்லை. ஆகவே அவர்களுக்கும் ஐ. ஆர். டி.பி.மூலமாக ஆடு, மாடு, எருமை போன்ற கால்நடைகள் வாங்க கடன் உதவி வழங்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

கோமாரி போன்ற நோய்கள் கால்நடைகளை தாக்குகின்றன. அவற்றிற்கு தடுப்பு ஊசி போடுவதற்காக அரசு பாதி கட்டணம் இலவசமாகவும், பாதிக் கட்டணம் கால்நடை உரிமையாளர்களிடமும் வசூல் செய்யப்படுகிறது. கட்டணம் வசூலிக்காமல் இலவசமாகவே தடுப்பு ஊசி போட வேண்டுமாய் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். பசு எருமை போன்ற கல்நடைகளுக்கு செயற்கை முறையில் கரு தரிப்பதற்காக திரவ விந்து முறை உறை விந்து முறை என்று உள்ளது. சேலம் மாவட்டத்தில் உள்ள பல கால்நடைகளுக்கு கிராமங்களில் உள்ள மருந்தகங்களில் திரவ விந்து முறை மூலமாக கரு தரிக்கச் செய்கிறபோது, அதிக பயன் அளிக்கக் கூடியதாக இல்லை. ஆனால் உறை விந்து மூலமாக செயற்க்கை கரு தரிக்கச் செய்கிறபோது அதிகமான மாடு எருமைகள் கரு தரிக்கின்றன. ஆகையினால் எல்லா மருந்தகங்களிலும் கால்நடைகள் கரு தரிப்பதற்கு உறை விந்து முறையை பயன்படுத்த வேண்டுமாய் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு 5 ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. அதை இலவசமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கால்நடை மருந்தகங்களில் குறிப்பிட்ட அளவுதான் மருந்துகள் வழங்குவதாக கூறுகிறார்கள். அதை மாற்றி ஒவ்வொரு கால்நடை மருந்தகங்களிலும் எவ்வளவு மருந்து தேவைப்படுகிறதோ அந்த அளவு மருந்து வழங்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறே .

உயர்ந்த ரக கலப்பின பசுக்களை பெருக்குவதற்கு விவசாயிகளுக்கு கலப்பின கன்றுகளை மானிய முறையில் வழங்க வேண்டும். அதன் மூலமாக பால் உற்பத்தியையும், உயர்ந்த ரக பசுக்களின் உற் த்தியையும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆடுகள் வளர்ப்பதற்கு 5 மாவட்டங்களுக்கு ரூ. 13 கோடி ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. அந்தக் கடன் எந்த அடிப்படையில் ஆடு வளர்ப்பவர்களுக்கு வழங்கப்படும் என்று குறிப்பிடப்படல் ்லை. உயர்ந்தரக ஆடுகளை வளர்ப்பதன் மூலமாகத் தான் ஆடுகளின் எடையை அதிகரிக்க முடியும். ஆகவே -டு வளர்ப்

1989 மே 2] [திரு. க. பழனிசுவாமி]

பவர்களுக்கு கடன் கொடுக்கிற போது உயர்ந்த ரக ஆடுகளை அரசே வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுகாதாரமான நவீன முறையில் ஒவ்வொரு மாவட்டத் தலை நகரங்களிலும் ஆட்டு இறைச்சி கூடங்களை அமைக்க வேண்டும். அதன் மூலமாக மாவட்டத்தில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் சில்லரை முறையில் ஆட்டு இறைச்சியை விற்பனை செய்ய அரசு முயற்சி செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். கிராமத்தில் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு கோழிப் பண்ணை வைப்பதற்கும் உயர்ரக பசுக்களை வைத்து பால் பண்ணை துவங்குவதற்கும் அரசு மானிய முறையில் கடன் உதவி அளிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் எடப்பாடி ஒன்றியத்தில் சித்தூரிலும் கொங்கனாபுரம் ஒன்றியத்தில் பள்ளிப்பட்டி என்ற இடத்திலும் மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் எடங்கணசாலை பேரூராட்சியிலும் கால்நடை மருந்தகம் கட்டிக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். எடப்பாடி ஒன்றியத்தில் சிறுவம்பாளையத்தில் கால்நடை மருந்தகம் திறக்கப்பட்டு 10 ஆண்டுக்காலம் ஆகியும் அதற்கு இன்னும் கட்டிடம் கட்டப்படவில்லை. ஆகவே உடனடியாக கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மக்களுக்கும் கால்நடைகளுக்கும் காவிரி ஆற்றைக் கடந்து போவதற்கு கீழ் மேட்டூர் நீர்மின் திட்டம் மூலமாக கட்டப்பட்டுள்ள பாலத்தை திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பாலம் கட்டி முடிக்கப்பட்டு ஒரு ஆண்டுக் காலம் ஆகியும் இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது. உடனே அதைத் திறந்து அதன் வழியாக பேருந்துகளை விடுவதற்கும் அரசு முயற்சி செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். எனது எடப்பாடி தொகுதி ஆற்றோரப் பகுதியை ஒட்டி இருப்பதால் மீன் வளர்ப்பதற்கு ஏற்ற இடமாக இருக்கிறது. ஆகவே மீன் வளர்க்க படித்த இளைஞர்களுக்கு கடன் உதவி அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். கிராமத்தில் உள்ள மீனவர்களுக்கும் இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். கிராமத்தில் உள்ள பெரிய குளங்களில் மீன் பிடிப்பதற்கும் இலவசமாக படகுகள் கொடுக்க வேண்டுமென்று அரசை கேட்டுக் கொள்கிறேன்.

எடப்பாடி தொகுதியில் கோனரிப்பட்டியில் மின்சாரம் எடுப்பதற்காக காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு சிறு அணை கட்டப்பட்டுள்ளது. அங்கே மீன் வளர்க்கவும் மீன் குஞ்சுகள் வளர்க்கவும் ஏற்ற இடமாக இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு மீன் பண்ணையை அமைத்துக் கொடுக்க அரசு முயற்சிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். மீனவர்கள் கடலில் பிடித்த

மீன்களை அரசே வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கும் சில்லரையில் விற்பதற்கும் அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டு மாய்க் கேட்டுக் கொள்கிறேன். மீன் விற்பனை செய்யும் பெண் களுக்கு தனி விற்பனைக்கூடம் அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொண்டு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத் தலைவர், டாக்டர் மாண்புமிகு முதல் வர் அவர்களுக்கும் இனமான காவலர் பேராசிரியர் அவர்களுக் கும், எங்கள் அன்பு மாவட்டச் செயலாளரும், தமிழக ஊரக மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு வீர பாண்டியார் அவர்களுக்கும் என்னை இந்த மாமன்றத்திற்கு தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்த பனைமரத்துப்பட்டி வாக் காளர் பெருமக்களுக்கும், எனக்கு இன்று பால்வளம், மீனளம், கால்நடை மானிய கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும் என் பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டு என்னுடைய கன்னிப் பேச்சைத் துவக்கு கிறேன்.

தமிழகத்தின் வரலாற்றிலேயே கால்நடை பராமரிப்புத் துறைக்கு என்று ஒரு தனி அமைச்சகத்தை தனியாக நியமித்தது இப்போதுதான் முதல் முறையாகும். கால்நடைத் துறையிலே படித்து பட்டம் பெற்ற டாக்டரையே கால்நடைத்துறை அமைச்சராக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நியமித் துள்ளார்கள். இதிலிருந்து இந்தத் துறையின் மூலம் பொது மக்களுக்கு பயன் அளிக்கக்கூடிய திட்டங்களை வகுக்க முனைப் புடன் ஈடுபட்டுள்ளார்கள் என்பது நமக்குத் தெளிவாகிறது.

சமீபத்தில் சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு முட்டை. கள் வழங்க உத்திரவிட்டு உண்மையான சத்துணவுத் திட்டமாக செயல்படுத்த ஏற்பாடு செய்துள்ளார்கள். சேலம் மாவட்ட பொது மக்கள் சார்பாக நான் அதை வரவேற்கிறேன். ஏனென்றால் எங்கள் மாவட்டம் தான் தமிழகத்திலேயே அதிக முட்டைகள் உற்பத்தி செய்யக்கூடிய பகுதியாக இருக் கிறது. முட்டைக்கு நல்ல விலை கிடைக்கக்கூடிய வாய்ப்பு உருவாகியுள்ளது. குறிப்பாக நாமக்கல் பகுதியில் மட்டும் நாள் ஒன்றுக்கு சுமார் 30-லிருந்து 40 இலட்சம் முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கோழி தீவனத்திற்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித் துள்ளார்கள். இந்த நல்ல அறிவிப்பினால் எங்கள் மாவட்டத் தில் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பொது மக்கள் அனை வரும் தமிழக முதல்வர் அவர்களுக்கு தங்களது நன்றியைத் தெரிவித்துள்ளார்கள்.

தற்போது பெரிதாக வளர்ந்து வரும் கோழிப் பண்ணைத் தொழிலுக்கு மின்சாரக் கட்டணம் வசூலிப்பதிலும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். மற்ற மாநிலங்களில் மின்சாரக்

1989 மே 2] [எஸ். ஆர். சிவலிங்கம்]

கட்டணம் வசூலிப்பதில் சலுகைகள் அளிக்கப்படுகிறது. ஆகவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்களும் செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் கோழிப் பண்ணைகள் அமைத்து அதன் மூலம் முட்டைகள் பெற்று குழந்தைகளுக்கு வழங்குவதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் வேலையில்லா பட்டதாரிகளுக்குப் பயன் அளிக்கின்ற வகையில் அவர்களுக்கு அரசாங்கம் மானிய கடன் கொடுத்து கோழிப் பண்ணை ஆரம்பிக்க உதவிட வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டுக் கொள் கிறேன்.

இந்தத் தமிழ்நாட்டில் கால்நடைகளின் தரத்தை உயர்த்த செயற்கை முறை இனவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இது திரவ விந்து மூலமும், உறைவிந்து மூலமும் நடை முறைப் படுத்தப்படுகிறது. திரவ விந்து உபயோகத்தை விட உறை விந்து பயன்படுத்துவதன் மூலம் பசுக்கள், எருமைகள் சினை போடும் சதவிகிதம் அதிகமாக உள்ளது. நமது மாநிலத்தில் உறை விந்து ஒரு சில இடங்களில் மட்டும் தான் உபயோகப் படுத்தப்படுகிறது. இதற்கு காரணம் திரவ நைட்ரஜன் பற் றாக்குறையே. ஒவ்வொரு மாவட்டத்திலும் திரவ நைட்ரஜன் உற்பத்தி செய்யும் லிக்யுட் நைட்ரஜன் ப்ளாண்ட் நிறுவப்பட்டு மாநிலம் முழுவதும் உறைவிந்து பயன்படுத்துவதன் மூலம் நாட்டில் வெண்மைப் புரட்சியை மறுபடியும் உண்டாக்க முடியும். இதற்கு முதற் கட்டமாக எனது மாவட்டத்தில் உள்ள ஏற்காட்டில் லிக்யுட் நைட்ரஜன் ப்ளாண்ட் இத்துறை யின் சார்பில் நிறுவப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தற்போது கால்நடைகளுக்கு சினை ஊசி போட கட்டணம் வசூலிக்கப்படுகிறது. திரவ விந்து செலுத்த ரூ. 1-ம் உறைவிந்து செலுத்த 5-ம் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஆனால் கால்நடை மருந்தகங்களில் சிகிச்சைக்காக வரும் கால் நடைகளுக்கு இலவசமாக சிகிச்சையும், தடுப்பு ஊசிகளும் போடும் நிலை உள்ளது. இதனால் சிறு விவசாயிகள் ஏராளமானோர் பயன் அடைகிறார்கள். ஒவ்வொரு கால்நடைக்கும் சிகிச்சைக் காக செலவிடும் மருந்துகளின் விலை சுமார் ரூ. 15-லிருந்து 20 வரை ஏற்படுகிறது. இந்த செலவினத்தை எல்லாம் அரசே ஏற்று செலவிடும்போது சினை ஊசி போடுவதையும் இலவசமாக செய்துவிட்டால், பொது மக்கள் பெரிதும் பயன் அடையக்கூடிய வாய்ப்பு எற்படும், ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர்

அவர்களும், கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்களும் ஆவன செய்ய வேண்டும் என பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

தற்போது ஹோசூரில் இயங்கி வருகின்ற மாவட்டக் கால்நடைப் பண்ணை எங்களது சேலம் மாவட்டம் கால்நடைப் பண்ணையாக ஏறத்தாழ 32 ஆண்டுகளாக முன்பு இருந்தது. ஆனால் சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தபோது, அது தர்மபுரி மாவட்டக் கால்நடைப் பண்ணையாக மாறிவிட்டது. எனவே, சேலம் மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு மாவட்டக் கால்நடைப் பண்ணை அமைக்க வேண்டும். ஏற்கெனவே எங்கள் மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பில் பொதுமக்கள் மிகவும் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள், என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்கு தெரியும். மேச்சேரி பகுதியில் செம்மறி ஆடு வளர்ப்பதில் மிகவும் ஆர்வமுடன் விவசாயிகள் ஈடுபட்டுள்ளார்கள். சேலம் மாவட்டத்தில் கால்நடைப் பண்ணை அமைக்க நிறைய இட வசதி உள்ளது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதனால் சேலம் மாவட்டத்தில் ஓரளவு வேலைவாய்ப்பு உருவாகும். பொது மக்கள் கால்நடை வளர்ப்பில் நவீன முறைகளைக் கையாண்டு நல்ல முறையில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட அது உதவும்.

ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் நிதியுதவியுடன் எங்களது சேலம் மாவட்டத்தில் ஆடு வளர்ப்பில் மேன்மை அடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். அதை நான் முழு மனதுடன் வரவேற்று, எங்கள் பகுதி மக்கள் சார்பாக நன்றியினைத் தெரிவிக்கின்றேன். தற்போது தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சின்ன சேலத்தில் ஆட்டுப் பண்ணை உள்ளது. அதேபோல் எங்களது மாவட்டத்தில் என் தொகுதியான பனைமரத்துப்பட்டியில் ஆட்டுப் பண்ணை அமைக்க அரசு முன்வரவேண்டும். எனது தொகுதியிலுள்ள பனைமரத்துப்பட்டியில் சுமார் 2,400 ஏக்கர் நிலம் பண்ணை அமைக்கத் தேவையான அனைத்து வசதிகளுடன் உள்ளது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களும் ஆவன செய்ய வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இன்று தமிழ் நாட்டைப் பொறுத்த வரை குறிப்பாக பெண்களுக்கு வருமானம் கிடைக்கக்கூடிய வழி கறவை மாடு வளர்த்து பால் விற்பனை செய்வதாகும்

1989 மே 2] [எஸ். ஆர். சிவலிங்கம்]

கிராமங்களில் ஒவ்வொருவரும் எருமை மாடு, பசு மாடு, வளர்த்து வருகிறார்கள். பால் அதிகமாகக் கறப்பதற்கு கலப்புத் தீவனங்கள் கொடுக்கப்படுகின்றன. அந்தத் தீவன உற்பத்திச் சாலைகள் தனியார் துறையில் நிறைய உள்ளன. ஆனால் அரசு தீவன உற்பத்தித் தொழிற்சாலை மாதவரம், ஆம்பூர், ஈரோடு ஆகிய இடங்களில் மட்டும்தான் உள்ளது. எனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கலப்புத் தீவனத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அது உற்பத்தி விலைக்கே விவசாயி களுக்குக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று பணிவன் போடு கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, கால்நடை களுக்கும், கோழிப் பண்ணைகளுக்கும் அதிகமாக வாய்ப்பு உள்ளது. ஆகவே, சேலம் மாவட்டத்தில் அரசின் சார்பில் தீவனத் தொழிற்சாலை தொடங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

நடமாடும் கால்நடை மருந்தகம் தற்போது சில இடங் களில் இயங்கி வருகின்றன. அங்கே வாகனங்களுக்குப் போதிய பெட்ரோல் வசதி அளிக்காத காரணத்தால், மாதம் முழுவதும் நடமாடும் கால்நடை மருந்தகம் செயல்படுவது என்பது சிரமமாக உள்ளதாக அறிகிறேன். ஆகவே, நடமாடும் கால்நடை மருந்தகங்கள் இயக்குகின்ற அந்த மோட்டார் வாகனங்களுக்கு போதிய பெட்ரோல் வசதி அளிக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

சேலம் போன்ற மாவட்டத் தலைநகரிலாவது 'வெட்டரி னரி ஆம்புலன்ஸ்' செயல்பட வசதிகள், இத்துறைகளின் மூலம் செய்து தர வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தற்போது இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகள் செயல்படுகின்றன. ஒன்று சென்னை யிலும், மற்றொன்று எங்களது மாவட்டம் நாமக்கல்லிலும் இயங்கி வருகின்றன. நாமக்கல் கல்லூரிக்கு போதிய அடிப் படை வசதிகள் செய்யாத நிலையில் உள்ளது. கட்டிடங்கள், லேப் வசதிகள் உருவாகப்படவில்லை. நான் சென்னை. கால்நடை மருத்துவக் கல்லூரியைப் பார்த்திருக்கிறேன். அந்தக் கல்லூரிக்கும் கூடச் சென்றிருக்கிறேன். ஆனால் நாமக்கல்லில் அமைந்துள்ள கல்லூரியைப் பார்க்கும்போது, இது கல்லூரியா, அல்லது உயர்நிலைப் பள்ளியா என்று எனக்குச் சந்தேகம் எழுகிறது. அதேபோல், சேலத்தில்

மருத்துவக் கல்லூரி என்று ஒன்று பேப்பர் அளவில் தான் உள்ளது. கல்லூரி அங்கே இல்லை. அதற்கு எல்லாம் முந்தைய அரசின் நிர்வாகக் கோளாறும், சரியான நடவடிக்கை எடுக்காததும்தான் காரணம் ஆகும். தற்போது நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி விரைவாகச் செயல் வடிவம் பெற ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். தற்போது நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நான்காவது ஆண்டு பி.வி.எஸ்.சி. படிக்கின்ற மாணவர்கள் அடுத்த ஆண்டு இறுதி ஆண்டு முடிக்கின்ற நிலையில் உள்ளனர். இந்தக் கல்லூரிகளில் பெரும்பாலும் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் தான் பயின்று வருகிறார்கள். அடுத்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 250 மாணவர்கள் 2 கல்லூரி களிலிருந்தும் கால்நடை மருத்துவப் படிப்பை முடித்து விட்டு வெளியே வர இருக்கிறார்கள். இப்படி படித்து முடித்து வெளியே வரும் இளம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை இந்த துறையின் மூலம் மேலும் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற எம்.பி.பி.எஸ். டாக்டர்கள், வக்கீல்கள், இன்ஜினியர்கள் போன்ற பட்டப் படிப்பு முடித்தவர்களுக்கு அரசின் மூலமாக வேலைவாய்ப்பு வழங்கப்படாவிட்டாலும் அவர்கள் தனியாக வேலையைத் தொடங்க முடியும். ஆனால் கால்நடை மருத்துவ படிப்பை முடித்தவர்கள் அரசின் வேலையைத் தான் நம்பியிருக்கிறார்கள். எனவே, நமது அரசு அவர்களுக்கு அதிக வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவன்போடு கேட்டுக் கொள் கிறேன்.

கால்நடை உதவி மருத்துவர்கள் சுமார் 24 ஆண்டுகள் ஆகியும் பதவி உயர்வு இல்லாத நிலையில் இருக்கிறார்கள். ஆனால் மற்ற துறையில் இவர்களோடு பணியில் சேர்ந்தவர்கள் எல்லாம் பதவி உயர்வு அளிக்கப்பட்டு உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள். எனவே, கால்நடை உதவி மருத்துவர்கள் 10 ஆண்டுகள் பணி முடித்தவுடன் பதவி உயர்வு பெறுகின்ற வகையில் கால்நடை மருத்துவ பணியில் வெட்டர்னரி சர்ஜன் என்று பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

கால்நடை உதவி மருத்துவர்கள் தனித் தன்மை வாய்ந்த கல்வி மற்றும் கிராம மக்களின் குடும்பங்களில் ஒரு அங்க மாகவும், நண்பனாகவும், வழிகாட்டியாகவும் கிராமப்புற சூழ்நிலைக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டு கடமை ஆற்றி, வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றனர். ஆனால் அவர்களுக்கு வழங்குகின்ற ஊதியம் ஏனைய

மருத்துவர்களுடைய அதாவது பல் மருத்துவர்கள், இந்திய மருத்துவர்கள், மனித இயல் மருத்துவர்கள் ஆகியோரை விட குறைவாகவே இருக்கிறது. கால்நடை மருத்துவப் படிப்பு மனித இயல் படிப்பை விட மிகவும் கடினமானது. பணியின் தன்மை, பொது மக்களுடன் தொடர்பு ஆகியவற்றைப் பார்க்கும்போது சமமான ஊதியத்தைத் தர வேண்டும். கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்துவதில் கால்நடை உதவி மருத்துவர்களின் சேவை இன்றியமையாதது. இதை நன்கு உணர்ந்த நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ல்...

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மானியக் கோரிக்கை நடந்து கொண்டிருக்கும்போது சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்கள் இங்கே அவையில் இல்லையே அது குறித்து மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பால்வளம் பற்றிய உறுப்பினர்களின் கருத்துக்களையும் நான் குறிப்பு எடுத்து கொண்டு இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் பால் சாப்பிட வெளியே போயிருக்கிறார், வந்து விடுவார்.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதனை நன்கு உணர்ந்த நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ல் மனித இயல் மருத்துவர்களுக்கு இணையாக இவர்களை அரசிதழ் பதிவு பெற்ற அலுவலராக அதாவது கெசட்டடு ஆபீசர்களாக மாற்றி முதல் கட்டமாக இதை செய்தார்கள். இவர்களது ஊதியத்தை மனித இயல் மருத்துவர்களுக்கு இணையாக வழங்குவது என்று எண்ணிக் கொண்டு இருந்தார்கள். ஆனால் இயற்கையின் சதியின் காரணமாக அது நிறைவேறாமல் போய்விட்டது. இதனைத் தொடர்ந்து நமது தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் எண்ணத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் ஆட்சி கலைக்கப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றுகின்ற வகையில் கால்நடை மருத்துவர்களை ஊக்குவித்து, கிராமப்புற பொருளாதாரத் துறையை மேம்பாடு அடைய செய்கின்ற நோக்கத்துடன் மனித இயல் மருத்துவர்களுக்கு சமமான சம்பளத்தை அளிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே அரசு மருத்துவர்களில் (மணியடிக்கப் பெற்றது) இன்னும் 2 நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கெனவே 12 நிமிடங்கள் எடுத்துக் கொண்டீர்கள்.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : இடையில் கொஞ்சம் குறுக்கீடு வந்துவிட்டதால் இன்னும் 2 நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் 1 நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

(முற்பகல் 11.00)

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அரசு மருத்துவர்களில் மனித இயல் மருத்துவர்கள், சித்த மருத்துவர்கள், பல் மருத்துவர்கள், மற்றும் கால்நடை மருத்துவர்கள் உள்ளனர். இவர்களில் 3 பிரிவு மருத்துவர்களுக்கு மட்டும் ரூ. 1,340 அடிப்படை சம்பளம் வழங்கிவிட்டு கால்நடை மருத்துவர்களுக்கு மட்டும் ரூ. 1,160 அடிப்படை சம்பளம் வழங்கப்படுகிறது. இந்தக் குறையை நீக்கி நமது ஆட்சியில் அனைத்து மருத்துவர்களுக்கும் பாகுபாடு இல்லாமல் சம ஊதியத்தை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். நமது மாநிலத்திலேயிருந்து அண்டை மாநிலங்களுக்கு ஏராளமான மாடுகள் கொண்டு செல்லப்பட்டு அங்கேயிருந்து அந்தக் கால்நடைகளின் இறைச்சி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் நமது மாநிலத்தில் கால்நடைகளினுடைய எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து கொண்டே இருக்கிறது. நல்ல தரமான கறவை மாடுகள், கிடாரிகள், உழைக்கும் சக்தியை இழக்காத நிலையில் உள்ள வண்டி எருதுகள் கூட வெளி மாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. குறிப்பாக, கேரளத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அங்கேயிருந்து இறைச்சியாக வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. வறட்சியினால் குறைந்த விலைக்கு ஏழையெளிய மக்கள் தங்கள் மாடுகளை விற்கக்கூடிய துர்ப்பாக்கிய நிலையே தற்போது உள்ளது. இவ்வாறு குறைந்த விலைக்கு விற்கப்படும் கால்நடைகளைத் தடுத்து, வெளி மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுத்து நிறுத்தி நமது அரசும் இறைச்சியை ஏற்றுமதி செய்து நம் மாநில வருவாயை அதிகப்படுத்த வழிவகை செய்ய வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன். இதற்குத் தடை

1989 மே 2] [திரு. எஸ். ஆர் சிவலிங்கம்]

யாக தற்போது அமலில் இருக்கின்ற பசுவதைத் தடுப்புச் சட்டத்தை மாற்றி அமைக்கின்ற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் கால்நடை விரிவாக்க அலுவலர்களை தற்போது எக்ஸ்டென்சன் ஆபீசர் (அனிமல் ஹஸ்பெண்ட்ரி) என்று அழைக்கிறோம். அந்தப் பெயரை ப்ளாக் வெட்டர்னரி ஆபீசர் என்று மாற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டும். தற்போது ஒன்றியங்களில் பணிபுரிவதற்கு விவசாய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய பெயரைக் கூட ப்ளாக் அக்ரிகல்சுரல் ஆபீசர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுடைய பெயர்களை தற்போது எக்ஸ்டென்சன் ஆபீசர் (அனிமல் ஹஸ்பெண்ட்ரி) என்று இருப்பதை ப்ளாக் வெட்டர்னரி ஆபீசர் என்று அழைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொண்டு, என்னுடைய தொகுதியில் சில. . . (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 15 நிமிடங்கள் ஆகிவிட்டது. முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அளவிற்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

திரு. கே. ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி. பொதுவாக, நமது நாட்டிலே மீனவர்களுடைய நிலைமை மிக மோசமான நிலையிலே தான் இருக்கிறது. மீனவர்களுக்கு அரசு என்ன சலுகைகளை அறிவித்து இருக்கிறது என்று பார்த்தால் அவர்கள் சிறப்புற, அவர்களது வாழ்க்கை ஏற்றம் பெறுவதற்கான நல்ல திட்டங்கள் இந்த அரசால் அறிவிக்கப்படவில்லை. மீனவர்களுக்கு, அவர்கள் பயன்படுத்தக் கூடிய வலை, நூல் ஆகியவைகள் நியாய விலையிலே அந்தந்த இடங்களிலேயே கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மீனவர்கள் வாழ்கின்ற இடம் மிக மிக மோசமாக இருக்கிறது. அவர்கள் சிறிய சிறிய குடில்களிலே தான் வசிக்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான வீட்டினை இலவசமாகக் கட்டிக் கொடுக் வேண்டும். அதிலும், எனது தொகுதியைச் சார்ந்த காரகாடு, முள்ளிமனை, சோழியக்குடி ஆகிய மீனவக் கிராமங்களுக்கு உடனடியாக, வீடுகள் கட்டிக் கொடுக்கும்படி உங்களை மிக அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்

களின் மூலமாக கடன்கள், மானியத்துடன கூடிய கடன்கள் வழங்க வேண்டும். அந்தக் கடன்களை வழங்கும்போது அவர்களுக்கு அந்தக் கடன் எளிதில் கிடைப்பதற்கான நடைமுறைகளை தாங்கள் செய்து தர வேண்டும். மீனவ கிராமங்களுக்குப் போதிய சாலை வசதி இல்லை. அது எங்கள் பகுதியிலே மிக மிக மோசமாக இருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள மீனவ கிராமங்களுக்கு சாலைகளை அமைத்துத் தர வேண்டும். குறிப்பாக, இராமநாதபுர மாவட்டத்திலே உள்ள மீனவர்கள் இப்போது இலங்கைப் பிரச்சினையினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல பேர் அங்கே காணாமல் போனவர்கள் என்ன ஆனார்கள என்றே தெரியவில்லை. குறிப்பாகச் சொல்லப் போனால் சோழியக் குடி என்ற கிராமத்திலே 4 மாதங்களுக்கு முன்பாக ஒரு விசைப் படகும் அதை ஓட்டிச் சென்ற நபரும் காணாமல் போய்விட்டார்கள். இதுபற்றி அங்கேயிருக்கக்கூடிய காவல் நிலையத்திலே வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது நாள் வரையில் அந்தப் படகையும் காணோம். அந்தப் படகை ஓட்டிச் சென்ற நபரையும் காணவில்லை. அதை ஓட்டிச் சென்ற நபர் மிக மிக ஏழை. அவர் அநேகமாக இறந்திருக்க கூடுமென்று கருதுகிறோம். அவரை இறந்துவிட்டதாகக் கருதி, இந்த அரசு அவரது குடும்பத்திற்கு ஏதாவது உதவி செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீனவர்களுடைய நிலை குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்கள் பயந்துகொண்டே தொழில் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த அரசு அவர்கள் தைரியமாக கடலுக்குள் சென்று மீன்பிடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் வளத்தைப் பொறுத்த மட்டில் எங்கள் பகுதியிலே இப்போது சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, கூட்டுறவுத் துறையிலே ஒரு பால் பண்ணை அமைந்திருக்கிறது. தற்போது அந்தப் பால் பண்ணை பாலைக் குளிரூட்டும் பணியை மட்டும் செய்துகொண்டிருக்கிறது. அந்தப் பால் பண்ணையை விரிவுபடுத்தி, அங்கே பால் பௌடர் உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பால் பண்ணைக்கு வரக்கூடிய பாலுக்கு குறைந்த விலை கொடுக்கிறார்கள். இதிலே ஏதோ தப்பு நடப்பதாக மக்கள் சொல்கிறார்கள். பாலின் தரம் பிரிக்கப்படுகிறது என்று சொல்லி, அதிலே தவறு நடப்பதாக மக்கள் எண்ணுகிறார்கள். கொழுப்புச் சத்து, இதர சத்துக்கள் குறைவாக இருப்பதாகக் கூறி, பால் விலையை குறைக்கிறார்கள். அதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

காரைக்குடியிலிருக்கிற அந்தப் பால் பண்ணையிலிருந்து வெளி வரக்கூடிய பாலின் விலையும், மற்ற இடங்களிலிருந்து வரக் கூடிய பாலின் விலையும் மிகவும் வித்தியாசப்படுகிறது. அந்தப் பால் பண்ணையில் குறைந்த விலையே கொடுக்கிறார்கள். ஏன் குறைத்துக் கொடுக்கிறீர்கள் என்று கேட்டால், நாங்கள் இதை ஒரு மாதிரியாகச் செய்கிறோம். இதிலே நாங்கள் வெற்றி பெற்றுவிட்டால், பிறகு நாங்கள் எல்லா இடங்களுக்கும் ஒரே விலையை நிர்ணயம் செய்கிறோம். என்று கூறிக்கொண்டிருக் கிறார்கள். இப்படி விலை வித்தியாசம் இல்லாமல் எல்லோருக் கும் ஒரே விலை கிடைக்க தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டு மென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து அந்தப் பண்ணைக்கு வரக் கூடிய பாலுக்கு உரிய தொகை கிடைக்க குறைந்தது பத்து நாட் களாவது ஆகிறது. அந்தத் தொகை உடனடியாக விவசாய மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட் டுக்கொள்கிறேன்.

கால்நடையைப் பொறுத்தமட்டில் தமிழகத்தில்இப்போது கடுமை யான வறட்சி நிலவுகிறது. இந்த நிலைமையை முதலில் போக்கி னால்தான் எங்கள் பகுதியிலே கால்நடைகளை வளர்க்க முடியும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வறட்சியின் காரணமாக கால்நடைகள், குறிப்பாக, அங்கே பால் மாடுகள் அதிகமாக வளர்க்கப்படவில்லை. அதற்கு இன்னொரு காரணம் அந்தப் பகுதியிலுள்ள மாடுகளிலிருந்து எடுக்கக்கூடிய பாலுக்கு கொ டுக்கக் கூடிய விலை மிக மிக மோசமாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பாலின் விலையைக் கூட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு கால் நடை மருந்தகத்திற்கும் இப்போது ஆண்டு ஒன்றுக்கு 20,000 ரூபாய் மருந்துகள் வாங்குவதற்காகக் கொடுக் கிறார்கள். அந்த மருந்து அங்கே இருக்கக்கூடிய மருத்துவ மனைக்கு பாதி நாளைக்குக் கூட போதவில்லை. எனவே, மருந்துகள் வாங்குவதற்கான தொகையை 20,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட் டுக்கொள்கிறேன்.

இப்போது கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி மருந்து தயாரிப் பது அநேகமாக வடாற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டை யில்தான். அந்தத் தொழிற்சாலை அங்குதான் இருப்பதாக நான் அறிகிறேன். இது அதிகமான தூரத்தில் இருப்பதால் எங்கள் பகுதியிலே அல்லது மதுரையை மையமாக வைத்து, மருந்து தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்தினால் அந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய விவசாயப் பெருமக்களுக்கு கால்நடைகளை அதிகமாக வளர்ப்பதற்கு வசதியாக இருக் கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியக்கூடிய கால்நடை விரிவாக்க அதிகாரிகள் அதிக அளவில் தொழில் நுட்பப் பணிகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு குறைந்தது 10,000 ரூபாயாவது தனியாக இதற்காக ஒதுக்கீடு செய்துதரும்படி கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக் கூடிய மருத்துவமனைகளில் மருந்துகளைப் பாதுகாத்து வைக்க குளிர்சாதனப் பெட்டிகள் வாங்கி வைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

கால்நடை மருத்துவர்களுக்கு, மற்ற மருத்துவர்களுக்கு, குறிப்பாக எம்.பி.பி.எஸ். படித்த மருத்துவர்களுக்குக் கொடுக்கக் கூடிய ஊதியத்தை அவர்களுக்கும் கொடுத்தால் அந்த மருத்துவ அதிகாரிகளுக்கு இன்னும் சிறப்பாக செயல்படுவதற்கு வழிவகை ஏற்படும். மற்றும் அந்த கால்நடை மருத்துவர்கள் வெளியில் சென்று தங்களது பணியினை சிறப்பாக செய்வதற்கு அவர்களுக்கு இலவசமாக ஒரு மோட்டார் சைக்கிளை இந்த அரசு வாங்கிக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். அவ்வாறு செய்யும் எண்ணம் இல்லையென்றாலும், அவர்களுக்கு கடன் கொடுத்தாவது அவர்களுக்கு அந்த மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 'வெகிகிள்ஸ் லோன்' வசதியைப் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

**திரு. கே. ஆர். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட்டியில்லாத, கடனை கொடுக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் ஆடு வளர்ப்புச் சங்கங்கள் எங்கள் பகுதியிலே நல்ல முறையில் இயங்குகிறது. அந்த மகளிர் ஆடுவளர்ப்பு சங்கத்தை இன்னும் விரிவுபடுத்தினால் உண்மையிலேயே அது விவசாயிகளுக்கு நல்ல பலனை அளிக்கும். தற்போது ஊசி, மருந்துகளை மாவட்ட மருத்துவ மையங்களில் ஸ்டாக் வைத்தால் இன்னும் எளிதாக அந்த பகுதி மக்களுக்குக் கிடைத்து, அதை அவர்கள் கால்நடைகளுக்கும் பயன்படுத்த, அங்கு போய் சேர்வதற்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிலையை, விருதுநகர் பகுதியிலே இருக்கக் கூடிய நமது சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு சொக்கர் அவர்களும் இந்த பிரச்சினையை வலியுறுத்தி, அந்த பகுதியிலே

1989 மே 2] [திரு. கே. ஆர்- இராமசாமி]

இன்னும் சிறப்பாக மருத்துவ அதிகாரிகள் நன்றாக செயல்படு வார்கள் என்று சொல்லி, இந்த வசதிகளை செய்து தர வேண்டும் என்று அவர்களும் கூறுகிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் (குறுக்கீடு) மாதிரிப் பண்ணை, தஞ்சை மாவட்டத்தில் கொற்கை கால்நடைப் பண்ணையைச் சரிவர செயல்படச் செய்து உப் பளாச்சேரி இன காளைகளை கவனிக்கவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் மிகமிக கடுமையான வறட்சி ஏற்பட்டு அந்த பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் என்னதான் திட் டத்தை வகுத்துச் செயல்படுத்தினாலும், தண்ணீர் இல்லாமல் நிச்சயமாக கால்நடைகளை வளர்க்கமுடியாத சூழ்நிலை இருக் கிறது. முதன்முதலில் எங்களுக்கு தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள். அது நிரந்தர பாசனமாக இருந்தால் இன்னும் சவுகரியமாக இருக்கும். தண்ணீர் இல்லாமல் எந்த கால் நடைத் திட்டத்தையும், மற்ற சிறப்பான திட்டங்களையும் அங்கே செயல்படுத்துவது முடியாது என்று சொல்லி, எங்களுக்கு சிறப்பான தண்ணீர் வழங்கும் திட்டத்தை அறிவிக்கவேண்டும் என்று கூறி, விடைபெறுகிறேன்.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எனக்குப் பேசுகின்ற வாய்ப்பினை வழங்குகின்ற வகையில் இராயபுரம் தொகுதியில் என்னை வேட்பாளராக அறி முகம் செய்த சங்கத் தமிழ் தீட்டிய எங்கள் தங்கத் தலை வர், தமிழகத்தே பொற்காலம் படைத்து வரும் கழகத் தலை வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை பணி வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடந்து முடிந்த சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் என்னை வெற்றி பெறச் செய்த இராயபுரம் தொகுதி வாக்காளர் பெரு மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று, கழகப் பொதுச் செயலாளர் அவர்கள், எங் கள் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும் என் பணிவான நன் றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, இளைஞர் அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கும் எங்கள் ஆருயிர் அண்ணன் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் என் பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். அதே போன்று அமைச்சர் பெரு மக்களுக்கும், அனைத்து சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும், அனைத்து பத்திரிக்கை நிருபர்களுக்கும், அனைத்து அரசு அதிகாரிகளுக்கும், இன்று பார்வையாளராக வகதிருக்கின்ற அனைவருக்கும் என் பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் சிற்றுரையை தொடங்குகிறேன்.

எங்கள் தேர்தல் பணிகளுக்காக அல்லும் பகலும் உழைத்த மாவட்ட கழக நிர்வாகிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மீனவர்கள் கல்வி, பொருளாதாரம், சமூக வளர்ச்சி ஆகியவைகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளார்கள் என்பதை கழக அரசுக்கு தெரிவித்து சில கோரிக்கைகளை வலியுறுத்துகின்ற வகையில் சில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

மீனவர்களின் நல் வளர்ச்சிக்கு உதவும் வகையில் இந்த ஆண்டிற்காக ஒதுக்கி இருக்கின்ற நிதியை விட அதிக நிதியை ஒதுக்க கழக அரசை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள கட்டுமரங்கள், விசைப் படகுகள் கூட்டுறவுச் சங்கங்களின் நீண்ட காலக் கடன்கள் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டுமென்று கழக அரசை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் கஷ்டப்படுகின்ற நிலை குறித்து இன்றைய அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டமோ, போராட்டமோ எதுவும் செய்யாமல், மீனவர்களின் துன்பங்களை அறிந்து, மீனவர்களின் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மீனவர்களை மிகவும் பின் தங்கியவர்கள் பட்டியலில் சேர்த்ததற்காக, கழக அரசுக்கு மீனவ சமுதாயத்தின் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் மீனவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து, கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவைகளில் முன்னுரிமை வழங்க கழக அரசைக் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன். சென்னை இராயபுரம் பகுதியில் கட்டப்பட்டிருக்கும் மீன் பிடித் துறைமுகத்திற்கு சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் பெயரைச் சூட்ட கழக அரசை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இராயபுரம் தொகுதியில் ஏழை எளிய மீனவர்கள் வாழ்கின்ற சிங்கார வேலர் நகர் குடிசைப் பகுதியையும், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஏழை எளியோர் வாழ்கின்ற செட்டித் தோட்டம் குடிசைப் பகுதியையும் மாற்றி, மாடி வீடு கட்டித் தர கழக அரசை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கும் வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதால், இந்த ஆண்டிலேயே வீடுகளை அவர்களுக்குக் கட்டித்தர கனிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற 6–3–1989 அன்று இராயபுரம் மீன் பிடித் துறைமுகத்தில் வ.உ.சி. கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான விசைப் படகு ஒன்று ரிப்பேரின் காரணமாக தண்ணீரில் இருந்து தரையில் ஏற்றி வைக்கப்பட்டிருந்தது. சுமார் பகல் 2 மணியளவில் அந்த

விசைப்படகு ஒரு பக்கமாகச் சாய்ந்து விழுந்ததில் ரமேஷ் என்ற சிறுவன் படகிற்குக் கீழே மாட்டி உயிரிழந்தான். அந்த ஏழைக் குடும்பத்திற்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீனவர்கள் கடலில் விபத்தில் சிக்கி உயிர் இழக்க நேரிடுகிறது. அவர்கள் குடும்பத்திற்குக் காப்பீட்டுத்தொகை ரூ. 15,000 வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையை உடனே வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று இறந்தவர்களின் பிள்ளைகளுக்கு மீன் வளத்துறை சம்பந்தப்பட்ட அரசு அலுவலகங்களில் வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க கழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

செங்கை-அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த பழவேற்காடு பகுதியில் ஆற்றிலும் கடலிலும் மீன் பிடிக்கும்போது சிறுசிறு தகராறுகள் ஏற்பட்டு, அது ஒரு சில நேரங்களில் பெரியதாக மாறி, 85இல் தொழில் தகராறில் ஒருவர் மரணம் அடைந்தார். அதைப் போன்று 1986ஆம் ஆண்டு ஒருவர் மரணம் அடைந்தார். அதே போன்று இந்த ஆண்டு, 26-1-89ல் சண்டை ஏற்பட்டு அதில் 5 குப்பங்கள் ஒரு கோஷ்டியாகவும், 3 குப்பங்கள் ஒரு கோஷ்டியாகவும் சண்டையிட்டு, பெரும் உயிர்ச் சேதம் ஏற்பட்டது. அதில் 9 பேர் உயிர் இழந்தார்கள். இது குறித்து பொன்னேரி உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள், மீஞ்சூர் சேர்மன் திரு. கணபதி, விசைப் படகு சங்கத் தலைவர் திரு. ஞானசேகரன், கட்டு மரச் சங்கத் தலைவர் திரு. விஸ்வநாதன், சமுதாய அடிப்படையில் நானும், மற்ற ஊர் பெரியவர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலந்து பேசி, பிறகு 8 குப்பங்களில் தனித் தனியே ஊர்க் கூட்டம் போட்டு, இப்போது நிலைமை அமைதியாக உள்ளது. எனவே தொடர்ந்து இது போன்ற அசம்பாவிதம் நடக்காமல் இருக்க நிரந்தரத் தீர்வு காணவும், பாதிக்கப்பட்ட 9 மீனவக் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கிடவும் கழக அரசைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நவீன முறையில் மீன் இறால் வளர்ப்பு குறித்து தமிழக ஆற்று நீர்ப் படுகைகள், அருகாமையில் உள்ள நீர் நிலப் பகுதியில் இரால் வளர்ப்புத் திட்டத்தில் மீனவர்களுக்கு முன்னுரிமை வழங்க கழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். சென்னை-செங்கை மாவட்டங்களைச் சேர்ந்த விசைப் படகுகள் ஆந்திர மாநில நெல்லூர் கடற் பகுதியில் 20 பாதத்தில் மீன்பிடித்தொழில் செய்து கொண்டிருக்கும்போது அந்தப் பகுதி மீனவர்கள் விசைப் படகைப் பிடித்து, ஆட்களை அடித்து, படகில் உள்ள இரால் மீன்களையும் எடுத்து விடுகிறார்கள். மேலும் அபராதம் என்று ஆயிரக் கணக்கில் அபராதம் வசூல் செய்கிறார்கள். படகையும் சேதப்படுத்துகிறார்கள். எனவே கழக அரசு ஆந்திர மாநில அரசுடன் பேசி நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்று கழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

தொகுதி மக்களின் குறைபாடுகளையும், மற்ற மீன் பிடித் தொழில் விபரம் குறித்து அவர்களிடம் மனுக்களாகப் பெற்று அந்த மனுக்களை அமைச்சர் பெருமக்களிடமும், அரசு அதிகாரிகளிடமும் கொடுக்கும்போது, அதைக் கனிவோடு பெற்று, விரைவிலே மக்கள் பணியை முடித்துத்தர அனைவரையும் கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பினை வழங்கிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

(முற்பகல் 11-20)

**திரு. என். பழனிவேல்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் வளம், மீனளம், கால்நடை ஆகிய இந்த மூன்று மிக முக்கியமான மானியக் கோரிக்கைகளின் மீது நான் இங்கே சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

இன்றைக்குக் கால்நடை மிக அத்யாவசியமான தேவையாக உள்ளது. எனவே ஒரு ஒன்றியத்திற்கு 3 கால் நடை மருத்துவ மனைகளாவது கண்டிப்பாக ஏற்படுத்தித் தந்தால்தான் உதவியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். அடுத்து மருத்துவ மனைகளுக்கு இன்றைக்கு ஆண்டுக்கு ரூ. 20,000 மட்டுமே ஒதுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ரூ. 20,000 ஒதுக்கீடு என்பது வருஷத்தில் 3 அல்லது 4 மாதங்களுக்கு மேல் தேறாது என்பதால் இதை இன்னும் 2 மடங்காக உயர்த்திக் கொடுத்தால்தான் அங்கே வரக்கூடிய கால்நடைகளுக்கு வைத்தியம் செய்வதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மேலும் தற்போது கால்நடை சொந்தக்காரர்களிடம் வெளியே போய் மருந்து வாங்கி வரச் சொல்லி மருத்துவர்கள் சீட்டு எழுதிக் கொடுத்து அனுப்புகிறார்கள். இதனால் விவசாயிகள் தங்களுடைய கால்நடைகளை மருத்துவ மனைகளுக்குக் கொண்டு வருவதையே நிறுத்தி விடுகிறார்கள். எனவே அரசு உரிய நிதியை அளித்து, மருந்துகளை வாங்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால், கால்நடைச் சொந்தக்காரர்கள் தங்களுடைய கால்நடைகளை மிகக்குறைந்த விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். காரணம் தீவனம் கிடைக்காததாகும். தீவனத்தின் விலை உணவுப் பொருள்களின் விலையைவிட மிகஅதிகமான அளவுக்கு இன்றைய தினம் ஏறி இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு வீசை பொட்டு விலை ரூ. 80லிருந்து ரூ. 100-க்கு விற்கிறது. ஒரு பிடி அளவு வைக்கோல் ரூ. 10-க்கு விற்கிறது.

1989 மே 2] [திரு. என். பழனிவேல்]

ஆகவே விவசாயிகள் அவைகளை வாங்கி கால்நடைக்குப் போட முடியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே கால்நடை மருத்துவ மனைகளில் தேவையான அளவுக்குபுல்களையும் பொட்டு களையும் வாங்கி வைத்து அந்த விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே இன்றைக்கு சின்னச் சின்ன கிராமங்களி லெல்லாம் கால்நடைக் கிளை நிலையங்களை ஏற்படுத்தி, கால் நடை அபிவிருத்திக்கு உதவவேண்டும். மேலும் ஆடு வளர்ப்பு என்பதைப் பொறுத்தவரையில் ஊருக்கு ஊர் அதற்கான சங்க போர்டுகள்தான் தொங்குகின்றனவே தவிர அங்கே ஆடுகள் கிடை யாது. கடந்தகால ஆட்சியில் ஆடு வளர்ப்போர் சங்கம் என்று சொல்லி, ஏராளமான சங்கங்கள், ஏற்படுத்திக்கொடுத்திருக்கி றார்களே தவிர அங்கெல்லாம் ஆடுகளே கிடையாது. அவைகளையெல்லாம் அரசு தீவிரமாக ஆய்வு செய்து உரிய நட வடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆட்டு இறைச்சி இன்றைக்கு சாதாரண மக்கள் வாங்கிச் சாப் பிடுகிற அளவுக்கு இல்லை. காரணம் ஒரு கிலோ இறைச்சி இன் றைக்கு ரூ. 40-க்கு மேல் விற்கிறது. இதனால் ஏழை எளிய மக்கள் அதை வாங்கி உண்ண முடியாத அவல நிலையில் இருக்கி றார்கள்.

திரு. அன்பில் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையில் பால்வளம் மீதான மானியம் பற்றி விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வெயி லின் கொடுமையைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுக்கு ஏதாவது பாலோ அல்லது ஐஸ் கிரீமோ வழங்குவாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: பால்வளம் பற்றிய மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் அனை வருக்கும் பால்-சீஸ்-பாலடைக் கட்டி, பால்கோவா போன்றவை வாங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் திரு. பொய்யாமொழி இடத்திற்கு வரவில்லை என்பதால் அவர் கேட் கிறார்;

திரு. என். பழனிவேல்: ஆக, இறைச்சி என்பது மக்கள் இன்றைக்கு வாங்கி சாப்பிட முடியாத அளவுக்கு விலை உயர்ந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆடுத்து கோழி முட்டை நமக்குப் பெரிய அளவில் இனித் தேவைப்படுகிறது. நம்முடைய அரசு இன்றைக்கு சத்துணவு சாப் பிடும் குழந்தைகளுக்கு எல்லாம் இனி முட்டையும் வழங்குவதற்

கான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஆகவே சத்துணவு கூடங்களுக்கு இனி ஒரு மாதத்திற்கு கோடிக் கணக்கான முட்டைகள் தேவைப்படும். எனவே ஆங்காங்கே கோழிப் பண்ணைகள் ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களே இங்கே கூறியிருக்கிறார்கள். அதை உடனடியாகக் காலதாமதமின்றி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே கால்நடைகளை வெறிநாய் கடித்துவிட்டால், கூனூரில் இருக்கிற ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்கே இருந்துதான் மருந்து வாங்கி வர வேண்டும் என்று கால்நடை மருத்துவர்கள் கூறுகிறார்ள். இதனால் சாதாரண ஏழை எளிய விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கு வைத்தியம் செய்ய முடியாத அவலநிலை ஏற்படுகிறது. ஆகவே அந்த மருந்தை எல்லா மருத்துவ மனைகளிலும் கிடைக்கக்கூடிய அளவில் அரசு செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை மருந்தகங்கள் இன்றைக்கு 20 அல்லது 30 கிராமங்களுக்கு ஒன்று என்ற அளவில்தான் இருக்கிறது. 20 கிலோ மீட்டருக்கு மேல் அவர்கள் கால்நடைகளை ஆஸ்பத்திரிக்காக கொண்டு போகக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே ஒரு 10 கிராமங்களுக்கு ஒரு கால்நடை மருந்தகம் என்று ஏற்படுத்திக் கொடுத்தால், விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல் அதிக பால் கொடுக்கக்கூடிய ஜெர்சி, முரா போன்ற கன்றுகளை மானிய விலையில் கொடுக்க இன்றைக்கு அரசு முயற்சிக்க வேண்டும்.

கோழிப் பண்ணை பெரும்பாலும் அழிந்து கொண்டு செல்கிறது. கோழிகளுக்கு சரியான மருந்துகள் கண்டுபிடிக்கப் படவில்லை என்று சொல்கிறார்கள். கோழிப் பண்ணைகளை ஒரு புறம் ஏற்படுத்தினாலும் இன்றைக்கு கிராமப்புறத்திலுள்ள விவசாயிகள், விவசாயக் கூலிகள் ஆகியோர்களுக்கு ஒவ்வொரு வீட்டுக்கும் இரண்டு அல்லது நான்கு கோழிகள் வீதம் வாங்கிக் கொடுத்தாலும், அதை அவர்களே வளர்த்து முட்டை உற்பத்திக்கு உதவுவார்கள்; இல்லையேல் சாதாரண மக்கள் முட்டையை உபயோகிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். மேலும் கோழிகளுக்கு நோய் அடிக்கடி வந்து அந்த இனத்தை அழிந்து விடுகிறது. கால்நடை மருத்துவர்கள் இன்றைக்கு படித்து விட்டு வேலை இல்லாமல் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களை எல்லாம் இந்தத் துறையிலே பயன்படுத்தி அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைகளுக்கு குறிப்பாக கோழிகளுக்கு வரும் நோயிலிருந்து அவற்றைப் பாதுகாப்பதில் அரசு தீவிரமாக யோசிக்க வேண்டும். மேலும் கால்நடை மருத்துவக் கல்லூரி இன்றைக்கு சென்னையிலும், நாமக்கல்லிலும், இருப்பதாக சொல்கிறார்கள்.

நாமக்கல் கல்லூரி, முன்னாள் முதல்வர் அவர்கள் இந்தத் துறையிலே அமைச்சராாக இருந்த ஒருவருக்கு, அந்த ஊருக்கு திருமணத்திற்காக சென்றபோது பரிசாக வழங்கியதாகச் சொல்கிறார்கள். ஆதலால் அது பரிசாக கொடுத்த பொருள், அதனால் எந்த விதமான பிரயோஜனமும் இல்லாமல் இருப்பதாகவும், அங்கு எந்த விதமான அபிவிருத்தியும் இல்லை என்றும் சொல்கிறார்கள். ஆகவே நாமக்கல்லில் இருக்கக்கூடிய கல்லூரியை ஒன்று அபிவிருத்தி செய்யவேண்டும் அல்லது அங்கே எதுவும் இல்லை என்று சொல்லப்படுவதால் ஒன்றை புதிதாக மதுரையிலே கால்நடை மருத்துவக் கல்லூரி ஏற்படுத்திக் கொடுத்தால் ஏதுவாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

தமிழ்நாட்டில் கால்நடை மருத்துவ மனைகளுக்கு இன்றைக்கு வாகன வசதியே கிடையாது. அந்த மருத்துவர்கள் தங்களுக்கு தகவல் வந்தால் அங்கு போய் சேருவதற்கு நீண்ட நேரம் ஆகிறது. ஆகவே ஒவ்வொரு கால்நடை மருத்துவ மனைக்கும் ஜீப்போ அல்லது வேன் வசதியோ, மோட்டார்-பைக் வசதியோ செய்து கொடுத்தால் அது அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

கலப்பு இன கரு சேகரிப்பு நிலையங்களை அதிகரிக்க வேண்டும்.

கால்நடைத் துறையில் இன்றைக்கு ஆய்வாளர்களுக்கும், அங்குள்ள மருத்துவர்ளுக்கும் நீண்டகாலமாக ஒரு பிரச்சினை இருந்து கொண்டு வருகிறது. அந்த கால்நடை ஆய்வாளர்கள் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அதை இந்த அரசு கவனிக்கவில்லை என்று அவர்கள் மனம் நொந்துசொல் கிறார்கள். இன்றைக்கு அந்தத் துறையிலே பணிபுரிந்த ஒருவர் அமைச்சராக வந்து இருக்கின்ற காரணத்தால் அவர்கள் எப்படியும் தங்களுக்கு நிவாரணம் கிடைக்குமென்று எண்ணி நம்பிக்கையோடு இருக்கிறார்கள். அந்த நம்பிக்கை வீணாகாமல் நம்முடைய அமைச்சரவர்கள் அந்த கால்நடை ஆய்வாளர்களின் பிரச்சினையைப் பேசி ஒரு சுமுகமான முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். ஏனென்றால் கால்நடைத் துறையிலே பணிபுரியும் மருத்துவர்களும், ஆய்வாளர்களும் இரண்டு கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த அரசு அவற்றிற்கு இடம் கொடுக்காமல் அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும், சீமை எருமைகள்..

திரு. எம். முகம்மது சித்திக்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் வள மானியத்தின் மீது பால், பால் கோவா வழங்குவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். கோழி மானியம் நடந்தால் அப்போது ஏதாவது உறுப்பினர்களுக்கு வழங்கப்படுமா என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாட்டுக்கு மானியம் நடந்தால் மாடு கேட்பார் போல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கவனமாகச் சொல்லுங்கள். அவர் பேராசை பிடித்தவர்.

திரு. என். பழனிவேல்: துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து இதெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. நீங்கள் சுட்டிக்காட்டியவர்கள்—அமைச்சரவர்கள் சொல்லி விட்டார்கள்—வெளியிலே போய் சாப்பிடலாம்.

சீமை எருமைகள் இன்றைக்கு பெருமளவில் பால் தரக்கூடிய இனமாக இருக்கிறது. அவைகளை பட்டி தொட்டி எல்லாம் பரப்பக்கூடிய அளவில் அதன் உற்பத்திக்கு வழி வகை செய்து தரவேண்டும். இன்றைய தினம் பால் எருமைகளில் ஒரு பெரிய மோசடி நடப்பதாக எனக்குத் தகவல் வந்து இருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில் கிழட்டு வயதான எருமைகளின் முடியை சுத்தமாக சிரைத்துவிட்டு அவைகளின் மேலே ஏதோ ஒரு எண்ணெய்யைத் தடவினால் இளம் கன்றுபோல அவைகள் காட்சி அளிக்கிறதாம். அவைகளைச் சந்தைகளுக்குக் கொண்டுபோய் அவர்கள் ஏமாற்றி, 3 ஆயிரம், 4 ஆயிரத்துச்கு விற்று விடுகிறார்கள். அன்றைய தினம் பால் கறந்தால் ஒரு எருமை 8 லிட்டர், 10 லிட்டர் பால் தருகிறதாம்; அவர்கள் வீட்டுக்குப் போய் மறுநாள் பால் கறந்தால் ஒரு லிட்டர் கூட கொடுப்பது இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி ஒரு மோசடி அந்த மாவட்டத்திலே நடப்பதாக பல பேர் என்னிடத்திலே சொல்லி இருக்கிறார்கள். அதை என்ன என்று பார்த்து அமைச்சரவர்கள் கவனித்தால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதைப் போலவே இன்றைக்கு வெள்ளைப் பன்றி, இறைச்சிக்காக பல இடங்களிலே இல்லாத நிலைமை உள்ளது.

(முற்பகல் 11–30)

அந்த வெள்ளைப் பன்றியின் உற்பத்தியை அதிகரித்தால் இன்றைக்கு நிலவும் இறைச்சியின் விலையைக் குறைக்கவும், சாதாரண மக்களுக்கு இலகுவான விலையிலே இறைச்சி கிடைப்பதற்கும் ஏதுவாக இருக்கும். ஆகவே, வெள்ளைப் பன்றி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

பால் தேவை என்பது இன்றைக்கு மிக மிக அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது. எனவே, குஜராத்திலே இருப்பதைப் போல, பால் வள கார்ப்பரேஷன் மாதிரி இங்கே ஏற்படுத்தித் தர வேண்டும்.

தமிழகத்திலே மூன்றாவது கட்டப் பால் பெருக்குத் திட்டம் ரூபாய் 65 கோடியில் 1985 ஆம் ஆண்டு செயல்படுவதாகச் சொல்லப்பட்டது. தற்போது அது செயல்படவில்லை என்று தெரிகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூபாய் 65 கோடி முதலீட்டில் தேசிய பால் வள வாரியத்திடம் ஒப்பந்தம் ஒன்று செய்திருந்தார்கள். கடந்த நான்காண்டுக் காலமாக இத்திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு நிதி ஏதுவும் ஒதுக்கப்பட வில்லை என்று சொல்லப்படுகிறது.

ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பு நாடுகளுடன் உலக வங்கியும் சேர்ந்து பால் பெருக்குத் திட்டங்களுக்கு நிதி உதவி செய்து வருகிறது. பால் பெருக்குத் திட்டங்களை நிறைவேற்றுவதை ஆய்வு செய்ய உலக வங்கி நிபுணர்கள் எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப்படுவதாகச் சொல்லப் படுகிறது. ஆனாலும், தனி நபர் பால் உபயோகம் என்பது இன்றைக்கு ஏட்டளவில்தான் இருக்கிறதே தவிர, உண்மை யில் நடைமுறையில் கிடையாது.

இன்றைக்கு ஒரு நாளைக்கு சராசரி ஒவ்வொரு மனிதரும் 160 கிராம் பால் உபயோகிப்பதாக இங்கே சொல்லியிருக்கிறார் கள். அப்படியென்று சொன்னால் ஐந்து பேர் இருக்கக்கூடிய வீட்டிலே இன்றைக்கு அரை லிட்டர் பால் தினமும் வாங்கு கிறார்கள் என்று அர்த்தம். ஆனால், உண்மையில் அப்படி கிடையாது. பல மாதங்களுக்குப் பாலையே கண்ணால் பார்க் காத குடும்பங்களெல்லாம் இன்றைக்குத் தமிழகத்திலே இலட்சக் கணக்கிலே இருக்கின்றன. ஆகவே, இம்மாதிரியான தவறான தகவல்களைப் போக்க வேண்டும்.

பால் உற்பத்தி மற்றும் வழங்கு சங்கங்கள் தற்போது 6,330 உள்ளன என்று இங்கே சொல்லப்படுகிறது. மேலும் 400 இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாக ஆரம்பித்தால் நல்லதாக இருக்கும்.

பால் உற்பத்தி, தற்போது சங்கங்களில் 4.25 இலட்சம் லிட்டர்களும், மற்றயிடங்களிலே 7.72 இலட்சம் லிட்டர்களும் என்று ஆக மொத்தம் 11.97 இலட்சம் லிட்டர்கள் பால் உற்பத்தி ஆகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், பால் இன்றைக்கு, நபர் ஒன்றுக்கு 160 கிராம் சராசரியாக உபயோகப்படுத்தப்படுவதாகவும், ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 41 முட்டைகள் உபயோகப்படுத்தப்படுவதாகவும் இங்கே புள்ளி விவரங்கள் கொள்கை அறிக்கையிலே சொல்லப் பட்டிருக்கின்றன. இதெல்லாம் சராசரிக் கணக்காக வேண்டு மானால் இருக்கலாமே தவிர, தனி நபர்கள் அப்படி யாரும் முட்டையோ, பாலோ சராசரியாகப் சாப்பிடுவது என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, இதைக் காலப் போக்கிலாவது எல்லோரும் சாப்பிடக் கூடிய அளவில் அதைச் செய்து கொடுக்க வேண்டும்.

கிராம பால் சங்கங்கள், மாவட்ட பால் உற்பத்தியாளர் சங்கங்கள், மாநில பால் உற்பத்தியாளர் இணையம் போன்ற அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெறாமலே இன்றைக்குக் கிடப்பிலே கிடக்கிறது. தற்போது அவை மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேரடிப் பார்வையிலே உள்ளன. ஆகவே மாவட்ட ஒன்றியங்கள், மாநில இணையங்களில் சுமார் 400-க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் கடந்த 17 ஆண்டுக் காலமாக நிரந்தரப்படுத்தப்படாமல் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களை உடனடியாகப் பணி நிரந்தரம் செய்தால் ஏதுவாக இருக்கும். நம்முடைய அரசுக்கும் நல்ல பெயர் கிடைக்கும் என்றும் நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

மீன் வளத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு உள் நாட்டு மீனவர் சங்கம் என்று ஆங்காங்கு செயலிழந்து கிடக்கின்றன. கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய சிறுசிறு குட்டைகளிலேயும், குளங்களிலேயும் மீன் பிடிக்கக்கூடிய அந்த மீனவ மக்கள், அந்தச் சங்கங்கள் என்ற பெயரால் வந்து விட்ட காரணத்தால் மீன் பிடிக்கப்போக முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால் அவர்களுடைய வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே, கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய சிறிய சிறிய கண்மாய்களிலே, குளங்களிலே அந்தப் பகுதியைச் சேர்ந்த அந்த இன மக்கள் மீன் பிடித்துத் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு ஏதாவது அரசு உடனடியாகச் செய்தாக வேண்டும்.

கடலோர மீனவர்களுக்கு புயல் காலங்களில் ஏற்படும் துன்பங்கள் துயரங்கள் சொல்லி முடியாதவை. சில நேரங்களில் அவர்களது குடியிருப்புகள் புயலால் அடித்துச் செல்லப்பட்டு அவர்கள் தெருவிலே நிறுத்தப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு உடனடியாக மாடி வீடுகள் கட்டிக் கொடுத்து, அவர்களைப் பாதுகாக்க வேண்டும்.

கோழி வளர்ப்பு வாரியம் இன்றைக்கு உள்ளது. வீரியக் கோழிகள் வருஷத்திற்கு 260 முட்டைகள் இடுகின்றன என்று சொல்கிறார்கள். லகான் கோழிகள் 140 முட்டைகள் இடுவதாகச் சொல்கிறார்கள். மாவட்டத்திற்கு ஒரு கோழிப் பண்ணை ஏற்படுத்தினால் கோழி முட்டை பிரச்சினையை எளிதாகத் தீர்க்க ஏதுவாக இருக்கும்.

கொல்லைப்புற கோழி வளர்ப்புத் திட்டம் என்ற ஒன்று ஏற்கனவே இருந்தது. அது தற்போது செயலிழந்து விட்டதாகக் கூறுகிறார்கள். அதை ஊக்குவிக்க வேண்டும்.

கிராமப்புற மக்களுக்குப் பாதி விலையில் கோழிகளை வழங்கினால் கோழி முட்டை அபிவிருத்திக்கு ஏதுவாக இருக்கும். கேரளாவிலே வழங்குவதைப்போல இன்றைக்கு சப் செண்டர்களுக்குப் பால் சப்ளை செய்யப்பட வேண்டும்.

1989 மே 2] [திரு. என். பழனிவேல்]

உறை விந்துகளை இருபது வருஷங்கள் வரை சேகரித்துப் பாதுகாக்கலாம் என்று சொல்கிறார்கள். கால்நடைப் பல்கலைக் கழகம் தமிழகத்திலே ஒன்றை ஏற்படுத்தினால் சிறப்பாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாமக்கல்லில் தற்போது உள்ள மருத்துவக் கல்லூரியில் எவ்வித வசதியும் இல்லை என்று நான் ஏற்கனவே சொன்னேன். அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இயங்கும் கால்நடை மருத்துவமனை கிளை நிலையங்களுக்கு மேசை, நாற்காலிகூட இல்லை என்று இன்றைக்குச் சொல்கிறார்கள். தேவையான சாமான்களை அங்கே வாங்கிக் கொடுக்க வேண்டும். ஊசி மருந்துகளை வெளி மார்க்கெட்டிலே வாங்குவதற்கும் அந்தந்த மருத்துவ மனைகளுக்கு அனுமதி அளிக்கவேண்டும்.

கால்நடை ஆய்வாளர்கள் இல்லாததால் கிளை நிலையங்கள் மூடிக்கிடக்கின்றன என்று சொல்கிறார்கள். பயிற்சியைத் துவக்கி காலி இடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை உதவி மருத்துவருக்கு ரிஸ்க் அலவன்ஸ் என்று 100 ரூபாய் தரப்படுகிறது. இதை கால்நடை ஆய்வாளர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டு அவர்கள் நீண்ட காலமாக வற்புறுத்தி வருகிறார்கள். அதை மறு பரிசீலனை செய்து அவர்களுக்கும் கொடுக்க வேண்டும்.

நீண்ட காலமாகப் பதவி உயர்வே இல்லாமல் இருக்கும் ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வை அளிக்கவேண்டும். மகாராஷ்டிரத்தைப் போல தமிழகத்திலும் கால்நடை ஆய்வாளர்களுக்கு வெட்டர்னரி கவுன்சிலில் பதிவு செய்து கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களில் மேற்பார்வையாளர்களை செயலாளர்களாக நியமிக்க வேண்டும்.

மருத்துவ மனைகளில் வழங்கப்படும் மருந்துகளைக் கணக்கிட்டுக் கொள்ள கூட்டுப் பொறுப்பாளர் நியமிக்க வேண்டும். இன்றைக்கு ஒரே ஒருவர் பார்ப்பதால் அவர்களுக்கு வேலை பளு அதிகமாக இருப்பதாகச் சொல்கிறார்கள்.

சத்துணவுக் கூடத்தில் உபயோகிப்பதற்கு மாதம் 40 ஆயிரம் முட்டைகள் தேவைபபடுகின்றன. எனவே கிராமப்புறங்களில் 2,500 கோழிப் பண்ணைகளை ஏற்படுத்தினால் அதற்கு

ஏதுவாக இருக்கும். படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் உதவியாக இருக்கும். (மணி யடிக்கப் பெற்றது) துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். கிளை நிலையங்களில் வேலை அளிக்கும் வகையில் இன்றைக்கு கால்நடை ஆய்வாளர் கள் பயிற்சியை கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

கால்நடை அரசுப் பண்ணைகளில் ஏறத்தாழ 40 ஆண்டுக் காலமாக தினக் கூலிகளாக பணி புரியும் 1,500 தொழிலாளர் கள் நிரந்தரப்படுத்தப்படாமல் இருக்கிறார்கள். அந்த ஊழியர்கள் ஒவ்வொரு எம்.எல்.ஏ.,—விடமும் அலைந்து புகார் சொல்கிறார்கள். அதை கவனித்து அவர்களை நிரந்தர மாக்கினால் அவர்கள் வாழ்க்கையில் ஒரு நிம்மதி கிடைக்கும். அவர்களுக்கு எந்தவிதமான விடுப்போ, சலுகையோ, சுதந்திர தினமோ, மே தினமோ எதுவும் இல்லையென்று சொல்கிறார்கள். குறிப்பாக பொங்கல் இனாம் ரூ. 400 என்பது மற்ற அலுவலர்களுக்கு கிடைத்தாலும் இவர்களுக்கு கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதையும் கிடைக்கச் செய்ய வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 1,500 ஆடுகள் விவசாயிகள் வைத்திருந்தவை ஊசி போட்ட காரணத்தால் இறந்து விட்டனவாம். கொடுமையைப் பாருங்கள். கால் நடை மருத்துவர் ஊசி போட்டதால் 1,500 ஆடுகள் இறந்துள்ளன. அதனால் அந்த விவசாயிகள் பெரு நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அதைப்போல எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல கால்நடை விரிவாக்க அலுவலர்களை ஒன்றிய விரிவாக்க அலுவலர்கள் என்று பெயர் மாற்றம் செய்து தர வேண்டுமென்று இன்றைக்கு கோருகிறார்கள். அதை அவர்களுக்குச் செய்து தர வேண்டுமென்று கேட்டு, இந்தச் சந்தர்ப்பத்தை வழங்கிய துணைத் தலைவர் அவர் களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. பி. மாரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கால்நடை மானியக் கோரிக்கை மீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கால்நடை என்று தமிழகத்தில் குறிப்பிட்டு நான் சொன்னால் அது காங்கேயத்தை தான் குறிக்கும். காங்கேயம் காளை மாடுகள என்றால் அவை அகில உலக புகழ் பெற்றவை என்பது எல்லோருக்கும் தெரியும். அந்தத தொகுதியிலிருந்து தான் நான் இங்கே வந்திருக்கிறேன்,

காங்கேயம் காளை என்று சொன்னாலே, அந்த வார்த்தையை கேட்டாலே ஒரு சிலுசிலுப்பு ஏற்படும். அப்படிப்பட்ட அழகு வாய்ந்த, பொலிவு மிக்க காளைகள்

1989 மே 2] [திரு. பி. மாரப்பன்]

எங்கள் பகுதியில் வளர்கின்றன. அந்த காளை இனம் இப்போது அழிந்து கொண்டு வருகிறது. நான் இதை கட்சி பாகுபாடு இல்லாமல் சொல்கிறேன். எல்லா அரசாங்கங்களும் இந்த இனத்தை வளர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்காமல், அந்த இனம் அழிவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பதில் எல்லோருக்கும் போட்டி. இப்படிப்பட்ட சூழ்நிலையின் காரணமாக காங்கேயம் காளை என்று சொல்லப்படுகிற, அகில உலகப் புகழ் பெற்ற இனம் இன்றைக்கு இல்லையென்று சொல்லக் கூடிய அளவிற்கு குறைந்து வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு ஜோடி மாடுகள் 12,000, 15,000 ரூபாய் என்று விற்கக்கூடிய மாட்டு இனம் அகில உலகத்திலேயே கிடையாது. காங்கேயம் காளையைப் பார்த்தால், எங்கள் பகுதியில் மாடு என்று கூட சொல்வதில்லை. காளை மாடு என்றுதான் சொல்வார்கள். அப்படிப்பட்ட பொலிவு பெற்றது அந்த காளை இனம். அதைக் கண் கொண்டு பார்ப்பதற்கே அவ்வளவு அழகாக இருக்கும். வண்டியிலே பூட்டிக் கொண்டு சவாரி செய்தால் சிலுசிலு என்று இருக்கும். அப்படிப்பட்ட அந்த இனம், வரலாற்றுச் சிறப்பு மிக்க இனம். ஏன் சொல்கிறேன் என்றால், மனுநீதிச் சோழன் பிறந்த நாட்டில் பிறந்து வந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறார்கள். அந்த மனுநீதிச் சோழனிடத்தில் எங்கள் காங்கேய நாட்டு காளை தான் போய் அந்த ஆராய்ச்சி மணியை அடித்ததோ என்று கருதுகிறேன்.

(முற்பகல் 11-40)

அந்த மாடுகளின் குறையை அவற்றின் சார்பாக நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். காங்கேயம் பகுதியில் உள்ள அந்த நிலத்திலே கால்சியம் அதிகமாக உள்ளது. அதிலே கொழுக்கட்டைப் புல் என்று சொல்லக்கூடிய ஒரு புல் அங்கே தான் அதிகமாக வளர்கிறது. ஒரு ஏக்கரிலே எள் போட்டால் நான்கு மூட்டைகள் விளையும். இருந்தும் விவசாயி எள் போட மாட்டான். 4 மூட்டைகள் வரும், 3 ஆயிரம் ரூபாய் வருமானம் வரும். அதைப் போடாமல், இந்தக் கொழுக்கட்டைப் புல்லைத்தான் வளர்ப்பான். இந்தக் கொழுக்கட்டைப் புல்லைத் தின்றால், இந்த மாடுகள் கொழு கொழு என்று வரும். இப்போது அந்தப் புல் எல்லாவற்றையும் அழித்து விட்டார்கள். இருந்தாலும் மழை பெய்தால், நாங்கள் அதை வளர்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். எனவே காங்கேயம் காளைகள் நல்ல முறையில் வளர்வதற்கு, இந்தக் கொழுக்கட்டைப் புல் ஆதாரமாக இருப்பதால், அவைகளை வளர்ப்பதற்கு இந்த அரசு நிதி உதவி அளிக்க வேண்டும். கொழுக்கட்டைப் புல் வளர்க்கக் கூடிய விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 500 ரூபாய் அல்லது 1,000 ரூபாய் மானியம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொழுக்கட்டைப் புல்லை வளர்ப்பதற்கு மானியம் தர வேண்டும் என்று பேரவை உறுப்பினர் இங்கே உரையாற்றுகிறார்கள். மழை பெய்தால் தானாக வளரக்கூடிய புல் அது. எனவே எந்த அடிப்படையில் மானியம் வழங்க வேண்டும் என்று உறுப்பினர் விரும்புகிறார் என அறிய விரும்புகிறேன்.

திரு. பி. மாரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தப் புல்லை வளர்ப்பதற்கு ஒரு இன்செண்டிவ், போனஸ் மாதிரி தர வேண்டும். இந்தக் கொழுக்கட்டைப் புல்லை வளர்ப்பதற்கு. . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எது எதற்குத்தான் போனஸ் கேட்பது என்று ஒரு வரைமுறை இல்லையா ?

திரு. பி. மாரப்பன் : தமிழகத்தைப் பொறுத்தவரையில், விவசாயம், நெசவுத் தொழிலும் தான் பெருமை பெற்ற தொழில்கள், நாட்டிலே விவசாயத் தொழில் தான் முதுகெலும்பு போன்றுள்ளது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : துணைத் தலைவர் அவர்களே, விவசாயப் பணியோடு தொடர்பு இருக்கிற காரணத்தால் சொல்கிறேன். இதை வளர்ப்பதை விட்டு விட்டதற்குக் காரணமே, லாபகரமாக இல்லை என்பதற்காகத் தான் விட்டுவிட்டார்கள். இந்தத் தகவல் உறுப்பினருக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. பி. மாரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. லாபம் இல்லை என்று பார்க்க முடியாது. சில தொழிலில் லாபம் இல்லை என்பதற்காக விட முடியாது. அப்படிப் பார்த்தால், சில துறைகளை எடுத்துக் கொண்டால், அவைகள் நட்டத்திலே தான் ஓடிக் கொண்டு இருக்கின்றன. அதற்காக விட்டு விடுவதா ? ஆகவே பொது முக்கியத்துவம் வாய்ந்த, நாட்டுக்குத் தேவையான, மக்களுக்குத் தேவையான காரியங்களை நஷ்டமாக இருந்தாலும் அரசு ஏற்று நடத்தித் தான் ஆக வேண்டும். லாபம் இல்லை என்றால் நாம் என்ன வியாபாரமா செய்கிறோம். மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்வதில் லாப நஷ்டம் பார்க்கக் கூடாது. கள்ள நோட்டு அடித்தால் லாபம் தான் வரும், அதற்காக நாம் அதை அடிக்க முடியுமா ? ஆகவே நல்ல காரியங்களைச் செய்யும்போது, லாப நஷ்டங்களைப் பார்க்கக் கூடாது என்பதை இந்த அவையின் மூலமாக நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். மாடுகளை வளர்க்க வேண்டும் என்ற ஆதங்கத்திலே நான் சொல்கிறேன்.

1989 மே 2]

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்** : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொழுக் கட்டைப் புல் வளர்ப்பதற்காக அரசு மானியம் வழங்க வேண்டும் என்று கூறினார்கள். பசுந் தீவனம் உற்பத்தியை மேற்கொள்வதற்காக பெரியார் மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைத் திட்டத்தின் கீழ் அரசு மானியம் வழங்குகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. மாரப்பன்** : துணைத் தலைவர் அவர்களே, அரசு மானியம் வழங்குவது. சீமைப் புல், அந்தப் புல் என்று கொடுத்தால் ஆகாது. அது செம்மறிக் குட்டி கூட சாப்பிடுவதற்கு இல்லாமல் இருக்கிறது.

அப்படிப்பட்ட தேவையற்ற புல்லைத்தான் வளர்க்கிறார் கள். அடிப்படை ஆதாரச் சத்துள்ள, கால்சியம் உள்ள புல் இந்த கொழுக்கட்டைப் புல், இதை நீங்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும். கோவை, பெரியார் மாவட்டத்திலே உள்ள சாதா ரண விவசாயிகளிடம் சென்று விசாரித்தால் தெரியும். இன்னும் சொல்லப்போனால், அமைச்சர்கள் எல்லாம் மெயின் ரோட்டிலே போகாமல், எங்கள் ஊரிலே இருக்கக்கூடிய கிராமத்திலே இருக்கக்கூடிய பாதை வழியாகச் சென்று பார்த்தால், இந்தக் கொழுக்கட்டைப் புல் வளர்ந்திருக்கிற ஜோரைப் பார்த்தா தாலே மகிழ்ச்சி ஏற்படும். ஆகவே, உங்களால் முடிந்தால் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்தினு டைய பொருளாதார நிலை அதற்கு இடம் கொடுத்தால் செய்யுங்கள். விவசாயிகள் மகிழ்ச்சி அடைவார்கள். அதனால் மாடுகள் தமிழகத்திலே வளர்ச்சி அடையும். அப்படி மாடு கள் வளர்ச்சி அடைந்தால், என்ன ஆகும் என்று நீங்கள் கேட்டால், பால் உற்பத்தி பெருகும், மாமிசம் பெரு கும்.

இந்த மாமிசப் பிரச்சினையில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். தற்போது மாடுகள் எல்லாம் கேரளாவிற்குச் செல்லுகின்றன. கேரளாவிலே உள்ள தண்ணீரை மட்டும் விடமாட்டான். ஆனால் இங்கே உள்ள மாடுகள் பூராவும் கேர ளாவிற்கு அடிமாடாகப் போகிறது. நம்முடைய பொள்ளாச் சிப் பகுதிக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் டூர் போகும் போது இதைப் பார்க்கலாம். இங்கே பாண்டமங்கலத்திலே யிருந்து, தொட்டியத்திலேயிருந்து.........

**திரு. ரா. சொக்கர்** : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே; உறுப்பினர் அவர்கள் காங்கேயம் காளையைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கு கொழுக்கட்டைப் புல் வேண்டும் என்று சொல்கிறார்கள். இறுதியில் இதனால் பால் உற்பத்தி அதிகமாகப் பெருகும் என்று சொல்கிறார்கள். எனக்கு, காளை மாடு எங்கே பால் கறக்கிறது என்பது புரிய வில்லை, அதை விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பி. மாரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, காளை மாடு என்று சொன்னாலே மாடு இனத்தைக் குறிக்கும். மனிதர்கள் என்று சொன்னால், அது ஆண்களையும் குறிக்கும், பெண்களையும் குறிக்கும். அதனாலே ஆண்கள் குழந்தைகளைப் பெற முடியுமா என்று கேட்டால் என்னால் பதில் சொல்ல முடியாது. ஆகவே மாமிச உற்பத்தி மூலமாகவும், அந்தக் கொம்பு, குளம்பு மற்றும் தோல் மூலமாக பல கோடி ரூபாய் அன்னியச் செலவாணியை நம்முடைய தமிழகத்தில் உள்ள மாடுகளின் மூலமாகப் பெற முடியும். அண்ணன் ராமநாதன் போன்றவர்களைக் கேட்டால் சொல்வார்கள். ஏன் என்றால், அவர்கள்தான் அந்த பார்டரிலே இருக்கிறார்கள். எத்தனை மாடுகள் போகின்றன என்பது தெரியும். இந்த மாமிச ஏற்று மதி மூலமாக கேரள அரசாங்கம் வருடத்திலே 15, 20 கோடி ரூபாய் அன்னியச் செலவாணி ஈட்டுகிறது. அதை நாம் கட்டுப் படுத்தி இந்த இறைச்சியின் மூலமாக நாம் அன்னியச் செல வாணியைப் பெறுவதற்கு வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பாலைப் பொறுத்தவரையில், விவசாயிகளின் உற்பத்தி செலவிற்காகும் தொகையை கூட இந்த அரசாங்கம் கொடுப்பதில்லை. அந்த சொசைட்டிகளில் ரூ. 4, ரூ. $4\frac{1}{2}$ என்ற அளவில் கொடுப்பார்கள் போலிருக் கிறது. பால் உற்பத்திச் செலவை கணக்கிட்டுப் பார்த்தால், ரூ. 5, ரூ. $5\frac{1}{2}$ ஆகும். எனவே பால் விலையை ஏற்றிக் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோழித் தீவனத்தைப் பொறுத்த வரையில் சேல்ஸ்—டாக்ஸ் போன்ற சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். மாட்டுத் தீவனத்தைப் பொறுத்தவரையில், செயற்கை தீவனம் என் றெல்லாம் உருவாக்கியிருக்கிறீர்களே., அதே மாட்டுத் தீவனத்திற் குப் போடுகிற டாக்சை குறைக்கவேண்டுமென்று இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக பால் வள யூனியன்கள் பெரியார் மாவட்டத்தில் சித்தோட்டில் இருக்கின்றன. அங்கே கடந்த சில மாதங்களாக கிராமப்புறங்களில் இருக்கக் கூடிய பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு காசே கொடுக்கவில்லை. பாலை கறந்து கறந்து ஊற்றி விட்டு, அவன் நடையாக நடந்து, அவன் செருப்புகள் இரண்டு ஜோடிகள் தேய்ந்து போய்விட்டன. எனவே அந்தப் பணத்தை கொடுக்க உடனடியாக எங்கள் மாவட்டத்து அமைச்சர், அக்கா அவர்கள் அதற்கான ஏற்பாட்டைச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. கே. என். நேரு : அக்காவிடம் பால் விலையைப் பற்றிக் கேட்டால் என்ன செய்வது, நான் அல்லவா சொல்லவேண்டும். என்னைக் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சரைக் கேளுங்கள்.

1989 மே 2] [பேரவைத் துணைத் தலைவர்]

நீங்கள் ஏற்கனவே தப்பு தப்பாகப் பேசுவதால் நிறைய பாய்ண்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறார்கள். இன்னும் இருப்பது ஒரேயொரு நிமிடம். அந்த ஒரு நிமிடமாவது பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பாத அளவிற்கு பேசுங்கள். தயவு செய்து சப்ஜெக்ட்டையொட்டிப் பேசுங்கள். பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்பதற்கு இடம் அளிக்காதீர்கள்.

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறவு முறையைச் சொல்லி அழைப்பதைப் பற்றி எனக்கு ஒன்றும் அபிப்பிராயபேதம் இல்லை. ஆனால் அப்படி உறவு முறையில் அழைப்பதாக இருந்தால், அவர் வயதைப் பொறுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கை என்றே அழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு).

திரு. பி. மாரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அக்கா, அண்ணன், தம்பி என்பதெல்லாம் அரசியலிலே ரெகுலர் வர்ட்ஸ். இதிலே அக்காவிற்கு வயது அதிகமாகி விட்டது என்று நான் சொல்லவில்லை. என்னை விட இளையவராகத்தான் இருப்பார்கள். தங்கையாகத் தான் இருக்க முடியும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மரியாதையாகச் சொல்கிறார்.

திரு. பி. மாரப்பன்: எனவே அது மரியாதைக்கான வார்த்தையே ஒழிய, அக்கா என்றால் அவர்களுக்கு 93 வயது என்றும், எனக்கு 13 வயது என்றும் நான் சொல்ல ஆசைப்படவில்லை. நான் சப்ஜெக்ட்டிற்கு வந்துவிடுகிறேன். இப்போதுதான் சப்ஜெக்ட்டே ஆரம்பிக்கப் போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நாளைய மானியத்தில் பேசுங்கள்.

திரு. பி. மாரப்பன்: இரண்டே இரண்டு நிமிடங்கள். இடையிலே குறுக்கீடுகள் வந்தால் நான் எப்படிப் பேசுவது. ஆகையால் அனுமதியுங்கள்.

கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில் 35 ஆண்டுகளாகப் பணியாற்றுகிறவர்களுக்கு எந்தவிதமான ப்ரமோஷனும் இல்லாமல் ஒரே ரேங்கில் கால்நடை ஆய்வாளர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் மற்ற துறைகளிலே ப்ரமோஷன் உள்ளது. ரெவின்யூ இன்ஸ்பெக்டராக இருப்பவர்கள் ஸ்டேஜ் பை ஸ்டேஜில் ப்ரமோஷனாகி கலெக்டராகக் கூட வரலாம். எனவே இவர்களுக்கும் அந்த வாய்ப்பை அளிக்க வேண்டும்.

அடுத்தபடியாக கால்நடை மருத்துவர்களுக்கு கடந்த ஆட்சிக் காலத்திலே, மசனாய்க்கடி போன்றவற்றிற்கு ஊசி போடுவதற்காக, அந்த மாட்டைப் பிடித்தாலோ, ஆட்டை பிடித்தாலோ, அந்த ஊசி போடும்போது அதனுடைய எச்சில் பட்டாலோ, மசை பட்டுவிடும் என்பதற்காக அவர்களுக்கு ஒரு தொகை ரூ. 100 என்று அளிக்கப்பட்டது. அதாவது ஆபத்துக் காலத்தில், ரிஸ்க் அலவன்ஸ் என்ற அளவில் ரூ. 100 அவர்களுக்கு கொடுத்தார்கள். அந்தப் பணியைப் பொறுத்தவரையில், அந்த மருத்துவ டாக்டர்களைவிட இந்த உதவி ஆய்வாளர்கள் தான் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த மாட்டை கட்டிப் பிடித்து, துள்ளுகிற மாட்டை அமுக்கிப் பிடித்து, இந்த ஆய்வாளர்கள் கஷ்டபட்டுப் அந்த வேலையைச் செய்கிறார்கள். அவர்களுக்கும் அந்த ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த மன்றத்தின் மூலமாக உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக கால்நடை துறையிலே ஒரு லாட்டரி சீட்டு நடத்துகிறார்கள். கால்நடை துறையிலே என்னிடத்திலே கொடுத்தார்கள். பம்பர் லாட்டரி மாதிரி வைத்து ஒவ்வொரு சங்கமும் ஒரு லாட்டரி நடத்துகிறார்கள்.

(முற்பகல் 11-50)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்னுடைய இசைவு இல்லாமல் அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு பேசக் கூடாது. அதை மடித்து பாக்கெட்டிலே வைத்துக் கொள்ளுங்கள்.

திரு. பி. மாரப்பன்: ஆதாரமாகச் சொல்லவில்லை என்றாலும் கூட நாம் கேள்விப்பட்ட வகையிலே ஒரு சங்கம் கட்டிட நிதிக்காக லாட்டரி சீட்டு மாதிரி அடித்து வைத்திருக்கிறார்கள். பம்பர் லாட்டரி மாதிரி அடித்து ஊசி போடப் போகிற விவசாயிகளிடத்திலே 10 ரூபாய் கட்டிட நிதிக்காக நன்கொடை கொடுத்தால்தான் ஊசி போடுவோம் என்று அந்த மருந்தக டாக்டர்களும், ஆய்வாளர்களும் வற்புறுத்துகிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். ஆக இப்படி ஒவ்வொரு டிபார்ட்மெண்ட்டிலும் கட்டிட நிதி, கல்யாண நிதி என்று வாங்கினால் பொது ஜனங்கள் என்ன ஆவது? ஆகவே இப்படி வசூல் செய்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக (குறுக்கீடு) குறுக்கீட்டில் எனக்கு 4, 5 நிமிடங்கள் போய் விட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 12 நிமிடங்கள் முடிந்து விட்டன. திரு. மாரப்பன் அவர்களே நாளைக்குப் பேசிக் கொள்ளலாம். நீங்கள் நிறையப் பேசுகிறீர்கள். நன்றாகப் பேசுகிறீர்கள். நல்ல கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறீர்கள் (குறுக்கீடு) இப்போதே 13 நிமிடங்கள் எடுத்துக் கொண்டீர்கள்.

1989 மே 2]

**திரு. பி. மாரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கேயம் காளைக் கன்றுகளுக்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னாலே $2\frac{1}{2}$ வருஷம் வரையில் மாதம் 10 ரூபாய் என்று அலவன்ஸ் கொடுத்துவந்தார்கள். அந்த இனததை விருத்தி செய்ய வேண்டுமென்ற ஒரு நோக்கத்திலே அரசு முந்தைய காலங்களில் $2\frac{1}{2}$ வருஷத்திற்கு அலவன்ஸ் கொடுத்து வந்தார்கள். அந்த அலவன்ஸ் இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. அதை திரும்பவும் இப்போதிருக்கிற விலைவாசிக்கு ஏற்றவாறு குறைந்த பட்சம் 50 ரூபாய் என்ற அளவுக்கு காங்கேயம் காளைகளை வளர்க்கக்கூடிய விவசாயிகளுக்கு 50 ரூபாயை ஒரு போனசாக மாதம் தோறும்—புதியதாக கேட்கவில்லை. முன்பு கொடுத்ததைத்தான் கேட்கிறேன். அதைக் கொடுக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி புதிய இனம் அபிவிருத்தி செய்வதற்கு ஊசி போட்டு கருத்தரிக்கச் செய்கிறார்கள். இந்தச் செயற்கை கருத்தரிப்பு செய்வதற்கு அந்த ஆய்வாளர்களுக்கெல்லாம் அவர்கள் ஊசி போட்டு, இன்செக்ஷன் போட்டுதான் அதைச் செய்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஏதாவது ஒரு போனஸ் என்ற அடிப்படையில் அல்லது இன்சென்டிவ் என்ற அடிப்படையில் இதற்காக மாதம் 10 ரூபாய் 20 ரூபாய் கொடுத்தால்—ஒரு மாடு சினையாகி 6 மாதம் ஆகிவிட்டால் அந்த டாக்டருக்கு 50 ரூபாய், அந்த பீல்டிலே இருக்கிற ஆய்வாளர்களுக்கு 50 ரூபாய் போனசாக கொடுத்தால். . . .

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையில் பணி புரிகின்ற கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர்களுக்கு அதாவது செயற்கை முறையில் இனவிருத்தி செய்பவர்களுக்கு இன்சென்டிவ் அல்லது போனஸ் வழங்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் அரசாங்கத்திலேயிருந்து ஊதியத்தைப் பெற்று பணி புரிகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. மாரப்பன் :** அவர்களுக்கு ஒரு இன்ட்ரஸ்ட் வரும் என்பதற்காகச் சொன்னேன். காங்கேயம் பகுதி காளை மாடுகள் நிறைந்த பகுதி. அங்கே ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியை இந்த அரசு கட்ட வேண்டும். அது போக டையரி சம்பந்தமாக பால் பெருக்கும் கல்லூரி—தமிழகத்தில் எங்கேயும் இல்லை என்று நான் நினைக்கிறேன். அது அரியானாவில் இருக்கிறது. அப்படி ஒரு கல்லூரியை — அதுவும் காங்கேயத்தில்தான் அமைக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் மாடுகள் எல்லாம் அங்கேதான் இருக்கின்றன. ஆகவே கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றும் டையரி சம்பந்தமான கல்லூரி ஒன்றும் எனது காங்கேயம்

தொகுதியில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனது பகுதியில் தண்ணீர் இல்லை.... (மணியடிக்கப்பெற்றது)

திரு. கே. சுந்தர் : துணைத் தலைவர் அவர்களே, என்னை வேட்பாளராகத் தேர்வு செய்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், என்னை வெற்றி பெறச் செய்த உத்திர மேரூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியிலே அமர்த்திய தமிழ் சமுதாயத்திற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

பேரறிஞர் அண்ணாவின் வழியிலே இன்றைக்கு ஆட்சி நடத்துகின்ற நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று செங்கை—அண்ணா மாவட்டம் என்று பெயர் வைத்ததற்கு அவருக்கு எங்கள் மாவட்டத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற, பேசாத அனைவருக்கும் சுவையான பால் மற்றும் பால்கோவா, ஐஸ்கிரீம் வழங்குகின்ற பால்வளத்துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு பால்வளம் பெருகுவதற்கு கால் நடைகளுக்கு செயற்கைமுறைக் கருவூட்டல் செய்ய வேண்டியது அவசியமாகும். இலவச மருத்துவ வசதி, சரிவிகித கால்நடைத் தீவனம் அளித்தல், கால்நடை பராமரிப்பு பயிற்சி அளித்தல் போன்றவற்றைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் திட்டம் உண்மை யிலேயே நல்ல பலனை அளிக்க வேண்டுமானால் 5 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு அப்படிப்பட்ட மையம் ஏற்படுத்திக் கொண்டு செயல் பட்டாலதான் பால்வளம் நன்கு பெருகும் என்பதை இந்த நேரத் திலே இந்த அரசாங்கத்திற்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட் டிருக்கிறேன். அதே நேரத்திலே கடந்த ஆட்சிக் காலத்திலே பல்வேறு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பித்து செயல்படாமல் இருக்கின்றன. அவைகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து சங்கங்கள் செயல்பட ஆவன செய்யுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட பதிவாளர் மூலம் வழங்கப்படும் மானியங்கள் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட வேண் டும். பால் பொருள் உற்பத்தி செய்யும் ஆலை ஒன்று செங்கை அண்ணா மாவட்டத்திலே ஏற்படுத்தப்பட வேண்டும். கடந்த ஆட்சி காலத்திலே என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பழையசீவரம் என்ற கிராமத்திலே பால் பண்ணை ஒன்று வைப் பதாக அறிவித்திருந்தார்கள். இதுவரையில் அது நடைமுறைப்படுத்

தப்படவில்லை. அங்கே அப்படிப்பட்ட ஒரு பால் பண்ணை ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உத்திரமேரூர் ஒன்றியத்திலே ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டும். ஐ. ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஒன்றியத்திலும் 50 கறவை மாடுகள் வழங்குவது தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளது. அதை மாற்றி 200 கறவை மாடுகள் வழங்கப்பட்டால் நிச்சயமாக அதன் மூலம் பால் வளம் பெருகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொலி காளைகள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இருக்க வேண்டும். தற்போது ஊராட்சி ஒன்றியங்களிலே ஈ. ஓ. (ஏ.எச்.) என்ற மருத்துவர்கள் உள்ளனர். ஆனால் இவர்கள் எந்த வேலையும் செய்யாமல் ஆணையாளருக்கும் கட்டுப்படாமல் இருக்கிறார்கள். இந்தப் பதவி தேவைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைவிட ஒவ்வொரு பிர்க்காவிலும் ஒரு கால்நடை மருந்தகத்தை அமைத்து அவர்களை அங்கே பணி புரியச் செய்தால நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனவ நண்பன், படகோட்டி என்றெல்லாம் சொல்லிக் கொண்டவர்கள் தங்களுடைய கடந்த கால ஆட்சிக் கலாத்திலே வெறும் அறிவிப்புகளாகச் செய்த பல்வேறு நலத் திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மீன் பதப்படுத்தும் நிலையம் ஒன்று செங்கற்பட்டு தொகுதியைச் சார்ந்த சதுரங்கப்பட்டினத்திலே அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி மன்றங்கள் மூலமாக குளங்களிலே மீன் வளர்க்க வேண்டும். பண்ணைக் குளங்கள் மாவட்டந்தோறும் ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்திலே கடந்த காலத்திலே 9 கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வந்தன. தற்போது 4 தான் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. ஆகவே இயங்காமல் இருக்கின்ற அந்த 5 கிளை நிலையங்களும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகம் முழுவதும் 300-க்கும் மேற்பட்ட கிளை நிலையங்கள் இன்றைக்கு செயல்படாமல் இருக்கின்றன. அவைகளைச் செயல் படுத்த அரசு ஆவன செய்ய வேண்டும். குறிப்பாக நான் சார்ந்துள்ள சாலவாக்கம் பகுதி தனி யூனியனாக இருக்கின்ற காரணத்தினாலே அங்கே ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது சத்துணவுத் திட்டத்திலே முட்டை வழங்குவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு ஒன்றியந்தோறும் கோழிப்பண்ணைகள் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆட்டுப் பண்ணைகள், கால் நடைப் பண்ணைகள் ஆகியவை மாவட்டந்தோறும் ஏற்படுத்தப்பட வேண்டும். மாதவரம் பால்பண்ணையிலே பால் வற்றிய மாடுகளின் காப்பகம் ஒன்று உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அது தேவைதானா என்பதையும் அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். போதிய நோய் நீக்கும் டணிகள் மேற்கொள்ளப்படாவிட்டால் கால்நடைகள் உற்பத்தி பெருக்கம் என்பது முடியாத காரியம். எனவே, நோய்த் தடுப்பு ஊசி மருந்துகள் மாவட்ட தலைநகரங்களில் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

(நண்பகல் 12.00)

கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் இராணிப்பேட்டையில் இருப்பதைப் போலவே தென் மாவட்டங்களிலே, மதுரையிலே ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். கோழி நோய்த் தடுப்பு ஆராய்ச்சி நிலையம் சேலம் மாவட்டம் இராசிபுரத்திலே அமைக்கப்பட வேண்டும். தெரு நாய்கள் இன்றைக்கு தமிழகம் எங்கிலும் அதிகமாக இருக்கின்றன. அதனாலே, வெறி நாய்க்கடியால் பாதிக்கப்படுபவர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். ஆகவே, சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு நாய்களை பிடிக்கும்படி உத்திரவு போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஃபாஸ்ட் புட் என்ற உடனடி உணவை தலைநகரங்களுக்கு மட்டும் தான் டாப்கோ மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் உள்ளவர்களுக்கும் அந்த உணவு கிடைக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் முக்கியமாக தண்ணீர் தேவைப்படுகிறது. குறிப்பாக குடிநீர்ப் பிரச்சினை இருக்கின்றது. ஆகவே, என்னுடைய உத்திரமேரூர் தொகுதியைச் சேர்ந்த உத்திரமேரூர் பகுதியிலே செய்யாறும், பாலாறும் தொகுதியைச் சார்ந்த பல இடங்களில் சுற்றிச் சுழன்று செல்கின்றன. குடிநீர் வடிகால் வாரியம் பாறைகளிலும், சமவெளிகளிலும் ஆழ்துளைக் கிணறுகளைப் போட்டு, குடிதண்ணீர் இல்லாமல் மிகவும் பொய்த்து விடுகின்றது. ஆகவே, அந்த நிலை மாறவேண்டுமானால், சம்பந்தப்பட்ட ஆற்றங்கரைகளிலே போர்களைப் போட்டு, மிகச் சிறப்பான முறையில் குடிநீர் வழங்கினால் சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் பயனடைவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய உத்திரமேரூர் ஒன்றியம் மிகப் பெரிய ஒன்றியமாக இருக்கிறது. தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய ஒன்றியமான அந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

1989 மே 2]

திரு. அ. மு. ஹமீது இப்ராகிம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை, பால்வளம் மற்றும் மீன் வளத்துறை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு என் கருத்துக்களை எடுத்துரைக்க வாய்ப்பு அளித்த தங்களுக்கு முதற்கண் என் நன்றியினை உரித்தாக்கி, உரையைத் துவக்குகின்றேன். உரியவர் கவனிக்காத வரை தன் குறைகளைத் தெரிவிக்கும் வகையற்ற, வாயில்லா ஜீவன்களான கால்நடைகளைப் போன்ற பரிதாப நிலையிலேயே என்னுடைய கடலாடி தொகுதி இருந்து வந்துள்ளது. இளங்கன்று பசி எடுத்து தாய்ப் பசுவை நாடி குரல் கொடுப்பதைப் போல, மிகப் பின் தங்கிய என் தொகுதியின் சார்பாக தமிழகத்திற்கே கருணைத் தாயாக விளங்கும் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் அரசை நோக்கி இம்மானியக் கோரிக்கை மீது என் தொகுதி யின் கோரிக்கைகள் சிலவற்றைச் சமர்ப்பிக்கின்றேன்.

அரசின் திட்டங்களின் பலன்களைப் பொறுத்தவரை கடலாடி தொகுதி இதுநாள் வரை எல்லா வகையிலேயும் புறக்கணிக்கப் பட்டே வந்துள்ளது. ஏற்கனவே வானம் பார்த்த பூமியான எங்கள் பகுதி தற்போதைய வறட்சியின் காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயம் இல்லாத நிலையில் வேலையும் கிடைக்காத ஏழை எளிய மக்கள் பெரும் அவதிக்குள்ளா கியுள்ளனர். ஆகவே, அரசு இவர்கள்மீது கருணை கொண்டு அவர் களின் துயர் ஓரளவாவது நீங்கிட வழி செய்யும் வகையில் ஆடுகள் வளர்க்கவும், மாட்டுப் பண்ணைகள், கோழிப் பண்ணைகள் வைக் கவும் கடன் வசதிகள் மற்றும் மானியம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆடுகள் வளர்ப்பவர்கள் இப்பகுதியில் மேய்ச்சல் நிலங்கள் இல்லாத காரணத்தால், மேய்ச்சலுக்காக வெளி மாவட்டங்களுக்கு வெகு தூரம் ஆடுகளைக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, ஆடு வளர்ப்பவர்களின் சிரமங் களைக் குறைக்கும் வகையில், மேய்ச்சல் நிலங்களை ஏற்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து செயல்படுத்துமாறு கேட் டுக்கொள்கிறேன். கடலாடி தொகுதி முழுவதுமே பால் பற்றாக் குறை இருந்து வருகிறது. சாயல்குடி, கடலாடி, திருப்புள் ளாணி, ஏர்வாடி போன்ற ஊர்களில் கூட்டுறவு முறையில் பால் பண்ணைகள் ஏற்படுத்த ஆவன செய்வதன் மூலம், பால் பற்றாக் குறையை ஓரளவு நிவர்த்தி செய்ய இயலும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றினையும் இப்பகுதியில் ஏற் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சத்துணவுக்கு வழங்கப்படும் முட்டைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஏற் படுத்தப்படவிருக்கும் கோழிப் பண்ணைகள் அமைக்கும் திட்டத் திற்கு மிகப் பின் தங்கியுள்ள கடலாடி தொகுதிக்கு சில முன்னுரி மைகள் அளிப்பதன் மூலம் ஏழை எளிய மக்கள் வருமானம் பெற வழியமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்பகுதி மக்கள் கோழிப் பண்ணைகள் வைக்க கடன் உதவி மற்றும் மானியங்கள் அளிப்பதுடன் கோழி வளர்ப்பு பற்றிய பயிற்சி முகாமும் நடத்த

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மீனவர்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் எதுவுமே எனது தொகுதியில் இதுவரை செயல்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமும் தொகுதியில் செயல்படுத்தப்பட வில்லை. ஆகவே, பெரியபட்டணம் தொடங்கி வாலிநோக்கம் வரையிலான ஆயிரக்கணக்கான மீனவர்கள் பயன்பெறும் வகையில் இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மீனவர்கள் ஓய்வு எடுக்கவும், வலைகளைக் காய வைத்துப் பாதுகாக்கவும் மீனவர்களுக்கென ஓய்வு விடுதிகளை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவை களை நடப்பு நிதியாண்டிலேயே உடனடியாக நிறைவேற்றித் தந் தால் இப்பகுதி மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறை வேறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கீழக் கரை, பெரிய பட்டணம் வழியாக மண்டபம் போன்ற பகுதிகளில் இறால் பிடிக்கச் செல்லும் ராட்சத இயந்திரங்கள்-மீன்பிடிப் படகுகள் ஏழை மீனவர்கள் மீனுக்காகக் கடலில் விரித்து வைத் திருக்கும் வலைகளை சேதப்படுத்திவிட்டுச் சென்று விடுவதால், தங்களின் ஒரே சொத்தான வலைகளையும் இழந்துவிட்டு பரி தவிக்க நேர்வதோடு, மீனவர்களிடையே மோதல்கள் ஏற்படக் கூடிய அபாயகரமான சூழ்நிலை உருவாகிவிடவும் வாய்ப்பு இருக் கிறது. ஆகவே, அத்தகைய இயந்திரப் படகுகள் செல்லவேண்டிய வழியை வரை முறை செய்து தீவிர கண்காணிப்பு செய்து ஏழை மீனவர்களை பாதுகாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வசதியற்ற மீனவர்கள் வலை போன்ற மீன்பிடி உபகரணங்கள் வாங்குவதற்கு கடன் உதவியும், மானியமும் அளிப்பதோடு சங்கு குளிப்பவர்களுக்கு சாதனங்களை இலவசமாக அளிப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழக்கரையில் இறால் பதனிடும் நிலையம் ஒன்றை அரசே ஏற் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சங்கு குளிப் பவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் கடலில் மூழ்கி எடுக்கும் சங்குகளை அரசே நியாயவிலையில் கொள்முதல் செய்வதற்கு சங்குப் பொருட்களை தயார் செய்கின்ற தொழிற்சாலை ஒன்றை அரசு ஏற்படுத்துமானால் வெளி மாநிலங்களுக்குச் செல்லும் வரு வாய் நமக்கு கிடைப்பதோடு ஏராளமான மீனவர்களும் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சைனா கிராப்ட்ஸ் என்று சொல்லப்படும் கடல் பாசி இந்தியாவில் அதிகமாக கிடைப்பதால் அதற்கான தொழிற்சாலை ஒன்றை அமைத்து மீன்களை டின்களில் அடைக்கக்கூடிய தொழில் கூடம் ஒன்றை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். மீன் குஞ்சுகளை வளர்க்கும் திட்டத்தின்கீழ், கீழக்கரை, பெரியபட்டணம், வாலிநோக்கம் போன்ற ஊர்களில் மீன் பண்ணை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேற் கூறிய எனது கோரிக்கைகளை இந்த அரசு கருணையோடு கவ

ணித்து ஆவன செய்யும் என்ற நம்பிக்கையோடு இந்த வாய்ப்பை எனக்கு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் எனக்கு பேச வாய்ப்பை அளித்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பால் பண்ணையைப் பொறுத்தவரையில் நம்முடைய அமைச்சர் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இடத்திலே இருக்கிற பணி இது. மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பான முறையில் பணியாற்றுவார்கள் என நான் கருதுகிறேன். ஆனால் மின்சாரத் துறையை ஏற்று இருக்கின்ற அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்ற உடனே நாட்டில் எங்கு பார்த்தாலும் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டது. அதுபோல் சங்கடம் இதிலே ஏற்படாமல் சிறப்பான முறையில் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக பால்பண்ணையைப் பொறுத்தவரையில் எல்லா இடங்களிலும் சங்கங்கள் அமைத்து இருக்கிறோம். அந்த சங்கங்கள் செயல்படுகின்ற அளவில் பல்வேறு குறைகள், கோளாறுகள் நடக்கின்றன. அதையெல்லாம் நிவர்த்திச் செய்கின்ற அளவில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனது பகுதியில் செங்கமங்கலம், மவுடு ஊசி போன்ற பல்வேறு பகுதிகளில் எல்லாம் சங்கங்கள் அமைத்து கடன்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. கடனை வசூலிக்கின்ற நேரத்தில் அந்தக் கடனை வாங்கிய பார்ட்டி பணத்தை சங்கத்திலே கட்டிவிட்டார். ஆனால் சங்கத்தில் உள்ள பொறுப்பாளர், சங்கத் தலைவர் சங்கத்தினுடைய அந்தத் தொகையை வரவு வைத்து வங்கியில் பணத்தைக் கட்டாமல் அது ஓவர் டிய ஆக பர்மனென்ட்டாக இருந்து கொண்டிருக்கிறது. இப்படி பல்வேறு சங்கங்கள் தமிழகம் முழுவதும் குறிப்பாக என் பகுதியில் எல்லாம் இப்படி இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் அந்தப் பணத்தை சாப்பிட்டு விட்டு மொழி போட்டுவிட்டு மீண்டும் அந்த சங்கங்கள் இயங்க முடியாத அளவுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் எனது தொகுதிக்கு அடுத்த தொகுதியைச் சேர்ந்தவர். என்னுடைய பேராவூரணி தொகுதியில் உள்ள கால்நடை மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றியவர். அந்தப் பகுதிகளைப்பற்றி நன்கு தெரிந்தவர். ஆகவே அதை அவர்கள் குறித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதை சிறப்பான முறையில் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீன்வளத் துறையைப் பொறுத்தவரையில் நம்முடைய கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு அடுத்த தொகுதியைச் சார்ந்தவர், எங்கள் தொகுதியில் பணியாற்றியவர். ஆகவே கால்நடை மீன்வளம் எல்லாவற்றையும் நன்கு அறிந்தவர். இந்த அளவில் அவருக்கு நிறைய

விஷயங்கள் தெரிந்த காரணத்தால் நான் அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் ஒரு சில கருத்துக் களை நான் கூறி அவரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மீனவர்களுக்கு எல்லா இடங்களிலும் காலனிகள் கட்டித்தர வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகளை அரசுக்கு கொடுத்து இருக்கிறோம். ஆனால் சென்ற முறை அது சரியான முறை யில் செயல்படுத்த முடியாமல் வேண்டியவர்கள், வேண்டாத வர்கள் என்று எல்லாம் பாகுபாடு படுத்தப்பட்டு அங்கு நிரா கரிக்கப்பட்ட பல இடங்களைப்பற்றி எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அதற்கெல்லாம் மீன வர்கள் காலனிகள் கட்டித்தரவேண்டும். பொதுவாக பேரா வூரணி, கட்டுமாடியிலிருந்து அதிராமபட்டிணம் ஏரிப்புற கரை வரையில் உள்ள மீனவர்களுக்கு ஒருசில இடங்களில்தான் மீனவர்கள் காலனிகள் கட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் பல் வேறு இடங்களில் மந்திரிப்பட்டிணம், சோமநாதபட்டிணம் அல் லது கொள்ளுக்காடு போன்ற இடங்களில் அங்கே காலனிகள் கட்டவேண்டும். கொள்ளுக்காடு என்ற அந்த கிராமத்தில் அமைச் சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன், கிருத்துவர் களும், அரிசன மக்களும் அங்கே வாழ்கிறார்கள். அந்த மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் கிருத்துவர்களும், அரிசன மக்களும் சேர்ந்து இருக்கிறார்கள். அவர்களுக்காக 66 வீடுகள் அங்கே கட்டப்பட்டன. முன்னால் இருந்த அமைச்சர் அவர்கள் அதை கிருத்துவர்களுக்கு மட்டும் ஒதுக்கீடு செய்து சர்வாதிகார முறையில் நடவடிக்கை எடுத்து அந்த ஒரு இனத்தவருக்கு மட்டும் கொடுத்துவிட்டு அரிசன மீனவர்களுக்குக் கொடுக்கவில்லை.

(பிற்பகல் 12-10)

ஆகவே, அந்த மீனவர்களுக்கு, அரிசன மீனவர்களுக்கு தனி யாக காலனிகளை கட்டிக்கொடுக்கவேண்டும். இதனால் மிகப் பெரிய போராட்டம், எழுச்சி, ஏற்பட்டு மாவட்ட ஆட்சித் தலை வரெல்லாம் ஸ்பாட்டிலே வந்து பார்த்து அந்தப் பிரச்சினை களையெல்லாம் கேட்டு, நாங்களெல்லாம் அவர்களிடம், அந்த மீனவக் காலனியைக் கட்டித் தருகிறோம் என்று சொல்லியிருக் கிறோம். ஆகவே, தயவுசெய்து அமைச்சர் அவர்கள் அதில் தனிக் கவனம் செலுத்தி கொள்ளுக்காடு ஊராட்சியில், கொள் ளுக்காடு அரிசன மீனவர்களுக்கு தனியாக காலனி கட்டிக் கொடுத்து அந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அந்த மீனவர்கள் கட்டுமோடியிலிருந்து பட்டுக்கோட்டைக்கு மீன்களை எடுத்து வருகின்றார்கள். மீன், நண்டு, இரால் போன் றவைகளையெல்லாம் கடலோரப் பகுதிகளிலிருந்து கொண்டு வந்து அவைகளை பஸ்களிலே கொண்டு வருகிறார்கள். அப் படி கொண்டு வருகின்றபோது சாதாரணமாக பஸ்களிலே பிரயாணம் செய்கின்றவர்கள் அதை ஆட்சேபிக்கின்றார்கள்.

1989 மே 2] [திரு. ஆர். சிங்காரம்]

பஸ்களில் கொண்டு வரக்கூடாது. நாற்றம் அடிக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அவர்களால் அந்த மீன்களை கொண்டு செல்ல முடிவதில்லை. எல்லா பஸ்களிலும் ஏற்றாமல் நிராகரித்து விடுகிறார்கள். ஆகவே அவர்களுக்கென்று மீன் வளத் துறையிலிருந்தோ அல்லது போக்குவரத்துத் துறையிலிருந்தோ தனியாக ஒரு பஸ்ஸை கட்டுமோட்டிலிருந்து பட்டுக்கோட்டை வழியாக, மல்லிபட்டிணம், அதிராம பட்டிணம், ஏரிபுறக்கரை வழியாகச் செல்லுமாறு ஒரு பஸ்ஸை காலையியிலே விட்டால், மற்ற நேரங்களான, காலையிலும், மாலையிலும் மதியத்து நேரங்களிலும் இதர நேரங்களில் மற்றவர்கள் பிரயாணம் செய்வதற்கு சவுகரியமாக இருக்கும். ஆகவே தயவு செய்து மீனவர்களுக்கு மட்டும் தனியாக ஒரு பஸ் அமைத்துக் கொடுத்தால் அவர்களுக்கு மிகவும் சவுகரியமாக இருக்கும் என்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு இடங்களில் இன்னும் புயல் பாதுகாப்பு கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படவில்லை. பல இடங்களில், குறிப்பாக 6 இடங்களில் புயல் பாதுகாப்புக் கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று கோரினோம். மந்திரிபட்டிணம், சோமநாத பட்டிணம், புதுத்தெரு, கொள்ளுக்காடு, செந்தலைப்பட்டிணம், புதுப்பட்டிணம் போன்ற காலனிகளில் புயல்பாதுப்புக் கட்டிடங்களைக் கட்டித்தர வேண்டுமென்று கோரினோம். ஆனால் முன்னாள் இருந்த அமைச்சர், அவருக்கு ஜால்ரா அடித்தவர்களுக்கு மட்டும் போட்டுக் கொடுத்துவிட்டு ஏனையவர்களுக்கு அனுமதி வழங்கவில்லை. இங்கே இருக்கிற நம்முடைய அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் பணியாற்றியிருந்த காரணத்தினால், எங்கள் தொகுதியிலே நடந்த சர்வாதிகார நடவடிக்கையெல்லாம் அவருக்கு தெரிந்த காரணத்தினால் நான் இதைச் சொல்கிறேன். தயவுசெய்து, மறுக்கப்பட்ட, நிராகரிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, இப்படிப் பட்ட இடங்களையெல்லாம் பார்வையிட்டு, அந்த இடங்களிலெல்லாம் புயல்பாதுகாப்புக் கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர்களுக்கெல்லாம் கடன் வழங்குவதிலே இன்னும் பல்வேறு கஷ்டங்களை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். மீன் துறையிலிருந்து கடன் கொடுத்தால், ஒன்றியத்திலே தீர்மானம் போடவேண்டுமென்று சொல்கிறார்கள். மீன் துறை வேறு; ஒன்றியம் வேறு. ஒன்றியத்திலே பவர் பாலிடிக்ஸ் பண்ணுகிறார்கள். அங்கே, காங்கிரஸ் என்றால் திமுக-வுக்கு இல்லை; திமுக என்றால் காங்கிரஸ்-க்கு இல்லை; அண்ணா திமுக என்றால் காங்கிரஸ்-க்கு இல்லை; அண்ணா தி.மு.க என்றால் தி.மு.க-க்கு இல்லை என்ற உணர்வு மாறுபட்டு வருகிறது. ஆகவே இதை அரசு கண்காணிப்பிலே கொண்டு

வந்து, நேரடியாக மீன் துறையிலிருந்து கடன் வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று உங்களை நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. குடி தண்ணீர் என்று எடுத்துக்கொண்டால், இப்போது கடல் பகுதிகளிலே இருக்கின்ற மீனவர்களுக்கு குடிதண்ணீர் இல்லை. அவர்கள் குடிதண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கீழே தோண்டினால் உப்புத் தண்ணீர். என்ன செய்வது என்று தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். பில்டர் பாயின்ட் போடலாம் என்று பார்க்கிறோம். 30 அடி, 40 அடிக்கு எல்லா கிராமங்களிலும் ஒரு கிராமத்திற்கு, 5, 6 என்று பில்டர் பாயின்ட் போட்டால் 50 அடி, 60 அடிக்கு தண்ணீர் கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு தற்போது இருக்கின்ற வறட்சி நிலையிலே அவர்களைப் பாதுகாக்க முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதிராமபட்டிணத்திலிருந்து கட்டு மாடி வரையில் இரண்டு மிகப்பெரிய போர் வெல் போட்டிருக்கிறோம்.

உத்திரை சிந்தாமணி மேற்கு பகுதியிலே இருந்து தண்ணீர் கொண்டு வந்து கடல் பகுதியிலிருக்கக்கூடிய மீனவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கின்றோம். இன்னொன்று, வெந்தாமணிக் காட்டிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து, மல்லிபட்டிணம், புதுப்பட்டிணம் போன்ற ஏரியாக்களுக்கு தண்ணீர் கொடுக்கிறோம். இந்த பைப் சரியாக வேலை செய்யவில்லை. அங்கே பவர் போதவில்லை. தண்ணீர் கீழே இறங்கிவிட்டது. அதை உடனடியாக சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களோ அல்லது மீன் வளத் துறை அமைச்சர் அவர்களோ பார்வையிட்டு அதற்கென்று எமர்ஜென்சியாக ஒரு நடவடிக்கை எடுத்து அந்த மீனவர்களுக்குக் குடிப்பதற்கு தண்ணீர் கொடுப்பதற்கு, அவர்களைத் தண்ணீர் கஷ்டத்திலிருந்து காப்பாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கென்று இன்னும் பல்வேறு காரியங்கள் செய்யப்பட வேண்டும்.

காரங்குளாவிலே ஒரு நண்பர் இறந்துவிட்டார் என்று கேட்டவுடன் நம்முடைய அமைச்சர் அவர்கள் அங்கே ஓடோடி வந்து, அந்த மீனவ குடும்பத்தைப் பார்த்து ஆறுதல் சொன்னார்கள். 12, 13 வயது சிறுவன் ஒருவன் இறந்து விட்டான். இறந்துவிட்ட அந்த சிறுவனுக்கு அரசு உதவித் தொகை கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் நிதியிலிருந்து உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று நான் கோரி இருந்தேன். அதைப்பற்றி மனுவும் அனுப்பி இருக்கிறேன். அவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும். இதற்கெல்லாம் மேலாக, மீனவக் குடும்பத்திலே பிறந்த யாராக இருந்தாலும், எப்போது இறந்தாலும், எந்த வயதிலே இறந்தாலும் அனைவருக்

கும் அந்த உதவித் தொகை வழங்கப்படவேண்டும். ஏனென்றால், அவர்கள் பிறந்தது முதல் சாகின்ற வரையில், கடலிலேயே பிறக்கின்றார்கள்; கடலிலேயே வாழ்கின்றார்கள்; அந்தக் கடலிலேயே இறக்கின்றார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கின்ற அந்த மீனவ சமுதாயத்திற்கு நீங்கள் தயவு செய்து அப்படிப்பட்ட அந்த எல்லையை நிர்ணயிக்காமல், கூட்டுறவுச் சங்கத்திலே சேர்ந்தால்தான் அந்த உதவித் தொகையைப் பெற முடியும் என்ற அந்த நிர்ணயம் இல்லாமல், மீனவ சமுதாயத்தினர் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டும். அப்படி சேர்ந்துவிட்டுத்தான் இறக்கவேண்டும் என்று சொன்னால், சங்கத்திலே சேர்ந்துவிட்டு இறக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். சீற்றம் என்பது இயற்கையிலே வருவது. கடலுக்குப் போகின்றார்கள்; புயல் வீசுகிறது; படகு கவிழ்கிறது, கடலில் விழுந்து சாகிறார்கள். ஆகவே, இறந்தவன் சங்கத்திலே நான் உறுப்பினராகச் சேரவில்லையே, சேராமல் செத்துவிட்டோமே என்று மேலே சென்று நினைக்கின்ற அளவிற்கு நீங்கள் இடம் கொடுக்காமல் எல்லா மீனவர்களுக்கும் அந்த உதவித் தொகை கிடைப்பதற்கு நீங்கள் வழிவகைக் காணவேண்டுமென்று நான் உங்களை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். விவசாயத் தொழிலாளி என்று சொன்னால், விவசாயி வயலுக்குச் சென்று உழுவான். அதேபோல் தான் மீனவனும். அப்படிப்பட்ட சூழ்நிலையில், மீனவர்கள் பிறந்தது முதல், படகிலே கடலுக்குச் சென்று பயிற்சி கொடுத்து எப்படி கடலுக்குச்செல்வது, மீன்களை எப்படி பிடிப்பது, எப்படி படகைச் செலுத்துவது என்ற பயிற்சி ஆரம்பக் காலத்திலேயிருந்து அவர்களுக்கு அங்கே கொடுக்கப்படுகிறது.

அப்படி போகிற நேரத்தில் அவன் இறந்துவிடுகிறான். ஆகவே அவனுக்கும் நீங்கள் உதவித் தொகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்காலிகமாக முதலமைச்சர் நிதியிலிருந்து 15,000 ரூபாய் வழங்க முயற்சி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகளைப் பொறுத்தவரையில் எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசினார்கள். ஒரு மாடு எத்தனை கன்றுகள் போடுகிறது என்ற எல்லை உண்டா? அந்த மாடு எத்தனை கன்றுகள் போடுகின்றவரையில் ஆரோக்கியமாக இருக்கும் என்ற விவரங்கள் எல்லாம் நம்முடைய கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதிலே பல இடங்களில் தவறுகள் நடைபெறுகின்றன. நான் சொல்வது என்ன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். சில இடங்களிலே 20 கன்றுகள் போடுவதாக நான் கேள்விப்படுகிறேன். அது அமைச்சருக்குத் தெரியுமோ தெரியாதோ?

அடுத்து, கறவை மாடுகள் வாங்க லோன் கொடுக்கிறார்கள். ஒரு மாட்டுக்கு 20 தடவைகளுக்குமேல் லோன் கொடுக்கிறார்கள். அந்த மாட்டின் காதுகளைப் பார்த்தாலே எத்தனை லோன் கொடுத்திருக்கிறார்கள் என்பது தெரிந்துவிடும். இந்தக் காதில் 10 துளை, அந்தக் காதில் 10 துளை இருக்கிறது. ஒரு லோன் கொடுத்தவுடன் இந்தக் காதில் ஒரு துவாரம் போட்டால் இரண்டாவது லோன் கொடுக்கிறபோது அடுத்தக் காதில் ஒரு துவாரம் போடுகிறார்கள். மூன்றாவது லோன் கொடுக்கும் போது மீண்டும் முதல் காதில் ஒரு துளை போடுகிறார்கள். இப்படி 5, 6 7, 8 என்று ஓட்டைப் போட்டு இரண்டு காதுகளிலும் சேர்த்துப் பார்த்தால் 20 ஓட்டைகள் வரையில் போடப்பட்டிருக்கிற மாடுகளை நாம் பார்க்கலாம்.

ஒரு மாட்டின் பேரில் இத்தனை லோன்கள் எப்படி கொடுக்கிறார்கள் என்று நீங்கள் கேட்கலாம். பேராவூரணியில் ஒரு லோன் வாங்கினால் மீண்டும் அந்த மாட்டை பேராவூரணியில் காட்டினால் லோன் கொடுக்கமாட்டார்கள். அந்த மாட்டை புதுக்கோட்டையில் கொண்டுபோய் காட்டுகிறார்கள். அங்கே ஒரு காதில் ஒரு ஓட்டைப் போட்டுவிட்டு, காட்டுகிறவன் சுப்பிரமணியன் என்றால், சுப்பிரமணியனுக்கு லோன் கொடுக்கிறார்கள். அடுத்து இன்னொரு இடத்தில் அந்த மாட்டை இராமையா கொண்டுபோய்க் காட்டினால் மீண்டும் ஒரு துவாரம் காதிலே போட்டுவிட்டு, இராமையாவுக்கு லோன் கொடுக்கிறார்கள். அடுத்து, கந்தப்பன் போகிறான் என்றால் மேலும் ஒரு ஓட்டை போட்டுவிட்டு அவனுக்கும் லோன் கொடுத்துவிடுகிறார்கள். இப்படி எல்லாம் நடந்தால் மத்திய சர்க்கார் மானியம், தமிழ்நாடு சர்க்கார் எடுக்கிற முயற்சி இவைகளுக்கு என்ன பயன் கிடைக்கப்போகிறது? ஒரு கறவை மாட்டின் காதுகளிலே 20 ஓட்டைப் போட்டு லோன் கொடுக்கிறார்கள் என்றால் அந்தக் கறவை மாட்டை வாங்கிச் செல்கிற விவசாயிக்கு அதனால் என்ன பயன்? உண்மையில் அது பால் கறக்க வேண்டாமா; அந்த மாடு ஆரோக்கியமாக இருக்கவேண்டாமா? அந்த விவசாயி வாழ்க்கையில் முன்னேற வேண்டாமா? அந்த மாடு இந்த விவசாயி கறக்கின்ற மாடு என்று சொல்லுகின்ற அளவுக்கு நாம் எப்படி தெரிந்துகொள்வது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரமில்லை; நீங்கள் லோன் பற்றி விரிவாகப் பேசிவிட்டீர்கள்; முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : விரைவில் முடித்துவிடுகிறேன். என்னுடைய பேராவூரணி தொகுதியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை அனுப்பியிருக்கிறோம்.

திரு. அன்பில் பொய்யாமொழி : சார், பாய்ன்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் கறவை மாட்டிற்கு கடன் வழங்குவதில் தனக்கு உள்ள அனுபவத்தை இங்கே விவரிக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : கடன் வழங்குவதில் அல்லது வாங்குவதில் எனக்கு மட்டும் உள்ள அனுபவமில்லை. உங்களுக்கும் அந்த அனுபவம் இருக்கிறது. ஏன்? சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்குமே அந்த அனுபவம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். 'ஆக்ஷன் ஷூட் பி டேக்கன்' என்று சொல்வதற்காகத்தான் இவ்வளவையும் சொல்கிறேன். மாட்டை போய்ப் பார்த்தால் தெரியும். ஒவ்வொரு காதிலும் 10, 10 துவாரங்கள் இருப்பது நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீண்ட நேரம் பேசினால் Action will be taken against you.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, அருமை சகோதரர் சிங்காரம் அவர்கள், மாடுகளின் காதுகளில் பல துளைகள் போட்டு, தெரியாமல் கடன் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஏற்கனவே ஒரு துளை இருக்கும் போது, மேலும் பல துளைகள் போட்டு, எப்படி கடன் கொடுக்கிறார்கள் ? எப்படி 'சர்டிபை' பண்ணுகிறார்கள் என்று நான் கேட்கிறேன். ஏனென்றால் கடன் கொடுப்பவர்கள் எல்லாம் ஷெட்யூல்டு பாங்க். இந்த விவரம் அவர்களுக்குத் தெரியாமலா கொடுக்கிறார்கள் ?

திரு. ஆர். சிங்காரம் : கால்நடை உதவியாளர்கள், அது சம்பந்தப்பட்ட பாங்கில் இருக்கிற கடன் வழங்கும் உதவியாளர்கள், பஞ்சாயத்து யூனியனில் இருக்கிற அந்த உதவியாளர்கள், ஆக, இந்த மூன்று பேர்களும் சேர்ந்து கூட்டாக 'ரேட்' பேசி அந்த வேலையைச் செய்கிறார்கள். 5,000 ரூபாய் கடன் வழங்குகிறார்கள் என்றால் அதிலே 2,500 ரூபாய் ரேட் பேசி ஏற்பாடு செய்கிறார்கள். இதுதான் கடன் வழங்குவதிலே இருக்கிற 'கரப்ஷன்'. சாமிக்கு இது தெரியாதது அல்ல. இது ஒரு கூட்டு முயற்சி.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்டநேரமாகப் பொத்தாம் பொதுவாகக் குற்றச்சாட்டுகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொன்னால் நிச்சயமாக இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

(பிற்பகல் 12-20)

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு கிளாரிபிகேஷன் இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இல்லை. ஒரு தரம் ஓட்டை போடுவது எதற்காகப் போடுகின்றார்கள் என்று எனக்குத் தெரியவில்லை' இப்பொழுது. ஒரு தரம் ஓட்டைப் போடுகிறதே இது கடனுக்காக கொடுக்கப்பட்ட மாடு என்பதற்கான அடையாளம். அடுத்த ஓட்டை எப்படி அதிலே போடமுடியும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதெல்லாம் திரு. சிங்காரத்திற்குத்தான் தெரியும். உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் முடித்துவிடவேண்டும்.

**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து கொஞ்சம் நேரம் அனுமதியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டது நியாயமான கேள்விதான். சம்மந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் கேட்டது நியாயமானதுதான். நான் அதுதான் சொன்னேன். கூட்டு முயற்சியிலே கொள்ளையடிக்கின்ற முயற்சி நடந்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரும்பினால் பேராவூரணிக்கு வந்தால் மாட்டைக் காண்பிக்க வேண்டும் என்று சொன்னால் நான் மாட்டைக் காண்பிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படியிருந்தால், அது தவறு என்பதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்துவிடுவார்கள் என்று அந்த அதிகாரிகள் செய்யமாட்டார்களே. எப்படி சொல்கின்றார்கள்? அதற்குக் காரணம் என்ன என்பதையும் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லாம் திரு. சிங்காரத்தின் தூண்டுதல் தான்.

**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக நான் பல்வேறு வகையான புகார்களைக் கொடுத்திருக்கிறேன். மாடு, ஆடு எல்லாம் இன்னார் வாங்குகிறார்கள் என்ற புகார் கொடுத்திருக்கிறேன். ஆக்ஷன் எடுக்கவில்லை. உங்கள் சர்க்கார் ஏதோ தவறுகளைத் தட்டிக் கேட்கின்ற சர்க்கார் என்று சொல்கின்றார்கள். வாஸ்த்தவம். அதையெல்லாம் தட்டிக் கேட்டு அந்த மாதிரி லோனிலே தவறு நடக்காமல் இருக்க நீங்கள் ஆக்ஷன் எடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய பாலிசி.

1989 மே 2]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் ஒரு யோசனை கேட்கிறேன். அந்த மாதிரி ஓட்டைப்போட்டு அது தெளிவாகத் தெரிந்து 2, 3 ஓட்டைகள் இருந்து காண்பிக்கப்பட்டால் அதன்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ஒரு "லோன் ஸ்பெஷலிஸ்ட்".

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லோனைப் பற்றி சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியபடி அந்த குற்றங்களைப் பற்றி, சம்பந்தப்பட்ட மாடுகளைப் பற்றி, அது சம்பந்தப்பட்ட விவரங்களையெல்லாம் எழுத்து மூலமாக நானே எழுதி ஆதாரபூர்வமாக, நம்முடைய கால்நடைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்துக்கொள்கிறேன் என்று இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி நடவடிக்கை எடுக்கின்றபோது சம்பந்தப்பட்ட நண்பர் தி.மு.க. என்றால், அல்லது அ.தி.மு.க. என்றால் ஆக்ஷன் எடுத்துவிடுவார்கள், காங்கிரஸ் என்றால் ஆக்ஷன் எடுத்துவிடுவார்கள், தி.மு.க. என்றால் விவாதிக்கக் கூடாது என்பார்கள், அதையும் நான் சொல்லிக்கொள்கிறேன். அதனாலே யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேட்டுகொண்டு, முடித்துவிடுங்கள்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட மாடுகளோ, ஆடுகளோ, பல ஓட்டைகள் போடப்பட்டு இருக்கவேண்டும்.

திரு. ரெ. பிச்சைமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால், மீன்வளம், கால்நடை பராமரிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எங்களது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்

இன்றைய பால் வள உற்பத்தி திட்டத்தின்கீழ் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினர்களுக்கு பால், பாலாடைக் கட்டி போன்றவைகளை அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு அந்த பாலை ஈட்டுகின்ற அந்த மாடுகளுக்கு இன்று தீனி, அதாவது தீவன பொருள்கள்

இல்லாமல் இருப்பதை இந்த அரசு நன்கு கவனிக்கவேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் உறுப்பினர்களுக்கு மட்டும் பால் பாலாடைக்கட்டி அளிக்கின்றபோது, அந்த மாட்டு தீவனங்களுக்காக இந்த அரசு, அதாவது இங்கே தீவனங்கள் கிடைக்க வழியில்லை என்றாலும், அடுத்த மாநிலங்களில் இருந்தாவது பெற்று அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த தீவனப் பொருள்களை அளிப்பதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மற்றும் இந்த கால்நடை அபிவிருத்தியிலே மாடுகளுக்கு ஏற்படுகின்ற நோய் மிகவும் கொடூரமான நோயாக இருந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக வெக்கை என்கின்ற நோய் இங்கே பரவி மாடுகள் அதிகமான அளவில் இறக்க நேரிடுகிறது. அந்த நோய்க்கு சிகிச்சைக்கு கால்நடை மருத்துவர்களிடத்திலே சென்றால், சரியான அளவில் மருந்துகள் அளிக்கப்படுகின்ற அளவுக்கு மருந்துகள் கிடைப்பது கிடையாது. குறிப்பாக ஒரு மருந்தகத்திலே 2 ஆயிரம் ரூபாய்க்குத்தான் மருந்து அளிக்கப்படும் என்ற விதிமுறை இருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். அந்த இரண்டாயிரம் ரூபாய்க்குள்ள மருந்துகள் கூட கால்நடைகளுக்கு சரியான முறையில் வழங்கப்படுகிறதா என்றால், அங்கே விவசாயிகள் தங்களுடைய கால்நடைகளை ஓட்டிச் செல்கின்றபோது; மருந்து இல்லை என்று கூறுகின்ற சூழ்நிலை தான் ஏற்படுகிறது. காரணம் கால்நடைக்கு மருத்துவ உதவி சென்று கேட்கிறபோது, மருந்தகத்திலே மருந்து இல்லை என்று சொல்லி வெளியிலே இருந்து வாங்கிக் கொண்டு வந்தால்தான் அந்த கால்நடையைப் பராமரிக்கக்கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அந்தந்த கால்நடை மருந்தகத்திலேயே கிடைக்கச் செய்ய குறைந்த பட்சம் ரூ. 5,000 மதிப்புள்ள மருந்துகளையாவது அளிக்க அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் நம்முடைய தமிழக அரசு விவசாயிகளை அதிகமாக நம்பிக் கொண்டிருக்கின்ற அரசு. இந்த நேரத்தில் விவசாயிகள் உபயோகப்படுத்திக்கொண்டிருக்கின்ற கால்நடைகளுக்கு சரியான பராமரிப்பு வசதியை வழங்க வேண்டுமென்ற காரணத்தினால்தான் இந்த நற்செய்தியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக ஒவ்வொரு யூனியனிலும் நடமாடும் கால்நடை மருந்தகத்தை அவசியமாக அமைத்துத் தர வேண்டும். காரணம், விவசாயிகள் தங்களுடைய கால்நடைகளை ஓட்டிக் கொண்டு வந்து, அந்த கால்நடை மருந்தகங்களில் மருத்துவம் செய்ய முடியாத அளவுக்கு கால்நடைகள் நோய்வாய்ப்பட்டிருக்குமானால், அந்த இடங்களுக்கு நடத்திச் செல்வது ரொம்பவும் கஷ்டம். எனவே அதற்காக சிறப்பான திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்து, நடமாடும் கால்நடை மருந்தகங்களை ஒவ்வொரு வட்டத்திலும் அமைத்து, சிறந்த முறையில் பணியாற்றுமளவுக்கு முழு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே தெள்ளத் தெளிவாக இந்த அரசை வற்புறுத்தி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மீன்வளத் துறையைப் பொறுத்தவரையில், குறிப்பாக இங்கே இருக்கின்ற கடற்கரை ஓரப் பகுதிகளில் நிறைய இடங்களை முதலாளி வர்க்கங்கள் ஆக்குபை செய்து கொண்டு, அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையை மாற்றி, மீனவர்களுக்கென்று சிறப்பான இல்லங்கள் அமைத்து, மீன் வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்ற இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதே சமயத்தில் மீனவர்களுக்கு சில சலுகைகளை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பால் வளத் துறையைப் பொறுத்தவரையில், 10,000 தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கப்படுமென்று சொல்லிய தமிழக அரசின் இன்றைய நிலை என்ன என்பது புரியவில்லை. இன்றைக்கு அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு மாதவரம் பால் பண்ணையில் பணி புரிந்து அந்தத் தொழிலாளர்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த 10,000 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது எந்த நிலைமையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன். இதுவரையில் 288 பேர்கள்தான் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். பாக்கி உள்ள தொழிலாளர்களுடைய நிலைமை என்ன என்பது பற்றி அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீன் வளத் துறையைப் பொறுத்தவரையில் சிறப்பான சலுகைகளை அவர்களுக்கு அளித்து, கடலுக்குச் சென்று மீன் பிடிக்கும் மீனவர்களின் நிலைமைகளை உயர்த்த ஆவன செய்ய வேண்டும். கடலிலே பிறந்து, கடலிலே வளர்ந்த அந்த மீனவர்கள் கடலிலேயே இறக்கிறார்கள் என்ற நிலை மாற்றப்பட்டு, அவர்களுக்கு ஒரு உத்தரவாதத்தை அரசு அளிக்க முன் வர வேண்டும்.

அடுத்து கால்நடை வளர்ச்சி. குறிப்பாக ஆடு வளர்ச்சியில் மிகவும் முக்கியத்துவம் செலுத்த வேண்டும். குறிப்பாக இறைச்சிக்காக ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. இன்றைக்கு கூடுமான வரையில் ஒவ்வொரு நபரும் அன்றாட வாழ்க்கையில் உபயோகிப்பது ஆட்டு மாமிசம், ஆட்டுக் கறி. எனவே கால்நடை அபிவிருத்திக்காக வேண்டிய எல்லா உதவிகளையும் விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கி, அவர்களுக்கு கடன் உதவி வழங்கி ஆடு வளர்ப்புக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து கால்நடை அபிவிருத்தியோடு கோழி அபிவிருத்தி பற்றி கூற விரும்புகிறேன். இன்றைக்கு தமிழக அரசு சத்துணவுக் கூடங்களில் குழந்தைகளுக்கு முட்டை வழங்கும் நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கும் இந்த நேரத்தில் தனியாரிடம் முட்டைகளை வாங்கு

வதைவிட, அரசுத் துறையில் ஆங்காங்கு கோழிப் பண்ணைகள் அமைத்து அதன் மூலம் அபிவிருத்தி செய்தால் நல்ல உதவியாக இருக்கும். அதனால் நிறைய இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது). துணைத் தலைவரவர்களே, 2 நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன்.

கோழி அபிவிருத்தியைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டிலே நாமக்கல்லில்தான் அதிகம். துணைத் தலைவர் அவர்களுடைய சொந்த ஊராக இருக்கும் அந்தத் தொகுதியில் அதிக பட்ச தனியார்கள் கோழிப் பண்ணைகள் வைத்து, நல்ல லாபத்தைப் பெற்று வருகிறார்கள். அப்படிப்பட்ட கோழிப் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய முழு முயற்சிகளை இந்த அரசு எடுத்து, எல்லா இடங்களிலும், தமிழகம் முழுவதிலும் கோழிப் பண்ணைகளை உருவாக்க ஒரு சிறப்பான திட்டத்தை ஏற்படுத்தி, அதிலே நிறைய இளைஞர்களுகளுக்கு வேலை வாய்ப்பு அளித்து, அதன் மூலம் அரசுக்கு அதிக லாபத்தை ஈட்ட வேண்டுமென்று கருத்து தெரிவித்து, பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன், வணக்கம்.

(பிற்பகல் 12–30)

*திரு. வே. கணேசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தானைத் தலைவரும் தன்மானத் தலைவரும், இன உணர்வு கொண்ட தலைவரும், தமிழகத்திலே வாழ்ந்துக் கொண்டிருக்கிற $4\frac{1}{2}$ கோடி மக்கள் மட்டுமல்லாமல் உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழனுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்துக்கொண்டிருக்கிற ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், கல்வி என்னும் கடலிடையே கசடு என்ற படகு ஓட்டி, அறிவு என்னும் கரைசேர்க்கும் அவை முன்னவர் அவர்களுக்கும் முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த, மங்களூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

இங்கே இன்று சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற பால் வளத்துறை மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டிருக்கிற பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வழங்கப்படுகிற கடன்கள் அனைத்தும் உரிய நபர்களிடம் முறையாகச் சென்று சேருவதில்லை. அந்தப் பால் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் தலைவர்களாக இருப்பவர்கள் ஆசிரியர்களாகவும், பிற தொழில் செய்

1989 மே 2] [திரு. வே. கணேசன்]

பவர்களாகவும் இருக்கிற காரணத்தால் அங்கே தில்லுமுல்லுகள் நடைபெற்று ஏழை எளிய மக்களுக்கு அந்தக் கடன்கள் சென்று சேருவதில்லை. எனவே சிறு விவசாயிகள், நிலமற்ற ஏழைகள் ஆகியோருக்கு அந்தக் கடன்களை வழங்கினால் பால் வளத்தைப் பராமரிக்கிற வகையில் அவர்கள் அதை ஒரு தொழிலாகக்கொண்டு செயல்படுவார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள எல்லா பால் வழங்கு கூட்டுறவு சங்கங்களும் நசித்துப் போய் விட்டன. காரணம், வறட்சி. வறட்சி காரணமாக எல்லா கிராமங்களிலும் கால்நடைகள் சென்று தங்களுக்குத் தேவையான தீவனத்தைத் தேடிக் கொள்ள முடிவதில்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ அல்லது பால் வழங்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ கால்நடைகளுக்குத் தேவையான தீவனத்தைக் குறைந்த விலையில் அளித்தால் கால்நடைச் சொந்தக்காரர்கள் நல்ல வகையில் அந்தச் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதைப் போலவே, கால்நடைகளைப் பெருக்குவதற்கு ஒவ்வொரு ஒன்றியத்திலும் நடமாடும் மருத்துவ வசதியை ஏற்படுத்தி எல்லா கிராமங்களுக்கும் மருத்துவர்கள் சென்று சிறிய விவசாயிகள் மற்றும் ஏழை எளிய மக்கள் வளர்க்கின்ற கால்நடைகளுக்கு அரசு தரப்பிலிருந்து உதவி அளித்தால் நலமாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பல்வேறு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ஆடு வளர்ப்பதற்காக ஆடுகள் வாங்கிக் கொடுத்து அதன் மூலமாக அரசின் மானியம் அளிக்கப்படும் என்று சொல்லி அந்த மானிய உதவித் தொகை கடந்த பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் மா. புடையூர், தொழுதூர் போன்ற பல்வேறு கிராமங்களில் உள்ள விவசாயிகள் அத்தகைய கடன்களைப் பெற்றும் மானியத் தொகை இன்னும் அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிற நிலை இருக்கிறது. எனவே அந்த மானிய உதவித் தொகையை உடனடியாக அந்த ஏழை எளிய மக்களுக்கு அளிப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள பல்வேறு குறைகளையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியில் வெலிங்டன் ரிசர்வாயர் என்ற ஏரி இருக்கிறது. அந்த ஏரியின் மூலமாக 40,000 ஏக்கருக்கு மேல் விவசாயிகள் பயன் பெற்று வருகிறார்

கள். ஆனால் கடந்த 3 ஆண்டுக் காலமாகப் பயன்படாத நிலையில் அந்த ஏரி இருக்கிறது. காரணம் வறட்சி. வறட்சி காரணமாக மழை பெய்யாததன் காரணமாக—அந்த ஏரி பல ஆண்டுகளாக ஆழப்படுத்தப்படாமல் இருக்கிறது. எனவே பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு முக்கியத்துவம் அளித்து அந்த ஏரியை ஆழப்படுத்தித் தர வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே என்னுடைய தொகுதியில் அருணா சர்க்கரை ஆலையும் மற்றும் பெரம்பலூர் தாலுக்காவில் உள்ள நேரு சர்க்கரை ஆலையும்—இரண்டுமே—சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த ஆலைகளில் இருந்து கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு தொழுதூரில் ஒரு காகிதத் தொழிற்சாலையை அமைக்க வாய்ப்பாக இருக்கிறது. தொழுதூருக்கு அருகே வெற்றாறு செல்வதால் நீர் வசதியும் அங்கே நல்ல நிலையில் இருக்கிறது. எனவே அந்தப் பகுதியில் ஒரு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த காலத்தில்—நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் முந்தைய ஆட்சியில்—என்னுடைய தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதி என்ற காரணத்தால் இதற்காக ரூ. 1 1/4 கோடி ஒதுக்கீடு செய்து,—ஒரு பைலெட் ஸ்கீமாக—ஒரு தனி ஸ்கீமாக ஏற்பாடு செய்து அப்போது எல்லா சாலைகளையும் செம்மைப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் கடந்த 12 ஆண்டுக் காலமாக அந்தச் சாலைகள் எல்லாம் பராமரிக்கப்படாமல் குண்டும் குழியுமாக காணப்படுகின்றன. இதன் காரணமாக தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பேருந்துகள் அந்தப் பகுதியில் எந்த இடத்திற்குமே செல்ல முடியாத நிலை இருக்கிறது. எனவே விரைவில் அந்தச் சாலைகளையெல்லாம் உடனடியாகச் செம்மைப் படுத்தித் தர வேண்டுமென்றும்—அரசு அதற்கான முழு முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள எல்லா காலனி கிராமங்களிலும் நத்தம் புறம்போக்கு பகுதிகளிலே வாழுகின்ற காலனி மக்களுக்கு பட்டா இல்லாத காரணத்தால் அரசு இலவசமாகக் கட்டிக் கொடுக்கின்ற வீடுகள் கிடைக்காத நிலை ஏற்பட்டு இருக்கிறது. எனவே உடனடியாக அந்த காலனிப் புறங்களில் வாழ்ந்துக் கொண்டிருக்கிற எல்லா மக்களுக்கும் பட்டா கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

1989 மே 2] [திரு. வே. கணேசன்]

அடுத்து என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட நம்முடைய ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மாவட்ட ஆட்சியரையும், குடிநீர் வடிகால் துறை அதிகாரிகளையும் அணுகி வறட்சியின் காரணமாக எல்லாப் பகுதிகளிலும் நீர் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கின்ற காரணத்தினால் அதை நீக்க வேண்டுமென்று பல முறை சொல்லியும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப் படாமல் இருக்கின்றது. எனவே பல்வேறு கிராமங்களில் மக்கள் குடிநீர் தொல்லைக்கு ஆளாகி குடங்களைத் தூக்கிக் கொண்டு காடு காடாக அலைந்து கொண்டிருக்கிறார்கள். காரணம் 150 அடி போர் போட்டாலும் கூட தண்ணீர் கிடைக்கவில்லை. காரணம், நெய்வேலியில் என்.எல்.சி. மூலமாக நீர் வெளியேற்றப் படுகின்ற காரணத்தால் அந்தப் பகுதியில் இருக்கிற கிராமங்களுக்கு நீர் கிடைப்பதில்லை. எனவே தனியாக நெய்வேலியிலிருந்து மேற்கு புறத்திலுள்ள கிராமங்களுக்கு குடிநீர் கிடைக்க அரசு உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மங்களூர் தொகுதி பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டிலே எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களுடைய தொகுதி தான் பின்தங்கிய தொகுதி என்று குறிப்பிடுகிறார்கள். ஆனால் மங்களூர் தொகுதியைப் பொறுத்தமட்டில் அது தான் மிக மிக பின்தங்கிய தொகுதியாக இருக்கின்றது. எனவே எல்லா வகையிலேயும் அந்தத் தொகுதியை மேம்படுத்த இந்த அரசு முழு முயற்சி எடுத்துக் கொண்டு அங்கு ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், மங்களூர், தொழுதூர், திட்டக்குடி போன்ற இடங்கள் சிறு நகரங்களாக இருந்தாலும் அந்தப் பகுதிகளில் படித்த இளைஞர்கள் எந்தவித வேலை வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். அங்கு தொழிற்சாலையும் இல்லை. எனவே மங்களூர் போன்ற இடங்களில் பரந்த இடங்கள் காட்டுப் பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால் அங்கு ஏதாவது ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்தித் தர இந்த அரசு ஆவன செய்து அந்தப் பகுதி மக்களுக்கு நல்லதொரு நிலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

*திரு. கே. ஏ. மணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பால் வளம் பெருகி தன்னிறைவு அடைந்து இருக்கும் நிலை ஏற்பட்டு இருக்கின்றது என்று சொன்னால், குஜராத் மாநிலத்திலுள்ள அமுல் பால் நிறுவனத்தினுடைய செயல்முறையை முன் மாதிரியாகக் கொண்டு நாம் செயல்பட்ட காரணத்தினால்தான் இந்த நிலைக்கு தமிழகத்தில் பால் வளத் திட்டம் செயல்பட்டு இருக்கின்றது என்று சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன். குறிப்பாக தேசிய பால்வள நிறுவனம் இந்த 3 பால் பெருக்குத் திட்டங்களுக்காக சுமார் 110 கோடி ரூபாயை நமக்குக் கடனாகவும், மானியமாகவும் வழங்கி இருக்

கின்றது. இந்த தேசிய பால் வள நிறுவனத்தின் தலைவரும், இந்திய பால்வள வாரியத்தின் தலைவருமான இன்று பொறுப்பில் இருக்கின்ற மரியாதைக்குரிய டாக்டர் குரியன் அவர்களுக்கு, பால் உற்பத்தியாளர்கள் சார்பாக இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு கிராமங்களிலே இருக்கிற பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் மூலமாக சுமார் 17 இலட்சம் உறுப்பினர்கள் பால் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் 17 இலட்சம் உறுப்பினர்களும் சேர்ந்து 13 இலட்சத்து 29 ஆயிரம் லிட்டர் பாலைத்தான் அவர்கள் உற்பத்தி செய்ய முடிகின்றது. எனவே இந்த பால் உற்பத்தியிலே ஈடுபட்டு இருக்கின்ற அத்தனை பால் உற்பத்தியாளர்களுமே மிகவும் ஏழ்மையான நிலையிலே இருக்கிறார்கள் என்பதைத்தான் இது உறுதிப்படுத்துகிறது. குறிப்பாக பால் உற்பத்தியாளர்களின் கணக்கையும், உற்பத்தி செய்யப்படுகின்ற பாலின் அளவையும் பார்க்கும்போது சராசரியாக ஒரு உற்பத்தியாளர் முக்கால் லிட்டர் பாலைத்தான் உற்பத்தி செய்வதாக இருக்கின்றது. ஒரு சில பெரிய விவசாயிகள் தவிர மற்ற அனைத்து உற்பத்தியாளர்களுமே தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்காக குறிப்பாக இப்படி வறட்சியான நேரங்களில் எல்லாம் குடும்பத்துக்கு ஒரு கறவை மாட்டை வைத்து அதன் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற பாலினுடைய கொள்முதல் விலையில்தான் அவர்களுடைய குடும்பச் செலவுகளை அவர்கள் செய்து கொள்ள முடிகின்றது. இப்படி ஏழ்மை நிலையில் இருக்கின்ற இந்த பால் உற்பத்தியாளர்களுக்கு அவர்களுடைய உற்பத்தி பொருட்களினுடைய விலையை நிர்ணயிக்கும் உரிமை அவர்களிடத்தில் இல்லாமல் இருக்கின்றது.

(பிற்பகல் 12-40)

அவர்களுக்கு மட்டுமல்லாமல், விவசாயிகளினுடைய எந்த ஒரு பொருளுக்குமே அந்த உற்பத்திச் செலவின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படும் நிலை இல்லாமல் இருக்கிறது. ஒவ்வொரு முறையும் பால் உற்பத்தியாளர்கள், பால் நிறுத்தப் போராட்டத்தின் மூலம் தங்களுடைய உற்பத்திப் பொருளான பாலுக்கு விலையைப் பெற்றுக் கொள்ளமுடிகிறது.

இந்த அடிப்படையிலே கடந்த 1988ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலே நடத்திய பால் நிறுத்தப் போராட்டத்திலே அன்றிருந்த கவர்னருடைய ஆலோசகர் அவர்கள், ஒரு கிலோ கொழுப்புச் சத்துள்ள பாலுக்கு 58 ரூபாய் என்று உயர்த்தி, இன்னும் 2 ரூபாயை 1989 ஏப்ரல் மாதத்தில் உயர்த்திக்கொடுக்க இருக்கிறோம் என்று ஒரு உடன்பாடு செய்திருக்கிறார்கள். அன்று, நம்முடைய இன்றைய மாண்புமிகு முதல்வரவர்கள், பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் கொடுக்கின்ற வகையில், பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு லிட்டருக்கு ஒரு ரூபாய் வழங்கப்பட வேண்டுமென்றும், பால் உற்பத்தியாளர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றும் அறிக்கை கொடுத்

திருந்தார்கள். ஆனால், அன்று ஒரு லிட்டருக்கு 50 பைசா மட்டுமே விலை உயர்வு கொடுக்கப்பட்டது. இன்று முதல்வரவர்கள் பால் உற்பத்தியாளர்களுடைய பொருளாதாரத்தைக் கருத்திற்கொண்டு, அந்த ஏழை பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு மேலும் 50 பைசா உயர்த்திக் கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சரவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இன்று கொள்முதல் செய்யப்படும் பாலினுடைய விலை, 4.5 கொழுப்புச் சத்தும், 8.5 இதரச் சத்துக்களும் உள்ள பாலுக்கு, உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் விலை, எருமைப் பாலுக்கு ரூபாய் 2.61 பைசாவும், பசும்பாலுக்கு, அதே அளவு கொழுப்புச்சத்துள்ள, 4.5 கொழுப்புச் சத்தும், 8.5 இதர சத்தும் உள்ள பாலுக்கு ரூ. 3.64 பைசாவும் வழங்கப்படுகிறது. ஆனால், அதே 4.5 கொழுப்புச் சத்துள்ள பால் விற்பனை செய்யப்படும்பொழுது ரூபாய் 5-லிருந்து ரூ. 5.20 வரையிலும் இங்கே விற்கப்படுகிறது. ஆகவே, ஒரு லிட்டரிலே கொள்முதல் செய்வதற்கும், விற்பனை விலைக்கும் இடையிலே இருக்கின்ற இலாபம் சுமார் 1 ரூபாய் 80 பைசா வரையிலும் ஒரு லிட்டருக்கு இலாபம் இருக்கிறது. இந்த இலாபத்தைக் கணக்கிட்டுப் பார்த்தோமேயானால், ஒரு நாளைக்கு 12,29,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட சுமார் 80 கோடி அளவிற்கு இந்த 17 இலட்சம் பால் உற்பத்தியாளர்களால் தமிழக அரசுக்கு இலாபம் கிடைக்கிறது. எனவே, இந்த 50 பைசாவைக் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது சுமார் 20 கோடி அளவில்தான் இந்த இலாபத்திலே குறைவு ஏற்படும் என்பதைக் கருத்திலே கொண்டு, ஒரு லிட்டருக்கு 50 பைசாவை அரசு உடனடியாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கும் கிராமச் சங்கங்களிலே கிடைக்கின்ற இலாபத்தைத் தணிக்கை செய்து ஒவ்வொரு பிரிவாகப் பிரித்து, அதிலே கூட்டுறவு வளர்ச்சி நிதி என்றும், கட்டிட நிதி என்றும் மற்றும் பல தலைப்புகளிலே அந்தப் பணத்தை நிறுத்தி வைக்கின்றார்கள். பால் உற்பத்தியாளர்களுக்குப் போனஸ் கொடுத்தது போக மீதம் இருக்கின்ற பணத்தை அந்த உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்குப் பயன்படும் வகையில் குறிப்பாக இன்றைக்கு ''குஜராத்திலே இருக்கின்ற ஆனந்த் பால் பண்ணையிலே, அங்கே இருக்கின்ற அத்தனை சங்கங்களிலேயும், கிராமத்திலே இருக்கின்ற சங்கங்களிலேயும் பெரிய கட்டிடங்களையும், அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் அமைத்து, அவர்களுக்கு என்று சரியான நிகழ்ச்சிகளை ஒளி பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கிராமங்கள் முழுக்க இந்தப் பால் உற்பத்தித் தொழிலையே அடிப்படையாகக் கொண்டு, நல்ல முறையிலே தங்களுடைய பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ள வாய்ப்பாக இருக்கிறது. அதைப்பேலவே இங்கே இருக்கின்ற கிராமச் சங்கங்களிலேயிருந்து, ஒன்றியத்திற்கு ஷேர் டெபாசிட்

டாக, பங்குத் தொகையாக இந்தக் கிராமச் சங்கங்களிலேயிருந்து கொடுக்கப்பட்ட பணத்தையெல்லாம் கடந்த ஆறு ஆண்டுக்காலமாக ஒன்றியத்திலேயிருந்து, திரும்ப இலாபப் பிரிவினை என்பது இதுவரை கொடுக்கப்படாமல் இருக்கிறது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஆறு ஆண்டுக் காலமாக கூட்டுறவுச் சங்கங்களின் பங்குத்தொகைக்கு ''டிவிடெண்ட்'' வழங்கப்படாமல் இருக்கிறது. இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் இலாபத்தில் பங்கு பெற்று கொடுக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு உலக வங்கியிலிருந்து மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்திற்கு சுமார் 68 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். இந்த 68 கோடி ரூபாயும் இதுவரையில் சில நிபந்தனைகளுக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. குறிப்பாக கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கும், இணையத்திற்கும் தேர்தல் நடத்த வேண்டும். தேர்தல்கள் நடந்த பிறகுதான் இந்த 68 கோடி ரூபாய் கொடுக்க முடியும் என்பதைப் போல நிலை இருப்பதாகத் தெரிகிறது. எனவே, கிராமச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தி, முடிக்க இருக்கிற இந்த நேரத்தில், மாவட்ட ஒன்றியங்களுக்கும், இணையத்திற்கும் தேர்தலை நடத்தி இந்த 68 கோடி ரூபாயை கூடிய விரைவில் பெற்றுத் தர வேண்டும். குறிப்பாக பெரியார் மாவட்டத்தில் 30 ஆயிரம் டன் பால் பவுடர் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை தொடங்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை கூடிய விரைவில் முடிக்கப்பட்டால்நான் வரவிருக்கிற காலங்களில் இன்னும் அதிகமாக கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்து, அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பால் தேங்கியிருந்தால பால் பவுடராக மாற்றி வைத்துக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே, இந்த பால் பெருக்கு திட்டத்திற்கு உலக வங்கி உதவி கூடியவிரையில் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) குறிப்பாக கூட்டுறவு மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் அங்கே உற்பத்தி செய்யப்படுகிற பால் பவுடர் மற்றும் வெண்ணெய்யை விற்பனை செய்வதற்கான அதிகாரம் கூட்டுறவு இணையத்திற்கு இருக்கிற காரணத்தால் இன்றைக்கு அங்கே சுமார் நான்கு கோடி ரூபாய் அளவிற்கு, பெரியார் மாவட்டத்தில் இருக்கிற சித்தோடு பால் பண்ணையில் வெண்ணையும், பால் பவுடரும் தேங்கியுள்ள நிலை இருக்கிறது. மேற்கொண்டு உற்பத்தி செய்யப்படுகிற பவுடரையும், வெண்ணையும் வைத்துக் கொள்வதற்குக்கூட இடம் இல்லாத அளவிற்கு அங்கே விற்பனை தாமதப்பட்டு வருகிறது. இதை உடனடியாக விற்று கூட்டுறவு கிராமச் சங்கங்களுக்கு இலாபத்தில் பங்கு தொகையை எல்லாம் கொடுப்பதற்கு முன் வர வேண்டும்.

கடந்த 40 நாட்களாக பால் பணம் பட்டுவாடா செய்யப்படாத நிலை கிராமங்களில் இருக்கிறது. கிராமங்களில் பொது நிதியில் பணம் இருப்பவர்களுக்கு, பால் உற்பத்தியாளர்களுக்கு

1989 மே 2] [திரு. கே. ஏ. மணி]

பணம் வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நிதிநிலை மோசமாக இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கிற பால் உற்பத்தியாளர்களுக்கு பணம் வழங்க இயலாத ஒரு நிலை இருக்கிறது. அதனால் தனியார் வியாபாரிகள் பால் உற்பத்தியாளர்களை தங்கள் பக்கம் இழுத்துக் கொள்கிற நிலை அங்கே கிராமங்களில் இருந்து கொண்டிருக்கிறது. பால் உற்பத்தியைப் பொறுத்தவரையில் பால் உற்பத்தியாளர் சங்கங்களை நாம் பேணி வளர்ப்பதன் மூலம் தான் கூட்டுறவு இணையமும், கூட்டுறவு ஒன்றியமும் செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கால் நடை பராமரிப்பைப் பொறுத்த வரையில் இன்றைக்கு கிராமங்களில் இருக்கிற ''சப்-சென்டர்ஸ்'' கிளை நிலையங்களில் காலையில் மட்டும்தான் அங்கேயிருக்கிற வெடர்னரி ஸ்டாப் வந்து செல்கிறார்கள். மாலையில் அங்கே வருவதில்லை. அவர்கள் மாலையிலும் கிளை நிலையங்களுக்கு வருகை தர ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கால்நடை மருத்துவர்களைப் பொறுத்தவரையில் நீண்ட காலமாக அவர்கள் ஊதியம் மனித டாக்டர்களுக்குக் கொடுப்பதைப் போல உயர்த்திக் கொடுக்க கோரி வருகிறார்கள். பணியில் சேர்ந்து 20, 25 ஆண்டுகளான மருத்துவர்கள் கூட எந்தவிதமான பதவி உயர்வும் இல்லாமல் இருக்கிறார்கள். அதை மாற்ற வெடர்னரி செண்டர்கள் சிலவற்றை, முக்கிய இடங்களில், பெரிய இடங்களில் இருக்கிற மருத்துவ நிலையங்களை ''அப்-கிரேடாக்கி'' அந்த இடங்களுக்கு அவர்களைப் பதவி உயர்வு அளித்து நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

(பிற்பகல் 12-50)

கிராமங்களில் இருக்கிற கால்நடை டாக்டர்கள் கிராமங்களில் உட்பகுதிகளுக்குச் சென்று வருவதற்கான வாகன வசதி இல்லாமல் இருக்கிறது. அதைச் செய்து கொடுக்க வேண்டும். கிராமங்களில் ஓரளவிற்குத் தொலைபேசி வசதி இருக்கிற காரணத்தால், அந்த மருத்துவமனைகளில் தொலைபேசி அமைத்துக் கொடுத்தால், மருத்துவர்களை அழைப்பதற்கும், உடனடியாக தேவையான மருத்துவ உதவிகளைப் பெற டாக்டர்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்பாக இருக்கும். அதேசமயத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற கால்நடைகள் விரிவாக்க அலுவலர்களை, கால்நடை வட்டார வளர்ச்சி அதிகாரிகள் என்று சொல்லி, அவர்கள் தனித்து இயங்குவதற்கும், அந்த டாக்டர்கள் மூலமாக ஊராட்சிப் பகுதியிலே கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி போடுவதற்கும் மேலும், சிறுசிறு மினிடயரிகளையும், கோழிப்பண்ணைகளையும் அமைப்பதற்கும், அவர்கள் மூலமாக ஐ.ஆர்.டி.பி. திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அதே போல் கால்நடைத் தீவனம் பற்றாக்குறை இந்த வறட்சிக் காலத்திலே என்றும் இல்லாத அளவில் இருக்கிறது. இந்தியாவிலே 3 மாநிலங்களிலேதான் கால்நடைத் தீவனத்திற்கு வரி விதிக்கிறார்கள். அதிலே நம்முடைய தமிழகம் மட்டும் 5 சதவீதம் விற்பனை வரி விதிக்கிறது. ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களில் ஒரு சதவீதம்தான் விற்பனை வரி விதிக்கிறார்கள். மற்றைய மாநிலங்களிலே வரி விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, இந்த அரசு கால்நடை தீவனத்திற்கு வரி விலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் பண்ணைகளில் உள்ள பசு மாடுகளில் ஒரு பசு மாடு எத்தனை கன்றுகளை ஈன்றுகின்றது. கன்று ஈனாமல் பால் தருவதை நிறுத்திவிட்டு வயதான அந்தப் பசு மாடுகளை அரசு என்ன செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்களே, இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதில் உரையில் இதைப்பற்றித் தெரிவிக்கிறேன்.

*திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த மாமன்றத்திலே பேச வாய்ப்பு அளித்த, நாங்கள் எல்லாம் தெய்வமாக மதித்துக் கொண்டிருக்கிற தானைத் தலைவர் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே, இனமானக் காவலர் பேராசிரியர் அவர்களே, கழகத்தினுடைய பொருளாளரும், சட்ட அமைச்சருமாகிய அண்ணன் சாதிக் அவர்களே, அருமை லத்தீப் அவர்களே, அருமை இளைஞர் அணித் தளபதி அன்புத் தம்பி ஸ்டாலின் அவர்களே, உங்கள் எல்லோருக்கும் முதற்கண் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மாமன்றத்திலே பேச வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைக் கூறி என்னுடைய கன்னிப் பேச்சைத் துவக்குகிறேன்.

பொதுப்பணித்துறை மற்றும் பல்வேறு மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பு கேட்டேன். ஆனால், கிடைக்கவில்லை. எனவே, பேரவை துணைத் தலைவர் அவர்கள் அரைமணி நேரம் கொடுத்தால் என்னுடைய தொகுதிப் பிரச்சனையை சொல்ல ஏதுவாக இருக்கும். இருந்தாலும் காலத்தைக் கருதி 10 நிமிடத்திலே சுருக்கமாகச் சொல்லி, விடைபெறலாம் என்று இருக்கிறேன்.

1989 மே 2] [திரு. எஸ். சிவலோகம்]

புவனகிரி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பிய வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு அமைச்சர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியங்கள் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை, மீன் வளம், பால் வளம் ஆகிய இந்தக் கோரிக்கைகளைப் பற்றி என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். கால்நடைத் துறையில் 33 ஆண்டுக்காலமாக கால்நடை மருத்துவ கிளை நிலையங்களில், கால்நடை மருந்தகங்களில், கால்நடை ஆய்வாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். கிராமப்புறங்களில் உள்ள கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களில், கால்நடைகளுக்குப் பல்வேறு வகைகளில், உதவி செய்து, கால்நடைகளின் நலனைப் பாதுகாத்து வருகிறார்கள்.

கால்நடைத் துறையில் ஒரு பகுதியாக உள்ள கால்நடை உதவி மருத்துவர்களுக்கு கடந்த ஆட்சிக் காலத்தில் ஆபத்து ஈட்டுப் படியாக 100 ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால், கால்நடை ஆய்வாளர்களுக்கு ஆபத்து ஈட்டுப்படி வழங்கப்படவில்லை. ஆகவே, நமது கழக ஆட்சிக் காலத்தில் கிராமங்களில் உள்ள ஏழை மக்களுக்கு உதவியாகப் பணியாற்றும் கால்நடை ஆய்வாளர்களுக்கும் ஆபத்து ஈட்டுப்படி ரூபாய் 100 வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு இலாக்கா அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களுக்கு தற்போது வழங்கும் மருந்தின் அளவு போதுமானதாக இல்லாத காரணத்தால், அதிக அளவிற்கு வழங்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். 33 ஆண்டுக் காலமாக பணியாற்றும் கால்நடை ஆய்வாளர்களுக்கு இரண்டாம் நிலை வைத்திய அந்தஸ்து தரவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு இலாக்கா அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற வசதி மகாராஷ்டிர மாநிலத்தில் கொடுக்கப்பட்டுள்ளதாக நான் அறிகிறேன்.

மேலும், என்னுடைய புவனகிரி தொகுதியில் 14 துணை நிலையங்கள் இருக்கின்றன. இதற்கெல்லாம் 1,500 ரூபாய் அளவிற்குத்தான் மருந்து வழங்கப்படுகிறது. அந்த மருந்துகள் போதுமானதாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், புவனகிரி தொகுதியிலே பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலே ஒரு கால்நடை மருத்துவமனை இருக்கிறது. இது 1963-லே ஆரம்பிக்கப்பட்டது. சொந்தக் கட்டிடம் இருக்கிறது. அங்கே பணியாற்றுபவர்களுக்கு சொந்தக் கட்டிடம் இல்லை. மேலும், பரங்கிப்பேட்டையிலிருந்து கடலூர் செல்வதற்கு 21 கிலோ மீட்டர் தூரம் போக வேண்டும். இந்த 21 கிலோ மீட்டர் சுற்ற

ளவிலே ஒரு கால்நடை மருத்துவமனை கூட இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கால்நடை மருத்துவமனையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய புவனகிரி தொகுதியில் பரங்கிப் பேட்டை ஒன்றியத்திலே கோழி வளர்ப்புப் பண்ணை இருந்தது. ஆரம்பம் முதலே அந்த கோழி வளர்ப்புப் பண்ணை இருந்தது. அது இப்போது மூடப்பட்டு இருக்கிறது. இப்போது சத்துணவுத் திட்டத்தில் முட்டை வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தப் பண்ணைக்கு என்று புதிதாக இடம் தேட வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கெனவே இடம் இருக்கிறது. எனவே, அங்கே கோழிப்பண்ணையை சீக்கிரம் ஆரம்பித்து, தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பிறந்தநாளில் வழங்குவதாக இருக்கிறோம். எனவே, இதைச் செய்தால் நாங்கள் முட்டைகள் வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து மீன் வளத்தைப் பற்றிக் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 20 ஆயிரம் மீனவர்கள் வாழ்கிறார்கள். இடையில் இருப்பது ஒரு வெள்ளாறு பாலம். 'கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறப்படும்' என்பதைப்போல, எங்களுடைய தானைத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் சொல்லியதைப் போல, 'சொல்வதைச் செய்வதும், செய்வதைச் சொல்வதும்' என்பதை நாங்கள் கண்கூடாகப் பார்க்கிறோம். மேலும் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையிலே சொல்லாததை எல்லாம் செய்கிறார்கள். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் அப்போது 5 கிலோ அரிசியை நாங்கள் தருவோம் என்று சொல்லவில்லை. இப்போது ஏழைகளுக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு எல்லாம் 5 கிலோ அரிசியைத் தந்திருக்கிறார்கள். மேலும் எட்டாம் வகுப்பு படித்த பெண்களுக்கு திருமணச் செலவிற்கு 5 ஆயிரம் ரூபாய் நிதி வழங்குவதாகவும் சொல்லி இருக்கிறார்கள். எனவே ஒவ்வொன்றையும் கேட்காமலேயே கொடுக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், முதன் முதலாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வெற்றி வாய்ப்பைத் தேடித் தந்து இருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், சாதாரணமாக ஒரு பேரூராட்சித் தலைவராக நான் இருந்தபோதும், இந்த தொகுதி சம்பந்தமாக பல கோடி ரூபாய்களுக்கு பல நன்மைகளை டாக்டர் கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அதற்கு பஞ்சாயத்தில் தீர்மானம் இருக்கிறது, ஆதாரம் இருக்கிறது.

1989 மே 2] [திரு. எஸ். சிவலோகம்]

குடிநீர்ப் பிரச்சினைக்காக என்னுடைய தொகுதியில் 35 லட்சம் ரூபாயிலே, பரங்கிப்பேட்டையில், 1976-ல் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அனுமதி வழங்கியிருந்தார்கள். இப்போதுதான் அந்த வேலை முடிக்கப்பட்டது. முடிந்து 6 மாதம் ஆகியது. எங்களுடைய பேரூராட்சிக்கு ஒப்படைத்தார்கள். குடிநீர் வாரியம் ஒப்படைத்துவிட்டால், நாங்கள்தான் அதை நிர்வாகம் செய்யவேண்டும். இப்போது அங்கே வாட்டர் லீக் ஆகிறது, அந்த ரிசர்வாயர்லே. அங்கேயிருக்கிற பைப்பிலே எல்லாம் தண்ணீர் லீக் ஆகிறது. அதனாலே நாங்கள் பொறுப்பு எடுத்துக்கொள்ளமாட்டோம். ஆனால் அதற்கு திறப்பு விழாகூட செய்துவிட்டோம்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் சட்டசபையில் கேட்க வேண்டிய அவசியமில்லை. அவர்களுடைய அறையில் கேட்கலாம் என்று சொல்லி அவரை ஒரு வார காலமாக அணுகினேன். அவர் உடனே மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தகவல் கொடுத்து தூத்துக்குடியிலிருந்து திரு. A.R. நாச்சியப்பன் செயற்பொறியாளர் முந்தாநாள்தான் பணியிலே ஒப்புக்கொண்டார். அவர் நேற்றைய மே தினம் என்ற லீவு நாளைக்கூட எடுத்துக்கொள்ளாமல், 15, 20 பேர் கொண்ட ஒரு குழுவாக வந்து, எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்து, அந்தக் குடிதண்ணீரை நாங்கள் நிச்சயம் வழங்குகிறோம் என்ற ஒருவாக்கு கொடுத்து விட்டு, அதற்கு உண்டான முயற்சிகளையெல்லாம் செய்திருக்கிறார்கள். மேலும் இந்த பட்ஜெட்டிலே என்னைப் போன்று உள்ளவர்களுக்கெல்லாம், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் 12 ஆண்டுகளுக்கு முன்பு அதற்கான அனுமதியை வழங்கியதை, அந்த எஸ்டிமேட்டை நாங்கள் பார்க்கின்ற வாய்ப்பையே இப்போதுதான் பெற்றோம். ஆளுங்கட்சிக்காரர்கள் எதிர்க்கட்சி என்று நினைப்பதில்லை. எதிரிகள் என்று நினைப்பார்கள். நாங்கள் ஏதோ ஒரு ஃபைலை பார்க்கவேண்டுமென்றால், ஏன் வருகிறான், எதற்காக வருகிறான் என்று அந்த அதிகாரிகள் நினைப்பார்கள். அப்படி இருந்த ஒரு காரணத்தால் நாங்கள் அணுகமுடியவில்லை. இப்போது சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற காரணத்தால் நான் போய் அந்த ஃபைலை பார்த்த பிறகு, அதற்கு இன்னொரு மோட்டாரும் சாங்ஷன் ஆகியிருக்கிறது. குடிநீர் வாரியத்திற்கு 8 மைல் தூரத்தில் இருக்கிறது. அதிலே போக்குவரத்து எங்களுக்கு இருக்கக்கூடாதா ? போக்குவரத்து வசதி இருந்தால் தான் அவர்கள் தகவல் கொடுப்பார்கள் என்று சொன்னேன். அவர் சொல்கிறார் இந்த பட்ஜெட்டிலே இருக்கிறது என்று. முன்னாள் மாண்புமிகு இரு அமைச்சர்களுடைய தொகுதி எங்கள் தொகுதி. இருக்கிறது இருக்கிறது என்று சொல்கிறார்களே தவிர, என்ன செய்தார்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை. கூடுமான வரையில் இன்னும் ஒரு வார காலத்தில் தண்ணீர் நிச்சயமாகச் சொடுக்கப்படும். அதற்கு நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எஸ். சிவலோகம்] [1989 மே 2

மேலும் எல்லோருக்கும் தெரிந்த ஒன்று, கிட்டத்தட்ட ரூ. 35 இலட்சத்திற்கான திட்டம். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் எங்கள் ஊரிலிருந்து செல்லவேண்டுமென்றால் கிட்டத்தட்ட 10 மைல் சுற்றித்தான் செல்லவேண்டும். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது என்னைப் போன்ற சாதாரண தொண்டர்கள் பேரூராட்சிமன்றத் தலைவராக இருந்த நிலையில் அவர்களிடம் நேரிடையாகக் கேட்டதற்கிணங்க, அந்தப் பாலம் முடிவடைய வாய்ப்பு இருக்கிறது. இன்னும் 15 நாட்களில் அந்த பிரிட்ஜ் முடிந்துவிடும் என்று சொன்னார்கள். அதற்கான எஸ்டிமேட்டை நான் கேட்கிறேன். ரிவைஸ்டு எஸ்டிமேட் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். மண் அமைத்தது சரியில்லை. பஸ் போனால் சரிந்துவிடும் போல் இருக்கிறது. அந்த எஞ்சினியரைக் கேட்டால், இந்தப் பாலத்திற்கு மதிப்பீட்டில் ஒதுக்கீடு இல்லை என்கிறார்கள். அதற்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது ஒரு நிதியை வழங்கி உடனே அந்த எஞ்சினியருக்கு ஒரு அறிவுரை வழங்கி, ஒரு நல்ல திட்டமாக, பயனுள்ளதாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்தக் கால்நடை, மீன்வளம், பால்வளம் மானியத்தில் நான் இதைப் பேசுவதற்குக் காரணம்—பொதுப் பணித்துறையிலே கூறுவோம் என நான் பேச வேண்டுமென்று இருந்தேன். ஆனால் முடியவில்லை. இப்போது மீன் வளமும், பால் வளமும், கால்நடையும் சேர்த்து வருகிறது. இந்த மானியத்தில் அதை ஏன் பேசுகிறீர்கள் என்று என்னை கேட்டுவிடக்கூடாது. (சிரிப்பு) இந்த வெள்ளாறு பிரிட்ஜ் என்பது மிகவும் முக்கியமானது.

(பிற்பகல் 1-00)

ஏனென்றால் அது கொள்ளிடத்தையும், நம்முடைய தென்னாற்காடு பரங்கிப்பேட்டைப் பகுதியையும் இணைக்கக்கூடிய பாலமாகும். திரு. காமராஜ் அவர்கள் காலத்தில் போய் பார்த்தேன். பக்தவச்சலம் மாமா அவர்களைப் போய்ப் பார்த்தேன். (சிரிப்பு). அதற்கு அடுத்து வந்த முதல்வர்களில் அண்ணாவை அழைத்துக்கொண்டுபோய்க் காட்டினோம். அதற்கடுத்து தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்துக் கேட்டுக் கொண்டேன். தி.மு.க. மாவட்ட மாநாட்டிலே கூட தீர்மானம் போட்டிருக்கிறோம். அந்த வெள்ளாறு பிரிட்ஜ் ரொம்ப முக்கியம் என்று சொல்லி. நான் தான் அந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி) :** பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

1989 மே 2]

திரு. எஸ். சிவலோகம் : மீன் வளமானாலும், கால்நடை, பால் வளம், எஜுகேஷன், டூரிஸம், அக்ரிகல்சர் என்று எந்த ஹெட்டிலே எடுத்துக் கொண்டாலும் அந்தப் பாலம் அவ்வளவு முக்கியம். அங்கே ஒரு பெரிய ஆர்ட்ஸ் காலேஜ் இருக்கிறது. அதைச் சுற்றித்தான் சென்று அடைகிறார்கள். 15 கிலோ மீட்டர் 20 கிலோ மீட்டர் சுற்றித்தான் போகிறோம் நானும் என் தொகுதி மக்கள் எல்லோரும். மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்றைய அமைச்சர் பெருமக்களும் அவசியம் அதை செய்து தரும்படி உங்களுடைய பொற்பாதங்களைத் தொட்டுக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி) : நேரம் ஆகிவிட்டது. விரைவில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். சிவலோகம் : என் தொகுதியிலே பரங்கிப் பேட்டையிலே எரிவாயு கிடைக்கிறது. அதை வைத்து 670 தொழில்கள் செய்யலாமாம். கேட்காமலே கொடுக்கப்படும் என்று நான் சொன்னேன் பாருங்கள் அதற்கு ஏற்ப மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லிக்கு போய் பிரதம அமைச்சரிடம் எல்லாம் சொல்லி அதற்கு ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அதை முறை யாகச்செய்து மக்களுக்கு நன்மையை பெருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் குளத்திலே மீன் பிடிக்கிறார்கள். அதைப்பற்றி சிந்திக்க வேண்டும். இது எல்லா உறுப்பினர்களுக்கும் சம்பந்தப் பட்டது. கட்சி வேறுபாடு எல்லாம் இதற்கு கிடையாது. குளத்திலே மீன் பிடிக்க லீசுக்கு விட்டு விடுகிறோம். யாரோ தனியார்கள் அதை எடுத்துக் கொள்கிறார்கள். எடுத்துக்கொண்ட பிறகு ஆடு மாடு தண்ணீர் குடிக்கக் கூட அதில் வழி கிடையாது. வேண்டும்போது குளத்திலே தண்ணீர் இறைக்கிறான், மீன் பிடிக்கிறான். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ அல்லது மற்றைய அதிகாரிகளிடமோ சொல்லி—10 வருஷம் அக்ரீமெண்ட் என்று சொல்லுகிறார்கள், அதை கேன்சல் செய்ய வேண்டும். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று சொன்னார்கள் நம்முடைய அண்ணா அவர்கள். அதுபோல் நமக்கு எது முக்கியம்? மக்களுடைய நலன்தான் முக்கியம்! வருமானம் முக்கியம் அல்ல. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய முயற்சி எடுக்கும்படி கேட்டுக் கொண்டு—இன்னும் நிறைய இருக்கிறது நான் பேச. ஆனால் பேசினால் ½ மணி நேரம் ஆகும், ஆகவே இப்பேர்ப்பட்ட வாய்ப்பினை நல்கிய உங்கள் எல்லோருக்கும் என்னுடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் மீண்டும் மீண்டும் நன்றி கூறிக் கொண்டு சபாநாயகராக வீற்றிருக்கிற அண்ணன் கணபதி அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன் நன்றி வணக்கம்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மீனளத் துறை, கால்நடை பராமரிப்பு, பால் பண்ணை வளர்ச்சித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களைக் கூறுவதற்கு முற்படுகிறேன், மீனளத்தைப் பொறுத்த வரையில் தமிழகத்தில் ஏறத்தாழ 1000 கிலோ மீட்டர் கடற்கரை இருக்கிறது என்று சொன்னார்கள். இந்திய துணை கண்டத்தில் இருக்கக்கூடிய 6,000 கிலோ மீட்டர் கடற்கரையில், ஆறில் ஒரு பங்கு கடற்கரை கொண்டது தமிழகம் என்பதை நாம் அறிவோம். ஏறத்தாழ 4 லட்சத்து 80 ஆயிரம் கடல் மீனவர்களும் 1 லட்சத்து 55 ஆயிரம் உள்நாட்டு மீனவர்களும் இருக்கக்கூடிய இந்த மீனவர்கள் தமிழகத்திற்கு மீன் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்த மன்றத்தில் உங்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது 1982-வது வருடம் வரையிலும் இந்தியாவிலேயே மீன் உற்பத்தியில் முதல் இடம் வகித்த தமிழகம் இன்றைக்கு நாலாவது இடத்திற்கு போயிருக்கிறதே அதற்கு அடிப்படையான காரண காரியங்களை இந்த அரசு ஆராய்ந்ததா, அதை மீண்டும் முதல் இடத்திற்கு கொண்டு போவதற்கு என்ன வழி வகைகள் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் அறியவிரும்புகிறேன்.

இன்றைக்கு கடல் மீனவர்களுடைய மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். மரத்தினாலான 33 அடி படகு கொடுப்பதாக இருந்தாலும் சரி, பெரிய படகுகளை வழங்குவதாக இருந்தாலும் சரி, பரம்பரை மீனவர்களுக்கு நாட்டுப்படகுகளை வழங்குவதாக இருந்தாலும் சரி, உள் புறத்திலும், வெளிசபுறத்திலும் பொருத்துகின்ற அவுட் போர்டு மோட்டார் என்ஜினாக இருந்தாலும் சரி மற்ற மோட்டார்களை வழங்குகிற திட்டமாக இருந்தாலும் சரி, மீன் பிடித் தொழில் நடைபெறாத காலத்தில் 3 மாதத்திற்கு ரூபாய் 60 வீதம் சேமிப்பு நிவாரண நிதி வழங்குதல் என்பதாக இருந்தாலும் சரி அவை அனைத்தும் மிகவும் குறைவாகவே இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு தமிழக கடற்கரைகளில் பல்வேறு இடங்களில் கடல் அரிப்பு ஏற்பட்டு, கடல் அரிப்புக்கான தடுப்புச் சுவர்களை கட்டியிருக்கிறார்கள். அப்படி கடல் அரிப்புக்கான தடுப்புச் சுவர்களைக் கட்டுகிறபோது சில நேரங்களில் கடலிலே மீன் பிடிப்பதற்காக இன்றைக்கு இருக்கக்கூடிய முறையின் விளைவாக செல்வதற்கு இயலவில்லை. அதை மாற்றி தூண்டில் வளைவு கடல் அரிப்புச் சுவரை கட்டித் தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவ கிராமங்களை இணைக்கின்ற சாலை வசதியோ மிக மோசமாக இருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய குமரி மாவட்டத்தில் தேங்காப்பட்டினத்திலிருந்து இணையம் கிராமம் வரையிலான சாலை மிக மோசமான சூழ்நிலையிலே இருக்கிறது.

1989 மே 2] [திரு. பொன். விஜயராகவன்]

பல்வேறு மீனவ குடியிருப்புகளை இணைக்கின்ற சாலை என்பதை இந்த மாமன்றத்திலே அரசுக்கு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய ஒரு சட்டமன்ற உறுப்பினர் கூட குறிப்பிட்டார்கள். ஆந்திர மாநிலத்தினுடைய எல்லையிலே இருக்கக்கூடிய மீனவர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் அடிக்கடி பரவலாக மோதல் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அதே போல கன்னியாகுமரி மாவட்டத்திலே வாழ்கின்ற மீனவர்கள் மீன் பிடிக்க ஆண்டாண்டுக் காலமாக, காலாகாலமாக கேரள மாநிலத்திற்கு மீன் பிடிக்க செல்வதுண்டு. குறிப்பாக அவர்கள் கேரள கடற்கரை முழுவதிலும் சென்று மீன் பிடித்து வருவதை எந்தக் காலத்திலும் தடுத்ததில்லை. ஆனால் சில ஆண்டுகளாக தமிழக மீனவர்கள் கேரளாவிற்கு மீன் பிடிப்பதற்காகச் செல்லுகின்றபோது அங்கே பிரச்சனைகள் ஏற்படுவது என்பது மட்டுமல்ல கடந்த 29—4—1989 அன்று கொல்லத்தில் வைத்து 50 தமிழக மீனவர்களை, கன்னியாகுமரி மீனவர்களை கைது செய்துள்ளார்கள். பல்வேறு நேரங்களிலே இது போன்ற ஒரு நிலைமை ஏற்படுகிறது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி இந்திய நாட்டினுடைய குடிமகன் எந்த இடத்திலும் சென்று தன்னுடைய தொழிலைச் செய்யலாம் என்று இருக்கின்றபோது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மீனவர்கள் மற்ற மாநிலங்களிலே படுகின்ற பாட்டை இந்த அரசு உடனடியாக இந்திய பேரசிற்கு எடுத்துச் சொல்லி அவர்களுக்கு இதுபோன்ற நிலைமைகள் ஏற்படாமல் உடனடியாக அவர்களைக் காக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். உள்நாட்டு மீன் வளத்தைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளாக மிகப் பெரிய அளவிற்கு வறட்சி இருந்த காரணத்தினாலே மீன் உற்பத்தி குறைந்து போய் இருக்கிறது என்று சொன்னார்கள். 1,60,000 டன் மீன் உள்நாட்டில் நாம் பிடிக்க வேண்டும் என்று இருந்தாலும் கூட 1985—86-ல் அது 1,40,000 டன்னாக குறைந்து 1986—87-ல் 1,31,000 டன்னாகக் குறைந்து 1987—88ல் 1 இலட்சம் டன்னாக வந்து இன்றைக்கு 1988—89-ல் 82,000 டன் மாத்திரமே நாம் உள்நாட்டு மீன் உற்பத்தி செய்கிறோம் என்பதைப் பார்க்கின்றபோது இதற்கு அடிப்படைக் காரணம் வறட்சி மட்டும் என்று நீங்கள் கொள்ளக்கூடாது. இங்கே உங்களுடைய பாலிசி நோட்டிலே கொடுத்திருக்கிறீர்கள், இன்றைக்கு உள்நாட்டு மீன் உற்பத்திக்கு தேவைப்படுகின்ற மீன் குஞ்சு ஏறத்தாழ 350 மில்லியன் என்று இருக்கிறது. ஆனால் உற்பத்தி செய்யப்படுகின்ற மீன் குஞ்சுனுடைய அளவு 60 மில்லியன் இன்றைக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. சுமார் 17 சத விகிதம்தான் ஆகிறது. இப்படி வேண்டிய அளவிற்கு மீன் குஞ்சு உற்பத்தி இல்லாத காரணத்தினாலே எப்படி நம்முடைய இலக்கை எட்ட முடியும்? எப்படி 1,60,000 டன் இன்றைக்கு 80,000 டன்னாக குறைந்து இருக்கிறது. எப்படி பாதியாக குறைந்திருக்கிறது? ஆகவே துறையில் இலாக்

காவில் ஏற்படுகின்ற பிரச்சினையா? என்னவென்று எனக்குத் தெரியவில்லை. இன்றைக்கு மீன் இலாக்காவிலே ஒரு ஆராய்ச்சிப் பிரிவு இருக்கிறது. நான் இந்த அரசை மிகப் பணிவோடு கேட்டுக் கொள்வது அந்த ஆராய்ச்சி இலாக்காவை நீங்கள் தயவு செய்து எடுத்துவிட வேண்டும். இலாக்காவிற்குச் சோந்தமான அந்த ஆராய்ச்சிப் பிரிவால் எந்தவிதமான பலனும் இருப்பதாக நான் காணவில்லை. ஆகவே அதை தயவு செய்து தமிழக வேளாண்மை பல்கலைக் கழகத்திற்கு மீன் இலாக்காவை, மீன் துறையைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்கனவே நாம் பணத்தை கொடுத்திருக்கிறோம். கடந்த ஆண்டு கூட ஏற்கனவே 48 இலட்சம் ரூபாய் நம்முடைய அரசினுடைய சார்பிலே வேளாண்மை பல்கலைக் கழகத்திற்கு கொடுத்திருக்கிறோம். முழுவதுமாக இந்த ஆராய்ச்சிப் பிரிவை வேளாண்மை பல் கலைக் கழகத்திற்கு ஒப்படைக்க வேண்டும். ஏன் இதை நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் இன்றைக்கு இரால் வளர்ப்பு என்பது உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளிலே மிகப் பிரபல மாகி வருகின்ற ஒன்று. இரால் வளர்ப்பை உவர் நீர் கழிகளிலே, உவர் நீர் இருக்கின்ற இடங்களிலே இரால் வளர்ப்பு என்பது ஒரு முக்கியமான கருத்தாக கொள்கையாக இன்றைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு நம்முடைய நாட்டிலே பல மாநிலங்களிலே செய்து வருகிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் அரசாங்கத் தினுடைய சார்பிலே ஏறத்தாழ 10 இரால் வளர்ப்பு பண்ணைகள் இருக்கின்றன என்று நான் கேள்விப்படுகிறேன். இன்றைக்கு 10 இரால் வளர்ப்பு பண்ணைகளிலும் ஒரு ஹெக்டேருக்கு 500 கிலோவிற்கு மேல இரால் வளர்த்ததாக வரலாறு இல்லை. ஆனால் ஆந்திரப்பிரதேசத்திலும், மேற்கு வங்கத்திலும் $1\frac{1}{2}$ டன் வரையிலும் அவர்கள் போய் இருக்கிறார்கள். உலகத்தில் இருக்கக்கூடிய கணக்கை பார்க்கின்றபோது நாம் என்றைக்குப் போய் எட்டிப்பிடிப்போம் என்பதே நமக்குத் தெரியாது. தாய் வான் நாட்டில் எல்லாம் ஒரு ஹெக்டேரில் 40 டன் வரையிலும் ஒரு ஆண்டுக்கு கிடைக்கின்றது. அந்த 40க்கு போகவில்லை என்றாலும் கூட பரவாயில்லை. இவ்வளவு பெரிய துறையை வைத்து, ஆராய்ச்சித் துறையை எல்லாம் வைத்து இருக்கக்கூடிய தமிழக இலாக்காவில் 500 கிலோவிற்கு கூட இன்னும் போக முடியவில்லை. ஆந்திராவிலும், மேற்கு வங்கத்திலும் $1\frac{1}{2}$ டன் வரையிலும் போன பின்னாலே இன்றைக்கு 500கிலோ வரை நாம் போகவில்லை என்பது மிக்க வேதனைக்குரியது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் (1-10)

இன்றைக்கு மண்டபத்திற்கும், தூத்துக்குடிக்கும் இடையிலே, 'நேஷனல் மரைன் பார்க்' என்று சொல்லக்கூடிய தேசிய கடற் கரைப் பூங்கா அமைவதற்கான கருத்துருக்கள் எல்லாம் உருவாகி வெகு விரைவிலே அமையவிருக்கிறது. அப்படி ஏற்படுகின்ற போது, அந்தப் பகுதியிலே இருக்கிற ஏறத்தாழ 100 கிலோ

மீட்டர் கடல் பகுதியிலே இருக்கக்கூடிய மீனவர்களை நாம் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கமுடியாத சூழ்நிலை வரும். (மணி யடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி) : இரண்டு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. பொன். விஜயராகவன் : இந்தப் பிரச்சினைகளைப் பேசுவதற்கு கொஞ்சம் கருணை காட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தேசிய கடற்கரைப் பூங்காவிற்கு 100 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய மீனவர்கள் மீன் பிடிக்க முடியாத ஒரு சூழ்நிலை கூட ஏற்படும். அப்படி ஏற்படுகின்ற போது, இப்போதே அந்தப் பகுதியில் இருக்கிற மீனவர்களுக்கு 'சீ வீட்ஸ்' 'கல்ச்சர்' என்று சொல்லக்கூடிய கடல் பாசி வளர்ப் பதற்கான திட்டங்கள், 'பேர்ல் கல்ச்சர்' என்று சொல்லக்கூடிய எடிபிள்—ஆயிஸ்டர் கல்ச்சர், பேர்ல்—ஆயிஸ்டர் கல்சச்ர் என்று சொல்லக்கூடிய அளவிற்கு உணவாக உட்கொள்ளுகின்ற சிப்பிகள், முத்துச்சிப்பிகள் தயாரிப்பதற்கான திட்டங்களை உடன்டியாக இன்றைக்கே செய்வதற்கான காரியங்களைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சங்கு குளிப்பைப் பொறுத்தவரையில், இன்றைக்கு சங்கு குளிக்கிற தொழிலாளர்களுக்கு வழங்குகிற ஊதியம் குறைவு, அதனாலே தான் 'பில்ஃபரேஜ்' என்று சொல்கிறார்களே, திருட்டு கூட நடக்கிறது. இன்றைக்கு அரசாங்கத்தினுடைய ஏகபோகக் கொள்கை. சங்கு வேறு யாரும் குளிப்பது இல்லை. தமிழ்நாட்டி னுடைய அரசாங்கத்தின் சார்பிலேதான் சங்கு குளிக்கிறோம். ஆகவே, அந்த சங்கு குளிக்கிற தொழிலாளர்களுக்கு நல்ல அளவுக்கு போதிய ஊதியம் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பால் வழங்கு துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு ஏற்கெனவே இந்த மன்றத்திலே பல உறுப்பினர்கள் சொன்னார் கள். உற்பத்தியாகின்ற பாலினுடைய விலை—அரசாங்கம் நிர்ண யித்திருக்கிற விலை மிகக் குறைவு. உடனடியாக பால் விலையை உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பாலை உற்பத்தி செய்வதற்கான கால்நடைத் தீவனங்கள் இருக்கின்றனவே, அந்தத் தீவனங்களின் விலை இன்றைக்கு உயர்ந்து கொண்டே போகிறது. இந்த அரசாங்கத்தை பார்த்து உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, கால் நடைத் தீவனங்களுக்கான வணிக வரியை நீக்கி அந்தக் கால் நடைத் தீவனத்திற்கு விலை குறைவதற்கான ஏற்பாடு களைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து, கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பணம், குறித்த காலங்களில் கிடைப்பதில்லை என்று புகார் வருகிறது. கடந்த 50 நாட்களாக பெரியார்

[திரு. பொன். விஜயராகவன்] [1989 மே 2

மாவட்டத்தில் பல்வேறு சங்கங்களிலே உற்பத்தியாளர்களுக்கு, அவர்களுக்குரிய பணம் கிடைக்கவில்லை என்பதை உடனடியாகக் கருத்தில் கொண்டு, அதை வாங்கிக் கொடுப்பதற்கான முறை ஏற்படுத்தவேண்டும்.

இன்றைக்கு 'எம்ப்ரையோ—டிரான்ஸ்பர்—டெக்னாலஜி' என்று சொல்லக்கூடிய அளவுக்கு உட்கரு மாற்றம் என்கின்ற ஒரு டெக்னாலஜி, ஒரு நிலைமை உலகம் முழுவதும் வளர்ந்து இருக்கிறது. இந்தியாவிலே கூட, நம்முடைய நாட்டில் அரியானா மாநிலத்தில் கர்னாலிலும், குஜராத் மாநிலத்தில் சபர்மதியிலும் இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதை நம்முடைய மாநிலத்தில் தொடங்கவிருப்பதாக உங்களுடைய அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். அதைத் தொடங்குவது மட்டுமல்லாமல், ஏராளமான டாக்டர்களையும், மற்றவர்களையும் அனுப்பி அதற்கான பயிற்சி அளிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

'டிஸீஸ் ஃப்ரீ சோன்' என்று சொல்லக்கூடிய அளவிற்கு நோயற்ற மண்டலம் அமைக்கின்ற ஒரு குறிப்பு நம்முடைய அரசின் கையில் இருக்கிறது. அது கன்னியாகுமரி மாவட்டத்திலும், நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் நாங்குநேரி தாலுக்கா, ராதாபுரம் தாலுக்காவில் மட்டும்தான் இருக்கிறது. காவிரி ஆற்றுக்குத் தென்பகுதியில் இருக்கக்கூடிய எல்லா இடங்களையும் இதுபோன்ற நோய் அற்ற மண்டலங்களாக மாற்றுவதற்கான முயற்சிகளில் இந்த அரசு ஈடுபடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த மாமன்றத்தில் ஏராளமான உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வலியுறுத்திச் சொன்னார்கள். கால்நடை மருத்துவர்களுக்கு, மருத்துவ இயல் மருத்துவர்களுக்கு இணையான சம்பளம் வழங்கப்படவேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை வலியுறுத்தினார்கள். அதையும் இந்த அரசு ஏற்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இருபது ஆண்டுக் காலமாக 'வெட்டரினரி அசிஸ்டென்ட் சர்ஜன்ஸ்' என்கின்ற அளவில் இருக்கக்கூடிய 'வெட்டரினரி டாக்டர்களுக்கு' சிவில் அசிஸ்டென்ட் சர்ஜன் என்ற மருத்துவ டாக்டர்கள் இருப்பதைப் போல அவர்களுடைய பதவி உயர்வு செய்யப்பட்டு, 'சிவில் சர்ஜன்' என்றிருப்பதைப் போல, 'வெட்டரினரி சர்ஜன்' என்ற அளவிலாவது பதவி உயர்வு கொடுப்பதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும்.

புதுக்கோட்டை அரசு கால்நடைப் பண்ணையில் தினக் கூலிகளக இருக்கக்கூடிய ஏறத்தாழ 1500க்கு மேட்பட்டவர்கள் 20 ஆண்டுக் காலமாக அவர்களுக்கு வேலைக்கு நிரந்தரம் இல்லை. அதை உடனடியாக ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1989 மே 2] [திரு. பொன். விஜயராகவன்]

'டாப்கோ' தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் இருக்கிறது அதற்கென்று சொந்தமான கட்டிடம் இல்லை. டாப்கோ வுக்கென்று ஒரு சொந்தமான கட்டிடம் இல்லாமல், ஏறத்தாழ 10,000 ரூபாய் 15,000 ரூபாய்க்கு மேல் மாதம் ஒன்றிற்கு வாடகை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசிற் சொந்தமான இடங்களிலாவது குறிப்பாக இப்போது எம்.எம்.டி.ஏ. விலே இருக்கிற 'தாளமுத்து நடராசன் கட்டிடம்' போன்ற கட்டிடங்களிலாவது அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கலாம். அது செய்யப்படவில்லை. அது செய்யப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் முஞ்சுறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 'கொல்லால்' என்ற இடத்தில் தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் கோழிக்குஞ்சு பொரிப்பகம் ஒன்று ஏற்படுத்தித் தரவேண்டும். இன்றைக்கு அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய கோழி வளர்ப்பவர்கள் பெங்களூரிலிருந்தும் கேரளாவிலிருந்தும் கோழிக் குஞ்சுகளைக் கொண்டு வருவதற்கு சூழ்நிலைகள் இருக்கின்றன. இதைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு அங்கே கோழிக் குஞ்சு பொரிப்பகம் ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று அரசாங்கத்திடம் ஏற்கெனவே கவர்ன்மென்டு பவுல்டரி சென்டர் இடத்தில் கோரிக்கை தரப்பட்டிருக்கிறது. ஆகவே கோழிக்குஞ்சு பொரிப்பகம் ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கருங்கல் என்ற இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அதேபோல் இன்றைக்கு கால்நடை மருத்துவமனை ஒன்றையும் அங்கே ஏற்படுத்தித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கால்நடை மருத்துவர்களுக்கு வழங்கப்படுவதைப் போல ரிஸ்க் அலவன்ஸை அங்கே இருக்கின்ற கால்நடை ஆய்வாளர்களுக்கும் கீழ் மட்டத்தில் பணியாற்றுகின்ற எல்லா விதமான ஊழியர்களுக்கும் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு ஏறத்தாழ 300 கிராமங்களில் உள்ள கிளை நிலையங்களில் கால்நடை ஆய்வாளர்கள் இல்லாமல் அவைகள் மூடிக்கிடக்கின்றன. உடனடியாக அதற்கான பயிற்சி இன்றைக்கு இல்லை என்று சொல்லுகிறார்கள். அந்தப் பயிற்சியைத் தொடங்கி கால்நடை ஆய்வாளர்கள் இல்லாத இடத்தில் பயிற்சி பெற்ற கால்நடை ஆய்வாளர்களை முனைப்பான முயற்சியோடு போட்டு அவர்கள் அந்த வேலைகளில் விரைவாக ஈடுபட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு கிராமங்களில் இயங்கக்கூடிய கால்நடை மருத்துவ கிளை நிலையங்களுக்கு ஒழுங்கான கட்டிடங்கள் இல்லை. ஒழுங்கான மேசை, நாற்காலிகள் இல்லை, மருந்துப் பொருட்கள் இல்லை. (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். இவைகளைக் கொடுப்பதற்கான முயற்சியில் தடங்கலின்றி தாராளமாகக் கொடுப்பதற்கான முயற்சியை இந்த அரசு ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு உலகத்திலே ஓர்ல்டு வெட்டரினரி அசோசியேஷன் மாநாடு இந்தோனேஷியாவில் உள்ள பாலி என்ற இடத்தில் நடைபெற இருக்கிறது. 1987 ஆம் ஆண்டு வரையிலும் இந்தியா அந்த அசோசியேஷனில் ஒரு உறுப்பினராகக்கூட இல்லை. 1987 ஆம் ஆண்டில் தான் அந்த அசோசேஷனில் உறுப்பினராக இருக்க அதற்கான தகுதியைப் பெற்றிருக்கிறது. இந்த நேரத்தில் அங்கே நம்முடைய மாநிலத்தினுடைய சார்பில் இன்றைக்கு இந்தியா முழுவதும் பார்க்கின்ற போது ஒரு வெட்டரினரி டாக்டர், ஒரு கால்நடை மருத்துவர் கால்நடை துறையை தலைமை ஏற்று நடத்தக்கூடிய அமைச்சராக தமிழ்நாட்டில் தான் பொறுப்பு ஏற்று இருக்கிறார்கள். இந்த அரசு அந்த அசோசியேஷன் பாலியில் 1989-90ல் நடைபெற இருக்கின்ற கூட்டத்திற்கு நம்முடைய அமைச்சரை இங்கிருந்து நமது இந்திய நாட்டின் பிரதிநிதியாக அனுப்புவதற்கு நம்முடைய அரசு வேண்டிப் பெற்று அவரை அனுப்பி உலக நாடுகளிலே ஏற்பட்டு இருக்கக்கூடிய வளர்ச்சியைக் கண்டு இந்த மாநிலத்திலும் அந்த மாதிரிச் செய்ய, உலக நாடுகளில் கால்நடை வளர்ச்சி எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து அறிந்து தெரிந்து தமிழ்நாட்டிலும் மிக சிறப்பாக பணியாற்ற ஒரு வாய்ப்பை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு பால் வழங்கும் திட்டத்தை இணையாக இங்கே கொண்டுவந்து இந்த மானியக் கோரிக்கையோடு கொண்டு வந்து இருக்கிற மாண்புமிகு பால்வழங்குத்துறை அமைச்சர் அவர்களும் அவருக்குத் துணையாக வேண்டுமானால் செல்வது பற்றி அரசு பரிசீலிக்கலாம் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, அளித்த நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. மொரஞ்சனூர் ப. ராமசாமி : மாண்புமிகு பேரவை முன்றுத் தலைவர் அவர்களே, இந்த கால்நடைத் துறை மானியக் கோரிக்கையில் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கும் வாய்ப்பினை எனக்குத் தந்த என்னுடைய உயிரினும் மேலான தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எங்கள் இன மானப் பேராசிரியர் அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்தில் எங்களை ஆளாக்கிய, வழி நடத்திக்கொண்டு இருக்கிற எங்கள் அன்பிற்குரிய அண்ணன் அன்பில் அவர்களுக்கும், என்னைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில வெற்றி பெறச் செய்த அரவக்குறிச்சி தொகுதி மக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

கால்நடைத் துறை என்பது வேளாண்மைத் துறையிலிருந்து பிரிக்க முடியாத ஒரு துறை ஆகும். இன்றைக்கு வேளாண்மை செய்வது லாபகரமாக இல்லை என்பது பொதுவான கருத்து. ஆனால் கால்நடையை பேணிவளர்ப்பதன் மூலம் வேளாண்மையை ஓரளவுக்கு லாபகரமான தொழிலாக மாற்ற முடியும் என்பது என்னுடைய கருத்து ஆகும். இன்று கல்வி பெறாத இளைஞர்கள்

1989 மே 2] [திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி]

கூட வேளாண்மைத் தொழிலை வெறுத்து கிராமங்களை விடுத்து நகரங்களை நோக்கி நகர்ந்து கொண்டு இருக்கிறார்கள். கடுமையான உழைப்பு இருந்தும் அந்த உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லை என்கின்ற நிலை இன்றைக்கு அந்த வேளாண்மைத் துறையில் இருப்பது தான் காரணம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலை இப்படியே நீடிக்குமானால் ஒரு 10, 15 ஆண்டு காலத்தில் நாட்டில் வேளாண்மை செய்வோர் எவரும் இருக்க மாட்டார்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலை மாறிட அரசு பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். படித்த இளைஞர்கள் கிராமங்களில் தங்கி வாழவும், நகர்ப்புற மக்களுக்கு இணையான வாழ்வு கிராமப்புற மக்களுக்குக் கிடைத்திட, திட்டங்கள் பல தீட்டப்படவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1–20)

வேளாண்மைத் தொழில் ஒரு லாபகரமான தொழிலாகமாறிட இன்றைக்கு கிராமங்களிலே இருக்கின்ற பண்ணைகள் ஒவ்வொன்றையும் கலப்பினப் பண்ணைகளாக மாற்றவேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 5 ஏக்கர் நிலத்தில் பசும்புல் தீவனம் வளர்த்து அதில் கிடைக்கும் தீவனத்தைக் கொண்டு 5 கறவை மாடுகள் ஆழ்கூள முறையிலே அதாவது 'டீப் லிட்டர்' என்று சொல்லப்படுகின்ற முறையிலே, 50 ஆடுகள், ஆயிரம் கோழிகள் என்ற அளவில் ஒரு கலப்பின கூட்டுப் பண்ணை மூலம் அதிக லாபம் பெறலாம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு ஏக்கர் நிலத்திலேயிருந்து கிடைக்கும் பசுந்தீவனத்தைக் கொண்டு நமது நாட்டில் கோழிகளை வளர்ப்பது போல் வெள்ளாடுகளையும் கொட்டகைகளிலே வைத்து வளர்க்க முடியும். அதாவது 'டீப் லிட்டர்'-ல் வைத்து 40 லிருந்து 50 ஆடுகள் வளர்க்க முடியும் எனபதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆழ்கூள முறை அதாவது 'டீப் லிட்டர்' முறையில் ஆடு வளர்ப்பது பற்றி அதாவது 'கோட் ரீரிங் இன் டீப் லிட்டர் சிஸ்டம்' என்பது பற்றி ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். ஆழ்கூள முறையில் ஆடு வளர்க்க இயலாது என்பது ஒரு சிலர் கருத்தாகும். அவர்கள் கூற்றுப்படி, கோழிகளைப் போல அல்லாமல், ஆடுகள் சிறுநீர் கழிக்கும் பிராணிகள் எனவே 'லிட்டர்' அதிகமாக ஈரப்படுத்தப்படும். கொட்டகைக்குள்ளே இருக்கும் 'லிட்டர்' உலராது.. எனவே லிட்டரின் பாதுகாப்புக்கு இயலாத ஒன்றாகும். அடுத்து காற்றில் லிட்டர் உலருகிற போது அதிலிருந்து வெளிப்படும் அம்மோனியா எனப்படும் நச்சு வாயு ஆடுகளின் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும். எனவே ஆடுகளை, கோழிகளைப் போல் ஆழ்கூள முறையில் வளர்ப்பது இயலாத ஒன்று என்பது அவர்களுடைய வாதமாகும். அவர்களின் கூற்றில் உண்மை உள்ளது எனினும் ஆட்டுக்கொட்டகைகளை அமைக்கும்போது

அதனுடைய அமைப்பிலேயே அதனுடைய குறைபாடுகளை நீக்கி வெற்றிகரமாக ஆடுகளை வளர்க்க முடியும் என்பது என் கருத்தும் அனுபவமும் ஆகும். ஆட்டுக் கொட்டகைகளின் அகலத்தைக் குறைத்து, நீளவாக்கில் கட்டுவதன் மூலம் அதிகக் காற்றோட்டத்தை ஏற்படுத்தி அதாவது வேண்டிய அளவுக்கு கிராஸ் வெண்டிலேஷனை கொடுத்து ஆடுகள் பாதிக்கப்படாமல் அம்மோனியா காற்றை வெளியேற்றிவிடலாம். அதே நேரத் திலே லிட்டரில் உண்டாகும் அம்மோனியா வாயு ஒரு கிருமி நாசினிபோல் பயன்பட்டு லிட்டரில் உண்டாகும் கிருமிகளை அழித்துவிட்டு வெளியேறுகின்றது. இது எனது சொந்த அனுபவத்தில் கண்டறிந்த உண்மையாகும். அதே போல நேரில் கண்ட பல கால்நடை மருத்துவ அறிஞர்கள் அதை ஏற்றுக்கொண்டும் உள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே வெள் ளாடுகளை வெற்றிகரமாக ஆழ்கூள முறையில் வளர்க்கலாம் என்று சொல்லி இன வளர்ப்பு முறைபற்றி சுருக்கமாக ஒரு சில வற்றை எடுத்து உரைக்க விரும்புகிறேன்.

இந்த 'டீப் லிட்டர்' முறையில் உயரிய இன வெள்ளாடு களை வளர்ப்பதன் மூலம் அதிக லாபத்தை அடைய முடியும். மலபாரி என்று சொல்லப்படுகின்ற தலைசேரி இனம் சம்பல் பள்ளத்தாக்கு ஆடுகளான ஜமுனாபாரி இனம். அதைப்போல சுவீடன் நாட்டு சாணன் இனம் ஆகியன இவ்வகை வளர்ப்புக்கு ஏற்ற இனங்களாகும். 18லிருந்து 20 கிலோ எடை ஈட்டுகின்ற நமது நாட்டு ஆடுகளைப்போல அல்லாமல் ஆண்டில் 40லிருந்து 50 கிலோ எடையை ஈட்டவல்லவை இவ்வகை ஆடுகள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆண்டுக்கு இரண்டு முறைகள் குட்டி போடும். ஒருபோகத்தில் சராசரி 2 குட்டிகள் கிடைக்கும். குட்டிகளின் பிறப்பெடை $2\frac{1}{2}$ கிலோவாக இருக்கும். ஒரு நாளைக்கு 150 கிராம் எடை ஈட்டும். 6 மாதத்தில் 25 கிலோ எடையுள்ள ஆடுகளாக உருவாகும். ஒரு ஆட்டிற்கு ஒரு நாளைக்கு ரூ. 2 செலவாகும். ஆடு 1 லிட்டரிலிருந்து $1\frac{1}{2}$ லிட்டர் வரை பால் தரும். ஒரு ஆட்டில் 6 மாத காலத்தில் 25 கிலோ எடையில் ஆண்டுக்கு 4 குட்டிகள் விற்பனைக்காகக் கிடைக்கும். ஒரு ஆட்டிலிருந்து ஒரு நாளைக்கு ஒரு கிலோ ஆர்கானிக் எரு கிடைக்கும். தரமான ஆட்டிறைச்சி கிடைக்கும். அவற்றின் தோல் விலை உயர்ந்தது. அது ஒரு சிறந்த ஏற்றுமதிப் பொருளாகும். அதைப் போல ஆட்டுரோமம் விலையுயர்ந்த விற்பனைப் பொருளாக இன்றைக்கு இருக்கிறது. இரண்டு ஏக்கரில் குதிரை மசால்-வேலி மசால்-சுபா புல்-கோ-1 புல் போன்ற புல் வகைகளை பயிரிட்டு 50 ஆடுகளை வளர்க்கலாம். அதன்மூலம் 5 டன் ஆர்கானிக் எருவைப் பெற முடியும். 3 ஏக்கர் நிலத்திற்கு போதுமானதாக அது இருக்கும். அதன்மூலம் 5 ஏக்கரில் கிடைக்கும் நெல் மகசூலை 3 ஏக்கரில் பெறமுடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இரசாயன உரத்திற்கும் பூச்சிக் கொல்லி மருந்துக்கும் ஆகும் செலவு வெகுவாகக் குறைவதோடு தரமான நெல்மணிகளும் கிடைக்கும். வேளாண்மைத் தொழில் வெற்றிகரமான தொழிலாக மாறும். எனவே நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நாடு முழுவதும் இந்த நல்ல திட்டத்தை அறிமுகப்படுத்தி வேளாண் பெருங்குடி மக்களின் வேதனையைப் போக்கிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) இந்தத் திட்டம் நல்ல திட்டம். வேளாண்பெருங்குடி மக்களுக்கு ஏற்றதொரு திட்டம் என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டில் தனிச் சிறப்புடைய ஒரு இனம் காங்கேய இனம். காங்கேய இனக் காளைகள் உலகப் பிரசித்தி பெற்றவை. அந்த இனம் பல்வேறு காரணங்களால் அழிந்து கொண்டிருக்கிறது என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த இனம் அழியாமல் பாதுகாப்பது நமது கடமையாகும். எனவே அரசு காங்கேய இனக் கால்நடைப் பண்ணை ஒன்றைத் தகுதியான ஒரு இடத்தில் உடனடியாக அமைத்து அந்த இனத்தைப் பாதுகாத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு நமது மாநிலத்தில் 806 கால்நடை மருந்தகங்களும் 2,226 கால்நடைக் கிளை நிலையங்களும் இயங்கி வருகின்றன. அவற்றில் இன்று 1,719 இடங்களில் மட்டுமே உறைவிந்து செயற்கை முறைக் கருவூட்டல் நடைபெறுகின்றது. இம்முறை மீதமுள்ள இடங்களிலும் உடனடியாகச் செயல்படுத்தப்பட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வுறை விந்து உபயோகத்தை முறையாகச் செயல்படுத்தவும் தற்போது பற்றாக்குறை காரணமாக திரவ நைட்ரஜன் அண்டை மாநிலங்களிலிருந்து பெறுவதைத் தவிர்க்கவும் மாவட்டந்தோறும் திரவ நைட்ரஜன் நிலையம் (லிக்விட் நைட்ரஜன் பிளான்ட்ஸ்) நிறுவப்பட வேண்டும். அப்போதுதான் மாநிலம் முழுவதும் முழுமையாக உறை விந்துத் திட்டத்தைச் செயலாக்க முடியும்.

அடுத்து, தற்சமயம் கால்நடைக் கிளை நிலையங்களில் காலையில் மட்டும் செயற்கை முறைக் கருவூட்டல் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விவசாயிகள் நலன் கருதி இனிமேல் காலை, மாலை இரு நேரங்களிலும் அப்பணி நடைபெறும் வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இராணிப்பேட்டை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் நோய்த் தடுப்பு ஊசி மருந்துகளைத் தயார் செய்து நாட்டுக்கு வழங்கி வருகிறது. கடந்த ஆண்டு இந்த நிலையம் தயாரித்த 'ப்ரூ எண் 1' என்ற ஆட்டம்மைத் தடுப்பு ஊசி போடப்பட்டதில் திருச்சி, புதுக்கோட்டை, வடாற்காடு மாவட்டங்களில் நோயைத் தடுப்பதற்குப் பதிலாக நோயை உண்டாக்கி, ஆடுகள் ஆயிரக் கணக்கில் இறந்து விட்டன. அதன் மூலம் ஏராளமான விவசாயிகள் தங்கள் பட்டி ஆடுகளை முழுமையாக இழந்துவிட்டு இன்று பேரிழப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களும் உண்மை என்ன என்பதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கே கூட அதுபற்றி நல்ல அனுபவம் இருக்கும் என்று கருதுகிறேன். ஆடுகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக ஆடுகளைக் கொல்லுகின்ற மருந்துகளைத் தயாரித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு ஆராய்ச்சி நிலையம் இருக்குமானால் எதிர்காலத்திலே கால்நடை பராமரிப்பு எப்படி இருக்கும் என்று எண்ணத் தேவையில்லை. ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்து இதுபற்றி விசாரிக்க வேண்டும். அப்படிப்பட்ட மருந்துத் தயாரிப்பில் ஈடுபட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதோடு, ஆடுகளை இழந்த விவசாயிகளுக்கு மீண்டும் ஆடுகள் வாங்க மானியத்தோடு கூடிய கடன் உதவியும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கால்நடை மருத்துவர்களுக்கு சில குறைபாடுகள் இருப்பதுபற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். எனக்கு முன்னால் பேசிய சில மாண்புமிகு உறுப்பினர்கள் அதுபற்றி விளக்கினார்கள். அவர்களுடைய ஊதியம், மற்ற மனித உயிர்களைப் பாதுகாக்கின்ற எம்.பி.பி.எஸ். டாக்டர்களுடைய ஊதியத்திற்கு இணையாக இருக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அரசு அதையும் அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, இன்றைக்கு தமிழ்நாட்டில் வேதனையோடு வாடிக் கொண்டிருக்கின்ற விவசாயிகளின் வாட்டம் போக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. இந்த அரசு அமையக் காரணமாக இருந்தவர்கள் அவர்கள். நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் ஒருவரால் மட்டுமே தங்கள் வேதனையைத் தீர்க்க முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள். கட்டுப்படியாகாத ஒரு தொழிலைச் செய்து கொண்டு கடன் சுமையால் வாடும் அவர்களின் வாட்டம் போக்கிட கருணையே உருவான நமது முதல்வர் அவர்கள் கடந்த கால அனுபவத்திலிருந்து, பெரிய விவசாயி, சிறிய விவசாயி என்று பார்க்காமல், நடுத்தர விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரின் கடன்களையும் அறவே தள்ளுபடி செய்து, அவர்களுடைய வாழ்க்கை வளம்பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்குக் கிடைத்த வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

1989 மே 2]

*திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு அமைச்சர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற பால் வளம், கால்நடை பராமரிப்புத் துறை, மீனளம் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 1–30)

பால், முட்டை, இறைச்சி இது மூன்றும் நம்முடைய உணவிலே மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றவைகள் ஆகும். பால் அதிலே ஒன்றாகும். இந்த முறையிலே இன்றைய தினம் பாலை எந்த அளவுக்கு நாம் வழங்குகிறோம் என்று பார்க்கின்றபோது, ஒரு சத்தான பாலாக அது இல்லை. சத்து முழுமையையும் எடுத்து விட்டு, ஏதோ பெயரளவிலே பாலித்தீன் பைகளிலே அடைத்து, அதுவும் குறித்த அளவிலே இல்லாமல், அதிலே கூட ஒவ்வொரு பால் பையைப் பார்க்கின்றபோது 50 கிராம் எடை குறைவாக இருக்கின்ற அளவுக்கு பால் விநியோகம் நடக்கிறது. பால் விநியோகத்திலே இன்றையதினம் பல இடங்களில் இருந்து பல கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தயாரித்து, குளிர் பதன நிலையத்திற்குச் சென்று, திரும்பவும் இங்கே வந்து உஷ்ணத்தை மேக்சிமம் ஏற்படுத்தி, திரும்பவும் மேக்சிமம் குளிர் செய்து திரும்ப விநியோகத்திற்கு வருகிறது. இந்தப் பால் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு போகும்போது அதிக கால தாமதம் ஆகின்றதினாலே அந்தப் பாலினுடைய மணம் கெட்டு ஒருவிதமான வாசனை ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். இன்றையதினம் பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். பால் உற்பத்தியாளர்களுக்குக் குறித்த நேரத்திலே பணம் போய்ச் சேருவதில்லை என்றும், அதனாலே பல கூட்டுறவு அமைப்புகள் மூடப்படுகின்ற நிலையிலே இருக்கின்றன என்றும் சொன்னார்கள். முழுக்க முழுக்க கிராமத்திலே இதையே ஒரு வருவாயாக வைத்திருக்கின்ற அந்த அமைப்புகளில் இந்த மாடுகளை வளர்க்கின்றவர்களுக்கு, அவர்களுக்குக் குறித்த காலத்திலே,— தினமும் தீவனம் போட்டு, தினமும் அதற்குப் பராமரிப்பு செய்து, மாதக்கணக்கிலே பணம் வரவில்லை என்று சொன்னால் அவர்களுக்கு எந்த அளவுக்கு வருவாயைப் பெருக்க முடியும் என்பதை இந்தத் துறையிலே இருப்பவர்கள் கருத்தில் வைத்து உடனடியாக பால்விலையை ஒரே நாளில் கொடுக்கவில்லை என்றாலும், வாரத்திற்கு ஒரு நாளிலாவது கொடுக்க முயற்சி எடுக்க வேண்டும். குறித்த காலத்திலே எடுத்துச் சென்று பதப்படுத்திய அந்தப் பாலைக் கொண்டு வந்து சேர்த்து விற்பனை செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் காலதாமதப்படுத்தக்கூடாது. அப்படி காலதாமதம் ஆவதனாலேதான் பாலினுடைய உண்மையான தரம், வாசனை கெட்டு அதை மக்கள் உண்ணக்கூடிய ஒரு சூழ்நிலை இல்லாமல் இருப்பதை நாம் பார்க்க வேண்டும்.

[திரு. கோ. பூவராகன்] [1989 மே 2

இன்றைய தினம் சென்னை மாநகரப் பகுதியிலே பைகளில் போட்டு பால் வழங்குவது மட்டுமல்லாமல், தானியங்கி பால் வழங்கு முறை மூலமும் பால் வழங்கப்படுகிறது. அதிலே எனக்கு முன்னாலே பேசிய நண்பர் ஒருவர் சொன்னார். ஏதோ ஒரு தலைவர் ஒருவர் இங்கே வந்தார். அவருடைய ஆராய்ச்சியாலே, பெருமுயற்சியாலே இந்தப் பால் வளத்துறை மிக நன்றாக வளர்ந்து விட்டது என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால், அவர்கள் எங்கே சென்றாலும் முதலாவது ஒருவருக்கு வேலை கொடுப்பதிலேதான் ஆர்வம் காட்டுவார்கள். யார் யாருக்கெல்லாம் வேலை கொடுக்க வேண்டும், எப்படிப்பட்டவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று சொல்லி அந்தத் துறையிலே ஆளையெல்லாம் போட்டிருக்கிறார்கள். இன்னின்ன இலாக்காவிலே இன்னின்னாரைப் போட வேண்டும் என்று கூட அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இதைப்போன்று இன்றைய தினம் சென்னை மாநகரத்திலே தானியியங்கி பால் வழங்கு துறையிலே பார்த்தாலும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள்தான் பால் வழங்க வேண்டும் என்ற ஒரு முறையை வகுத்தார்கள். இன்றையதினம் தானியங்கி பால் வழங்கு துறையிலே நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள் என்று தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப்பார்த்து இந்தச் சமயத்திலே பதிலுரை கூறுகின்றபோது சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோலவே எப்படிப்பட்டவர்கள் தானிய்ங்கி பால் வழங்கு துறையிலே ஈடுபட்டிருக்கின்றார்கள் என்று பார்க்க வேண்டும். இதிலே தவறுகள், முறைகேடுகள் நடந்திருப்பதை நாம் பார்க்கிறோம். குறித்த அளவுக்கு, இத்தனை லிட்டர் பால் இருக்க வேண்டும் என்றால், அப்படி இருப்பதில்லை. ஏதோ அட்சஸ்ட் செய்து விடுகின்றார்கள். பெட்ரோலை எப்படி பெட்ரோல் வங்கிகளில் குறைத்து விடுகின்றார்களோ அதைப் போல, 5 லிட்டர் போட வேண்டும் என்று சொன்னால், பெட்ரோல் 4 லிட்டர் தான் இருக்கும். அதுபோன்று, தானியங்கிக் கூடத்திலே கூட பால், குறைந்த அளவிலே கொடுக்கின்றார்கள். 100 லிட்டர் தானியங்கிக் கூடத்திலே கொடுப்பார்கள் என்றால் அதை 125 லிட்டர் அளவுக்கு விற்றுவிடுவார்கள். 25 லிட்டர் பால் விலையைச் சரிசெய்து அவர்கள் பையிலே சேர்த்துக்கொள்வார்கள். இதையெல்லாம் கண்காணிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். அதற்கு அந்த இலாக்காவிலே இருக்கின்றவர்கள் என்ன செய்துகொண்டு இருக்கின்றார்கள் என்று பார்த்தால் அதை கவனிப்பதே இல்லை. ஒரு இடத்திலே அவர்கள் பெறுகின்றார்கள். அதெல்லாம் அவரவர்களுக்கு, அதிலே இவ்வளவு அவருக்கு, இவ்வளவு இவருக்கு என்று இருக்கிறது. கீழ்மட்டத்திலேயிருந்து மேல் மட்டம் வரைக்கும் அதற்கு எடுக்கவேண்டியது எல்லாம் இருக்கிறது. ஒரு கன்ஸல்டன்சி சர்வீஸ் நம் தமிழகத்திலே வைத்தாலும்கூடப் பரவாயில்லை. ஒவ்வொரு துறையிலும் எப்படி எப்படிப் பணம் சம்பாதிக்கலாம் என்ற முறையிலே இன்றைய தினம் ஒவ்வொரு இலாகாக்களிலும் தவறுகள் நடந்துகொண்டிருப்பதை நாம் பார்க்கி

1989 மே 2] [திரு. கோ. பூவராகன்]

றோம். பொதுமக்களுடைய பணம் வீணாக்கப்படுகின்றது. பாலாக இருந்தாலும், அது உணவாக இருந்தாலும் எந்த அளவுக்குப்போகிறது என்பதைக்கண்காணிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். நல்ல முறையிலே அந்தப் பாலை வழங்க வேண்டும். அளவு குறையாமல் வழங்கப்பட வேண்டும். தரமுள்ள பாலாக வழங்கப்படவேண்டும். பால் உற்பத்தியாளர்களுக்கு உரித்த காலத்திலே பணம் போய்ச் சேர வேண்டும். அதை நாம் பார்க்க வேண்டும். நல்ல தரமுள்ள மாடுகளை வழங்குகிறோமா என்றால இல்லை. மாட்டின் காதில் பொத்தல் பற்றியெல்லாம் சொன்னார்கள். பொத்தல் இரண்டு, மூன்று என்று சொல்கின்றார்கள். அதற்குள்ளே நான் போகவிரும்பவில்லை.

ஆனால், நல்ல தரமுள்ள மாடுகளை வாங்குவதற்கு, விற்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். குறிப்பாக வெளிநாடுகளிலே இருந்து இனாமாகக்கூடக் கொடுக்கிறார்கள். அது யாருக்குப் போய்ச் சேருகிறது, எப்படிப்பட்டவர்களுக்கு அது கொடுக்கப்பட்டிருக்கிறது, அதனால் என்ன பலன் என்பதைக் கூட நீங்கள் பதிலுரை கூறும்போது சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நல்ல தரமுள்ள பசுக்களை, பால் கொடுக்கக்கூடிய அந்த மாடுகளைப் பெற்று, உரியகாலத்திலே கொடுக்க வேண்டும். எந்த ஊரிலே வேண்டுமானாலும் அது வளராது. எந்தெந்த மாட்டை எந்தெந்த வட்டாரத்திலே வளர்க்க முடியுமென்ற நியதி இருக்கிறது. எல்லா இடங்களிலும் மாடுகளை வழங்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, அதிக உஷ்ணமான பகுதிகளிலே—நல்ல குளிர்ப்பகுதிகளில் வளர்க்க வேண்டிய மாடுகளை வளர்க்க வேண்டுமென்று ஏற்பாடுகளைச் செய்தால், அதற்காகச் செலவிடுகின்ற பணம் சரியாகச் செலவழித்ததாக இருக்காது. அப்படிப் பார்க்கின்றபோது ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளில் மாடுகளை வளர்க்க என்ன முயற்சிகள் எடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அந்தப் பகுதிகளில் இந்த மாடுகளை நன்றாக வளர்த்து, அங்கேயிருந்து பாலைத் தருவித்து, அதைப் பக்குவப்படுத்தி, விநியோகிக்க ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதோடு அந்தப் பகுதிகளில் ரிசர்ச் துறையில் என்ன செய்திருக்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். நாம் மாட்டுப் பண்ணை வைத்திருக்கிறோம். அங்கே என்ன நடக்கிறது? புல் வாங்குவதில், தீவனம் வாங்குவதில், அந்த மாடுகளை விற்பதில், பசுக் கன்றுகளை விற்பதில் என்ன முறைகேடுகள் நடக்கிறதென்பதை அமைச்சரவர்கள் கண்டுகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். நல்ல தரமுள்ள கன்றுகளை குறைந்த விலைக்கு விற்று விடுகிறார்கள். அந்தக் கன்றுகளை நாம் பராமரித்து, பக்குவமாக வளர்த்து, அதன் மூலம் பலனை அடைய இந்த இலாக்கா முன் வரவேண்டுமே தவிர, ஏதோ காரணம் சொல்லி, அவற்றை விற்றுவிட முயற்சிக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சின்ன சேலத்திலே ஒரு ஆட்டுப் பண்ணை இருக்கிறது. ஆயிரக்கணக்கான ஏக்கர் அதற்காகப் பெற்று இருக்கிறார்கள் மேய்ச்சேரி ஆடு என்பது சேலம் மாவட்டத்திலே இறைச்சிக்குப் பெயர் போனது. தோலுக்குக் கூட அது நல்லது. அந்த மேய்ச் சேரி ஆடுகளை உற்பத்தி செய்ய என்ன ஏற்பாடு செய்திருக்கிறார் கள்? ஒவ்வொரு முறையும் பேசுகிறோம், மேய்ச்சேரி ஆடுகலள வளர்க்க முயற்சி எடுக்க வேண்டும். அதன் உற்பத்தியைப் பெருக்க வேணடும். இறைச்சியிலே மிகவும் தரமுள்ளதாகவும், அதிக எடை உள்ளதாகவும், ருசியுள்ளதாகவும் அது இருக்கிற தென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்த இனத்தை வளர்க்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்? சின்ன சேலத் திலே ஆட்டுப் பண்ணை இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அங்கே ஆட்டு எண்ணிக்கை குறைந்து கொண்டே வரு கிறது. கேட்டால், அங்கே தண்ணீர் இல்லை, புல் இல்லை, தீவனம் இல்லை என்று எல்லாம் சொல்லுகிறார்கள். குழாய்க் கிணறுகள் ஆயிரம் அடி வரை கூடப் போகலாம். தண்ணீர் வேண்டுமென்றால். எனவே, நல்ல முறையில் அந்தத் தண்ணீ ரைப் பயன்படுத்தி, புல் வளர்த்து, நல்ல தரமுள்ள ஆடுகளை வளர்க்க வேண்டும். எந்தெந்த ஆடுகளை வளர்க்க வேண்டுமோ அந்த ஆடுகளை வளர்த்து, இந்த ஆடுகளுக்குக்கிராக்கி இருக்கிறது என்று விவசாயிகளுக்குச் சொன்னால், அவர்கள் அதை வளர்க் கப் பொருத்தமாக இருக்கும். தர்மபுரி மாவட்டம், இராமநாத புரம் மாவட்டம், சேலம் மாவட்டம், வடஆற்காடு மாவட்டத்தில் ஒரு பகுதி, தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒரு பகுதி ஆகிய இடங்களில் ஆடுகள் வளர்க்கும் விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் நன்றாக வளர்க்கிறார்கள். அவர்களுக்கு உரிய காலத் தில் உதவி, ஒத்தாசை கொடுத்தால் நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்வதோடு, வெளி நாடுகளுக்கு அனுப்பக்கூடிய அந்த ஆற்றலும், திறமையும் அவர்களுக்கு உண்டு என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னாலே உறுப்பினர் ஒருவர் சொன்னார், ஆடு வளர்க்கும் முறை பற்றி. சின்ன கல்ராயன் மலைப் பகுதிகளுக்குப் போனால், ஆடுகள் கீழே இருந்தால் அவற்றின் கழிவு நீர் எல்லாம் ஆட்டின் மேல் பட்டு, நோய் வருமென்பதால், அவற்றை ஒரு பரண் போட்டு அதன்மேலே ஏற்றி விடுவார்கள். கால்நடை இலாக்காவிலே இதைச் சொல் லிக் கொடுக்கவில்லை. ஆடுகளை நோயில்லாமல் வளர்க்க வேண்டுமென்பதால் அவர்கள் அவ்வாறு ஒரு ஏற்பாட்டைச் செய் திருக்கிறார்கள். ஆகவே, நல்ல உதவிகளை அவர்களுக்குச் செய்ய வேண்டும். ஆடுகளில் 2, 3 குட்டிகள் போடும் ஆட்டு இனங்கள் இருக்கின்றன. அந்த இனங்களை எல்லாம் பெருக்கு வதற்கு என்ன முயற்சிகள் நடந்திருக்கின்றன என்பதைக் கால் நடை இலாக்காவில் இருக்கிறவர்கள் உன்னிப்பாகக் கவனித்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சில மாவட்டங்களில்தான் ஆடு வளர்க்கும் உற் சாகமுள்ள விவசாயிகள் இருக்கிறார்கள். நாம் மொத்தமாக தமிழ்நாடு முழுவதும் ஆடு கொடுக்கிறோம், ஆடு கொடுக்கி

றோம் என்று கொடுத்துக் கொண்டிருந்தால், அது கணக்கில்தான் இருக்கும், நடைமுறையிலே வராது. அதுபோலத்தான் மாடு வளர்ப்பது கூட. மாடு வளர்க்க விவசாயிகளுக்கு ஊக்கம் இருக்க வேண்டும். பொங்கனூர் குட்டை என்ற ஒரு இனம் இருக்கிறது. அந்த மாடு தீவனம் அதிகம் தின்னாது. பால் அதிகமாகக் கறக்கும். ஆந்திர மாநிலத்தில் பல இடங்களில் இருக்கிறது. இங்கே கூட இருக்கிறது. அந்த இனம் நாளா வட்டத்தில் அழிந்து கொண்டிருக்கிறது. நாம் அதற்கு என்ன முயற்சி எடுத்தோம்? அந்தப் பொங்கனூர் குட்டை என்ற மாட்டைப் பெருக்குவதற்கு ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்வேன். அதைப்போல பால் அதிகமாகத் தரக்கூடிய பல இனங்கள் இன்றைக்கு கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன.

[ பிற்பகல் 1-40 ]

அந்த இனத்தை எந்தெந்தப் பகுதியிலே நாம் வளர்த்திருக்கிறோம். அதனால் எவ்வளவு உற்பத்தியாகியிருக்கிறது என்று பார்க்கக் கூடிய சூழ்நிலைக்கு நாம் வர வேண்டும்.

பொதுவாக எருமைப் பாலில் எவ்வளவு தண்ணீர் ஊற்றினாலும் தெரியாது. எருமைப் பாலானாலும் சரி, பசும் பாலானாலும் சரி, கொஞ்சம் தண்ணீரை ஊற்றி காய்ச்சி வைத்தால் எவ்வளவு தண்ணீர் கலந்திருக்கின்றது என்பது தெரியாது. அதைப்போலவே பைகளில் வழங்கப்படும் பால்களில் எவ்வளவு தண்ணீர் கலந்திருக்கிறார்கள் என்பதையும் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் நாம் பாலில் எவ்வளவு தண்ணீர் கலந்திருக்கிறது என்பதைக் கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் நம்முடைய நிலைமை என்ன என்பதைத் தெரிந்துக் கொள்ள இயலும். ஒவ்வொரு நிலையிலும் என்னென்ன நடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். பையில் ஒரு சிரிஞ்சைப் போட்டு இப்போது பாலை எடுத்து விடுகிறார்கள் என்ற புகார் நீண்ட காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. அதைக் கண்காணிக்க வேண்டும்.

அதைப் போலவே ஒரு டெப்போவுக்கு இவ்வளவு பால் பைகள் என்று கணக்கிருக்கிறது. அதற்கு மேலேயேகூட அந்தப் பால் பைகள் டெப்போக்களுக்கு வந்து அவைகள் எல்லாம் அந்தப் பகுதியில் உள்ள ஹோட்டல்களிலும் சிற்றுண்டிச் சாலைகளிலும் இன்னும் இது போன்ற இடங்களுக்கும் விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. அதன் மூலம் கிடைக்கிற வருவாய் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருப்பவர்களுக்குப்போய்ச் சேருகிறது என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது. எனவே இதற்கும் ஒரு கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எனக்கு முன்னாலே பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். வாய் பேசாத கால்நடையை ''வாய் பேசாத ஜீவன்'' என்பார்கள். ஆனால் இந்தக்கால் நடை இலாக்காவில் கடந்த 30 வருடங்களாக—25 வருடங்களாக ஒரே வேலையைப் பார்த்துவிட்டு ரிடையர் ஆகிறவர்கள் இருக்கிறார்கள். வேறு எந்த இலாக்காவிலும் நாம் இப்படிப் பார்த்ததில்லை. ஒரு பதவியில் 10 ஆண்டுகள் இருந்தார் என்று சொன்னால் 10 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்க வேண்டும்—சம்பள உயர்வு கொடுக்க வேண்டும். ஒரே படிப்புப் படித்தவர்களுக்கு வேறு இடங்களில் என்ன சம்பளம் இருக்கிறதோ அந்த சம்பளத்திற்கு இணையான வருவாய் தருகிற அளவுக்கு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த முயற்சி எடுக்க வேண்டும். அந்தத் துறையில் இருப்பவர்கள் சில சமயங்களில் சங்கம் வைத்துக் கேட்டால் அந்த இலாக்காவை மூடிவிட்டு வேலை இல்லை என்றோ அல்லது வேறு இடத்திற்குப் போங்கள் என்றோ சொல்லிவிடுகிறோம். பிறகு அங்கே அவர்கள் போன பிறகு அதையும் மூடிவிட்டு வெளியே அனுப்புவது என்ற நிலைமையெல்லாம் இருக்கிறது. ஒரு இலாக்காவில் ஏற்கெனவே வேலை இருக்கிறது என்று சேங்க்ஷன் செய்து, 4 அல்லது 5 அல்லது 10 வருடம் வேலை செய்த பிறகு அது தேவையில்லை என்று ஏதோ ஒரு காரணத்திற்காக மூடுகின்ற நிலையை முழுமையாக நிறுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஒரு பக்கம் ஏராளமான பணம் செலவழிக்கின்றோம். மறு பக்கம் இது வேண்டாம்—அது வேண்டாம் என்று மூடுகிற பழக்கம் இருக்கிறது. இதனால் அதிகாரிகளிடையே உற்சாகம் குறைகிறது. எதற்காக மூடுகிறார்கள்? இலாக்காவில் புதிய புதிய வைத்திய சாலைகள்—மருத்துவ மனைகள் — ஆண்டு தோறும் திறக்கிறார்கள். அதற்குக் கிளைகளைத் துவக்குகிறார்கள். வளர்ச்சி அடிப்படையில் இப்படி ஒவ்வொரு துறையிலும் பணம் செலவழிக்கிறோம். அப்படி இருக்கும்போது ஆய்வாளர்களை நிறுத்துகிறோம்—டாக்டர்கள் தேவையில்லை என்று சொல்லுவது சரியில்லை. அதே நேரத்தில் உயர் அதிகாரிகளாக இருப்பவர்களில் எத்தனை பேரை நீங்கள் நிறுத்திவிட்டிருக்கிறீர்கள் என்பதை இந்த மன்றத்தில் கணக்குச் சொல்ல முடியுமா? யாரோ ஒருவர் வருகிறார். அவர் சொல்லி வேறு எங்கேயும் வேலை கிடைக்காத ஒருவருக்கு நம் மாநிலத்தில் வேலை கொடுக்கப்படுகிறது. நம் மாநிலத்திலே இல்லாதவர் அவர். இவரைப் போட்டால் வேலை சிறப்பாக நடக்கும் என்று அவர் சொல்லிவிட்டுப் போகிறார். இப்படி அவர் பார்த்து வேலை கொடுக்கிற நிலைமை இருப்பதை நாம் மாற்ற வேண்டும். நம் ஊரில் ஆட்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து தேர்வு செய்ய வேண்டும். அவர்களை நியமிக்க வேண்டுமேதவிர வெளியிலிருந்து எதற்காக நியமிக்க வேண்டும்? நம்ஊர் பணம்—நம் ஊர் வேலை இங்கே இருக்கிற வேலைக்கு வெளியே இருப்பவர்களைப் போட வேண்டுமென்றால் ஏன் போட வேண்டும்? இங்கே இருப்பவர்

1989 மே 2] [திரு. கோ. பூவராகன்]

களுக்கு வேலை இல்லாத போது எதற்காக நாம் இதைச் செய்ய வேண்டும். அவர்களுக்கு வேலை கொடுக்கக் கூடாது என்ற நிலையில் இல்லை. இங்கே இருப்பவர்களுக்குக்கிடைக்கவில்லை— இங்கே ஆட்களே இல்லை என்றால் வெளியே இருந்து இறக்குமதி செய்யலாம். அப்படி இறக்குமதி செய்வதைக் கொஞ்ச காலத்திற்கு நிறுத்தி வைக்க வேண்டும். அதுதான் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தனியார் துறையில் இறால் வளர்க்கிறார்கள். இங்கே நம்மிடம் ட்ராலர்ஸ் வாங்கி டீப் சீ ஃபிஷிங்குக்குச் செல்கிறார்கள். மத்திய அரசும் மாநில அரசும் இதற்கு நிறையப் பணம் ஒதுக்குகிறோம். நீண்ட தூரம் கடலுக்குள் சென்று அதிக மீன் கொண்டு வந்து உண்ணுகிறவர்களுக்கு உணவாகக் கொடுக்கிறார்கள். ஆனால் அது எந்த அளவுக்கு நமக்குப் பயன்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். நாம் கொடுக்கின்ற பணத்தில் ட்ராலர்ஸ் வாங்கிக் கொண்டு ஆந்திர மாநிலத்திற்குச் சென்று அங்கே உள்ள பகுதிகளில் மீன் பிடித்து அங்கேயே விற்றுவிடுகிற சூழ்நிலையைத் தவிர்க்க வேண்டும். எங்கே மீனைப் பிடித்தாலும் இங்கே கொண்டு வந்து விற்க வேண்டும்.

அதோடு உள் நாட்டிலும் மீன்களை வளர்க்க வேண்டும். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர் மீன் பிடிப்பதற்காக என்று தண்ணீரை எல்லாம் திறந்துவிட்டு, விவசாயத்திற்குத் தண்ணீர் இல்லாமல் செய்துவிடுகின்ற நிலைமையைப் பற்றிப்பேசினார்கள். தண்ணீர் குறைவாக இருக்கின்ற போது மீன் பிடிப்பார்கள். அப்போது மீன்பிடிக்க குத்தகைக்கு விடுவார்கள். அப்போதுதான் மீன்பிடிக்க வேண்டுமே தவிர தண்ணீரைத் திறந்து விட்டு மீன் பிடிக்கிற முறையைத் தவிர்க்க வேண்டும்.

அதைப் போலவே இங்கே இறால் வளர்க்க நிறைய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அதற்காக ரிசர்ச் எல்லாம் செய்திருக்கிறார்கள். தனியார் துறையில் கூட இதை வளரச் செய்து வருமானத்தைப் பெருக்க முடியும் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். இந்த இலாக்காவில் என்ன செய்தார்கள் என்று பார்க்க வேண்டும்.

அதுபோல் நண்டு, அதுபோல் இன்னொன்று முத்துக் குளிப்பது. அது ரொம்ப நாளாக நடக்கவில்லை. அது ஏன் நடக்கவில்லை ? முத்துக் குளிப்பு வேலை தனிப்பட்ட முறையில் நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்கின்றார்கள். எத்தனை வருடத்திற்கு முன்னால் முத்துக் குளித்தார்கள் ? எத்தனை வருடத்தில் அது மெச்சூரிட்டி ஆகிறது ? ஏன் முத்துக் குளிப்பு நடைபெற வில்லை என்பதை எல்லாம் நாம் பார்க்க வேண்டும். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டு அமைச்சர்கள் பதிலுரை சொல்ல இருக்கிறார்கள் கால நேரம் கருதி விரைவில் முடித்தால் நல்லது.

திரு. கோ. பூவராகன் : மீனளத் துறையைப் பற்றி நான் சொல்ல விரும்புவது, மீனளத் துறையின் மூலம் கடலில் சரியான முறையில் மீன் பிடிக்க பயன்படுத்தப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். இன்றைய தினம் விசைப் படகுகளைக் கொடுக்கிறோம். கடந்த 10 வருடங்களில் அந்தத் துறையில் பொறுப்பில் இருந்த ஒரு சிலரில் ஒரு டெப்புட்டி டைரக்டர் இன்றைக்கு 10 அல்லது 20 கார்களுக்குச் சொந்தக்காரராக ஆகிவிட்டார் என்று சொல்லுகிறார்கள். அதுபற்றி முறையாகப் பார்த்து பரிசீலனை செய்யவேண்டும். அதுபற்றி நாங்கள் சட்டமன்றத்தில் சொல்கின்றோம். அது உண்மையா என்று பரிசீலனை செய்யவேண்டும். இவ்வாறு தவறு நடக்கக்கூடாது என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கு இருக்கின்றது. சாதாரண மீனவர்களுக்கு இனாமாக மட்டு மல்லாமல், மானியத்தில் விசைப் படகுகளும் கொடுக்கிறோம். அவர்கள் மீன்களைப் பிடித்து வந்து விற்பனை செய்து நமக்கும் கொடுக்கிறார்கள். அவர்களுடைய வருவாயையும் பெருக்கு கிறார்கள். அந்தத் துறையில் என்ன தவறுகள் நடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். வலைகள் கொடுப்பதிலே, விசைப் படகுகள் கொடுப்பதிலே, கட்டுமரங்கள், மோட்டார் படகுகள் கொடுப்பதிலே அதற்கென்று தனியாக ஒரு ரேட் வைத்து இருக்கிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வெளியிலே தனியார் துறையில் கோல்டன்பிஷ் நிறைய வளர்க்கப்பட்டு வருகிறது. அதை நாமும் ஏன் செய்யக் கூடாது? இந்த கோல்டன் பிஷ் இனத்தைப் போன்று புதிதாக ஒரு வகை மீனைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அது குறுகிய காலத்தில் 3 அல்லது 6 வார கால அவகாசத்துக் குள் அதிக வருவாய் தரக்கூடிய அளவுக்கு இருக்கிறது. அதுபற்றி வெளி நாட்டிலிருந்து வந்து நமக்குச் சொல்லிக் கொடுக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது. நாம் அதற்கு எந்த அளவுக்கு முயற்சி எடுத்து இருக்கிறோம்? நம்முடைய இலாக்கா என்ன முயற்சி அதற்கு எடுத்து இருக்கிறது? ஒரு குறிப்பிட்ட அளவில் அந்த மீனவர்கள் இதை எவ்வளவு பயன்படுத்தி இருக்கிறார்கள் என் பதைப் பார்க்க வேண்டும். நம்முடைய யோசனையை எந்த அளவுக்கு அவர்கள் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருக்கிறார் கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பால்வளத் துறையில் பல கோளாறுகள் இருக்கின்றன. அமைச்சரவர்கள் அதை உரிய முறையில் கண்டுபிடித்து குறை பாடுகள் இல்லாமல் நிறைவான அளவுக்கு தரம் உள்ள பாலாக வும் இருக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். கார்

1989 மே 2] [திரு. கோ. பூவராகன்]

நடைத் துறையிலே பங்கு கொண்டிருக்கிற அத்தனை தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குறைபாடுகளைப் போக்குவதற்கும், அவர்களுக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வு வழங்குவதற்கும் ஆவன செய்ய வேண்டும்.

அதுபோல் தாலுக்காவில் இருக்கின்ற மருந்தகங்களுக்கு மருந்து கொடுக்கும்போது ஒருவர் பொறுப்பிலே அதைக் கொடுக்கிறார்கள். அவர் தான் மருந்தை வைக்கிறார்; அவர் தான் மருந்தைக் கொடுக்கிறார். மருந்து வாங்குவது ஒருவர், கொடுப்பது ஒருவர் என்று ஏன் வைக்கக்கூடாது? அவரே வைத்துக் கொண்டு அவரே மருந்து கொடுப்பதால் தவறு நடக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முடித்து விடுங்கள்.

திரு. கோ. பூவராகன்: அமைச்சரவர்கள் அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய வார்த்தையை முடித்து அமர்கிறேன்.

திரு. டி. கே. பழனிச்சாமி: வணக்கத்துக்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பால் வளம், மீனளம், கால்நடை பராமரிப்பு ஆகிய மூன்றும் திருவொற்றியூர் தொகுதியில் இருக்கின்ற காரணத்தால் நான் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததுணைத் தலைவரவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். திருவொற்றியூர் தொகுதியில் மாதவரம் பால் பண்ணை இருக்கிறது. அந்தப் பால் பண்ணையில் 9 ஆண்டுக்காலமாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு—தமிழினத் தலைவர் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்—500 பேருக்கு வேலை வாய்ப்பை அளித்து இருக்கிறார்கள். அதற்கு பலதடவை நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். மேலும் அதே பால் பண்ணையில் 300 ஓய்வு நேரப் பணியாளர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் படவில்லை. அதைப்பற்றி நம்முடைய பால்வள அமைச்சர் அவர்களிடத்திலே பேசி இருக்கிறேன். அவர்களை விரைவிலே எடுத்துக்கொள்வதாகக் கூட வாக்குறுதி அளித்து இருக்கிறார்கள். அது நிறைவேறும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருக்கிறது. அமைச்சரவர்கள் நல்ல இளைஞர், சுறுசுறுப்பாகச் செயலாற்றக் கூடியவர். அதைச் செய்வார் என்ற நம்பிக்கையோடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, 14 பேருக்கு அந்தப் பால் பண்ணையில் வழக்குகள் இருக்கின்றன. ஆனால் சம்பளம் கொடுக்கிறார்கள் எவ்வளவு விசித்திரமான காரியம் அந்த அதிகாரிகள் செய்கிறார்கள். அந்த 14 பேர்மீது வழக்குகள் இருக்கின்றன. ஆனால் வேலை இல்லை. வேலை இல்லாதவர்களுக்கு சம்பளம் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுங்கள் என்று தான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. டி. கே. பழனிச்சாமி] [1989 மே 2

நம்முடைய மாதவரம் பால் பண்ணையில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் சொந்தமான இடம் காலியாக அநியாயமாகக் கிடக்கின்றது.

[பிற்பகல் 1-50]

பல கோடி, இலட்சம் பெறுமானமுள்ள கட்டிடங்க ளெல்லாம் அனாதையாகக் கிடக்கின்றன. அதை அமைச்சர்கள் பார்த்து இருக்கிறார்கள். விரைவில், பல கோடி ரூபாய் பெறு மானமுள்ள அந்தக் கட்டிடங்களில் நல்ல தொழிற்சாலைகளை, நல்ல தொழில் பட்டறைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு அந்த இடத்திலே வேலை வாய்ப்பு கிடைக்குமென்ற ஒரு நம்பிக்கையைத் தெரி வித்துக்கொள்கிறேன். தயவுசெய்து, அமைச்சரவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது, விரைவில் மீண்டும் அந்த இடத்தை, பால் பண்ணையைப் பார்வையிட்டு, அந்தக் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள, வீணாகக் கிடக்கின்ற கட்டிடங்களில் நல்ல தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டும். தொழிற்சாலை இல்லை என்று சொன்னால் ஒரு தொழில் நுட்பக் கல்லூரியையாவது ஆரம்பிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாந்தோப்பு இருக்கிறது பால் பண்ணையிலே, இதில் மிகப் பெரிய கொள்ளை நடக்கிறது. அமைச்சருக்கே நான் மனு கொடுத்திருக்கிறேன். அது எப்பொழுதோ ஆண்டுக்கு ஒருமுறை தான் அந்த மாந்தோப்பை ஏலம் விடு வார்கள். ஆனால் கவர்னர் ஆட்சியிலே, இதற்கு முன் பிருந்த ஆட்சியிலே மூன்றாண்டுக் காலமாக ஒரு தனி நபருக்கு அந்த மாந்தோப்பை விட்டிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் வருகை தந்து, அந்த ஏலத்தை விட வேண்டுமென்று உத்தர விட்டபொழுது, இந்த அதிகாரிகளே அந்தக் காண்ட்ராக் டருக்குச் சொல்லி, கோர்ட்டிலே சென்று ஸ்டே வாங்கு வதற்கு வழிமுறையை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

பால் டெப்போ லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது முன் பிருந்த ஆட்சியிலே. பால் டெப்போ லைசென்ஸ்களை யாருக்குக் கொடுப்பார்கள் என்றால் மிலிடரிக்காரர்களுக்கு, ஊனமுற்ற வர்களுக்குத்தான். ஆனால் அரசியல்வாதிகளுக்கு அந்தப் பால் டெப்போக்கள் கொடுக்கப்பட்டுவந்திருக்கின்றன. அதன் காரணமாக, அந்தப் பால் டெப்போ விலிருந்து, ஏழை எளிய மக்களுக்கு, நியாயமான முறையிலே பால் செல்வது இல்லை. அந்தப் பால் டெப்போவிலேயிருக்கின்ற ஒட்டுநர்களுக்கே பாலை விற்கின்றார்கள்; கல்யாணச் சத்திரங்களுக்குப் பாலை விற்கின் றார்கள். ஆகவே ஏற்கெனவே முறைகேடாகக் கொடுக் கப்பட்டிருந்த பால் டெப்போ லைசென்சுகளை ரத்து செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகி றேன்.

அடுத்து ஒரு அன்பான வேண்டுகோள், இப்பொழுது சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு நமது அமைச்சரவர்கள் கொடுத் தார்கள். நானெல்லாம் சுகர் கம்ப்ளெயின்ட் உள்ளவன். என்னை இனிப்பைத் தின்னச் சொல்லிவிட்டார்கள். பால் கொடுத்தார்கள்; இனிப்பான பால்; பால் கோவா கொடுக்கப் பட்டது; ஐஸ் கிரீம் கொடுத்தார்கள். நான் இனிப்பு தின்னா தவன். அதே மாதிரி மீன் இலாக்கா அமைச்சர் இன்றைக்கு அமர்ந்திருக்கிறார்கள். மீன் வறுத்துக் கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அதை அவர் செய்யவில்லை. அடுத்த முறை செய்வார் என்று நினைக்கிறேன்.

திருவொற்றியூரிலே மிகப் பெரிய மாட்டுச் சந்தை இருக் கிறது. உங்களுக்கெல்லாம் தெரியும். சென்னைமாநகரத் திற்குப் பால் விற்பனை ஆகிறது என்றால் திருவொற்றியூரி லுள்ள மாட்டுச் சந்தையிலிருந்துதான் வருகிறது. ஆயிரக் கணக்கான மாடுகள் அங்கே இறக்குமதி செய்யப்படுகிறது. அந்த மாடுகளைக் கட்டுவதற்கு நவீனமான ஒரு இடத்தைக் கட்டியாக வேண்டும். அதன் மூலமாகப் பால் பஞ்சத்தைத் தீர்ப்பதற்குத் தகுந்த இடமாக திருவொற்றியூர் நகரத்தை ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆயிரக் கணக்கிலே தினம் மாடுகள் இறங்குகின்றன; ஆயிரக்கணக்கிலே மாடுகள் விற்பனை ஆகின்றன. அதற்குத் தகுந்த பாதுகாப் பான இடம் அங்கே இருக்கிறது. அந்த இடத்தை உடனடியாக மாற்றி, நவீன மாட்டுச் சந்தையை அங்கே ஏற்படச் செய் வதற்கு வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சொசைட்டிகள் மூலம் மாடுகள் வாங்குவதற்கு அங்கே தான் வருகிறார்கள். அங்கே இடைத்தரகர்கள் நிறைய இருக்கிறார்கள். மாடு வாங்கக் கூடிய உண்மையான விவசாயி களுக்கு மாடு போய்ச் சேருவது இல்லை. அவன் 50 ரூபாய், டாக்டர் கொஞ்சம், இவன் கொஞ்சம் என்று போட்டுத் தின் கிறார்கள். கடைசியிலே கிழட்டு மாட்டை வாங்கிச் சென்று விடக்கூடிய நிலையில் நிறையப் பணத்தைக் கறந்து விடுகிறார் கள். அப்படி மிகப் பெரிய ஊழல் நடந்து கொண்டிருக்கிறது. அதை விசாரித்தாக வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கடலரிப்பு பற்றிச் சொல்ல வேண்டும். திருவொற்றி யூர், எண்ணூர் போன்ற பகுதிகளில் கடலரிப்பால் இன்றைக்கு அந்த மீனவச் சமுதாயமே வீடில்லாமல் தவித்துக்கொண்டிருக் கிறார்கள். அப்படிப்பட்ட கடலரிப்பு சம்பந்தமாக நான், நகராட்சி மன்றத் தலைவன் என்ற முறையிலே பல தீர்மானங் களைப் போட்டு, நமது கவர்னர் அவர்களை அணுகி மகஜர் கொடுத்த பிறகு, 50 இலட்சம் ரூபாயிலே கல் இறக்கப் பட்டிருக்கிறது. அது போதாது. கொச்சியிலே, பம்பாயிலே இருப்பதைப்போல, நல்ல தடுப்புச் சுவர் கட்டினால்தான்

அந்த மீனவச் சமுதாய மக்கள் திருவொற்றியூரிலும், எண்ணூரிலும் வாழ முடியும் என்பதை கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். உடனடியாக இந்தத் திட்டத்தை அமைச்சர் பெருமகனார் கொண்டு வர வேண்டுமென்றும், மீனவச் சமுதாய மக்களை வாழ வைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இராயபுரத்திலே இருக்கின்ற மீனவர்களுக்கும், திருவொற்றியூர், எண்ணூர் போன்ற இடங்களிலே இருக்கக்கூடிய மீனவர்களுக்கும் அடிக்கடி சண்டை வருகிறது. அநியாயமாக வெட்டு, குத்து நடக்கிறது. அது கனம் உறுப்பினர் திரு. மதிவாணன் அவர்களுக்குக்கூடத் தெரியும். ஏனென்று சொன்னால், இராயபுரத்தில் இருக்கக்கூடிய மீனவ மக்கள் லாஞ்ச் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் திருவொற்றியூர், எண்ணூர் போன்ற இடங்களிலுள்ள ஏழை எளிய மீனவ மக்கள் கட்டுமரம் வைத்திருக்கின்றார்கள். அந்தக் கட்டுமரத்தை வைத்து ஓரமாகப் பிடித்தால்தான் மீன் கிடைக்கும். ஆனால் லாஞ்சை வைத்திருக்கக்கூடியவர்கள் என்னவென்றால்—சட்டம் முன்பு கலைஞர் ஆட்சியிலே எப்படியிருந்தது என்று சொன்னால், அதாவது ஐந்து கிலோ மீட்டருக்குப் பிறகு தான் லாஞ்சிலே மீன் பிடிக்க முடியும்; ஆனால் கடந்த ஆட்சியிலே அதைத் தளர்த்தி விட்டார்கள். அதன் காரணமாக லாஞ்ச் வைத்திருக்கும் பணக்கார மீனவச்சமுதாய மக்கள் கடலோரமாகப் பிடித்ததின் காரணமாக, கட்டுமரத்தை வைத்துப் பிழைக்க முடியாமல் இவர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அது போல் முன்பு கலைஞர் ஆட்சியில் இருந்ததை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே விவசாயிகளுக்கு எவ்வளவோ கடன்களை நம்முடைய கலைஞர் அவர்கள் ஆட்சியில் தள்ளி வைக்கிறோம். விவசாயிகளைப் போல மீனவச் சமுதாய மக்களும் தொழிலாளர்கள் தான். அவர்கள் கோ-ஆப்பரேட்டிவ் சங்கங்களில் கடன் வாங்கி கட்ட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். தினசரி கடலுக்குப் போனால் தான், மீன் பிடித்தால் தான் அவர்கள் வயிற்றுக்குச்சோறு கிடைக்கும். அவர்கள் எங்கேயிருந்து கடன் கட்ட முடியும? ஆகவே அவர்கள் வாங்கியிருக்கிற கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முன்பு கலைஞர் அவர்கள் ஆட்சியில் ஆலோசனை போர்டு என்று இருந்தது. அந்த ஆலோசனைக் குழுவில் உறுப்பினர்களாக மீனவச் சமுதாயத்தினரைப் போட்டு அந்தக் குழுவை அமைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு செகண்ட்டில் முடித்து விடுகிறேன். இந்த லாஞ்ச் — கட்டுமரப் பிரச்சினை பற்றி சொன்னேன், அது கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும். அடுத்து பால் வளத்துறை

1989 மே 2] [திரு. டி. கே. பழனிச்சாமி]

அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஐந்தரைக் கோடி தமிழ்ச் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாள் ஜூன் மூன்றாம் தேதி வருகிறது. அந்த மூன்றாம் தேதியன்று பால் வளத்துறை சார்பில் ஒரு லிட்டர் பால், கார்டு வைத்திருப்பவர்களுக்கு இனாமாகக் கொடுக்க வேண்டுமென்று பால்வள அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இறுதியாக, பேராசிரியர் பொன்னுசாமி அவர்கள் பேசுவார்கள். 10 நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டும்.

*பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையைத் துவக்குகிறேன். இந்த நிதியாண்டில் 11 லட்சம் ரூபாய் செலவில் புதியதாக 10 கால்நடை மருந்தகங்கள் தொடங்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்றை என்னுடைய மருங்காபுரி தொகுதியில் வளநாடு அல்லது புத்தாநத்தம் ஆகிய ஊர்களில் அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துப் பேச விழைகிறேன்.

பொதுவாக நாம் நீண்ட காலமாகச் சொல்லி வந்தது வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்பதைத் தான். இந்த ஆண்டில் கூட நம்முடைய நிதிநிலை அறிக்கையில், அதுவும் இந்த மானியத்தின் மீது அறிவித்திருப்பதை நினைத்து நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

European Economic Community Development என்று சொல்கிற பொருளாதார வளர்ச்சிக் குழுவின் நிதியுதவியின் அடிப்படையில் சேலம், தர்மபுரி, தென்னாற்காடு, வடாற்காடு, செங்கை — அண்ணா, ஆகிய மாவட்டங்களில் மட்டும் புதியதாக ஆடு வளர்ப்புத் திட்டத்தை அறிவித்திருக்கிற அரசு தெற்கு மாவட்டங்களை அறவே மறந்து விட்டதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். தெற்கு மாவட்டங்களில் ஏதாவது ஒன்றையாவது இந்த ஆண்டு சோதனைக்காகவாவது எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன்.

கால்நடை மருந்தகங்களைப் பொறுத்தவரையில் இன்றைக்குப் பல கால்நடை மருந்தகங்களில் மருத்துவர்கள் இல்லாத நிலை இருக்கிறது. அல்லது தேவையான மருந்துகள் இல்லாத நிலை இருக்கிறது. இதற்கான நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும். கால்நடைகளுக்கு அனைத்தும் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். நடமாடும் கால்நடை மருத்துவமனைகள் இன்னும் அதிகப்படுத்தப்பட்டால் கிராமங்களில் இருக்கிற கால்நடைகளுக்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கிலாந்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு முன்பாகவே தமிழகம் தான் அதற்கு முன்னோடியாக தொடங்கியது என்ற கருத்தின் அடிப்படையில் மறைந்த முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசோடு பேசி தமிழகத்தில் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் துவங்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுகிற தொடர் நடவடிக்கைகளில் இந்த அரசு உடனடியாக ஈடுபட வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை இங்கே முன் வைக்கிறேன். கால்நடை மருத்துவர்கள் நிச்சயமாக சித்த மருத்துவர்களோடு உடன்வைத்துப் பார்க்கப் பட வேண்டும். அவர்களுக்கு எந்த ஊதியம் தரப்படுகிறதோ அந்த அளவிற்கு ஊதியம் இவர்களுக்கும் தரவேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதை இந்த அரசு கவனிக்க வேண்டும். 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியும் எந்த விதமான பதவி உயர்வும் இல்லாமல் இருக்கிற அவர்களை 'அசிஸ்டென்ட் டைரக்டர்' என்று போடுவதைப்போல 'சிவில் வெட்டரினரி சர்ஜன்ஸ்' என்று பதவி உயர்வைக் கொடுத்து அவர்களுக்கு ஆதரவு தரவேண்டும் 'அசிஸ்டென்ட் டைரக்டர்' நிர்வாகப் பணிகளை மட்டும் செய்து கொண்டிருக்காமல், அவர்கள் தாங்கள் படித்த கல்விக்கு ஏற்ற பணியைச் செய்கிற வகையில் மருத்துவப் பணியில் அவர்களை ஈடுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2-00)

கலப்பினத்தைப் பற்றி இங்கே ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அந்த விளக்கம் சரியான விளக்கமாக இல்லை. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குச் சரியான விளக்கத்தை பதிலுரையில் தருவார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால், இந்த விளக்கத்தில் தந்திருப்பதைப் போல மரபியல் முறைப்படி பார்த்தால் ஏறத்தாழ 50 விழுக்காடு நம்முடைய உள்ளூர் இனமே வருகிற வகையில் அது கூறப்பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் வேறாக இருக்கிறது. நல்லமுறையில் இருக்கிறது. இதிலே உள்ள குறைபாடுகளைக் களையவேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

கருவூட்டல் என்ற நிலை வருகிறபோது, செயற்கை முறையில் கருவூட்டுகிற அந்த நிலைமை இப்போது தமிழ்நாடு முழுவதும் பயன் அளிப்பது நமக்கு எல்லாம் தெரியும். ஆனால் இப்போது அரசு ஒரு புதுத் திட்டத்தை இங்கே அறிவித்திருக்கிறது. பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த 100 பேர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களைக் கிராமப் புறங்களில் செயற்கை முறை கருவூட்டலுக்குப் பயன் படுத்த போவதாகவும், இதை சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்

கீழே கொண்டுவருவதாகவும் இந்த அரசு குறிப்பிட்டு இருக்கிறது. ஆனால் அதற்கு 5 ரூபாய் கட்டணம் என்றும், அதற்கு மேலே அவர்கள் லாபம் வைத்துக் கொள்ளலாம் என்றும் ஒரு முறையைக் கொண்டுவருவதாக கொள்கை விளக்கக்குறிப்பிலே இருக்கிறது. இப்போது கன்றுக்குட்டிகள் எவ்வளவு வருகின்றன என்ற அளவினைப் பார்த்தால் ஏறத்தாழ 24 விழுக்காடுதான் கிடைக்கிறது. கிராமத்திலேயிருக்கிற மக்கள் கன்றுக்குட்டிகள் வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிற நேரத்திலே இப்படி கத்துக்குட்டிகளை அனுப்பி வைத்தால், தேவையில்லாத விளைவுகள் ஏற்பட்டுவிடுமே என்ற அச்சத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சென்னை, நாமக்கல் போன்ற இடங்களில் இருக்கிற கால் நடை மருத்துவக் கல்லூரிகளில் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. பயிற்சி பெற்ற அல்லது தகுதி வாய்ந்த பேராசிரியர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட தகுதி பெற்றவர்கள் கால்நடை பராமரிப்புத்துறையிலே இருக்கிறார்கள். இவர்களுக்கு மாறுதல் கொடுத்து, நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக அவர்களைப் பயன்படுத்தி, கால்நடைக் கல்லூரிகளில் அந்தப் பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

ராணிப்பேட்டையில் ஐ.வி.பி.எம். என்று ஒரு நிலையம், அதாவது Institute of Veterinary Preventive Medicine செயல் பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த நிலையத்திலே கோமாரி தடுப்பு மருந்துக்கும், மேராக்ஸ் தடுப்பு மருந்துக்கும் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் செயல்முறைத் திட்டத்திலே இதைப் பற்றி எதையும் கூறவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்களுடைய பதில் உரையில இதற்கான விளக்கத்தை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து Canmine distemper Vaccine என்ற ஒரு வேக்சினைத் தயாரிக்கிறார்கள். அதற்கு ரூ. 1.42 இலட்சம் செலவழிக்கப் படுகிறது. உருவாக்கப்படுவதோ 1500 டோஸ்கள் மட்டுமே, அதையும் 10 ரூபாய் விலையில் விற்பனை செய்கிறார்கள். ஆகவே 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யக்கூடிய மருந்தை 1.42 லட்சம்ரூபாய் செலவிலே தயாரித்து நகர்ப்புறத்திலே இருக்கிற நாய்களுக்கு மட்டும் இதைப் பயன்படுத்துகிற இந்தத் திட்டத்தை அரசு கொண்டு வந்திருப்பதாக அல்லது செயல்படுத்திக் கொண்டிருப்பதாக கொள்கை விளக்கத்திலே கூறப்பட்டு இருக்கிறது. தயவு செய்து இந்தத் திட்டம் பயன் அளிக்குமா என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு செய்தியை இங்கே நான் தெரிவித்தாக வேண்டும். ஆட்டம்மைத் தடுப்பு மருந்து பற்றி இங்கே பேசினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால்நடை மருத்துவராகப் பணியாற்றிய நேரத்திலே இது நிகழ்ந்தது என்பதை நான் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். புதுக்கோட்டை மாவட்டத்திலேயும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் ஏறக்குறைய 1,500 ஆடுகள், செம்மறி ஆடுகள் இறந்து போய்விட்டன. இதிலேயும் நாம் கவனிக்க வேண்டிய விஷயம், ராணிப்பேட்டையில் உற்பத்தியான அந்த வேக்சைன் குறியீட்டளவு 5 லட்சம் என்று சொன்னார்கள். ஆனால் உற்பத்தி செய்தது 99 ஆயிரம் மட்டுமே. இந்த 99 ஆயிரம் டோசை உற்பத்தி செய்து, அதை வெளியிலே அனுப்பியபோது, அதைப் பயன்படுத்திய நேரத்திலே ஏறத்தாழ 50 ஆயிரம் செம்மறி ஆடுகள் இறந்துவிட்டதாகச் செய்திகள் பரவியிருக்கின்றன. அந்த வேக்சைன் திரவ நிலையில் முதலிலே பயன்பட்டபோதே, அது திறனற்றது என்று சொலலிக் கொண்டார்கள். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை. இதை உலர் உறை வடிவில் பயன்படுத்தினார்கள். இப்படிப் பயன்படுத்துவதற்கு மருந்துக் கட்டுப்பாடு அலுவலர் அனுமதி அளித்திருக்கிறார்கள் என்பதையும் ஐ.வி.ஆர்.ஐ. தர நிர்ணயம் பெறப்பட்டதா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த வேக்சைன் குறிப்பிட்ட ஒரு திசுவிலிருந்து உருவாக்கப்பட வேண்டும் என்பதற்குப் பதிலாக யாருடைய அனுமதியையும் பெறாமல் வேற்று திசு ஒன்றிலிருந்து உருவாக்கப்பட்டதால்தான் இங்கே திசு ஒவ்வாத் தன்மை என்று சொல்வார்களே, incompatibili y cf the tissue—அது ஏற்பட்டு, அந்த அடிப்படையில் ஆடுகள் இறந்து விட்டன என்பது உண்மையா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறார்கள். இந்தத் தவறுக்கு யார் பொறுப்பு என்பதைக் கண்டறிந்து, அதன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அல்லது தவறுக்கு யார் பொறுப்பு என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால, அப்படி எடுத்த நடவடிக்கை என்ன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

ராணிப்பேட்டையில் உள்ள அந்த ஐ.வி.பி.எம். Ins'it te of Veterina y Preven'ive Medicine மூன்று துறைகளைக் கொண்டது. மூன்று பிரிவுகளைக் கொண்டது. நோய் ஆய்வுப் பிரிவு. தடுப்பு மருந்து உற்பத்திப் பிரிவு, தரக்கட்டுப்பாடு—சோதனை செய்து தருகிற பிரிவு இந்த மூன்றும் ஒரே கோட்டையின் கீழே அமைந்திருக்கிறது. அதற்கு இருக்கிற டைரக்டர் ஒருவர்தான்

1989 மே 2] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

அந்த டைரக்டர் பணி மாற்றுதல் செய்யப்பட முடியாதது. non-transferable post. நோய் நாடுவதும் நீ, அந்த நோய்க்குத் தடுப்பு மருந்து உருவாக்குவதும் நீ, அதனுடைய தரத்தை நிர்ண யிப்பதும் நீ என்ற அளவிலே அதிகாரத்தைக் கொடுத்ததால் தான உள்ளபடியே தரம் குறைந்து காணப்படுகிறது. இந்தத் தவறுகள் நடைபெறுவதற்கு இப்படிப்பட்ட வாய்ப்புகளும் இருக்கிறதே என்பதை எடுத்துச் சொல்லி, இதைக் கேட்பதற்கு ஆள் இல்லாத நிலை இருப்பதை மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் பேசும்போது மட்டும் மணி அடித்தவுடனே, மைக் ஆப் ஆகி விடுகிறது. இந்த இரண்டு நிமிடத்தில் நான் முடித் திருப்பேன்.

சோதனைப் பிரிவையும், நோய்ப் பிரிவையும் ஒன்றாக ஆக்கி, அதை டைரக்டர் ஆப் அனிமல் ஹஸ்பண்டரி என்று இங்கே இருக்கின்ற அந்த இயக்குநருடைய கட்டுப் பாட்டின் கீழ்க் கொண்டு வந்தால், நிச்சயமாக அது நல்ல பலன் தரும் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்.

அடுத்து சாத்தூரிலே இருக்கின்ற ஆட்டுப் பண்ணையை கால்நடைப் பண்ணையாக, தயவு செய்து மேம்படுத்தித் தாருங் கள் என்று கேட்டுக் கொண்டு, அத்தோடு கூட, மீனவர்கள் பற்றி இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் கள் சொன்னார்கள். ''சென்ற அரசு, 'லாஞ்ச்' என்று சொல் கின்றோமே, அந்த விசைப் படகுகள் எந்த அளவிற்கு எவ்வளவு காலத்திற்கு மீன் பிடிக்கலாம் என் ஆணையைத் தளர்த்திக் காட் டியது'' என்பதை நான் வன்மையாக மறுக்கிறேன் என்பதையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 17—9—79-ல் தான் எந்த அளவிற்கு, எந்த கால அளவிற்கு, எவ்வளவு தூரத் திற்கு விசைப் படகுகள் மீன் பிடிக்கலாம் என்பதற்கான அரசு ஆணை முந்தைய அரசால் இங்கே வெளியிடப்பட்டது என்ற உண்மையைச் சொல்லி, அதை வேண்டுமானால் சட்டப் பூர்வ மாகக் கொண்டு வருவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கலாம் என்ற கருத்தையும் சொல்லி, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினத்தில் பல்வேறு உறுப்பினர்கள் பால் வளத்தைப்பற்றியும், கால்நடை பற்றியும் விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். அப்படிப் பேசிய உறுப்பினர் கள் நிறைய பேர் கால்நடையைப் பற்றி மட்டும் பேசிவிட்டு, பால்

[திரு கே. என். நேரு] [1989 மே 2

வளத்தைப் பற்றிப் பேசாமலேயே அமர்ந்து விட்டார்கள். ஒரு வேளை அவர்கள் எல்லாம் தமிழகத்தில் பால் வளம் மிகவும் நன்றாக இருக்கிறது என்ற காரணத்தால் அதைப் பேசாமல் விட்டு விட்டார்களோ என்று நினைக்கிறேன். இங்கே பேசிய மற்ற உறுப்பினர்கள், பனைமரத்துப்பட்டி அண்ணன், மாண்புமிகு உறுப்பினர் திரு.சிவலிங்கம் அவர்கள் கால்நடைத்தீவனத் தொழிற் சாலை ஒன்றை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். மதுரையில் இந்த வருடம் முதல் உற்பத்தி துவங்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர்கள் எல்லாம் விவசாயிகளுக்கு, பால் உற்பத்தியாளர்களுக்கு சரியான நேரத் தில் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்று அதை ஒரு குற்றச்சாட்டாக இங்கே எடுத்துக் கூறினார்கள். இப்போது நடைமுறையில் இருக்கிறது. ஒவ்வொரு பால் உற்பத்தியாளர் சங்கத்திலும் 10 நாளைக்கு ஒரு முறை பணம் பட்டுவாடா செய்ய வேண்டுமென்ற குறிப்பு இருந்தாலும், கடந்த வருடம் சென்னை யில் பால் தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தால் உற்பத்தி செய்யப்பட்ட பால் பவுடரை விற்கக்கூடாது என்று ஒரு சட்டத்தை இயற்றி, இன்றைக்கு 3,000 டன் பால் பவுடர் கையிருப்பில் இருக்கிறது. அதிலே அவர்களுக்குப் பணம் போத வில்லை. மத்திய இணையத்திலேயிருந்து அவர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்து, அவர்களே விவசாயிகளுக்குப் பணம் பட்டு வாடா சரியாகச் செய்கிறார்கள் என்று எனக்குத் தெரிய வரு கிறது. இருந்தும், உறுப்பினரவர்கள் சொன்னதை எல்லாம் ஆய்வு செய்து நிச்சயமாக அது போன்று பணம் பட்டுவாடா செய்யப்படாமல் இருந்தால், உடனடியாகப் பணம் பட்டுவாடா செய்ய ஆவன செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரி வித்துக்கொள்கிறேன்.

மற்றும் இங்கே பேசிய அண்ணன் திரு.பூவராகன் அவர்கள் பால் உற்பத்தியாளர் சங்கங்களில் பல குறைபாடுகள் இருப்பதாக எடுத்துக் கூறினார்கள். அவர்கள் கூறிய குறைபாடுகள் எல்லாம் முறைப்படி ஆய்வு செய்யப்பட்டு, அவைகள் எல்லாம் களையப் படும் என்பதை இந்த நேரத்தில் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு.சிங்காரம் அவர் கள் பால் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் பணம் பட்டுவாடா சரியாகச் செய்யவில்லை, அவர்களே பணத்தை எல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தை எல்லாம் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், அவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங் காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 2-10]

இங்கு பேசிய உறுப்பினர்களிலேயே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.கே. ஏ மணி அவர்கள் தான் பால் பண்ணையைப் பற்றி முழுவதுமாகச் பேசியிருக்கிறார்கள். பால் உறபத்தி செய் ஏறவர்களே பாலின் விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று

1989 மே 2] [திரு. கே. என். நேரு.]

இங்கே குறிப்பிட்டுக் கேட்டிருக்கிறார்கள். அதே போல அரசாங்கத்திற்கு ஒரு வருடத்திற்கு 80 கோடிக்கு மேலே பணம் லாபம் கிடைக்கிறது என்பதை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். 4.5 சதவீதம் கொழுப்புச் சத்துள்ள பாலுக்கு 3.64 காசு கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டு அதே போல் பால் உற்பத்தியாளர் சங்கத்திலே விலையும் விவசாயிகளுக்குக் கொடுக்கப் கப்படுகிறது. அங்கே அவர்களுடைய போக்குவரத்துச் செலவும் அங்கே குளிரூட்டும் செலவும் சேர்ந்து அங்கிருந்து மத்திய இணையத்திற்கு வரும் போது இங்கே மீண்டும் குளிரூட்டப்பட்டு இங்கே வினியோகிக்கப்படும்போது பாலினுடைய விலை 5 ரூபாய் 5 காசு வந்து விடுகிறது. ஆனால் இங்கே பால் வினியோகிக்கப்படுவது 5 ரூபாய் என்று தான் வினியோகிக்கப்படுகிறதே தவிர அதனால் இந்த அரசாங்கத்திற்கு எந்தவிதமான லாபமும் கிடைக்கவில்லை. எப்படி 5 ரூபாய்க்கு, 5 காசு நஷ்டத்திற்குப் பாலை வினியோகிக்கிறார்கள் என்றால், 2.2 லட்சத்திற்கு மேல் ஆவின் பூத்துகளிலும், அதே போல் பால் டப்புகளின் மூலம் சப்ளை செய்வதிலேயும் 11 காசு குறைவாக செலவு ஏற்படுகிற காரணத்தால் வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருக்கிறது. எந்தவிதமான லாபமும் கிடைக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும், அவர்கள் கொடுத்திருக்கின்ற நிபந்தனைகளை எல்லாம் இந்த அரசு ஏற்று உடனடியாக அனைத்துச் சங்கங்களுக்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்று இங்கே கேட்டுக் கொண்டார்கள் அது முறைப்படி ஆய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. நிச்சயமாக 3-வது பால் பெருக்குத் திட்டம் ஆரம்பிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும். அனைத்துச் சங்கங்களுக்கும் தேர்தல் நடைபெறுவதற்கான ஒரு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அவர்கள் கோரிய மற்றைய இரண்டொரு கருத்துக்களையும் எவ்வாறு நிறைவேற்றலாம் என்று அதிகாரிகள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக 3-வது பால் பெருக்குத் திட்டம் இந்த வருடத்திலே ஆரம்பிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் உற்பத்தியாளர்களுக்கு வருடம் முழுவதும் லாபகரமான விலையை வழங்கவும் நுகர்வோருக்கு தரமான பால் மற்றும் உப பொருட்கள் நியாயமான விலையில் வழங்குவதுமே பால் வளத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

செயல்பட்டு வரும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டிலே மொத்தம் 6,420. அதிலிருந்து மொத்தம் உற்பத்தியாகக் கூடிய மொத்த பாலினுடைய அளவு14.70 லட்சம் லிட்டர்.

மேலும் இந்த வருடத்தில் ஆதி திராவிடர்களுக்கும், பெண்களுக்கும், மீனவர்களுக்கும் என்று தனித் தனியாக 50 சங்கங்கள் மேலும் புதியதாக ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். இந்த வருடத்தில் 14.70 லட்சம் லிட்டராக இருக்கும் பால் உற்பத்தியை 17 லட்சம் லிட்டராக உயர்த்துவதற்கு இந்த அரசு முனைந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல தற்போது செயல்படாது இருக்கிற சங்கங்களை எல்லாம் எவ்வாறு செயல்பட வைப்பது என்பதைப் பற்றி ஆய்வு செய்து அவை செயல்பட வைக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கறவை மாடுகளின் தரங்களை உயர்த்த செயற்கைக் கருவூட்டல் முறை செயல்படுத்தப்படுகிறது. இதற்காக அமைக்கப்பட்ட கருவூல ஜெர்சி பொலி காளைப் பண்ணை, உதகமண்டலத்திலும் எருமை உறை விந்து நிலையம், ஈரோட்டிலும் சுமார் 10 லட்சம் உறை விந்துக் குச்சிகள் (எருமை ஜெர்சி உள்பட) ஆண்டொன்றுக்குத் தயாராகிறது.

சிறப்புக் கால்நடை இனவிருத்தித் திட்டத்தில் 49 ஆயிரம் கலப்பினப் பசுங்கன்றுகள் இதுவரை சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 750 லட்சம் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது. 1989-90-ல் 3,000 கலப்பினப் பசுங்கன்றுகள் 100 லட்சம் மானிய மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் நலத் திட்டத்தில் வாங்க கறவை மாடு கடன் வசதித் திட்டத்தின் கீழ், 1988-89 ஆம் ஆண்டு ரூ. 322.99 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டுக்கு ரூ. 384 லட்சம் கோரப்பட்டுள்ளது.

முதலாவது பால் பெருக்குத் திட்டத்தில் ரூ. 15.48 கோடியுவி, 2-வது பால் பெருக்குத் திட்டத்தில் ரூ. 26.26 கோடியும் செலவிடப்பட்டது. இப்போது 3-வது பால் பெருக்குத் திட்டத்தில் ரூ 68.9 கோடிக்கான பல்வேறு திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தின் முக்கியத் திட்டங்கள் :

தென் சென்னை சோளிங்கநல்லூரில் ரூபாய் 9 கோடி செலவில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் கொள்திறன் கொண்ட பால் பண்ணை அமைய உள்ளது. அதேபோல அம்பத்தூர் மற்றும் மாதவரம் பால்பண்ணையின் கொள்திறன்கள் முறையே 4 இலட்சம் லிட்டர், 1.75 இலட்சம் லிட்டர்களாக விரிவாக்கப்படும் என்பதைத் தெரிவிதந்துக் கொள்கிறேன். கிருஷ்ணகிரி, கோயமபுத்தூர் மற்றும் மதுரை பால் பண்ணைகளின் கொள்திறன்கள் 2, இலட்சம் 1.5 இலட்சம், 2 இலட்சம் லிட்டர்களாக விரிவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 மே 2] [திரு. கே. என். நேரு]

சின்னசேலம், சேத்தியாதோப்பு, திண்டிவனம், ஆம்பூர், திருவண்ணாமலை, அனக்காவூர், நாமக்கல், சத்தியமங்கலம, சங்கராண்டான்பாளையம், திருப்பூர், சுல்தான்பேட், சண்முகாபுரம், பழனி, திண்டுக்கல், தேனி, பெரம்பலூர், கரூர், ஜெயங்கொண்ட சோழபுரம், மன்னார்குடி, விழுப்புரம், திருவள்ளூர் ஆகிய இடங்களில் உள்ள பால் குளிரூட்டும் நிலையங்களின் கொள்திறன் விரிவாக்கப்படும். மதுராந்தகம், அரக்கோணம், அரூர், மொரப்பூர், மேட்டூர் ஆகிய இடங்களில் புதிய பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்கப்படும். ஈரோடு, சேலம் பால் பண்ணைகளின் கொள்திறன் 3 இலட்சம் லிட்டர்களாகவும், வேலூர் பால் பண்ணை ,1 இலட்சம் லிட்டர் கொள்திறனாகவும் விரிவாக்கப்படும். கப்பலூரில் (மதுரை) 100 டன் நாளொன்றுக்கு உற்பத்தித திறனுள்ள கால்நடைத் தீவன ஆலை நிறுவப்பெற்று வருகிறது. கது இந்த வருடம் உற்பத்தியைத் துவக்க இருக்கிறது. ஈரோட்டில் 10டன் பால்பொடி ஆலை, 30 டன் ஆலைக்குப் பதிலாக ரூபாய் 4 கோடி செலவில் அமைக்கப்படும். திருச்சியில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் கொள்திறனுள்ள புதிய பால்பண்ணை அமைக்கப்படும்.

பால் உற்பத்திப் பெருக்கத்தினால் 1994-ல் 4 இலட்சம் லிட்டர் உபரி பால் சேகரம் எதிர்பார்ப்பதால் 10 டன் பால்பொடி ஆலை ரூபாய் 6 கோடி செலவில் திருச்சியில் அமைக்கப்படும். இதேபோல் திருநெல்வேலியிலும் 10 டன் பால்பொடி ஆலை நிறுவப்படும்.

தற்போது தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தின் ரூபாய் 7 கோடி நிதி உதவியுடன் திருநெல்வேலி பால் பண்ணை 50,000 லிட்டரிலிருந்து 1 இலட்சம் லிட்டராகவும், சங்கரன்கோவிலில் 30,000 லிட்டர் பால் கொளளளவு, கோவில்பட்டியில் 10,000 லிட்டர் கொள்ளளவு குளிரூட்டும் நிலையமும் அமைக்கப்பட்டு வருகிறது.

சென்னை மற்ற மாவட்ட நகரங்களில் தற்போதைய பால் விற்பனை 9.07 இலட்சம் லிட்டர். இது 16·76 இலட்சம் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது.

சென்னையில் தற்போதைய பால் விற்பனை 5.75 லிட்டர் நாளொன்றுக்கு. இதில் 3.6 இலட்சம் லிட்டர் பால் பைகளில், 2.0 இலட்சம் தானியங்கி நிலையங்கள் மூலமாக, 0.15 இலட்சம் லிட்டர் கேன்களில். தற்போது இயங்கிவரும் தானியங்கி நிலையங்கள் 125. 1989-90-ல் புதிய 65 தானியங்கி நிலையங்கள் நிறுவப்படும்.

இதுபோல், மதுரை, திருச்சி, சேலம், கோயம்புத்தூரில் சென்னையிலுள்ளதுபோல இந்த ஆண்டு தானியங்கி நிலையங்கள் நிறுவப்படும்.

சென்னையிலுள்ள அயனாவரத்தில் ஐஸ்கீரிம், பால்கோவா, யோகர்ட் தயாராகிறது. இங்கிருந்து வெளியாகும் உபபொருட்களின் விற்பனை சுமார் ரூபாய் 5.64 கோடிக்கு சென்னையில் விற்பனையாகிறது. இங்கு தயாராகும் ஐஸ்கிரீமுக்கு நல்ல வர

வேற்புள்ளது. ஒரு புதிய இயந்திரம் ரூபாய் 8 இலட்சம் செலவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதனால் ஐஸ்கிரீம் அதிக அளவில் விற்பனைக்கு தயாரிக்கப்படும். புதிய ஐந்து சுவைகளிலும் அறிமுகப்படுத்தப்படும். இந்த விரிவாக்கத்தினால் விற்பனையை ரூபாய் 10 கோடிக்கு உயர்த்தலாம்.

பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் குறுகிய கால டெபாசிட்டுகள் கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிகளில் வைத்துள்ளன. வருமானவரிச் சட்டத்தின் கீழ் எந்த ஒரு கூட்டுறவுச் சங்கமும் மற்ற கூட்டுறவுச் சங்கங்களில் (வங்கிகள்) வாயிலாக தனது சேமிப்பிற்குக் கிடைக்கப்பெறும் வட்டிக்கு வரிவிலக்கு உண்டு. அந்தச் சங்கங்களிலிருந்து சேமிப்புகளை இணையம் பெற்று கால் சதவீதம் கூட்டுறவு வங்கிகளின் வட்டி வீதத்தைக் காட்டிலும் கூடுதலாகக் கொடுக்கலாம் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணத்தினால் சில திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

இவ்வாண்டு கோடைக்கால பால் தட்டுப்பாட்டை நீக்க இதுவரை 3,000 டன் பால்பொடி சேமித்து வைக்கப்பட்டுள்ளது. கோடைக்காலத்தில் பாலாக விநியோகிக்க இது பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கலைஞர், தமிழகத்தின் முதல்வர் அவர்கள் வாயிலாக மாதவரம் மற்றும் இருக்கின்ற பால் பண்ணைகளில் வேலை செய்கின்ற தொழிலாளிகளுக்கு இதுவரை 150 மில்லி பால் இனாமாக வழங்கப்பட்டதை—நாள் ஒன்றுக்கு—இனிமேல் தினமும் 500 மில்லி பால் அவர்களுக்கு இனாமாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதே போல இன்னும் பல திட்டங்களை எல்லாம் இங்கேபேசிய அண்ணன் திரு. கே. ஏ. மணி அவர்களும், திரு. பூவராகன் அவர்களும் சொன்னதையெல்லாம் கருத்தில் கொண்டு பால் பண்ணையில் இருக்கின்ற குறைபாடுகளை எல்லாம் நீக்கி நிச்சயமாக அவைகள் நல்லமுறையிலே நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே. பழனிச்சாமி அவர்கள் 500 பேர்களுக்கு வேலைவாய்பபைத் திருப்பிக் கொடுத்த கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள். அதே போல இன்னும் இருக்கின்ற தொழிலாளர்கள் 300 பேர்களுக்கு மீண்டும் வேலை தர வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஏற்கெனவே நன்றாக ஆய்வு செய்யப்பட்டுத்தான் 489 பேர்களுக்கு மட்டும் தான் வேலை தர முடியும் என்கின்ற காரணத்தால் அவர்களுக்குத் தரப்பட்டது. அதே போல அங்கு இருக்கின்ற மாந்தோப்பு ஏலம் விடுவதிலே பெருத்த ஊழல் நடைபெற்றிருப்பதாக திரு. டி. கே. பழனிச்சாமி அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். முறைப்படி ஆய்வு செய்யப்பட்டு அது போல ஏதாவது நடந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த வெட்டுப் பிரேரணையை நீக்கி மானியத்தை ஆதரிக்குமாறு கேட்டு அமர்கிறேன். நன்றி.

1989 மே 2]

[ பிற்பகல் 2-20 ]

*மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கால்நடை வளர்ப்பு மற்றும் மீனளத் துறையினுடைய சார்பாக இங்கே பல உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களையெல்லாம் நல்கியிருக்கின்றார்கள். முதலில் கால்நடை வளர்ப்புத் துறையைப் பொறுத்தவரை என்னுடைய பதிலுரையை அமைத்துக் கொள்கின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்த மட்டில், கால்நடைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தி, கால்நடைகளின் உற்பத்திப் பொருளாகிய பால், முட்டை, இறைச்சி போன்றவற்றின் உற்பத்தியைப் பெருக்குவது இதனுடைய நோக்கமாகும். அந்த வகையில் கால்நடை பராமரிப்புத் துறை, கால்நடைகளின் நலனைப் பேணுகின்ற வகையில் சிகிச்சை, கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் மூலம், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாக நடைபெறுகின்ற பணிகளை கிராமங்களிலுள்ள ஏழை விவசாயிகள், அதனைப் பயன்படுத்தி, அவர்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்கின்ற வகையில், இந்தத் துறை நல்ல அரிய பணியை ஆற்றுகிறது என்பதில் ஐயம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையிலே இன்றையதினம் பல்வேறு உறுப்பினர்கள கால்நடை பராமரிப்புத் துறையில் ஆங்காங்கே பல முறைகேடுகள் நடைபெறுகின்றன என்றும், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் போன்றவர்கள் பல குறைபாடுகள் நிகழுகின்றன என்றும் இங்கே எடுத்துரைத்தார்கள். அவற்றையெல்லாம் இந்தத் துறையின் மூலமாக ஆய்வு செய்து, நிச்சயமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடை பராமரிப்புத்துறையைப் பொறுத்தவரையில், கால்நடை பராமரிப்பில் மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், நம்முடைய நாட்டிலுள்ள பசுக்கள் மற்றும் எருமைகள் எல்லாம் தரமற்றவைகளாக, குறைந்த பால் உற்பத்தித் திறன் உள்ளவைகளாகவே இருக்கின்றன. அவற்றையெல்லாம் தரமுள்ள உயர்ந்த ரக, அயல் நாட்டிலிருந்து பெறப்பட்ட உயரின ஜெர்சி காளைகளைக் கொண்டும், முர்ரா இனக் காளைகளைக் கொண்டும், நம் நாட்டின் கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்கு, இந்தத் துறை அரிய பணியாற்றி வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் நாட்டிலுள்ள நாட்டினப் பசு மாடுகளின் பால் உற்பத்தித் திறன் குறைவாக 2 அல்லது 3 லிட்டரே உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். ஒரு ஜெர்சி பசு, கன்று ஈன்று, அதனுடைய கறவை காலத்தில் 5,000 கிலோபால் உற்பத்தியைக் கொடுக்கக்கூடியது அதேபோல் ஹோல்ஸ்டீன் ப்ரீஸியன்என்ற பசு இனமானது ஒரு கறவை காலத்தில் 10,000 கிலோ பால் உற்பத்தித் திறனைக் கொடுக்கக்கூடிய திறமை கொண்டது.

அந்த வகையில் இந்த இரு நல்ல தரமுள்ள உயரின ஜெர்சி மற்றும் ஹோல்ஸ்டீன் ப்ரீஸியன் காளைகளைக் கொண்டு, அதனுடைய விந்தினைப் பதப்படுத்தி, நம் மாநிலத்திலுள்ள பல்வேறு கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு, அனுப்பி திரவ விந்தாகவும், உறை விந்தாகவும் பயன்படுத்தப் படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் பல பேர் திரவ விந்துவை விட உறை விந்து நல்லமுறையில் இருக்கிறது, அனைத்து நிலையங்களுக்கும் உறை விந்துத் திட்டத்தைத் தொடங்க வேண்டும் என்று பல உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். அந்த வகையில் இந்த ஆண்டு, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய தமிழக அரசு இந்த ஆண்டு மேலும் 100 நிலையங்களுக்கு, கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு உறை விந்துத் திட்டத்தினை செயல்படுத்துகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 11 இலட்சம். இந்த நடப்பாண்டிலேயே செயல்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கடந்த காலத்தில் வெளிநாடுகளிலிருந்து நாம் உயரின ஜெர்சி காளைகளை இறக்குமதி செய்து, தஞ்சை மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டையிலுள்ள கால்நடை உயிரின கால்நடை பெருக்குப் பண்ணையிலே வைத்து, அந்த விந்தினை உறை விந்தாகவும், திரவ விந்தாகவும் பயன்படுத்தி, பல்வேறு நிலையங்களுக்கு அனுப்பி, செயற்கை முறையில் இன விருத்தி செய்து நல்ல கலப்பினக் கன்றுகளை எல்லாம் பெற்று வருகிறோம். அந்தக் காளைகள் பழைய காளைகளாக ஆகிவிட்டதால் புதியதாக இந்த ஆண்டு 40 காளைகளை வாங்குவதற்கு இந்த அரசு தீர்மானித்து, அதற்கென ரூபாய் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பொன்னுசாமி போன்றவர்கள் இந்த ஆண்டு புதியதாக கருவூட்டாளர்கள், அதாவது செயற்கை இன விருத்தி செய்பவர்கள் 100 பேருக்கு வேலை கொடுப்பதைப் பற்றி இங்கே எடுத்துக் கூறினார்கள். அதாவது கத்துக்குட்டிகளை எல்லாம் நாம் உருவாக்குகின்றோம் என்று கூறினார்கள். இந்தத் திட்டமானது நல்ல திட்டம் என்பதை நீங்கள் உணரவேண்டும்.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ 2,736 நிலையங்களில் செயற்கை முறை இன விருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதே போல் 1,017 நிலையங்களில் திரவ விந்தும், 1,719 நிலையங்களில் உறை விந்துத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது இந்த வகையில் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் செயற்கை முறையில் இன விருத்தி செய்வதன் பலனாக நல்ல கலப்பினக் கன்றுகள் பெற முடிகிறது என்பதை அனைவரும் ஒருமித்த கருத்தாக எடுத்து உரைத்தார்கள். அந்த வகையில் நாம் எவ்வாறு செயற்கை முறை இனவிருத்திப் பணியை தீவிரப் படுத்தினாலும் அனைத்து குக்கிராமங்களிலும் செயல்படுத்த

1989 மே 2] [டாக்டர் க. சந்திரசேகரன்]

முடியாத நிலையில் நாம் இருக்கிறோம். அதற்காக இந்த ஆண்டு பரிட்சார்த்தமான முறையில் முதல் கட்டமாக 100 கருவூட்டாளர்களுக்கு ஒரு மாதப் பயிற்சி தஞ்சை மாவட்டம் ஈச்சங்கோட்டை உயர் இன கால் நடை பெருக்கப் பண்ணையிலும், திருநெல்வேலி அபிஷேகப்பட்டி பண்ணையிலும் கொடுத்து அவர்கள் உறை விந்துப்பணிகளைக் கிராமங்களில் மேற்கொள்ளுவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் நல்ல திட்டம். இதைச் செயல் முறைப் படுத்திய பின்பு உறுப்பினர்கள் இதை நன்கு பாராட்டுவார்கள் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திட்டம் நல்ல திட்டம் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கடைசியில் ''பாயின்ட் ஆப் ஆர்டர்'' கேட்கலாம், அல்லது ''பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்'' கேட்கலாம். அமைச்சர் பேசும்போது குறுக்கீடு இல்லாமல் இருந்தால் நல்லது.

பேராசிரியர் க. பொன்னுசாமி : இதிலே 5 ரூபாய் என்று நிர்ணயிப்பதோடு அரசு நிற்குமானால் அது நல்ல திட்டம்தான். அந்த 5 ரூபாய் என்று ஒரு ஸ்ட்ராவுக்கு நிர்ணயம் செய்து அதற்கு மேல் அவர்கள் லாபம் வைத்துக் கொள்ளலாம் என்று ஒரு உரிமையைக் கொடுத்து இருக்கிறீர்கள். அது சரியாக செயல் படாது என்பதைத் தான் நான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ரூபாய் கட்டணம் வசூலித்து அவர்களுக்கு உறை விந்துக் குச்சிகளை வழங்குகிறோம், அவர்கள் கூடுதலாக 5 ரூபாய் மட்டுமே வசூலிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது உறைவிந்துக் குச்சிகளை லிக்யூடு நைட்ரஜன் மூலம்தான் பாதுகாக்க முடியும். அந்த லிக்யூடு நைட்ரஜன், துறையின் மூலமாக இலவசமாக அவர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் ஒரு பசு மாடு ஒரு வருடத்திற்கு எத்தனை கன்றுகள் போடும் என்ற ஒரு வினாவை எழுப்பினார்கள். ஒரு நல்ல தரமான பசு ஒரு ஆண்டில் ஒரு கன்று மட்டுமே போடும். ஆனால் வளர்ந்து கொண்டிருக்கிற இந்த நவீன விஞ்ஞான உலகத்தில் ஒரு ஆண்டில் ஒரு நல்ல தரமான பசுவின் மூலம் 6, 7 கன்றுகளைப் பெறக்கூடிய அரிய வாய்ப்பு ஒன்று உள்ளது. உறுப்பினர்கள் வியக்கக்கூடிய வகையில் இந்த ஆண்டு அந்தப் புதிய திட்டம் தஞ்சை மாவட்டம் ஈச்சங்கோட்டையில் உயர் இனக் கால்நடை

பெருக்கப் பண்ணையில் அமல்செய்யப்பட உள்ளது. அந்த வகையில் நல்ல தரமான ஒரு பசுவுக்கு சூப்பர் ஓவுலேஷன் என்ற ஒரு முறையில் 5, 6 முட்டைகளை உற்பத்தி செய்து அதற்கு செயற்கை முறையில் இனவிருத்தி செய்து அதன் மூலம் அந்தக் கருவினை வெளியே எடுத்து பதப்படுத்தி வைத்து பயனற்ற கால்நடைகளில், இத்துறையில் மிகவும் பிரச்சினை யாக உள்ள மலட்டுத் தன்மையைப் போக்குகின்ற வகையிலும் அந்த உட்கருவினை மற்ற மாடுகளுக்கு, தரம் இல்லாத மாடு களுக்குக் கருவூட்டல் செய்து அதன் மூலம் நல்ல தரமான கலப்பு இன, உயர் இனக் கன்றுகள் பெற முடியும். அந்தத் திட்டம் இந்த ஆண்டு தஞ்சை மாவட்டம் ஈச்சங்கோட்டை கால்நடை பெருக்கப் பண்ணையில் செயல்பட உள்ளது. ரூபாய் 5.42 லட்சம் அதற்காக நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டு இந்தத் திட்டம் நடப்பு ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது என்பதை நான் மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே பேசிய அனைத்து உறுப்பினர்களும் பொது வாக அவர்கள் தங்கள் தங்கள் தொகுதிகளில் கால்நடை மருந் தகங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இதன் மூலம் வளர்ந்து வருகின்ற விஞ்ஞான உலகத்திலே நம்முடைய கால்நடை மருத்துவ சிகிச்சையினுடைய முக்கியம் அதனுடைய சிறப்புத் தன்மையை நாம் அறிகிறோம். நமது மாநிலத்தில் மொத்தம் 806 கால்நடை மருத்துவ நிலையங் கள், மருத்துவமனைகள் மற்றும் பிரதம மருத்துவமனைகள் ஆகிய வைகள் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. கிளை நிலையங்கள் 2,226; நோய் புலன் ஆய்வுப் பிரிவு 11; வெட்கை நோய் சோதனைச் சாவடிகள் 13; நடமாடும் கால்நடை மருந்தகம் 50—ஆகியவை தமிழ்நாட்டில் தற்சமயம் இயங்கிக் கொண்டு வரு கின்றன.

(பிற்பகல் 2-30)

தேசிய வேளாண்மைக் கழகம் 10 ஆயிரம் கால்நடை களுக்கு ஒரு மருந்தகம் அமைக்கவேண்டும் என்று பரிந்துரை செய்து இருக்கிறது. அதன்படி நம் தமிழ் நாட்டில் இன்னும் சுமார் 700 கால்நடை மருந்தகங்கள் திறக் கப்பட வேண்டும். தற்போதைய நிதிநிலையைக் கருத்தில் கொண்டு அவ்வாறு அந்தக் குழுவினுடைய பரிந்துரையை முழுவதும் செயல்படுத்த முடியாத சூழ்நிலை இருப்பினும் இந்த ஆண்டு டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் 10 புதிய கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்த ரூபாய் 11 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள் என்பதை மிக்க பணிவன் போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்தபடியாக செம்மறி ஆடுகள் வளர்ப்புத் திட்டம் பற்றி இங்கே பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்

திரு. க. பழனிச்சாமி அவர்களும், மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி போன்றவர்களும் இந்த இ.இ.சி. பற்றிச் சொல்லும்போது வடக்கு வாழ்கிறது. தெற்கு தேய்கிறது என்று எல்லாம் சொன்னார்கள். ஆனால் இந்த ஐரோப்பிய பொருளாதார நிதி உதவிக் கழகத்தின் உதவியுடன் செயல்படுகின்ற திட்டம் செங்கை—அண்ணா மற்றும் வட ஆற்காடு, தென் ஆற்காடு, தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் செயல்பட உள்ளது. 13.67 கோடி ரூபாய் செலவில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் நம்முடைய சேலம், தர்மபுரி மாவட்டங்களில் மேச்சேரி, மாண்டிய இன ஆடுகள் காணப்படுகின்றன. அந்த ஆடுகள் குறிப்பாக 18 கிலோவிலிருந்து 20 கிலோ எடை சாதாரணமாக உள்ளது. அந்த ஆடுகளின் தரத்தை உயர்த்தி சுமார் 40 கிலோ எடையுள்ள ஆடுகளாக ஆக்குவதற்கு Dorset breed of sheep என்ற வகையில் Dorset என்ற ஒரு வகை இன ஆடுகளை அமெரிக்காவிலிருந்து தருவித்து அவற்றை ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் வைத்து இனப் பெருக்கம் செய்து அதன் மூலம் பெறுகின்ற நல்ல கிடாக்களை சின்னசேலம் ஆட்டுப் பண்ணையிலும், ராணிப்பேட்டையில் அமைய உள்ள ஆட்டுப் பண்ணையிலும் வைத்து இனப் பெருக்கம் செய்து அதன் மூலம் தரமான மேச்சேரி, மாண்டியா, சென்னை சிவப்பு, மற்றும் நெல்லூர் ஆகிய நம்முடைய தமிழகத்திலுள்ள ஆடுகளை தரமான ஆடுகளாக இன விருத்தி செய்து அதன் மூலம் பெறுகின்ற F1 கிடாக்களைக் கொண்டு பொது மக்களுக்கு, ஆடு வளர்ப்போருக்கு, ஏழை எளிய மக்களுக்கு வினியோகித்து நம் நாட்டில் உள்ள ஆட்டினுடைய எடையை 40 கிலோவாகக் கூட்ட இந்தத் திட்டம் வழிவகை செய்துள்ளது. அதாவது ஐரோப்பிய பொருளாதார நிதி உதவிக் கழகத்தின் உதவியுடன் 5 மாவட்டங்களில் மட்டும் செயல்படுகின்ற திட்டம் ஒன்று உள்ளது. அதை மற்ற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த வேண்டும் என்று இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிச்சாமி, திரு. பூவராகன் மற்றும் திரு. பொன்னுசாமி போன்றவர்கள் இதை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் நமது மாநிலத்தில் சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக மற்ற 18 மாவட்டங்களிலும் பல்வேறு துறையினுடைய திட்டங்களின் சார்பாக ஆடு வளர்ப்புத் திட்டம் இத்துறையின் மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் மிக்க பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறப்பு கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக பல்வேறு மாவட்டங்களில் ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, கன்று வளர்ப்பு, பன்றி வளர்ப்பு போன்றவற்றிற்கு துறையின் மூலமாக 25 சதவீதத்திலிருந்து 33.33 சதவீதம் வரை அரசு மானியமாக வழங்கப்படுகின்ற அந்தப் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலத்தில் புதிய உறை விந்து வங்கி ஒன்று இந்த ஆண்டு செயல்பட உள்ளது. அதோடு நீலகிரி பகுதியில் உறை விந்துப் பண்ணை விரிவாக்கம் செய்யப்படும் என்பதை மிகவும் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக குறுத்துக்குளியில் உள்ள பண்ணை விரிவாக்கம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் என்ற திட்டத்தின் மூலமாக ராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகனார், காமராசர், புதுக்கோட்டை, தர்மபுரி, வ.உ. சிதம்பரனார், மற்றும் நெல்லை கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் தீவிர அபிவிருத்திக்கு மானிய விலையில் தீவனக் கன்றுகள் தீவனப்புல் நாற்றுகள், தீவனப்புல் விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறப்பு மானிய உதவித்திட்டத்தின் மூலமாக நடப்பு ஆண்டில் 1989-90 ஆம் ஆண்டில் ரூபாய் 88.88 லட்சம் அரசு மானியமாக வழங்க உள்ளது. இதன் மூலம் 100 வெள்ளாட்டு அலகுகள், 2,305 செம்மறி ஆட்டு அலகுகள், வழங்க அரசு திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒருங்கிணைந்த மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் சார்பாக வட ஆற்காடு, சேலம், தென் ஆற்காடு, தர்மபுரி மற்றும் திருச்சி மாவட்டங்களில் இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது. தென் ஆற்காடு மாவட்டம் கல்வராயன்மலைப் பகுதியைத் தவிர மற்ற பகுதிகளில் இந்தத் திட்டத்தின் மூலமாக வழங்குகின்ற கடனில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. தென் ஆற்காடு மாவட்டம் கல்வராயன் மலைப் பகுதி மக்களுக்கு மட்டும் சிறப்பான முறையில் 75 சதவீத அரசு மானியமாக அளிக்கப் படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த வகையில் நடப்பாண்டில் மட்டும் கறவை மாடுகள் 180, ஆட்டு அலகுகள் 310, எருதுகள் 40 வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக மகளிர் மேம்பாட்டுக் கழகம் சார்பாக, புதுக்கோட்டை, காயிதே மில்லத், பசும்பொன் தேவர் திருமகனார், வ.உ. சிதம்பரனார் மற்றும் காமராஜர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் பல்வேறு ஆட்டு அலகுகள் (ஷீப் யூனிட்ஸ்) மகளிர்க்கும் மற்றும் சிறு, சிறு விவசாயிகளுக்கும் விவசாயக் கூலிகளுக்கும் அரசு மானியத்தில் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 மே 2] [டாக்டர் க. சந்திரசேகரன்]

சிறப்பான வகையிலே கால்நடை பராமரிப்புத் துறையினுடைய பணிகள்—கால்நடை கேந்திர கிராமத் திட்டம், தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் போன்ற பணிகள் மூலமாக செயற்கை முறையிலே அபிவிருத்தி செய்து ஏராளமான கன்றுகள், கிடேரி கன்றுகள் நமது மாநிலத்தில் இருக்கின்றன. ஆனால் ஏழை எளிய மக்கள் பல்வேறு காரணங்களால் அவற்றை நல்லமுறையில் பராமரிக்க முடியாத சூழ்நிலை இருப்பதை அரசு உணர்ந்து அவற்றை நல்ல தரமுள்ள பசுக்களாக மாற்றுவதற்கு ஒரு நல்ல திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. அதுதான் கன்று வளர்ப்புத் திட்டம். அந்த வகையிலே இந்த ஆண்டுவரை 1,043 பிரிவுகள் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்தக் கன்றுகளை வளர்ப்பதற்கு கன்று வளர்ப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அந்தக் கன்றுகளுக்கு நல்ல தீவனங்கள், மற்றும் மருந்துகள் வழங்குவதற்கும் அரசுத்துறை வங்கிகள் மூலமாக கடன் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு, அந்தக் கன்றுகள் காப்புறுதியும் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் என்ற ஒன்று கோவை, பெரியார், காயிதே மில்லத், காமராஜர், நெல்லை கட்டபொம்மன், மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தீவனப் பயிர், தீவன நாற்று, தீவன விதைகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டு, அபிவிருத்தி செய்கின்ற பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை பற்றி குறிப்பிட்டார்கள். இராணிப்பேட்டையில் நடப்பாண்டில் 66 இலட்சம் ரூபாய் செலவில் வெட்கை நோய்த் தடுப்புப் பணி மேற்கொள்ளும் திட்டம் ஆய்வில் உள்ளது. மற்றும் ஆசியாவிலேயே சிறந்த நிலையம் இராணிப்பேட்டை நோய் தடுப்பு நிலையம். இந்த நிலையத்தில் நோய்த் தடுப்பூசி உற்பத்திப் பிரிவு, நோய்த் தடுப்பூசித் தரப் பிரிவு (குவாலிட்டிகண்ட்ரோல்) அனைத்தும் ஒரே பகுதியாகச் செயல்பட்டு வருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். நான் பதவி ஏற்ற உடனே நோய்த் தடுப்பூசி உற்பத்திப் பிரிவையும் நோய்த் தடுப்பூசி தரப் பிரிவையும் தனித்தனியாகப் பிரிக்க வேண்டுமென்று அறிவுரை வழங்கி, அது அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கால்நடைகள் வெளி மாநிலங்களுக்குச் செல்வது தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவலிங்கம் போன்றவர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள். நமது மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு கால்நடைகள் எவ்வளவு ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பதை ஆய்வு செய்ததில் 3.5 இலட்சம் கால்நடைகள் நமது மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்குச் செல்கின்றன என்பது தெரியவந்துள்ளது. அதைப்போன்று நமது

மாநிலத்திற்கும் வெளிமாநிலங்களிலிருந்து சுமார் 2.5 இலட்சம் கால்நடைகள் வந்துகொண்டிருக்கின்றன. இது பல்வேறு சிக்கல்கள் காரணமாக நீண்டகாலமாக நிலுவையில் உள்ளது. இதிலே நீண்டகாலமாக ஒரு சரியான முடிவு எடுக்கமுடியாமல் கடந்த கால அரசு இதை நீட்டித்துக்கொண்டே வந்துள்ளது. இந்த அரசு நிச்சயமாக இதற்கு ஒரு நல்ல முடிவு எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தீவனம் சம்பந்தமாக நமது மாநிலத்தைப் பொறுத்த மட்டில் தற்போது வறட்சியின் கொடுமையால் நமது மாநிலம் பாதிக்கப்பட்டிருப்பதால் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மானிய விலையில் வைக்கோல் வழங்கப்படுமா என்று பல மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினார்கள். 1,500 டன் வைக்கோலை பல்வேறு மாவட்டங்களுக்கு வழங்குவது பற்றிய கருத்துரு அரசின் ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு நாமக்கல்லில் இயங்கும் கால்நடை மருத்துவக் கல்லூரி குறித்தும் இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். கடந்தகால ஆட்சியின் தவறான அணுகுமுறையினாலும் பல்வேறு காரணங்களினாலும் அதனுடைய கட்டட வேலைகள் சரியான முறையில் தொடங்கப் படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அந்தக் கட்டட வேலைகளைத் தொடங்க பணம் ஒதுக்கீடு செய்து, கட்டடப் பணிகள் துரிதமாக நடைபெறவுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது வேளாண்மைத் துறை நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தாலும், நான் அதைப் பற்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-40)

அடுத்தபடியாக, பொதுவாக புதுக்கோட்டை மாவட்டத்தில் டேனிடா உதவியுடன் 4.4 கோடி ரூபாய் செலவில் ஒரு கால்நடை அபிவிருத்தித் திட்டம் ஒன்று செயல்படவுள்ளது. மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற்று டேனிடா ஒப்புதலுக்காக உள்ளது. 70 விழுக்காடு 'டேனிடா' நிதி உதவியின் மூலமாக, புதுக்கோட்டை கால்நடைப் பண்ணையில் ஒருபயிற்சி நிலையம் மற்றும் புல் உற்பத்தி, தீவன உற்பத்தி, கால்நடை அபிவிருத்தி, கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நலன் கருதி இத்திட்டம் விரைவில் செயல்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழ்நாடு கோழி இன வளர்ச்சிக் கழகத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாடு கோழி இன வளர்ச்சிக் கழகம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 1973 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு 15 நாட்களுக்கு, இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை கோழி முட்டை சத்துணவில் சேர்க்கப்படவிருக்கின்ற காரணத்தினால், கோழி இன வளர்ச்சி நல்ல முறையில் அமையும் என்பதில் ஐயப்பாடில்லை. நடப்பாண்டில் கோழி இன வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக திருச்சியில் ரூ. 51 லட்சம் செலவில் ஒரு குஞ்சு பொரிப்பகம் நிறுவப்படவுள்ளது. இதன்மூலம் முட்டை, குஞ்சுகளின் உற்பத்தி 22.5 லட்சம் அதிகரிக்கும். தமிழ்நாட்டின் தற்போதைய தேவை 120 லட்சம் குஞ்சுகளாக இருப்பினும் அரசுத் துறை மூலம் அரசூர், கப்பலூர் ஆகிய இரண்டு இடங்களிலும் கோழிக் குஞ்சு பொரிப்பகம் உள்ளது. நடப்பாண்டில் திருச்சி மாவட்டத்தில் புதிதாக ஒரு குஞ்சு பொரிப்பகம் அமைக்க கோழி இன வளர்ச்சிக் கழகம் முடிவு செய்துள்ளது.

அடுத்து நீண்ட நாட்களுக்கு முன்பாக நந்தனம் கோழித் தீவன நிலையத்தில் வாங்கப்பட்ட இயந்திரங்கள் பழுதடைந்த காரணத்தினாலே அந்த இயந்திரங்களை மாற்றுகின்ற வகையிலே, நடப்பாண்டில் ரூ. 21 லட்சம் செலவில் புதிய இயந்திரங்களை வாங்கி 4 ஆயிரம் மெட்ரிக் டன் அளவுக்குக் கோழித் தீவன உற்பத்தியைப் பெருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, காடைவளர்ப்பு, ஓட்டல்களில் எல்லாம் காடைக்கறி மிகவும் சிறப்பான வகையிலே விற்பனையாகிக்கொண்டிருக்கின்றது. அந்த வகையிலே நடப்பாண்டில் செங்கை-அண்ணா மாவட்டத்தில் ரூ. 1.5 லட்சம் செலவில் ஒரு காடைக் குஞ்சு பொறிப்பகமும் கோவை மாவட்டத்தில் தெற்கு பாளையத்தில் ரூ. 3 லட்சம் செலவில் காடைக்குஞ்சு பொரிப்பகமும் நிறுவப்பட உள்ளது. இதன்மூலம் $2\frac{1}{2}$ லட்சம் காடைக்குஞ்சுகள் உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாடு இறைச்சி நிறுவனம். தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் மூலமாக ரூ. $4\frac{1}{2}$ கோடி செலவில் ஒரு நவீன இறைச்சிக் கூடம் கட்ட தீர்மானிக்கப்பட்டு கடந்த அரசில் திட்டம் இட்டு ரூ. 70 லட்சம் செலவிடப்பட்டு பொதுமக்கள் எதிர்ப்பினால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. 1904 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பெரம்பூர் இறைச்சிக்கூடத்தினை நவீனப்படுத்துகின்ற வகையிலே ரூபாய் இருநூறு லட்சம் செலவில் ஒரு திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக மாடுகள் அறுக்கும் கூடத்தை சுகாதாரப்படுத்த, நவீனப்படுத்த ரூ. 60 லட்சம் செலவிட தீர்மானிக்கப்பட்டு உள்ளது. இந்தச் செலவினை மத்திய மாநில அரசுகள் சரிபாதியாக ஏற்கும்.

மத்திய அரசின் ஒப்புதல் பெற்றவுடன் இத்திட்டம் செயல் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடப் பாண்டில் சைதாப்பேட்டை இறைச்சிக் கூடத்தினையும் நவீனப் படுத்த ரூ. 2.45 லட்சம் செலவில் புதுப்பிக்க திட்டமிடப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இங்கே பேசிய உறுப்பினர்கள் கால்நடை பராமரிப்புத் துறையில் பணியாற்றுகின்ற பல்வேறு அலுவலர் களுக்கு, கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர் கள் இப்படி பல்வேறு அலுவலர்களுக்கு உள்ள குறைகளை, அவர்களுடைய கோரிக்கைகளை ஊதியம் மற்றும் பல்வேறு அலவன்ஸ்கள் போன்றவற்றை எல்லாம் இங்கே எடுத்துரைத் தார்கள். ஐந்தாம் ஊதியக்குழுவினுடைய அறிக்கை விரை வில் பெறப்படவுள்ளது. இவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் ஐந்தாம் ஊதியக்குழுவின் அறிக்கை பெறப்பட்டவுடன் மிகுந்த கவனத்துடன் பரிசீலனை செய்யப்படும் என்பதை இந்த நேரத் தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல புதுக்கோட்டை மற்ற இடங்களில் உள்ள தினக்கூலி பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் விஜயராகவன் அவர்களும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேலு போன்றவர்களும் இங்கே எடுத்துரைத்தார்கள். நிச்சய மாக அவர்களுடைய கோரிக்கை நியாயமானது என்பதில் ஐயப் பாடு இல்லை. இதை அரசு மிகவும் கவனத்துடன் பரிசீலனை செய்து, அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆவன செய்யும் என்பதை உங்கள் அனைவருக்கும் தெரிவித்து, இத்துடன் கால் நடை பராமரிப்புத் துறையைப் பற்றி முடித்துக்கொள்கிறேன்.

அடுத்து மீன்வளத் துறையைப் பொறுத்தமட்டில் நம் முடைய மீன்வளத் துறையின் முக்கிய நோக்கங்களாவன, மீன் உற்பத்தியைப் பெருக்கி, குறைந்த விலையில் அதிகப் புரதச் சத்துமிக்க மீன்களைக் கிடைக்கச் செய்வது; அதன்மூலம் மீனவர்களுக்கும், அந்தத் தொழிலைச் சார்ந்தவர்களுக்கும் வேலை வாய்ப்பு கொடுப்பது என்பதாகும். மேலும் மாநிலத் தின் அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிற முக்கிய பங்கை மீன்வளத் துறை வகிக்கிறது. தமிழ்நாட்டில் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதி உள்ளது. 41,412 சதுர கிலோ மீட்டர் நிலம் சார்ந்த கடற் பகுதியை உடையதாகும் நமது மாநிலம். நடப்பு ஆண்டில் மீன்வளத் துறை மானியத்தின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்களும், மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. அமீது இப்ராகீம் அவர்களும் மீனவர்களுக்கு வலைகள் வழங்க வேண்டுமென்று எடுத்துரைத் தார்கள். நடப்பு ஆண்டில் 500 நாட்டுப்படகு மீனவர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் ரூபாய் 500-க்கு மேற்படாமல் 20 விழுக்காடு மானிய விலையில் சொந்தமாக வலைகள் வாங்குவதற்கு ரூ. 2.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1989 மே 2] [டாக்டர் க. சந்திரசேகரன்]

அடுத்து, மீனவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு நடப்பு ஆண்டில் 200 கட்டுமரங்கள், 5 விசைப் படகுகள் 5 பெரிய படகுகள் வாங்குவதற்கு 20 சதவிகிதம் நிதி உதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூபாய் 16.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு 600 நாட்டுப் படகுதாரர்களுக்கு ரூபாய் 7,500-க்கு மேற்படாமல் 50 சதவிகித மானியத்தில் வெளிப் பொருத்தம் மற்றும் உள் பொருத்தம் இயந்திரங்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 600 நாட்டுப் படகுகள் இயந்திரமயமாக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் நாட்டில் உள்ள நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையிலே மதுரை மாவட்டம், வைகை அணைப் பகுதியில் உள்ள மீன் நாற்றங்காலை விரிவாக்கம் செய்யும் வகையிலே 20 புதிய நாற்றங்கால்களை ஏற்படுத்த ரூபாய் 20 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தீவிர உள்நாட்டு மீன் உற்பத்திக்காக தென் ஆற்காடு மாவட்டம், விழுப்புரத்தில் 80 மிதவைக் கூடுகள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டு, ரூ. 2.08 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 240 மெட்ரிக் டன் கூடுதல் மீன் உற்பத்தியை அடைய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மீனளத் துறையில் பணியாற்றுகின்ற மண்டல மீன் துறை துணை இயக்குநர் மற்றும் பணியாளர் பயிற்சி நிலைய முதல்வர் ஆகியோர் பதவிகளை இணை இயக்குநர் பதவிகளாக உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டு, அதற்காக 0.30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர்களின் நலன் காக்கும் வகையிலே இந்த மீனளத் துறை மூலமாக பல்வேறு சமூக நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் மீனவர் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கோரினார்கள். மீனளத் துறை மூலமாக தேவையிருப்பின் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தப்பட்டுவருகின்றன. இதுவரையில் 147.8 கிலோ மீட்டர் நீளத்திற்கு இணைப்புச் சாலைகள் போடப்பட்டுள்ளன. மேலும் 19.2 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலைகள் போடப்பட்டு வருகின்றன.

அடுத்தபடியாக திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனிச்சாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மதிவாணன் அவர்களும் கடல் அரிப்புப் பணி பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். விஜயராகவன் அவர்கள் கூட 'மாடுலர்' என்ற முறையைக் கையாள வேண்டுமென்று கூறினார்கள். கடல் அரிப்புப் பணியைப் பொறுத்தமட்டில் இந்தத் துறை மூலமாக தடுப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. ஆனால் தடுப்புச் சுவர்கள் அந்தச் சாலையைப் பாதுகாக்கின்ற விதத்தில் அமைகிறதே ஒழிய மீனவர்கள் நலன் காக்கும் வகையிலே இல்லாது இருப்பதால், இதைப் போக்குமளவிற்கு Institute of Hydrology நில நீர் நிலையம் பூண்டியில் ஓர் ஆராய்ச்சியை மேற் கொண்டுள்ளது. அந்த ஆராய்ச்சியின் முடிவு தெரிந்தவுடன், கடல் அரிப்புக்கு நிரந்தரமான தீர்வு காண முடிவு எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2.50)

அடுத்தபடியாக, தமிழ்நாடு மீனவர் விபத்து காப்புறுதித் திட்டம் இந்தியாவிலேயே மிகச் சிறந்த முறையில் இங்கே தான் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு மீனவர்கள், கூட்டுறவுச் சங்கத்தில் இணைந்தவர்களாக, உறுப்பினர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இல்லாமல் அவர்கள் இறந்திருந்தாலும், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மீனவர் மகளிர் இணைப்புப் பயிற்சியாளர் பயிற்சித் திட்டம் ஒன்றின் கீழ் 900 மீனவ மகளிரைப் பயிற்சிப் பணியாளர்களாக நியமித்து, தமிழ்நாட்டில் உள்ள 442 மீனவர் கிராமங்களில் மீனவர் மகளிர் விரிவாக்கப் பணியினைச் செயலாக்க ஒரு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வங்கக் கடலோரப் பகுதியிலுள்ள மீனவர் பகுதி மக்கள் அனைவருக்கும் எழுத்தறிவு புகட்டும் வகையிலே கல்வித் துறையோடு தொடர்பு கொண்டு முறை சாராக் கல்வி மூலமாக 'டேனிடா' உதவியோடு ஒரு திட்டம் செயல் படுத்தப்பட உள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 மே 2] [டாக்டர் க. சந்திரசேகரன்]

அடுத்து, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் விஜயராகவன் அவர்கள் இறால் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடத்திலிருந்து நான்காவது இடத்திற்குப் போய் விட்டது என்று குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டிலே பழவேற்காடு செயல் முறை விளக்கப் பண்ணையிலேயே 100 நாட்களில் 832 கிலோ வெள்ளை இறால் உற்பத்தி செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உவர் நீர்ப் பரப்பு 55,000 ஹெக்டேர் நிலங்களாகும். அதில் இறால் வளர்க்க உகந்ததான 15,000 ஹெக்டேர் நிலப் பரப்பு இறால் மீன் வளர்ப்புக்குப் பயன்படுத்தப்பட்டு, இந்தியாவிலேயே தமிழ்நாடு இறால் ஏற்றுமதியில் முதல் இடம் வகிக்கத் தக்க முயற்சிகளை இத்துறை மேற்கொள்ள இருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் இராமசாமி, பழனிவேல், ஹமீது இப்ராகீம், சிங்காரம் போன்றவர்கள், அவர்களுடைய தொகுதியிலும் மற்ற இடங்களிலும் மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தரப்பட வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் முன்பு முதல்வராக இருந்த சமயத்தில், 1975 ஆம் ஆண்டில் முதன் முறையாக இந்தத் திட்டத்தை அறிமுகப் படுததி முதல் ஆண்டிலேயே 5,000 வீடுகள் கட்டுவதற்காக நிதி இசைவு அளித்தார்கள். ஆனால் கடந்த 13 ஆண்டுகளில் அந்த 5,000 வீடுகளையும் சேர்த்து 12,900 வீடுகள் கட்டுவதற்கு மட்டுமே ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தி.மு.க. தன்னுடைய தேர்தல் அறிக்கையில் மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவித்ததற்கு இணங்க இந்த நடப்பாண்டில், 1989–90-ல் 3,000 வீடுகள் மீனவர்களுக்கு இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் ஒரு சிறப்பான திட்டத்தையும் செயல்படுத்த இருக்கிறோம். அங்கே காவிரி நீர்ப் பகுதியில் தண்ணீர் குறைகிற காலத்தில் கடைமடைப் பகுதியில் உள்ள விவசாயிகள் ஒரு போக விளைச்சலைக் கூட அனுபவிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் 8 அடி ஆழத்திற்கு குட்டைகளை ஏற்படுத்தி, நீர் வருகிற போது அங்கே நீரைத் தேக்கி விவசாயத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதோடு, அதே நேரத்தில் அந்தக் குட்டைகளில் குட்டியின மீன்களை வளர்த்து விவசாயிகள் நல்ல இலாபம் அடைய முடியும். இதற்கு நபார்டு நிதி உதவி அளித்துள்ளது. இந்தத் திட்டம் தஞ்சை மாவட்டத்தில் சிறப்பான முறையில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தேசிய மீனவர் நல நிதித் திட்டத்தின் மூலமாக தமிழ் நாட்டில் 5 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அதாவது செங்கை அண்ணா மாவட்டத்தில் நைனார் குப்பம் தென்னாற்காடு மாவட்டத்தில் டி.வி.எஸ். பேட்டை, தஞ்சை மாவட்டத்தில் கீழத்தோட்டம், நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் இரட்சண்யபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் வெள்ளைவிளை ஆகிய 5 இடங்களில் உள்ளவர்களுக்கு வீடு கட்டுதல், சமூக நலக் கூடம் கட்டுதல், குழாய்க் கிணறுகள் ஏற்படுத்துதல், கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி உதவி ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னாற்காடு மற்றும் மதுரை மாவட்டங்களில் தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்புத் திட்டம் ஒருமுகப்படுத்தப்பட்டு நல்ல முறையில் செயல் படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடற்கரை ஓரமாக உள்ள மீனவர்கள் மீன்களை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் சில வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில் சின்ன முட்டம், வாலிநோக்கம், தொண்டி ஆகிய இடங்களில் ரூபாய் 9.2 கோடி செலவில் துறைமுகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பழையாறு துறைமுகத்தில் மே மாத முடிவில் தற்போது பனிக் கட்டி நிலையம் மட்டும் கட்டப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பணி மே மாத இறுதியில் முடிவடைந்து மீனவ மக்களுக்கு அது பயனளிக்கும்.

அடுத்து, தொண்டி, சின்னமுட்டம், வாலிநோக்கம் போன்ற துறைமுகப் பணிகளில் எஞ்சியுள்ள பணிகள் நிறைவேற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே அதில் சில முறைகேடுகள் இருந்த காரணத்தால் அந்தப் பணிகள் நடைபெறாமல் உள்ளன. விரைவில் அந்த முறைகேடுகள் களையப்பட்டு எஞ்சிய பணிகளை முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே பேசிய உறுப்பினர்கள் பழவேற்காடு மீனவர் பிரச்சினை, இராமேஸ்வரம் மீனவர்கள் பிரச்சினை, தமிழ்நாடு-ஆந்திரா மீனவர்கள் பிரச்சினை குறித்து பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். அந்த வகையில் இராமநாதபுரம் மீனவர் பிரச்சினை குறித்தும், தமிழ்நாடு - ஆந்திரா மீனவர்கள் பிரச்சினை மற்றும் தமிழ்நாடு மீன் பிடிப்பு ஒழுங்கு முறைச் சட்டம் ஆகியவற்றை குறித்தும் ஆய்வு செய்ய ஒரு வல்லுநர் குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது. மே அல்லது ஜுன் மாதத்தில் அதனுடைய அறிக்கை பெறப்படும் தருவாயில் உள்ளது. அந்த அறிக்கை பெறப்பட்ட உடன் அதன் மூலம் நல்ல முடிவுகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 மே 2] [டாக்டர் க. சந்திரசேகரன்]

இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு சிங்காரம் அவர்கள் தஞ்சை மாவட்டம் அந்தோனியார்புரத்தில் 35 வீடுகள் அரிசன மீனவர்களுக்கு கட்டுவதற்கு மறுத்தார்கள் என்று கூறியுள்ளார்கள். அந்தோனியார்புரத்தில் 35 வீடுகள் கட்டுவதற்கு பிரேரணை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் இறந்தால் தான் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் ரூபாய் வாரிசுகளுக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு அந்த விதி முறையை வைத்துள்ளது மத்திய அரசு தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு சிங்காரம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தோடு பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் கூறியுள்ளார்கள். அவற்றை இந்த அரசு கவனத்துடன் பரிசீலனை செய்து நிதி நிலைக்கு ஏற்ப அவர்களுடைய கருத்துக்கள் அரசினால் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பல்வேறு இடங்களில் இத்துறையில் சில நிர்வாகச் சீர்கேடுகள் நடைபெற்றதாக குறிப்பாக மாண்புமிகுஉறுப்பினர்திருபூவராகன் போன்றவர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள். அவற்றைப்பொதுவாக இல்லாமல் குறிப்பிட்டு நேரடியாக நீங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக அந்த முறைகேடுகள் களையப்பட்டு நல்ல முடிவுகள் எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்து இருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு மாண்புமிகு அமைச்சர்களுடைய நீண்ட பதிலுரைக்குப் பிறகு ''பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன்,'' ''பாயின்ட் ஆஃப் ஆர்டர்'' தேவையா ?

திரு. குமரி அனந்தன் : தேவை தான். மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கு தமிழ் நாட்டினுடைய பல்வேறு திட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக இறுதியிலே மீனளத்தைப் பற்றி சொன்ன போது நம்முடைய தமிழ் நாட்டிலே ஆயிரம் கிலோ மீட்டர் நீளக் கடற்கரை இருப்பதாகச் சொன்னார்கள். இந்தியாவுக்கு தீபகற்பம் என்ற பெயரைக் கொடுத்ததே தமிழகம்

தான். நெய்தல் நிலம் புகழ் பெறுகிற அந்த நிலத்திலே நாம் மீனளத்தை அதிகப்படுத்த வேண்டுமென்பதிலே ஐயம் இல்லை. நான் இங்கே குறிப்பாகச் சொல்ல விரும்புவது, கேரளம், குவைத் நாட்டிலிருந்து மட்டும் 25 மில்லியன் யூ. எஸ். டாலர்களை மீன் வளர்ப்புக்கும், இறால் வளர்ப்புக்கும் என்று பெற்று இருக்கிறது. இதைப் போல் தமிழ்நாடு, இவ்வளவு பெரிய கடற்கரையை வைத்து இருக்கின்ற தமிழ்நாடு எந்தெந்த நாடுகளிலிருந்து எல்லாம் இப்படிப்பட்ட உதவிகளைப் பெற்று இந்த மீன் வளத்தை அமைச்சர் பெருமகன் சொன்னதைப் போல் முதலிடத்திற்குக் கொண்டு வருவதற்குத் திட்டமிடப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[பிற்பகல் 3-00].

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கேரள நாட்டுக்கு குவைத் நாட்டோடு இருக்கின்ற மிக நெருக்கமான தொடர்புக்கு எத்தனையோ காரணங்கள். அங்கே உள்ள வாய்ப்பு வசதிகள் அதிமாகக் கேரளத்து மக்களைப் பற்றி அவர்கள் அறிவார்கள். அது ஒரு காரணமாக இருக்க முடியும். தமிழகம் இப்படிப்பட்ட முயற்சியிலே ஈடுபடுவதற்கு மத்திய அரசினுடைய துணையோடு முயற்சிக்கும்.

**திரு. குமரி அனந்தன்** : துணைத் தலைவரவர்களே, இப்பொழுது முடிந்தது பால்; அதற்குப் பிறகு கால். அவர்கள் இரண்டு பேரும் தான் சொன்னார்கள். ஒரு தடவை திருச்சியிலே போய் இறங்குகிறபொழுது 'நான் பால்; அவர் கால்' என்று சொன்னார்கள். அவ்வளவுதான். எனவே, அவர்பால் நான் கேட்க விரும்புவது (சிரிப்பு) சென்னையிலே இருக்கின்ற பொது மக்களினுடைய குறை ஒன்றை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அரை கிலோ பாக்கெட்டுகளிலோ, அரை கிலோ பொட்டலங்களிலோ வெண்ணெய் கொடுக்கப்படுகிறது. ஆவின் பால் வெண்ணெய். 26 ரூபாய் என்று உத்தேசமாகச் சொல்கிறேன், கொடுக்கப்படுகிறது. ஆனால் வாடிக்கையாளர்களுக்கு அது இல்லை என்று சொல்லி விட்டு, மற்ற வியாபாரிகளிடம் அதனைக் கள்ளச் சந்தையிலே விற்று விடுகின்ற காரணத்தினாலே,—ஏனென்றால், வெளியே ஊத்துக்குளி, ஆந்திரா போன்ற பகுதிகளிலேயிருந்து வருகின்ற வெண்ணெய், 31 ரூபாயிலிருந்து 40 ரூபாய் வரை விற்கிறது. எனவே, ஆவின் பால் மூலம் கிடைக்கின்ற அந்த வெண்ணெய் இப்படிக் கள்ளச் சந்தையிலே அதிகமாக விற்கப்படுகிற காரணத்தினால் வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கவில்லை என்று சொல்லுகின்ற ஒரு புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அதனைத் தடுப்பதற்கு உரிய முயற்சியிலே தயவு செய்து ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*1989 மே 2]*

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே மதிப்புமிக்க உறுப்பினரவர்கள் குறிப்பிட்டது போல் இது வரை எந்தப் புகாரும் எங்களுக்கு வரவில்லை. உறுப்பினரவர்கள் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், வெண்ணெய் தேவையான அளவுக்கு இந்த வருஷம் கையிருப்பில் இருக்கின்ற காரணத்தால், தேவையான அளவுக்கு மக்களுக்கு வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கணபதி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவசாயிகள் கடன் தள்ளுபடி என்று விவசாயிகளுக்காக ஏறக்குறைய 107 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி நடந்திருக்கிறது. என் தொகுதியிலே மீனவர் குப்பங்கள் அதிகமாக இருக்கின்றன; மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும் இருக்கின்றன. மொத்த மீனவர் கூட்டுறவுச் சங்கங்களிலே மீனவர்கள் பட்டிருக்கின்ற கடன் ஏறக்குறைய 7 அல்லது 8 கோடி ரூபாய் தான் இருக்கும். அந்தக் கடனைத் தள்ளுபடி செய்வதற்கு இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். க.சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டில் மீனவர்கள் அரசு வங்கிகளில் கடன் பெற்றுள்ளார்கள். அதற்கு அரசு ஏற்கெனவே ரூபாய் 906.18இலட்சங்கள்வசூலிக்கப்பட வேண்டிய தொகை பாக்கி உள்ளது. இதை ஆய்வு செய்து முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது: இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 10 பால் வழங்கு திட்டங்கள்.

திருவாளர்கள் ஜி. ஜி. குருமூர்த்தி, சா. பீட்டர் ஆல்போன்ஸ் ஜி. பழனிச்சாமி, கோ. வீரையன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,48,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 21—மீனளம்.

திருவாளர்கள் பொன் விஜயராகவன், என். பழனிவேல் ஆர். சிங்காரம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 21 மீனளம்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,34,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு.

திருவாளர்கள் பொன். விஜயராகவன், வி. தம்புசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

" மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு—என்ற தலைப்பின் கீழ் ரூ. 39,77,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் "

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

8. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒருமணி நேரம் வினாக்கள்—விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, நாளை (3—5—1989) தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (3-5-1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 3-06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

113. சேலம் மாவட்டம் சார்ந்த மணிவிழுந்தான் காலனி வசந்தாபுரம் கிராமங்களை தானமாக அளிக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது ஊரக வளர்ச்சித் துறையின் 11—11—1988 ஆம் நாளிட்ட 699 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பூதான இயக்கச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 15/1958] 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

114. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 7—8—1987 ஆம் நாளிட்ட 902 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

1989 மே 2]

### 8. அரசினர் தீர்மானம்

#### விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" சட்டமன்றப் பேரவையின் முதல் ஒருமணி நேரம் வினாக்கள்—விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, நாளை (3—5—1989) தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (3-5-1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 3-06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

#### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

113. சேலம் மாவட்டம் சார்ந்த மணிவிழுந்தான் காலனி வசந்தாபுரம் கிராமங்களை தானமாக அளிக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது ஊரக வளர்ச்சித் துறையின் 11—11—1988 ஆம் நாளிட்ட 699 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பூதான இயக்கச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 15/1958] 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

114. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 7—8—1987 ஆம் நாளிட்ட 902 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்—தொடர்ச்சி

115. ஜெர்மானிய ஐக்கிய குடியரசின் தூதரால் கொள்முதல் செய்யப்பட்ட இனங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 28—9—1988 ஆம் நாளிட்ட 1287 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1[1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

116. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 10—2—1987 ஆம் நாளிட்ட 1361 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

117. தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் 1980-81ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1?1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

118. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1951) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

119. சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்க்கான இருபத்தேழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

120. சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

142. கோரிக்கை எண். 10—பால்பண்ணை வளர்ச்சித்துறை மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

143. கோரிக்கை எண். 21—மீனளத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

144. கோரிக்கை எண். 22—கால்நடை பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

[1989 மே 2

(252 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## இணைப்பு I

**1989-90 ஆம் ஆண்டிற்கான பால்பண்ணை வளர்ச்சித்துறை மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கம்.**

கோரிக்கை எண். 10.

பால்வளத்துறை 1958 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதன் முதலில் நவீன பால பதப்படுத்தும் தொழிற் சாலை மாதவரத்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டில் மதுரை பால்பண்ணை நிறுவப்பட்டது. பால்வளத் திட்டங்கள் அனைத்தும் குஜராத் மாநிலத்தில் உள்ளதைப்போல் பால் கூட்டுறவு சங்கங்களை அடிப்படை யாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனுடைய நிர்வாக அமைப்பு மூன்று அடுக்கு கொண்டதாகும்.

அடிப்படையில் (கிராம அளவில்) பால் உற்பத்தியாளர் சங்கமாகவும், இடையில் (மாவட்ட அளவில்) பால் உற்பத்தி யாளர் சங்கங்களின் ஒன்றியமாகவும், மேல் மட்டத்தில் (மாநில அளவில்) ஒனறியங்களின் இணையமாகவும் இயங்கி வருகின்றது.

குறிக்கோள்-பால்வளத் துறையின் முக்கியமான குறிக்கோள்கள்:-

(அ) நிலையான, மாறாத மற்றும் நன்றாக ஒழுங்கு படுத்தப்பட்ட வியாபார உதவிகள் மூலம். பால் உற்பத்தியாளர் களுக்கு உற்பத்தி செய்யப்படும் பாலுக்கு நல்ல விலை கிடைக்க வழி செய்தல்.

(ஆ) நுகர்வோர்களுக்கு பாலும் மற்றும் பாலில் இருந்து செய்யப்படும் பொருள்களும் நியாயமான விலையில் கிடைக்க வழி செய்தல்.

நடவடிக்கைகள் :

மேலே குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களை கருத்தில்கொண்டு பின்வரும் நடவடிக்கைகள் பால்வளத் துறை எடுத்து வருகிறது.

(அ) பால் கூட்டுறவு சங்கத்தில் உள்ள அங்கத்தினர்கள் வைத்திருக்கும் கால்நடைகளுக்கு இலவசமாக கால்நடை மருத்துவ வசதி அளித்தல், செயற்கை முறை கருவூட்டல் செய் தல், சரிவிகித கால்நடைத் தீவனம் அளித்தல் முதலியன, அங் கத்தினர்களுக்கு நவீன கால்நடை பராமரிப்பு பயிற்சி அளித்தல், இவைகள் அனைத்தும் கறவை மாடுகளின் தரத்தை உயர்த்து வதற்கும் அதன் மூலம் அம்மாடுகள் தொடர்ந்து அதிக பால் அளிக்கவும் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படு கின்றன.

1989 மே 2]

நடவடிக்கைகள்—தொடர்ச்சி

(ஆ) அதிக அளவில் பால் கொள்முதல் செய்யவும், பதப் படுத்தவும் மற்றும் விற்பனை செய்யவும், தகுந்த அளவில் உள்ளீடுகள் (nfrastruction) அளித்தல, பால் கொள்முதல் வழிகள் அமைத்தல், பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத் தல், பால் பதப்படுத்தப்படும் ஆலைகள் அமைத்தல், பால் துகள்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும் நவீன பால் விற்பனை முறை ஆகியவைகள் நுகர்வோர்களின் நலனுக் காக அமைத்தல் ஆகியவைகள் அடங்கும்.

பால்வளத்துறையின் வணிக சம்பந்தமான பால் கொள் முதல், பக்குவப்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் தமிழ்நாடு பால்வள நிறுவனத்திடம் 1972 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டன. தமிழ்நாடு கூட் டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையம் 1—2—1981ல் தமிழ் நாடு பால்வள நிறுவனம் மேற்கொண்ட பணிகள் அனைத்தும் மேற்கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்டது. இவ்விணையப் பால்வளத் திட்டங்களை, பால் பெருக்குத் திட்டங்கள் கீழ் தேசிய பால்பண்ணை நிறுவனம் நிதி உதவியுடன் தமிழ் நாட்டில் உள்ள கீழ்க்கண்ட 14 மாவட்டங்களில் சென்னை, செங்கை-அண்ணா, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, பெரியார், மதுரை, திண்டுக்கல், காயிதேமில்லத், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நிறைவேற்றி வரு கின்றது. பால்வளத் திட்டங்கள் எஞ்சியுள்ள 6 மாவட்டங் களான கன்னியாகுமரி, திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார், இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் காமராஜர் மாவட்டங்களில் மாநில திட்ட நிதி மற்றும் சிறப்பு திட்டங்களான மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம் பாட்டுத் திட்டம், ஆதிதிராவிடர் நலத் திட்டம் முதலியவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பால்வளத் திட்டங்களை மாவட்ட அளவில் நிறைவேற்றிட 17 துணைப் பதிவாளர் (பால்பதம்) அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மற்றும் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி மற்றும் செயற்கை முறை கருவூட்டல் வசதி அளிக்கும் வகை யில் பால் பெருக்கு திட்டம் அமுலில் உள்ள மாவட்டங்களில், 7 பால் சேகரிப்பு குழுக்களும், 10 கால்நடை நடமாடும் மருந்த கங்களும் மற்றும் பால்பெருக்கு திட்டம் அமுலில் இல்லாத மாவட்டங்களில் 4 பால் சேகரிப்பு குழுக்களும், 7 நடமாடும் கால்நடை மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன.

பால்வளத் துறை முக்கியமாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல் அவைகளை மேற்பா பார்வை செய்தல் மற்றும் ஊரக பால் கூட்டுறவு சங்கங்களை கட்டுப்படுத்தும் பணிகளைக் கவனித்து வருகிறது. தற்போதுள்ள

நடவடிக்கைகள்—தொடர்ச்சி

அரசு கொள்கையின்படி, கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இச்சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டும் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்களால் உற்பத்திச் செய்யப்படும் பாலை, மேற்படி சங்கங்கள் சேகரிக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும் வழங்கும் பாலை பரிசோதித்து அதன் தரத்தின் அடிப்படையில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தால நிர்ணயம் செய்யப்பட்ட விலையில், அவர்களுக்கு பணம் பட்டுவாடா வார முறையில செய்யப்படுகின்றது. பால் உற்பத்தியாளர்களின் மாடுகளுக்கு மருத்துவ வசதி, கொள்முதல் மற்றும் மருத்துவ செதிக் குழுக்களில் இருக்கும் கால்நடை மருத்துவர்கள் மூலம் அவர்கள் வீட்டிலேயே வழங்கப்படுகிறது. மேலும் குறைந்த செலவில் செயற்கை முறை கருவூட்டல் வசதியும் வழங்கப்படுகிறது. ஒரு செயற்கை முறை கருவூட்டலுக்கு ரூ. 2 விதம் வசூலிக்கப்படுகிறது. உறைவிந்து குச்சிகள், திரவ நைட்ரஜன் குப்பிகளில் செயற்கை முறை கருவூட்டல் செய்யும் வகையில் எப்போதும் தயாராக வைக்கப்படுகின்றன. இந்த செயற்கை முறை கருவூட்டல் வசதிகள் 2,507 சங்கங்களில் உள்ளன. இச்சங்கத்தின் செயலாளர்கள் சங்க உறுப்பினர்களின் மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி செய்யும் வகையிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சங்கமும் தங்கள் சொந்த செலவில் முதலுதவி பெட்டிகள் வைத்துள்ளனர். இக்கிராம சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலில் உள்ளூர் உபயோகத்திற்கு வைத்துக் கொண்டது போக எஞ்சியுள்ள பால் மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. பால் உற்பத்தியாளர்களுக்கு வாரம் ஒரு முறை தரத்தின் அடிப்படையில் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது.

மாவட்டங்கள் அளவில் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் பால் பண்ணைத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன. மாவட்ட ஒன்றியங்களின் முக்கியப்பணி, கிராமங்கள் அளவில் உள்ள பால் உற்பத்தியாளர் சங்கங்களில் இருந்து பாலை கொள்முதல் செய்து அதனை பதப்படுத்தி, அந்தந்த மாவட்டங்களில் விற்பனை செய்வதாகும். மாவட்டங்களில் இருக்கும் அதிகப்படியான பால் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்குச் சென்னை நகரில் விற்பனை செய்யும் வகையில் அனுப்பி வைக்கப்படுகின்றது.

பால் உற்பத்தி அதிகமாக உள்ள காலங்களில் அனைத்து மாவட்டங்களிலும் கூடுதலாக உள்ள பாலை, பால் பொருள் உற்பத்தி செய்யும் ஆலைகள் கொண்ட மதுரை, சேலம், ஈரோடு மற்றும் கிருஷ்ணகிரிக்கு கொண்டு வரப்பட்டு பால் துகள்களாகவும் மற்ற கொழுப்புச்சத்தை வெண்ணெய் மற்றும் நெய்யாகவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவைகள் ஒன்றியங்கள் மூலமாக

1989 மே 2]

நடவடிக்கைகள்—தொடர்ச்சி.

வும், இணையம் மூலமாகவும் சிறிய பாக்கட்டுகளிலும், மொத்தமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. பெரும்பாலும் மொத்த விற்பனையை இணையம் செய்து வருகின்றது.

பால்வளத் துறையின் முன்னேற்றம் :

மாநிலத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 1988-89 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 92.82 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நிதி உதவியுடனும் கீழ்க்கண்ட இதர சிறப்புத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளுடனும் கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் பால்வளத்துறையில் அடையப்பட்டுள்ளன.

| வரிசை எண்ணும், பெயரும். | 6 ஆவது ஐந்தாண்டு திட்ட முடிவில் உள்ள நிலைமை. (1984-85). | 1988-89-ல் உள்ள முன்னேற்றம் (28-2-1989 வரை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 சங்கங்களின் எண்ணிக்கை (எண்) | 5,301 | 6,249 |
| 2 மாவட்ட ஒன்றியங்கள் (எண்) | 15 | 17 |
| 3 உறுப்பினர்களின் எண்ணிக்கை | 14.98 இலட்சம். | 17.00 இலட்சம். |
| 4 பால் உற்பத்தி (சங்கங்கள் அளவில். | 8.83 இலட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு. | 12.39 இலட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு |
| 5 பால் கொள்முதல் (ஒன்றியம் அளவில்). | 6.28 | 9.87 |
| 6 சென்னை நகரத்தில் பால் விற்பனை. | 4.13 | 5.37 |
| 7 பால் பதப்படுத்தும் ஆலைகள் (எண்) | 14 | 16 |
| திறன். | 10.28 இலட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு. | 13.18 இலட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு. |
| 8 குளிரூட்டும் நிலையங்கள் (எண்) | 32 | 41 |
| திறன். | 5.80 இலட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு. | 7.38 இலட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு. |
| 9 தானியங்கி பால் நிலையம் | 26 | 121 |

**பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்சங்கள் அமைப்பதில் வளர்ச்சி**

தமிழ்நாட்டில் தற்போது ஆறாயிரத்து இருநூற்று நாற்பத் தொன்பது ஆரம்ப பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. 1988–89-ல் புதியதாக 400 சங்கங்கள் அமைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, இதில் 260 சங்கங்கள் பிப்ரவரி 1989 முடிய அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 1989–90-ல் கூடுதலாக 400 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பால் கூட்டுறவு சங்கங்களின் சிறப்பு அம்சங்களும் புள்ளி விவரங்களும் :**

(அ) தமிழகத்தில் உள்ள செயல்படும் ஆரம்ப பால் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றியங்கள்.

| | |
|---|---|
| (அ) பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் | 6,249 |
| (ஆ) பால் வழங்கு கூட்டுறவு சங்கங்கள் .. | 22 |
| (இ) கூட்டுறவு பால் பண்ணைகள் .. .. | 1 |
| (ஈ) பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் .. | 46 |
| (உ) கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியங்கள் .. | 4 |
| (ஊ) பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் | 17 |
| | 6,339 |

(ஆ) பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை .. .. 17.00 இலட்சம்.

**பால்பண்ணை வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும் திட்ட வேலைகள்.**

**(1) மாவட்ட ஒன்றியங்களுக்கு பங்கு மூலதன உதவி அளித்தல் :**

மாவட்ட ஒன்றியங்கள் பால் உற்பத்தி அதிகமாக உள்ள காலங்களில் பால் உப பொருட்கள் உற்பத்தி செய்வதன் மூலம் பெரும் வகையிலான நிதி முடக்கப்படுவதால் ஏற்படும் நிதி பற்றாக்குறையைத் தவிர்க்கவும், அவர்களுடைய நடை முறையை அதிகரிக்கவும், அரசு இவ்வொன்றியங்களுக்கு நிதி வசதி அளிக்கும் பொருட்டு, பங்கு மூலதன வசதி அளிக்க

1989 மே 2]

(i) மாவட்ட ஒன்றியங்களுக்கு பங்கு மூலதன உதவி அளித்தல்—தொடர்ச்சி.

முடிவு செய்துள்ளது. ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் இதற்கென ரூபாய் 34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 1988–89-ல் அரசு ரூபாய் 10 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இத்தொகை பின்வரும் வகையில் மாவட்ட ஒன்றியங்களுக்கு வழங்கப்படும்.

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1. இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் பால் உற்பத்தியாளர் ஒன்றியம். | 5.00 |
| 2. காமராசர் மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியம். | 2.50 |
| 3. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியம். | 2.50 |
| மொத்தம் .. | 10.00 |

2. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டம்.

பால் பெருக்குத் திட்டம், செயல்படும் மாவட்டங்களில் இருக்கும் பால்பண்ணைக்கு இணையாக உள்ளீட்டு வசதிகளைத் திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் ஏற்படுத்துவதற்கென ரூ. 7.05 கோடி திட்ட மதிப்புடன் கூடிய ஒரு பெரிய ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டத்தினை, செயல்படுத்த தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், புதுடில்லி, ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கு இக்கழகம் திட்ட மதிப்பீட்டில் 70 சதவீத கடனாக வழங்கும். மீது 30 சதவிகிதத்தை மாநில அரசு மானியம், பங்கு முதலீட்டுத் தொகை உதவியாக வழங்கும். இத்திட்டம் 1987–88 ஆம் ஆண்டு முதற்கொண்டு நிறைவேற்றப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் :

(1) 651 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைத்தல்.

(2) மேலும் கூடுதலாக 73,000 கால்நடைகளை கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் கொண்டுவருதல்.

(3) 651 கூட்டுறவு சங்கங்களுக்கு கால்நடை மருத்துவ வசதி செய்தல்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்—தொடர்ச்சி.

(4) மூன்று பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்.

(5) தற்போதுள்ள திருநெல்வேலி பால் பதப்படுத்தும் நிலையத்தின் கொள்திறனை நாளொன்றுக்கு 50,000 லிட்டரிலிருந்து 1,00,000 லிட்டராக உயர்த்துதல்.

(6) நாளொன்றுக்கு 73,000 லிட்டர் பால் விற்பனை செய்தல். இத்திட்டம் 53,000 விவசாய உறுப்பினர்களுக்கு பயன்படும் என திட்டமிடப்பட்டுள்ளது. பால் கொள்முதல் நாளொன்றுக்கு 28,000 லிட்டரிலிருந்து 75,000 லிட்டருக்கு உயர்த்தப்படும்.

அரசு தன் ஒங்கு ரூ. 211.50 லட்சத்தில், 25 சதவிகிதத் தொகையான ரூ 52.875 லட்சத்தை 1987–88 ஆம் ஆண்டிற்கு என ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கென ரூ. 50 இலட்சம் 1988–89 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இரண்டு குளிரூட்டும் நிலையங்களுக்கு வேண்டிய இயந்திர சாதனங்கள் வாங்கப் பட்டு விட்டன. இதுவரை ரூ. 64 லட்சம் செலவாகி உள்ளது. மற்றும் ரூ. 63 லட்சம் 1989–90 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப் பட்டுள்ளது.

(3) கிணறுகளுக்கு புதியதாக மின்சார மோட்டார் வாங்குதல்

மாதவரம் பால்பண்ணையில் தற்போதுள்ள குடி தண்ணீர் கிணறுகளிலும் மற்றும் கழிவுநீர் கிணறுகளிலும் உள்ள பழைய மின்சார மோட்டார்களை அகற்றி புதிய மின்சார மோட்டார்கள் அமைக்கும் வகையில் அரசு ரூ. 1.10 லட்சம் 1988–89 ஆம் ஆண்டிற்கென ஒப்பளித்துள்ளது.

பால்பண்ணை வளர்ச்சி துறையால் செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டங்கள்.

(1) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

மலைப்பகுதிகளில் பால் பண்ணை தொழில் வளம் பெருக அரசு கடன் உதவி மற்றும் பங்கு மூலதன உதவி முதலியன வழங்கி வருகிறது. 1988–89 ஆம் ஆண்டிற்கென அரசு ரூ. 5.50 லட்சம் நீலகிரி மாவட்டத்திற்கு 50 சதவீதம் கடனாகவும் 50 சதவீதம் பங்கு மூலதனமாகவும் பின்வரும் திட்டங்களுக்காக வழங்கியுள்ளது :

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) கால்நடை மருத்துவ வசதி .. .. | 4.00 |
| (2) கால்நடை இனப்பெருக்க வசதி .. .. | 1.50 |
| | 5.50 |

1989 மே 2]

1989–90 ஆம் ஆண்டிற்கென ரூ. 5.32 இலட்சம் கால்நடை மருத்துவ வசதி மற்றும் கால்நடை இனப் பெருக்க வசதிக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் :

மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அன்னூரில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிர்விக்கும் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றினை ரூ. 25 இலட்சம் செலவில் அமைக்க ஒப்பளித்துள்ளது. 1986–87இல் ரூ. 7 லட்சம், 1987–88இல் ரூ. 14 இலட்சமும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 1989–90 ஆம் ஆண்டிற்கென ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இக் குளிரூட்டும் நிலையம் அமைக்கும்பணி முன்னேற்றம் அடைந்து வருகின்றது.

(3) வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் அரசு தர்மபுரி மாவட்டத்தில தெங்கனிக் கோட்டையில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிர்விக்கும் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றினை ரூ. 23.20 லட்சம் செலவில் அமைக்க ஒப்பளித்துள்ளது. இந்த குளிரூட்டும் நிலையம் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.

(4) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் :

(அ) அரசு, தஞ்சாவூர் மாவட்டத்தில் மயிலாடுதுறையில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பால் குளிர்விக்கும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றினை ரூ. 19 இலட்சம் செலவில் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது. இக் குளிரூட்டும் நிலையம் பிப்ரவரி 1988-இல் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அரசு பெரியார் மாவட்டத்தில் தாளவாடியில் நாள் ஒன்றுக்கு 5,000 லிட்டர் பால் குளிர்விக்கும் திறன்கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றினை ரூ. 10 லட்சம் செலவில் (50 சதவீத மான்யம்) அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டம் முன்னேற்றம் அடைந்து வருகிறது.

(இ) அரசு, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சிவகங்கையில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பால் குளிர்விக்கும் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றினை ரூ. 18 லட்சம் செலவில் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கு 50 சதவீதம் மானியமாக ரூ. 9.00 லட்சம் நவம்பர் 1988இல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டக் கட்டுமானப் பணிகள் முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

(ஈ) அரசு காமராசர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஓர் சிறிய பால் பதப்படுத்தும் ஆலை ஒன்று ரூ. 11.30 இலட்சம் செலவில் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டத்திற்காக

அரசு ரூ. 5.65 இலட்சம் மானியமாக சூன் 1988-ல் வழங்கியுள்ளது. திட்டப் பணிகள் முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

(5) ஆதி திராவிடர் நலத்திட்டம் சிறப்பு மத்திய உதவி.

இத் திட்டத்தின் கீழ் பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள ஆதி திராவிட உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்கு என ஆதிதிராவிடர் நல வரவு-செலவு திட்டத்தின் கீழும், சிறப்பு மத்திய நிதி உதவியின் கீழும் மானியத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆதி திராவிடர் உறுப்பினருக்கும் ஒவ்வொரு கறவை மாட்டு விலையில் 33 1/3 சதவீதக் மானியமாக வழங்கப்படுகிறது. ஒரு கறவை மாட்டின் விலை ரூ. 2,500 என 30—11—1988 முடிய நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தது. அரசு இத்தொகையை 1—12—1988 முதல் ரூ. 2,500 லிருந்து ரூ. 3,200 ஆக உயர்த்தியுள்ளது. எஞ்சிய தொகை வங்கிகளினால் கடனாக வழங்கப்படுகிறது. ஆதி திராவிடர் நல வரவு—செலவு திட்டத்தின் கீழ் 1987-88 ஆம் ஆண்டு ரூ. 32.774 இலட்சம் வழங்கப்பட்டு 3,936 நபர்கள் பயனடைந்தார்கள். 1988-89 ஆம் ஆண்டில் 6,842 நபர்கள் பயன் அடையும் வகையில் ரூ. 57 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1989—90 ஆம் ஆண்டில் ரூ. 50 இலட்சம் 6,000 நபர்கள் பயன்பெறும் வகையில் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சிறப்பு மத்திய நிதி உதவியின் கீழ் 1987-88 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,49,365 இலட்சம் வழங்கப்பட்டு, 17,948 ஆதி திராவிடர் உறுப்பினர்கள் பயன் அடைந்தனர். 1988-89 ஆம் ஆண்டில் 27,484 நபர்கள் பயன் அடையும் வகையில் ரூ. 230.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 250 இலட்சம் 30,000 நபர்கள் பயன் பெறும் வகையில் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

(6) தென் ஆற்காடு மாவட்டத்தில், அக்டோபர் 1987-இல் நடந்த இனக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட ஆதி திராவிடர் மறுவாழ்விற்கான திட்டம் :

தென் ஆற்காடு மாவட்டத்தில் அக்டோபர் 1987-இல் நடந்த இனக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட ஆதி திராவிடர்களில் ஆறு கூட்டுறவு சங்கங்களில் உள்ள 1,160 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 74.69 லட்சம் செலவில் திட்டம் ஒன்றினை ஒப்பளித்துள்ளது. இதில் ரூ. 39.89 லட்சம் 100 சதவீதம் மான்யமாக சிறப்பு மத்திய நிதி உதவியின் கீழ் ஒப்பளித்துள்ளது. இந்நிதிபால் கறவை மாடுகள், கறவை மாட்டு ஈட்டுறுதி., சங்கங்களுக்கு பொருட்கள் வாங்குவதற்கும், பால் கேன்கள், பால் டெண்டர் புத்தகங்கள் மற்றும் இதர உதவிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ரூ. 34.80 இலட்சம் வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படும்.

1989 மே 2]

**(7) ஆதி திராவிடர்களுக்கான சிறப்பு கூட்டுத்திட்டம்—சிறப்பு மத்திய நிதி உதவியின் கீழ் :**

(அ) அரசு சிறப்பு, கூட்டுத் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திம் 3 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் புதுப்பிப்பதற்காக ரூ. 2.34 லட்சம் செலவில் திட்டம் ஒன்றினை ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் இச்சங்கங்களில் உள்ள 90 ஆதி திராவிட உறுப்பினர்கள் பயன் அடைவர். திட்ட மதிப்பீட்டில் அரசு ரூ. 79,470 மானியமாக சிறப்பு மத்திய நிதி உதவியின்கீழ் வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள ரூ. 1,54,530 வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படும்.

(ஆ) அரசு, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள சாண்டலர்புரம் ஆதி திராவிடர் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கத்தின் பணிகளை கவனிப்பதற்காகவும், இச் சங்கத்தில் உள்ள ஆதி திராவிட உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் ஒரு கூட்டுறவு சார்பதிவாளர் பதவியினை சனவரி 1989-இல் ஓர் ஆண்டிற்கு ஒப்பளித்துள்ளது. இதற்கான செலவினங்களை சிறப்பு மத்திய நிதி உதவியின் கீழ் வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்.**

பால் பெருக்குத் திட்டம் மூன்று அடுக்கு 'ஆனந்தபாணி' முறையில் செயல்படுத்துவதற்காக கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும், மாவட்ட அளவில் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும், மாநில அளவில் கூட்டுறவு இணையமும் அமைக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் வழி பால் உற்பத்தியை பெருக்கவும், பால் உற்பத்தியாளர்களுக்கு லாபகரமான (கட்டுப்படியான) விலையை அளிக்கவும் நகரங்களில் வாழ்கிற மக்களுக்கு தரமான பாலை நியாயமான விலையில் விற்பதும் கொள்கையாகும்.

தற்போது பால் பெருக்குத் திட்டத்தை அந்தந்த மாவட்ட ஒன்றியங்களிளே செயல்படுத்தி வருகின்றன. சேலம், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் 1981-ஆம் வருடத்திலும், தர்மபுரி மாவட்டத்தில் 1982-ம் வருடத்திலும், செங்கை-அண்ணா, தென் ஆற்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களில் 1983 வருடத்திலும், வட ஆற்காடு மாவட்டத்தில் 1984-ஆம் வருடத்திலும் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்ளில் 1985-ஆம் வருடத்திலும், திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் 1987-ஆம் வருடத்திலும் பால் பெருக்கு திட்டம் செயல்படுத்துவதை அந்தந்த ஒன்றியங்கள் ஏற்று செயல் படுத்தி வருகின்றன. மேலும் இவ்விணையம் உறுப்பினர் ஒன்றியங்களுக்காகத் தேவையான திரவ நைட்ரஜன், உறைவிந்து நிலையம், பொலிகாளைப் பேணல், கால்நடைத் தீவனம் முதலிய பொதுவான வசதிகளை அமைத்து ஒன்றியங்களுக்கு அளித்து வருகிறது.

தற்சமயம் இவ்விணையத்தின்கீழ் 3 பால் பண்ணைகள் அம்பத்தூர், மாதவரம் மற்றும் அயனாவரம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இப்பால் பண்ணைகளின் திறன் நாளொன்றுக்கு 3 லட்சம் லிட்டர்—அம்பத்தூர், 1.25 இலட்சம்—மாதவரம், 12,000 லிட்டர்—அயனாவரம் ஆகும். அம்பத்தூர் மற்றும் மாதவரம் பால் பண்ணைகளைப் பயன்படுத்தி பாலை பதப்படுத்தி, நிலைப்படுத்தி, பாலிதீன் பைகளின் மூலமாகவும் தானியங்கி நிலையங்களின் மூலமாகவும் பால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அயனாவரம் பால் பண்ணை, பால் உப பொருட்களாகிய ஐஸ்கிரீம், யோகர்ட், லஸ்ஸி மற்றும் கோவா உற்பத்தி செய்ய பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இது தவிர மாவட்ட பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு ஒன்றியங்களுக்கு சொந்தமான கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, மற்றும் மதுரை ஆகிய 4 பால் பண்ணை மற்றும் பால்பொடி தயாரிக்கும் ஆலைகளின் மூலமாக பிற பால் உற்பத்தி பொருட்கள் அதாவது பால்பொடி, வெண்ணெய், நெய், ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டு 'ஆவின்' பெயரால் தமிழ்நாட்டிலும், மற்ற மாநிலங்களிலும் விற்பனை செய்ய உதவி புரிகின்றது. இவ்விணையம் மற்ற ஒன்றியங்களுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவி அவ்வப்போழுது அளிப்பதுடன், திட்ட ஆக்க விபரம் ஒப்பந்தபுள்ளி அட்டவணை மேலும் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் பால் பண்ணை நிறுவுதல் ஆகியவற்றைத் தாமே மேற்கொள்வதுடன் தேவைப்படின் விஸ்தரிப்பு வேலையையும் லாப நோக்கமின்றி ஒருவர் சார்பில் மற்றவர் பெற்றுக் கொள்வது போன்ற அடிப்படையில் மேற்கொள்கிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தேசிய பால்வள வாரியத்தின் பணி.

இத்திட்டத்திற்கு இந்தியப் பால் பண்ணைக் கழகம் கடன்களை காலம் தாழ்த்தி கொடுப்பதற்கான சட்ட இசைவுக் காலம் 5 வருடங்கள் உள்ளிட்டு. 20 ஆண்டுகளில் திருப்பி செலுத்தக் கூடிய கடன் மற்றும் மானியம் 70 : 30 என்ற விகிதத்தில் கொடுத்து உதவுகிறது. அத்துடன் தேசிய பால்வள வாரியம் தொழில் நுட்ப உதவி அளிப்பதுடன் திட்ட ஆக்க விபரம், ஒப்பந்தப் புள்ளி அட்டவணை மேலும் பால் குளிரூட்டும் நிலையங்கள், பால் பண்ணை நிறுவுதல் ஆகியவற்றைத் தானே மேற்கொள்வதுடன் தேவைப்படின் விஸ்தரிப்பு வேலையையும் லாப நோக்கமின்றி ஒருவர் சார்பில் மற்றவர் பெற்றுகொள்வது போன்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

1989 மே 2]

மாவட்ட ஒன்றியங்கள் வாரியாக கொள்முதல் செய்யப்பட்ட பால் :—

| வரிசை எண்ணும் மாவட்டமும். | 1986 | 1987 | 1988 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (லட்சம் லிட்டர்களில்). | | |
| 1. சென்னை-செங்கை அண்ணா. | 205.65 | 215.92 | 197.88 |
| 2. தென் ஆற்காடு .. | 213.09 | 235.23 | 259.26 |
| 3. வட ஆற்காடு .. | 562.24 | 609.44 | 666.27 |
| 4. தர்மபுரி .. .. | 235.85 | 232.51 | 255.39 |
| 5. சேலம் .. .. | 507.64 | 496.36 | 550.50 |
| 6. பெரியார் .. | 416.93 | 353.04 | 356.37 |
| 7. கோயம்புத்தூர் .. | 194.63 | 173.32 | 255.87 |
| 8. நீலகிரி .. | 87.73 | 72.54 | 89.22 |
| 9. மதுரை .. | 266.72 | 157.93 | 282.51 |
| 10. திண்டுக்கல் காயிதே மில்லத். | .. | 120.40 | 139.42 |
| 11. திருச்சி .. .. | 129.30 | 135.11 | 178.04 |
| 12. தஞ்சாவூர் .. | 39.07 | 50,88 | 49.74 |
| 13. புதுக்கோட்டை | 8.89 | 10.40 | 11.38 |
| மொத்தம் .. | 2,867.74 | 2,863.08 | 3,291.85 |

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## பால் விலை

### அ. கொள்முதல் (உற்பத்தியாளர்களுக்கான) விலை :

பால் உற்பத்தி மற்றும் கால் நடைகளின் பராமரிப்புச் செலவு அதிகரித்ததால் கொள் முதல் விலை விவசாயிகளுக்கு அவ்வப்போது கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டது :—

| காலம். | எருமைப் பால் கிலோ (கொழுப்பு) ஒன்றுக்கு. | பசும்பால் கிலோ (மொத்த திடப் பொருள்) ஒன்றுக்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. பை. | ரூ. பை. |
| 15–8–1987 முதல் 14–10–1987 வரை .. | 50.00 | 24.00 |
| 15–10–1987 முதல் 31–10–1987 வரை .. | 48.00 | 24.00 |
| 1–11–1987 முதல் 31–3–1988 வரை .. | 48.00 | 23.00 |
| 1–4–1988 முதல் 2–11–1988 வரை .. | 50.00 | 24.00 |
| 3–11–1988 முதல் | 58.00 | 28.00 |

### ஆ. விற்பனை விலை :

அதிகப்படியான கொள்முதல் விலை உற்பத்தியாளர்களுக்கு கொடுத்ததாலும், பால் விநியோகப் போக்குவரத்துச் செலவு மற்றும் பாலிதீன் பை அடைப்பான் விலை அதிகரித்ததாலும் விற்பனை விலையை கீழ்க்கண்டவாறு அவ்வப்போது மாற்றி அமைக்கப்பட்டது :—

| | 8–8–1987 முதல் | 1–11–1987 முதல் | 16–11–1988 முதல் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| பால் அட்டைக்கு .. | 4.20 | 4.50 | 5.00 |
| ரொக்கத்திற்கு .. | 4.30 | 4.60 | 5.20 |

1989 மே 2]

**கால்நடைத் தீவன ஆலை :**

தற்போது 3 கால் நடை தீவன ஆலைகள் ஒவ்வொன்றும் ஷிப்டு ஒன்றுக்கு 40 டன் உற்பத்தித் திறனுடன் சென்னை, ஆம்பூர், மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. சென்னையிலுள்ள கால்நடைத் தீவன நிலையம் இவ்விணையத்தின் கீழ் இயங்குகிறது. ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலுள்ள கால்நடைத் தீவன உற்பத்தி ஆலை தொடர்ந்து குத்தகைக்கு எடுக்கப்பட்டு இவ்விணையத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது. ஈரோட்டிலுள்ள கால்நடை தீவன ஆலை, பெரியார் மாவட்ட ஒன்றியத்திற்குரியது.

கால்நடைத் தீவனத்தை, பால் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தியாளர்களுக்கும் கால்நடை பராமரிப்புத் துறையிலுள்ள கால்நடை பண்ணைகளுக்கும் மற்றும் கன்று வளர்ப்பு திட்டங்களுக்கும், சென்னை மாநகராட்சி போன்ற உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் விற்பனை செய்து வருகிறது. கால்நடைத் தீவனம் விற்பனையை அதிகரிக்கும் வகையில் உள்ளூர் விற்பனையாளரும் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். 1987 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் கால்நடைத் தீவனத்தின் விற்பனை கீழ் வருமாறு—

| | 1987 | 1988 |
|---|---|---|
| கால்நடைத் தீவனம் (டன்கள்) .. | 20,721 | 21,092 |

ஈரோட்டிலுள்ள கால்நடைத் தீவன ஆலை, சேலம், பெரியார், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்கிறது. மேலும் மதுரையில் புதிதாக கட்டப்படும் கால்நடைத் தீவன ஆலை ஷிப்டு ஒன்றுக்கு 40 டன் திறனுடன் தென் மாவட்டங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய கட்டப்பட்டு வருகிறது.

**பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை :**

சென்னையிலுள்ள பால் பண்ணைகள் 4.5 சதவீத கொழுப்பு சத்தும், 8.5 சதவீதம் கொழுப்புச் சத்தில்லாத திடச் சத்தும் உள்ள நிலைப்படுத்திய பாலை விற்பனை செய்து வருகின்றது. கடந்த ஆண்டில் சராசரியாகச் சென்னையில் நாளொன்றுக்கு 5.32 இலட்சம் லிட்டர்கள் பால் விற்பனை செய்யப்பட்டது. இவ்வாண்டு இதை 5.60 இலட்சம் லிட்டராக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பால் நுகர்வோர்கள் தங்களின் பால் தேவையை 525 பால் விற்பனை நிலையங்கள், 50 பாலகங்கள் மற்றும் 124 தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் மற்றும் 71 பைபர் பிளாஸ்டிக் தொட்டிகள் (எப்.ஆர்.பி. டேங்க்) மூலமாக பெற்று வருகின்றனர். பால் நுகர்வோர்களைப் பால் விற்பனையில் ஈடுபாடு கொள்ளவும் உபயோகிப்பாளர்களுக்கு சேவையின் தரத்தை உயர்த்தவும் 31 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

[1989 மே 2

பால் பொருட்களின் விற்பனை விபரம் பின்வருமாறு :—

| இனங்கள். (1) | 1986 (2) | 1987 (3) | 1988 (4) |
|---|---|---|---|
| | (எண்கள் இலட்சத்தில்). | | |
| பால் (லிட்டர்களில்) .. | 1,788.60 | 1,872.45 | 1,941.80 |
| நாளொன்றுக்கு சராசரி | 5.00 | 5.13 | 5.32 |
| வெண்ணெய் (கி. கிராமில்) | 10.59 | 8.80 | 8.83 |
| நெய் (கி. கிராமில்) .. | 1.91 | 0.85 | 1.06 |
| பால்பொடி (டன்களில்) | 6.81 | 3.80 | 3.68 |

இணையத்தின் 1988 ஆம் ஆண்டின் மொத்த விற்பனை ரூ. 102.03 கோடியாகும்.

பால் பெருக்குத் திட்டம் 1 :

பால் பெருக்குத் திட்டம் முதல் கட்டமாக ஜூலை 1972 முதல் மார்ச் 1981 வரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத் திற்குத் தேவையான நிதி உதவியை உலக உணவுத் திட்ட நிறு வனத்தின் உதவியை பெற்று முன்னாள் இந்திய பால்பண்ணைக் கழகம் தற்போதைய தேசீய பால்வள வாரியம் தமிழ்நாட்டில் பால்வள மேம்பாட்டில் மிகுந்த முன்னேற்றத்தை அடைய உதவியது. இத்திட்டத்தினால் சென்னையில் பிரதான பால் பண்ணை (Mother Dairy) ஒன்றை அமைத்து அதற் குத் தேவையான பாலினை வெப்ப நிலை பாதுகாக்கப்பட்ட பால் வண்டிகளின் மூலம், தேவைப்பட்ட இடங்களில் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் பால்பண்ணை அமைத்து பால் கொண்டு வரப் பட்டது. உலக அளவில் கூட்டுறவு முறையில் பால் உற்பத்தி தொழிலில் வெற்றி கண்ட 'அமுல்' நிறுவனத்தின் அடிப்படை கொள்கைகளையும், செயல் திட்டங்களையும் வடிவமைப்பாகக் கொண்ட முதலாம் பால் பெருக்குத் திட்டத்தை தமிழக அரசு தமிழ்நாடு பால்வள நிறுவனத்தை நிறுவி இரு அடுக்கு அமைப்பின் கீழ் செங்கை—அண்ணா, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தர்மபுரி சேலம், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் மதுரை ஆகிய 9 மாவட்டங்களில் கொள்முதல் செய்யும் 4 பிராந்தியமாக பிரித்து செயல்படுத்தியது. இந்த மாவட்டங்களில் கொள்முதல் செய்யும் பாலை சென்னை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் விற்பனை செய்யப்பட்டது. இதற்காக இத்திட்டங்களின் கீழ் ரூபாய் 15.64 கோடி இந்திய பால்பண்ணைக் கழகம் வழங்கியதில் ரூபாய் 15.48 கோடி செலவிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அம்பத்தூரில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தக்கூடிய திறன்கொண்ட ஒரு பால்பண்ணை 1976-ல் நிறுவப்பட்டது.

1989 மே 2]

ஈரோட்டில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியைச் சமப்படுத்தும் பால்பண்ணையும், நாளொன்றுக்கு 100 டன் உற்பத்தி திறனுள்ள ஒரு கால்நடைத் தீவன ஆலையும், சங்க ராண்டன்பாளையம் மற்றும் சத்தியமங்கலத்தில் குளிரூட்டும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூர், தென் ஆற்காடு மாவட்டத்தில் விழுப்புரம் மற்றும் சின்ன சேலத்தில் குளிரூட்டும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மதுரை பால்பண்ணையில் நாளொன்றுக்கு 10 டன் உற்பத்தி திறனுள்ள ஒரு பால்பவுடர் தயாரிக்கும் ஆலை அமைக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கால் நடைகளைக் கொண்டு மையக்கரு ஜெர்சி மற்றும் பொலிக்காளைப் பண்ணை நிறுவப்பட்டுள்ளது.

<u>பால் பெருக்குத் திட்டம் 2 :</u>

பால் பெருக்குத் திட்டம் 1-ன் தொடர்ச்சியாக பால் பெருக்குத் திட்டம் 2 துவங்கப்பட்டது. இத்திட்டத்தைச் செம்மையாகச்செயல் படுத்துவதற்காகப் பால்பெருக்குத் திட்டத்தின் கீழ் இரு அடுக்காக செயல்பட்டதை 3 அடுக்குகளாக மாற்றி அமைத்து கிராம அளவில் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் ஒன்றியங்கள், மாநில அளவில் இணையமும் அமைத்து இத் திட்டத்தை அதே 9 மாவட்டங்களில் செயல் படுத்தியது. இத்திட்ட காலத்தில் ரூபாய் 26.26 கோடி இவ்விணையமும் மற்றும் ஒன்றியங்களும் சேர்த்து செலவிட்டுள்ளன. இதற்கிடையில் பால் பெருக்குத் திட்டம் 3-ன் கீழ் உள்ள முன்னேற்பாடு செயல் பாட்டுத் திட்டம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் ஏப்ரல் 1985 முதல் துவங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் முடிவுற்ற நிலையில் 12 மாவட்டங்களில் பால் உபரிக் காலத்தில் நாள் ஒன்றுக்கு 10.15 இலட்சம் லிட்டர் பாலை 5,170 கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொள்முதல் செய்ததன் வழி 8.19 இலட்சம் விவசாயிகள் பயன் அடைந்துள்ளார்கள். இதனைத்தவிர, முடிவடைந்துள்ள மற்ற திட்டங்கள் கீழ்வருமாறு :—

(அ) சேலத்தில் அமைக்கப்பட்ட உற்பத்திச் சமப்படுத்தும் பால் பண்ணை பால் பெருக்குத் திட்டம் 1-ன் கீழ் முதலில் திட்டமிடப்பட்டு பின்னர் பால்பெருக்குத் திட்டம் 2-க்கு மாற்றப்பட்டது. நாளொன்றுக்கு ஒரு இலட்சம் பாலை பதப்படுத்தும் திறன் கொண்ட பால்பண்ணை ரூ. 328 இலட்சம் செலவில் அக்டோபர் 1983-ல் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

(ஆ) அம்பத்தூரிலுள்ள தாய் பால் பண்ணையின் பால் கொள்திறன் 2 இலட்சம் லிட்டர்களிலிருந்து 3 இலட்சம் லிட்டர்களாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக 75 தானியங்கி பால் வழங்கு நிலையங்கள் சென்னையில் வெவ்வேறு இடங்களில் கட்டப்பட்டுள்ளது.

[1989 மே 2

(இ) ரூ. 320 இலட்சம் செலவில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர்கள் கொள்திறன் கொண்ட புதிய பால்பண்ணையும், நாளொன்றுக்கு 2 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட பாலாடைக்கட்டி தயாரிக்கும் இயந்திரமும் நீலகிரி மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ளன.

(ஈ) திருவண்ணாமலையில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர்கள் கொள்திறன் கொண்ட குளிரூட்டும் நிலையம் ரூ. 14 இலட்சம் செலவில் மார்ச் 1984-ல் அமைக்கப்பட்டுள்ளது.

(உ) ரூ. 62.10 இலட்சங்கள் செலவில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர்கள் கொள்திறன் கொண்ட புதிய குளிரூட்டும் நிலையம் செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூரில் அமைக்கப்பட்டுள்ளது.

(ஊ) ரூ. 14.86 இலட்சம் செலவில் சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் குளிரூட்டும் நிலையத்தின் கொள்திறன் நாளொன்றுக்கு 30,000 லிட்டர்களிலிருந்து 50,000 லிட்டர்களாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

(எ) வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள அனக்காவூரில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர்கள் கொள்திறன் கொண்ட புதிய குளிரூட்டும் நிலையம் ரூ. 35.60 இலட்சங்கள் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

(ஏ) சேலத்தில் மணிக்கு 45 லிட்டர் உற்பத்தி செய்யக்கூடிய திரவ நைட்ரஜன் ஆலை அமைக்கப்பட்டுள்ளது.

(ஐ) ஈரோட்டில் சித்தோடு என்னுமிடத்தில் ரூ. 10 இலட்சம் மதிப்புடைய ஒரு எருமை உறைவிந்து நிலையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பால் பெருக்குத் திட்டம் 3 :

பால் பெருக்குத் திட்டம் 2-ஐ மாற்றியமைத்து பால் பெருக்குத் திட்டம் 3 ஏப்ரல் 1987 முதல் 5 ஆண்டு காலத்தில் (1987–92) ரூ. 68.19 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 2-வது பால் பெருக்குத் திட்டத்தின் திட்டக் கடனுக்கு 8.5 சதவீதம் வட்டியும் திருப்பி செலுத்தும் காலம் 20 ஆண்டுகளாகவும் அதில் கடன் தவணை உரிமை 5 ஆண்டுகளாகவும் இருந்தன. ஆனால் 3-வது பால் பெருக்குத் திட்டத்தில் திட்ட கடனுக்கு 10 சத வீதம் வட்டியும், கடன் திருப்பி செலுத்தும் காலம் 15 வருடங்களாகவும் அதில் கடன் தவணை உரிமை 3 ஆண்டு காலமகாவும் தெரிவிக்கப்பட்டு அக்டோபர் 1987 முதல் செயல்படுத்தப்பட்டது. இதனால் பால் பெருக்குத் திட்டம் 13 மாவட்டங்களாகிய சேலம்

1989 மே 3]

பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி, தர்மபுரி, செங்கை அண்ணா, தென்னாற்காடு, வட ஆற்காடு, மதுரை, திருச்சிராப் பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல் காயிதே மில்லத் ஆகியவற்றில் செயல்படுத்தப்படும். 3-ம் பால் பெருக்குத் திட்டம் ரூபாய் 68.19 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்து வதற்கான கருத்துரு தேசிய பால்பண்ணை நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

பால் பெருக்குத் திட்டம் 3-ன் கீழ் செயல்பட உள்ள திட்டங்களின் விவரம் :

1. தென் சென்னையில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் கொள் திறனுள்ள ஒரு புதிய பால்பண்ணை அமைக்கப்பட உள்ளது.
2. ஈரோட்டில் நாளொன்றுக்கு 30 டன் உற்பத்தி திறனுடன் ஒரு பால்பொடி பண்ணை அமைக்கப்பட உள்ளது.
3. திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூரில், நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் கொள்திறன் கொண்ட புதிய பால்பண்ணைகள் அமைக்கப்பட உள்ளன.
4. தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள விழுப்புரம் மற்றும் செங்கை அண்ணா மாவட்டத்திலுள்ள திருவள்ளூர் குளி ரூட்டும் நிலையங்களின் கொள்ளளவுகளை முறையே நாளொன்றுக்கு ஒரு இலட்சம் மற்றும் 50,000 லிட்டர் களாக மாற்றியமைக்கப்படவிருக்கிறது.
5. அம்பத்தூர் மற்றும் மாதவரம் பால்பண்ணைகளின் கொள்திறன்களை நாளொன்றுக்கு முறையே 3 இலட்சம் லிட்டர்களிலிருந்து 4 இலட்சம் லிட்டர்களாகவும் மற்றும் 1.25 இலட்சம் லிட்டர்களிலிருந்து 1.75 இலட்சம் லிட்டர்களாகவும் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. மேலும் கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர் மற்றும் மதுரையி லுள்ள பால்பண்ணைகளின் கொள்திறன் நாளொன்றுக்கு முறையே 1 இலட்சம் லிட்டர்களிலிருந்து 2 இலட்சம் லிட்டர்களாகவும், 1 இலட்சம் லிட்டர்களிலிருந்து 1.5 இலட்சம் லிட்டர்களாகவும், 1.5 இலட்சம் லிட்டர் களிலிருந்து 2 இலட்சம் லிட்டர்களாகவும் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது.
6. செங்கை அண்ணா மாவட்டத்திலுள்ள பாலுச்செட்டி சத் திரம் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சின்னசேலம், சேத்தியா தோப்பு மற்றும் திண்டிவனம், வடஆற்காடு மாவட்டத்திலுள்ள ஆம்பூர், திருவண்ணாமலை அனக்கா வூர், சேலம் மாவட்டத்திலுள்ள நாமக்கல், பெரியார் மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலம் மற்றும் சங்கராண் டன்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள திருப்பூர், சுல்தான்பேட் மற்றும் சண்முகபுரம், திண்டுக் கல் காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள பழனி, திண்டுக் கல், மதுரை மாவட்டத்தில் உள்ள தேனி, திருச்சி மாவட்

டத்திலுள்ள பெரம்பலூர், கரூர் மற்றும் செயங்கொண்ட சோழபுரம், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பட்டுக் கோட்டை மற்றும் மன்னார்குடி ஆகிய இடங்களில் உள்ள பால் குளிரூட்டும் நிலையங்களின் கொள்திறன் விரிவாக் கம் செய்யப்பட உள்ளது.

7. செங்கை அண்ணா மாவட்டத்திலுள்ள மதுராந்தகம், வட ஆற்காட்டிலுள்ள அரக்கோணம், தர்மபுரி மாவட்டத்தி லுள்ள அரூர், சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் ஆகிய இடங்களில் புதிய பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

8. ஈரோடு பால்பண்ணையின் கொள்திறனை நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர்களிலிருந்து 3 லட்சம் லிட்டர் களாகவும், சேலம் பால் பண்ணையின் கொள்திறன் நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர்களிலிருந்து 3 இலட் சம் லிட்டர்களாகவும், வேலூர் பால் பண்ணையின் கொள் திறனை 70,000 லிட்டர்களிலிருந்து 1,00,000 லிட்டர் களாகவும் விரிவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

9. மதுரை மாவட்டத்திலுள்ள கப்பலூரில் நாளொன்றுக்கு 100 டன்கள் கொள்திறனுள்ள கால்நடைத் தீவன ஆலை ஒன்று நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

10. சேலத்தில் ''சுவையூட்டிய பால்'' விற்பனை செய்வதற்காக டெட்ரா பிரிக் இயந்திரம் நிறுவப்பட்டு அது சோதனைக் காக ஓட்டப்பட்டு வருகின்றது.

11. சென்னை பெருநகரம் மற்றும் மாவட்டங்களிலுள்ள நகரங் களில் பால் விற்பனையை நாளொன்றுக்கு 9.07 இலட்சம் லிட்டர்களிலிருந்து 16.76 இலட்சம் லிட்டர்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

<u>இலக்குகளும் சாதனைகளும் வருமாறு.</u>

(1) 1992 ஆம் ஆண்டு திட்ட காலத்திற்குள் 6,197 கூட்டுறவு சங்கங்களை அமைக்கவேண்டும் என்று கருதியிருக்க 31–12–1988 நாள் வரையில் 5,425 கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள் ளன ;

(2) 31–12–1988 ஆம் நாள் நிலவரப்படி 10,25,248 உழவர்கள் பயனடைந்துள்ளனர். திட்ட காலத்திற்குள் 11.75 இலட்சம் உழவர்கள் பயனடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது;

(3) கடந்த ஆண்டில் நாளொன்றுக்கு சராசரியாக 7.84 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்திருக்க, 1987–88 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு சராசரியாக கொள்முதல் செய்யப்

1989 மே 2]

பட்ட பாலின் அளவு 7.99 இலட்சம் லிட்டராகும். திட்ட காலத்திற்குள் நாளொன்றுக்கு பாலின் சராசரி கொள்முதல் 13.77 இலட்சம் லிட்டரையும், பால் பெருக்கம் உள்ள காலத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 19.71 இலட்சம் லிட்டர் விலையும் கொள்முதல் செய்ய இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(4) கோயம்புத்தூரிலுள்ள வால்பாறை தவிர மற்ற எல்லா முதல் தர நகரஙகளிலும் 50,000-க்கு மேல் ஒரு இலட்சத்திற்குட்பட்ட மக்கள் தொகை கொண்ட 28 நகரங்களில் 20 நகரங்களிலும், 50.000-க்கு குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்களிலும் இத்திட்டத்தின் கீழ் பால் விற்பனை செய்யப்படுகின்றது.

(5) மாநிலத்தில் இத்திட்டத்தின் கீழ் உள்ள ஊரக பால் பண்ணைகளில் தற்பொழுது கொள்திறன் நாளொன்றுக்கு 7.72 இலட்சம் லிட்டர்களிலிருந்து 16.50 இலட்சம் லிட்டர்களாக இத்திட்ட முடிவில் உயர்த்தவும், சென்னை நகர்ப்புற பால் பண்ணையின் திறனை நாளொன்றுக்கு தற்போதுள்ள 4.25 இலட்சம் லிட்டர்களிலிருந்து 7.75 இலட்சம் லிட்டர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பால் பண்ணைகளில் கொள்திறன் வருமாறு :—

| வரிசை எண் மற்றும் பால்பண்ணை. | கொள்திறன் (லிட்டர் லட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| பெருநகர் பால் பண்ணைகள்— | |
| 1 மாதவரம் .. .. .. | 1.25 |
| 2 அம்பத்தூர் .. .. .. | 3.00 |
| | 4.25 |
| ஊரக பால் பண்ணைகள்— | |
| 3 வேலூர் .. .. .. | 0.76 |
| 4 கிருஷ்ணகிரி .. .. .. | 1.00 |
| 5 சேலம் .. .. .. | 1.00 |
| 6 ஈரோடு .. .. .. | 1.50 |
| 7 கோயம்புத்தூர் .. .. .. | 1.00 |
| 8 நீலகிரி .. .. .. | 0.50 |
| 9 மதுரை .. .. .. | 1.50 |
| 10 திருச்சிராப்பள்ளி .. .. .. | 0.26 |
| 11 தஞ்சாவூர் .. .. .. | 0.26 |
| | 7.72 |

[1989 மே 2

தற்போதுள்ள 33 பால் குளிரூட்டும் நிலையங்களை விரிவாக்குவதுடன் இன்னும் 6 குளிரூட்டும் நிலையங்களை அமைத்து அவைகளின் கொள்திறனை நாளொன்றுக்கு 6.16 இலட்ச லிட்டர்களிலிருந்து 11.82 இலட்சம் லிட்டர்களாக இத்திட்ட முடிவிற்குள் விரிவாக்கம் செய்யப்படும்.

சிறப்பு கால்நடை இனவிருத்தித் திட்டத்தின் கீழ் கலப்பின பசுங்கன்று வளர்ப்புத் திட்டம்

இந்திய அரசு சிறப்பு கால்நடை இனவிருத்தித் திட்டத்தின் கீழ் கலப்பின பசுங்கன்று வளர்ப்புத் திட்டத்தை, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தேர்தெடுக்கப்பட்ட 99 மாவட்டங்களில் துவங்கியுள்ளது. இத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான செலவினை, மத்திய அரசும் மாநில அரசும் 50.50 என்ற அளவில் ஏற்றுக் கொள்கின்றன.

தமிழ்நாட்டில் ஐந்து மாவட்டங்களில், முறையே தென்னாற்காடு, வட ஆற்காடு, மதுரை, சேலம் மற்றும் கோயமபுத்தூர் மாவட்டங்களில் தமிழ்நடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திடம் ஊரக அடிப்படை வசதிகள் (Rur l infrastructural faciliti s) உள்ள காரணத்தால், இணையத்தினால் கலப்பின பசுங்கன்று வளர்ப்புத் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. இதற்கான நிதி, கால்நடை பராமரிப்புத் துறை அளிக்கிறது.

நான்கு மாத வயது முதல் பத்து மாத வயதிற்குள் உள்ள கலப்பின பசுங்கன்றுகள் வைத்திருக்கும் சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் பயனாளிகளாக (3 inificiaries( இத்திட்டத்தில் சேர்க்கப்படுகின்றனர். இத்திட்டத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொரு பயனாளியும், ஒரு கன்று வீதம் இத்திட்டத்தின் கீழ் வளர்க்க அனுமதிக்கப்படுகின்றனர்.

தமிழ்நாடு பால் உற்பத்திபாளர் கூட்டுறவு இணையத்தினால் தயாரிக்கப்படும் சிறப்பு கன்றுத் தீவனம், பயனாளிகளுக்கு தங்கள் கன்றுகளை வளர்க்க அளிக்கப்டடுகிறது. பயனாளிகளில் சிறு விவசாயிகள் மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியமாகவம், விவசாயக் கூலிகளும் 66.6 சதவீதம் மானியமாகவும் தீவன மதிப்பில் தீவனமாகவே வழங்கப்படுகிறது மானியம் தவிர்த்த தீவன மதிப்பின் எஞ்சிய பகுதி தீவனத்தை பயனாளிகள் பெறுவதற்கு வங்கிகள் மூலம் கடன் வசதி பெற வழி செய்யப்பட்டுள்ளது. வங்கிக் கடன் பெற விரும்பாத பயனாளிகள் தாங்கள் சொந்த செலவில் தீவனம் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

1989 மே 2]

தீவனத்திற்கான மானியம் தவிர, பயனாளிகளுக்கு ஒரு கன்றுக்கு ரூபாய் 10 மற்றும் ரூபாய் 42 வீதம் கன்றுகளின் உடல் நலம் (Health cover) மற்றும் காப்புறுதி (Insurance)-களுக்கான முறையே மானியமாக வழங்கப்படுகிறது.

1987-88-ஆம் ஆண்டு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் நிர்ணயிக்கப்பட்ட 2,500 கன்றுகள் என்ற இலக்கைத்தாண்டி 2,696 கன்றுகளை ரூபாய் 57.88 இலட்சம் செலவில் சேர்த்துள்ளது. 1988-89 ஆண்டுகளில் 2,013 கன்றுகள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதற்காக அரசு நிதியாக ரூபாய் 64.31 இலட்சங்கள் ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் 1989-90ஆம் ஆண்டில் 2,500 கன்றுகளை ரூபாய் 75.06 இலட்சம் செலவில் சேர்க்க உத்தேசித்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1989 மே 2

## இணைப்பு II.

## மீனளத் துறை.

## கொள்கை விளக்கக் குறிப்பு 1989-90.

### 1. முன்னுரை :

1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை, சுமார் 41,412 சதுர கிலோ மீட்டர் பரப்புடைய கடல் சூழ்ந்த நிலப்பரப்பு மற்றும் 3.70 இலட்சம் ஹெக்டேர் பரப்புடைய உள்நாட்டு நீர்நிலைகளைக் கொண்ட தமிழகத்தில் பலதரப்பட்ட மீன்வளத்தைக் பெருக்குவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இந்த வளங்களைப் கொண்டு தமிழ்நாட்டில் மீன் உற்பத்தியைப் வெகுவாகப் பெருக்குவதில் மிகுந்த முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. 4.80 இலட்சம் மக்கள் தொகை உடைய கடல் மீனவர்களில் 1.05 இலட்சம் மீனவர்கள் கடல் மீன்பிடித் தொழிலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள். உள்நாட்டு மீனவ மக்கள் தொகை 1.55 இலட்சம் ஆகும். நுகர்வோருக்கு புரதச்சத்து மிகுந்த மீன் உணவை நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதையும் அதே சமயம் மீனவ சமூகத்தினரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதையும் இரண்டு குறிக்கோள்களாகக் கொண்டு, மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது முக்கியமானதாகும். விரிவானதும், பலதரப்பட்டதுமான ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளுடன் மீன்துறை இந்த மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த முற்றிலும் தகுதி உடையதாய் உள்ளது. இந்நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் 15 சதவிகிதம் தமிழ்நாட்டின் பங்காகும் என்பதிலிருந்து இது தெரிய வரலாம்.

### 2. மீனளம் குறித்த அரசின் கொள்கை :

நன்கு வரையறுக்கப்பட்ட உத்திகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் மீனவ சமுதாயத்தை மேம்படுத்துவது மீன்துறையின் குறிக்கோளாகும், தமிழ்நாட்டின் மீனள மேம்பாட்டுத் திட்டங்களின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு :—

(1) மாநிலத்தில் உள்ள கடல், உள்நாடு மற்றும் உவர்நீர் பரப்புகளிலிருந்து அதிக அளவில் புரதச்சத்து மிகுந்த மீன் உணவு கிடைக்கச் செய்வது :

(2) உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மீன்பிடி படகுகளின் செயல் திறனை மேம்படுத்துவதன் மூலம் சிறு மீனவர்களை மேம்படுத்துதலும், கரையோர மீன்பிடி படகுகள் போன்ற உள்நாட்டு கடல் பகுதிகளிலிருந்து மீன் பிடித்தலை அதிகரிக்க நடுத்தரத் தொழில் நுட்பவியலை அறிமுகப்படுத்துதலும் :

[1989 மே 2]

(3) உரிய ஆதாயமுள்ள மீன்பிடி பகுதிகள் குறித்து, கடற்கரையோர மீனவர்களுக்கு ஆலோசனை கூறும் வகையில், கடலோரப் பகுதிகளில் மீன்வளத்தை ஆய்வு செய்து மதிப்பிடுதல் :

(4) பிடித்த மீன்களை சுகாதார முறையில் கையாளுதல், எரிபொருள் வழங்குதல், வலை சீர்படுத்தல் ஆகியவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது உட்பட, இயந்திரப் படகுகளுக்கு மீன்பிடி துறைமுகங்களையும் நங்கூரம் பாய்ச்சும் வசதி களையும் செய்துத் தருதல் :

(5) மாநில மீனளக் கழகத்தின் மூலமாக, நுகர்வோருக்கு நியாய விலையில் நல்ல தரமான மீன்கள் கிடைக்கச் செய்வதை உறுதி செய்யும் வகையில், மாநிலத்திலுள்ள முக்கிய மாநகரங்களிலும், நகரங்களிலும் குறிப்பிடத்தக்க மீன் பதப்படுத்தும் முறைகளை உருவாக்குதல், மீன் விற்பனையைத் திட்டமிட்டு விரிவுபடுத்தல் :

(6) நீர்நிலைகளிலும், குளங்களிலும் போதிய அளவு தரமான மீன்குஞ்சுகளைச் சேமித்து வைத்து மீன் உற்பத்தியைப் பெருக்குது மற்றும் இந் நீர்நிலைகளில் மீன் உற்பத்தியைப் பெருக்க மீனவர் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களை ஈடுபடுத்துதல் :

(7) பயிற்சி மற்றும் நிர்வாக உதவியுடன் தங்களுடைய சொந்த நீர்நிலைகளில் மீன் உற்பத்தி செய்யும் ஒரு தனிவகையான மீன் வளர்ப்போர்களை உருவாக்கி அதன் மூலம் மீன் வளர்ப்போர் மேம்பாடு முகமையின்கீழ் அதிக அளவு நீர்ப் பரப்புகளைக் கொண்டுவருவது.

(8) கடல் இறால் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளித்துப் படிப்படியாக பொருத்தமான உவர்நீர் பரப்புகளை இறால் உற்பத்தியின் கீழ் கொண்டு வருதல் :

(9) கடல் மீன் உற்பத்திக்கான வாய்ப்பை அதிகரிக்கும் நோக்குடன் மீனவர்களுக்கு நவீன மற்றும் பலதரப்பட்ட மீன் பிடிப்பு முறைகளில் பயிற்சி அளித்தல் :

(10) தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் நாபார்டு போன்ற தேசிய நிதி நிறுவனங்களின் உதவியைப் பெற்று மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு புத்துயிர் அளித்தல் ; மற்றும்

(11) மீனவர்கள் மற்றும் மீனவ மகளிருக்கு வேலை வாய்ப்பினை அதிகரித்தல் :

மக்களின் உணவில் மீன் ஒரு முக்கியமான விரும்பத்தக்க பொருளாக இருப்பதன் அவசியத்தை உணர்ந்து மீன் உற்பத்தித் திட்டங்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அடுத்தடுத்து ஐந்தாண்டுத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியதன் மூலம், தமிழ்நாட்டில் மீன் உற்பத்தி 1952-ல் 81,700 டன்னிலிருந்து 1988-89-ஆம் ஆண்டு முடிவில் 4,07,000 டன்

[1989 மே 2

குறியீட்டை அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் மாநிலத்தில் தொடர்ந்து ஏற்பட்ட வறட்சியின் காரணமாக தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டுகளில் மீன் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக உள்நாட்டு மீன் உற்பத்தி குறைந்துள்ளது.

அரசின் சமூகப் பொருளாதாரம் மற்றும் வலுவான குறிக்கோள்களை அடைவதற்குத் தற்போதுள்ள ஆதாரங்களை மீனள மேம்பாட்டுக் கொள்கை பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது. மீனவர்களின் மாறிவரும் தேவைகளை ஈடு செய்யும் நோக்குடன் அவ்வப்போது இக்குறிக்கோள்களை மாற்றிக் கொள்ளும் வண்ணம் கொள்கைகள் உள்ளன. மேலும், அரசின் ஒட்டு மொத்த மான பொருளாதார மேம்பாட்டுக் கொள்கையில் இது ஒரு முக்கிய மான பகுதியாகும். இன்றியமையாத அடிப்படை வசதிகள், தொழில் நுட்ப, மனிதவள ஆதாரங்கள், ஆகியவற்றை மேம்படுத்துவதன் மீன்களைப் பிடித்தல், செய்முறைப்படுத்தல், விற்பனை செய்தல், பழுது பார்த்தல், பொருள் வழங்கு வசதிகள் அளித்தல் ஆகியவற்றின் மேம்பாட்டுக்கும் இக்கொள்கை உதவுகிறது.

3. ஆதார நிலைமை :

மீனளத் துறையின் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான முதலீடு ரூ. 2,400 இலட்சம் ஆகும். முதல் மூன்று ஆண்டுகள் செலவிட்ட தொகை, நான்காவது ஆண்டில் எதிர்பார்க்கும் செலவு மற்றும் ஏழாம் திட்டத்தின் ஐந்தாவது ஆண்டில் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள செலவு ஆகியவை பின்வருமாறு :—

| ஆண்டு. (1) | (ரூபாய் இலட்சத்தில்.) (2) | |
|---|---|---|
| 1985-86 .. .. | 3,53.09 | |
| 1986-87 .. .. | 5,30.84 | |
| 1987-88 .. .. | 6,74.70 | |
| 1988-89 .. .. | 5,35.74 | (எதிர் பார்ப்பு) |
| 1989-90 .. .. | 5,40.47 | (வரவு செலவு மதிப்பீடு) |
| | 26,34.84 | |

மேலே குறிப்பிட்டவாறு 1989-90 ஆண்டுக்கான முதலீடு ரூ. 540.47 இலட்சமாகும். மீனவ சமூகத்தினரின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதுடன் கடல், உள்நாட்டு.

1989 மே 2]

மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்களுக்கு இந்த ஆண்டுத் திட்டம் முக்கியத்துவம் அளிக்கும். இந்த முதலீட்டில் பகுதி II திட்டத்தின் கீழ், புதிய திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 23.38 இலட்சமும் அடங்கும். தவிர, இந்த ஆண்டு திட்டத்தில் திட்டம் சாரா பணிகளுக்காக ரூ. 6,18.37 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் திட்டங்கள் சுருக்கமாக கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

4. கடல் மீன் உற்பத்தி பெருக்கத் திட்டங்கள் :

4.1. ஏழாவது திட்ட காலத்தில் உத்தேசிக்கப்பட்ட மீனள மேம்பாட்டுக்கான முக்கியமான திட்டங்கள் பின்வருமாறு :

(1) மீன்பிடி படகுகளில் இயந்திரங்களை பொருத்துவதின் மூலம் கடல் மீன் உற்பத்தியைப் பெருக்குவது; மேலும் சிறு மீனவர்களிடையே நாட்டுப் படகுகளின் செயல் திறனை அதிகரிக்கும் நோக்குடன் கரையேற்றும் படகுகளை அறிமுகப்படுத்துவதற்கு உதவித் தொகை வழங்குதல்;

(2) முக்கியமான மீன் கரைசேர்க்கும் இடங்களில் மீன் பிடித் துறைமுகங்கள்; படகுத் துறைகள், பதப்படுத்தும் நிலையங்கள், பழுதுபார்க்கும் கூடம், மீன் ஏலமிடும் கூடம், மீன்களை சிப்பங்கட்டும் கூடல்; முக்கியமான, மீனளக் கரை சேர்க்கும் நிலையங்களில் நீர் வழங்கல், மின்வசதி ஆகிய இன்றியமையாத அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

(3) ஆழ்கடல் மற்றும் தூரக்கடல் பகுதிகளில் மீன் பிடிப்பை அதிகப்படுத்தும் நோக்குடன் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் செயல்திறனை ஊக்குவிப்பது;

(4) இறால் மீன்கள், உப்பங்கழி மீன்கள் ஆகியவற்றின் உற்பத்தியை பெருக்கும் நோக்குடன், கரையோர மீன் வளர்ப்புக்கான உப்பங்கழி நீர் பரப்பை பயன்படுத்திக் கொள்ளுதல்;

(5) பாசனத்திற்கு பயன்படக் கூடியதும் பயன்படாததுமான வற்றாத நீர்நிலைகள் மற்றும் நீண்ட நாள் நீர் இருக்கக் கூடிய நீர் நிலைகளை மேலும் அதிக அளவில் உள்நாட்டு மீன் வளர்ப்பின் கீழ் கொண்டு வருதல்;

(6) மீன் பிடித்தல், மீன் விற்பனை செய்தல், இதனுடன் இணைந்த மீன்பிடி திட்டங்கள் ஆகியவற்றை மீன்பிடி சங்க உறுப்பினர்கள் மேற்கொள்ள இயலும் வகையில் மீனவர் கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்தல்;

(7) மீனவர் கிராமங்களை கடலரிப்பிலிருந்து பாதுகாப்பது; புயல் பாதுகாப்பு இல்லங்களை கட்டுவது; மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது; இணைப்புச் சாலைகள் போடுவது; தண்ணீர் வசதி செய்து தருதல்; போன்ற அடிப்படை வசதிகளை மீனவர்களுக்கு செய்து கொடுத்தல் ;

[1989 மே 2

## 4.2 மீன்பிடிப் படகுகளை இயந்திரமயமாக்குதல் :

4.2.1. இம்மாநிலத்தில் கடல் மீன் உற்பத்தியை பெருக்குவதில் மீன்பிடிப் படகுகளை இயந்திரமயமாக்கும் திட்டம் ஒரு முக்கிய பங்காற்றுகிறது. தமிழ்நாடு கடற்கரை நெடுக சுமார் 3,647 விசைப் படகுகள் மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இவைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவும், பணியில் ஈடுபடுத்த முடியாத தற்போதைய படகுகளுக்குப் பதிலாக புதிய படகுகளைப் பயன்படுத்தவும், இத்துறை மீன்பிடிப் படகுகளை இயந்திரமயமாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதன் கீழ் 1989-90ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பணிகளைச் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது :

## 4.2.2. மரத்தினாலான 33 அடி படகுகளை வழங்குதல் :

1987-88ஆம் ஆண்டு மரத்தினாலான விசைப் படகுகள் வழங்கும் திட்டம் மீண்டும் செயலுக்கு கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அந்த ஆண்டில் 50 படகுகளும் 1988-89ஆம் ஆண்டில் மேலும் 30 படகுகளும் வாங்குவதற்கு மீனவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. நிதி இடர்ப்பாடு காரணமாக 1989-90ல் 5 மரத்தினாலான படகுகள் கூடுதலாக சேர்க்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 20 சதவிகிதம் அரசு மானியம், 60 சதவிகிதம் வங்கிக் கடன் மீதமுள்ள 20 சதவிகிதம் பயனடைவோர் முதலீடு என்ற விகிதத்தில் நிதியுதவி இருக்கும்.

## 4.2.3. பெரிய படகுகளை வழங்குதல் :

கடல் மீன் உற்பத்தியை பெருக்குவதற்காக பெரிய படகுகளை வாங்குவதற்கு உதவிட வகுக்கப்பட்ட ஒரு புதிய திட்டம் 1988-89ல் அறிமுகப்படுத்தப்பட்டு இவ்வாண்டில் 4 பெரிய படகுகள் வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டத்தை 1989-90லும் தொடர்ந்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 20 சதவிகிதம் உதவித் தொகையுடன் மேலும் 5 படகுகள் இயக்கப்படும். இதற்காக ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விசைப் படகு வழங்கும் திட்டத்திற்கு பொருந்தும் நிதி உதவி முறையே இத்திட்டத்திற்கும் பொருந்தும்.

## 4.2.4. கண்ணாடி இழைப் படகுகள் :

படகுகள் கட்டுவதற்கு குறைந்த விலையில் மாற்றுப் பொருளான கண்ணாடியிழை கொண்டு தயாரிக்கப்பட்ட படகுகள் அறிமுகப்படுத்தப்பட்டபின் , மீனவர்கள் கண்ணாடியிழைப் படகுகள் வாங்குவதற்கு 20 சதவிகிதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயனடையும் மீனவர்கள் 20 சதவிகிதம் மற்றும் வங்கிக் கடன் 60 சதவிகிதம் என்ற அடிப்படையில் எஞ்சிய தொகை ஈடு செய்யப்படுகிறது. 1989-90ஆம் ஆண்டு திட்டத்தில் 5 கண்ணாடியிழைப் படகுகள் வாங்குவதற்கு உதவித் தொகை வழங்க ரூ. 2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1989 மே 2]

## 4.3. பரம்பரை மீனவர்களுக்கு உதவி :

4.3.1. மொத்தம் பிடிக்கப்படும் கடல் மீனில் 75 விழுக்காடு நாட்டுப் படகுகள் மூலமே பிடிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 50,000க்கும் மேற்பட்ட பரம்பரை மீனவர்கள் வாடகை படகுகளைக் கொண்டு தொழில் செய்கிறார்கள். இவர்களை நடுத்தரகர்கள் மற்றும் படகுகளை வாடகைக்கு விடும் பெரிய மீனவர்களின் பிடியிலிருந்து விடுவித்து தங்களுடைய உழைப்பின் பலனை முழுமையாக அனுபவிக்கச் செய்யும் நோக்குடன் பரம்பரை மீனவர்கள் தங்களுடைய நாட்டுக் கலன்களை சொந்தமாக பெறுவதற்கு நிதி உதவி செய்வதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதன்படி அரசு 20 விழுக்காடு அரசு உதவித் தொகை 20 விழுக்காடு பயனடைவோர் பங்கு மற்றும் 60 விழுக்காடு வங்கிக் கடன் என்ற வகையில் இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்படுகிறது. 1987-88ல் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்தின்கீழ் பரம்பரை மீனவர்களின் பயனுக்காக மீன்பிடி கியர்கள், வலைகள், கயிறுகள் ஆகியவற்றுடன் 370 கட்டு மரங்கள் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1989-90லும் தொடரப்படும். 1989-90ஆம் ஆண்டு திட்டத்தில் 200 கட்டு மரங்கள் வாங்குவதற்கு உதவி புரிய ரூ. 6.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.3.2. படகின் உட்புறமும் வெளிப்புறமும் பொருத்தும் எஞ்சின்களை வழங்குதல் :

கடந்த சில ஆண்டுகளாக நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்கும் நோக்குடன் மீனவர்களுக்கு படகில் உட்புறமும் ? வெளிப்புறமும் பொருத்தப்படும் என்சின்களை வழங்கும் திட்டத்தை துறை நடைமுறைப்படுத்தி வருகிறது. பரம்பரை மீனவர்களிடையே, குறிப்பாக தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் இத் திட்டத்திற்கு வரவேற்பு கிட்டியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் இதுநாள்வரை இத்தகைய 1762 எஞ்சின்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் இது ஒரு மாநிலத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு, பின்னர் 1987-88 முதல் மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. பயனடையும் மீனவர்கள் எஞ்சின் ஒன்றிற்கு உயரளவு ரூ. 7,500 என்பதற்குட்பட்டு எஞ்சின் விலையில் 50 விழுக்காடு உதவித் தொகை பெறுகிறார்கள். இந்த உதவித் தொகையை மைய மற்றும் மாநில அரசுகள் சமமாக பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தின்கீழ் 1989-90 ஆம் ஆண்டில் படகின் வெளிப்புறம் மற்றும் உட்புறம் பொருதும் எஞ்சின்கள் 600 வழங்கப்படவுள்ளன.

## 4.3.3. நைலான் வலைகள் வழங்குதல் :

நாட்டுப் படகு மீனவர்களுக்கு நைலான் வலைகள் வழங்கும் திட்டம் 1989-90ஆம் ஆண்டு திட்டத்திலும் தொடரப்படும். 500 மீனவர்களுக்கு உதவி ரூ. 2‘50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. விசைப் படகுகளுக்கு வழங்கப்படும் முறையிலேயே இத்திட்டத்திற்கும் உதவி வழங்கப்படும்.

[1989 மே 2

## 4.4. கரை இறக்குதலும் அடிப்படை வசதிகளும் :

### 4.4 1. மீன்பிடித் துறைமுகங்களும் தோணித் துறைகளும் உள்ளமைப்பு வசதிகளும் :

அடுத்தடுத்த ஐந்தாண்டுத் திட்டங்களில் படகுகளை இயந்திர மயமாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதன் மூலம் தமிழ்நாட்டின் கடற்கரையில் தற்போது 3,647 விசைப் படகுகள் இயங்கி வருகின்றன. இப் படகுகள் பாதுகாப்பாகத் தங்கவும், சுகாதாரமான முறையில் பிடித்த மீன்களைக் கரையிறக்கவும், அனுப்பவும் இயலும் வகையில் இம் மாநிலத்தில் 9 இடங்களில் ரூ. 1,581.15 இலட்சம் செலவில் 1,179 விசைப் படகுகள் மற்றும் 60 இழுப் படகுகள் ஆகியவற்றின் உபயோகத் திற்கு மீன்பிடித் துறைமுகங்கள், கரையிறங்கும் தோணித் துறைகள் மற்றும் உள்ளமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன இது போன்ற வசதிக்கான பணிகள் சின்ன முட்டம், வாலிநோக்கம், மற்றும் தொண்டி ஆகிய மூன்று இடங்களில் 902.10 இலட்சம் ரூபாய் செலவில் (திருத்திய மதிப்பீட்டில்) நடைபெற்று வருகின்றன. இத் துறைமுகங்களில் கூடுதலாக 490 படகுகளும் 10 இழுப் படகுகளும் தங்க இயலும்.

### 4.4.2. உள்ளமைப்பு வசதிகள் :

மீன்பிடித் துறைமுகங்கள் கட்ட உகந்த இடமில்லாத மீன் இறங்குமிடங்களில் பனிக் கட்டி உற்பத்தி நிலையம், ஏலமிடும் கூடம், சிப்பங்கட்டும் கூடம், பழுது பார்க்கும் கூடம், வலை பின்னும் கொட்டகை, மீனை உலர வைக்கும் வசதி, சமுதாயக் கூடம், தண்ணீர் மற்றும் மின்வசதி அணுகுசாலைகள் போன்ற உள்ளமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இது போன்று மீன் பிடித் துறைமுகங்களிலும் கரையிறங்கு தோணித் துறைகளிலும் ஏலமிடும் கூடம், வழுக்குப் பாதை, உட்புறச் சாலை போன்ற மீன்பிடித் துறைமுக திட்டத்தில் அடங்கிய வசதிகளைத் தவிர சமுதாயக்கூடம், பழுது பார்க்கும் கூடம் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்டுகின்றன. இம்மாதிரி வசதிகள் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பழையார், இராம நாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கம், ஆகிய இடங் களில் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இவ் வசதிகள் ரூ. 87.10 இலட்சம் செலவில் முட்டம், வாடி மற்றும் தொண்டி ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டு வரு கின்றன. மைய அரசு உதவிபெறும் திட்டத்தின்கீழ் இவ் வசதிகளை தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள (1) பூம்புகார் (2) வெள்ளப்பள்ளம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தி லுள்ள (3) கோடிமுனை (4) வள்ளவிளை ஆகிய 4 இடங் களில் செய்து கொடுப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனை யிலுள்ளது.

1989 மே 2]

### 4.4.3. வழிகாட்டி விளக்குகளை நிறுவுதல் :

கடலில் மறைந்துள்ள பவளப் பாறைகளுடன் மோதிக் கொள்ளாமல் மீன்பிடிப் படகுகள் பத்திரமாக கரைசேர வழிகாட்டி விளக்குகள் உதவுகின்றன. இவ்விளக்குகள் இம் மாநிலத்தில் 47 இடங்களில் இதுவரை நிறுவப்பட்டுள்ளன.

### 5. உள்நாட்டு மீனளம் :

5.1. தமிழ்நாட்டில் சுமார் 3.70 இலட்சம் ஹெக்டேர் உள்நாட்டு தண்ணீர் நீர்ப்பரப்பு உள்ளதென மதிப்பிடப் பட்டுள்ளது. அதனின்று ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 1.60 இலட்சம் டன் மீன் பிடிக்கப்பட்டது. இந்த உற்பத்தி அளவை ஆண்டுக்கு 2.10 இலட்சம் டன்னாக உயர்த்து வதே ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாகும். எனினும் கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து பருவ மழை பொய்த்ததால் இருப்பு செய்யப்பட்ட மீன் குஞ்சுகள் வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டு அதனால் மீன் உற்பத்தி வெகுவாகக் குறைந்துள்ளது.

5.2.1. உள்நாட்டுத் தண்ணீர் மீன் உற்பத்திக்கு முக்கியமாக இடு பொருள் மீன் குஞ்சு ஆகும். நமது மாநிலத்திலுள்ள மொத்த உள்நாட்டு நீர்நிலைகளில் இருப்பு செய்ய ஆண்டு தோறும் தேவைப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ள 350 மில்லியன் மீன் குஞ்சுகளில் பெருரக கெண்டை மீன் குஞ்சு, சீனக் கெண்டை மீன் குஞ்சு மற்றும் சாதாக் கெண்டை மீன் குஞ்சுகள் ஆகியவை அடங்கும். இப்போது நமது மீன் குஞ்சு உற்பத்தி 60 மில்லியன் ஆகும். இவ்வுற்பத்தி மாநில அரசு மீன் குஞ்சுப் பண்ணை மற்றும் தனியார் மீன் குஞ்சுப் பண்ணைகளிலிருந்து செய்யப் பட்டு வருகிறது. மீன் குஞ்சு பண்ணை கட்டுமானப் பணியின் உயர் செலவினம் மற்றும் தமிழ்நாட்டின் மண்ணின் தன்மை ஆகியவற்றால் மீன்பண்ணை கட்டுமானப் பணியில் துரித விரிவாக்கம் செய்ய முடிவதில்லை. தற்போதைய 60 மில்லியன் மீன் குஞ்சு பல நீர் தேக்கப் பகுதிகளில் அமைந்துள்ள 27 ஹெக்டேர் பரப்புள்ள மீன் குஞ்சு பண்ணைகளிலிருந்து உற் பத்தி செய்யப்படுகின்றன. எனவே, அதிக அளவில் மீன் குஞ்சு உற்பத்தியை பெருக்குவதற்கு மேலும் கூடுதலாக மீன் குஞ்சு பண்ணைகளை கட்டுவது ஒரு அவசரத் தேவையாகும். மைய அரசு நிதியுதவியுடன் இரண்டு தேசிய மீன் குஞ்சுப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று பவானிசாகரில் கட்டி முடிவடையும் தருவாயிலுள்ளது. மணிமுத்தாரில் கட்டப்படவிருக்கும் மற்றொரு பண்ணை திருத்த மதிப்பீட்டிற்கு மைய அரசின் ஏற்பளிப்பு பெற்றவுடன் துவக்கப்படவுள்ளது. இவ்விரண்டு மீன் குஞ்சுப் பண்ணைகளும் கட்டி முடிக்கப்பட்டவுடன் அவை ஆண்டொன்றுக்கு 40 மில்லியன் மீன் குஞ்சு உற்பத்தித் திறனை அடைய முடியும்.

[1989 மே 2

5.2.2. தமிழ்நாட்டில் விரைவான மீன் பண்ணை அபிவிருத்திக்கு மண்ணின் தன்மை நீர் இருப்பு மற்றும் நிதி பற்றாக் குறை ஆகியவை முக்கிய தடைகளாக உள்ளன. இதுநாள்வரை மீன் குஞ்சுப் பண்ணைகள் ஆண்டு முழுவதும் நீர் இருக்கும் நீர்த் தேக்கத்தின் அருகிலேயே அமைக்கப்பட்டு வந்தன. ஆனால் அவ்விடங்களிலுள்ள தகுதியற்ற மண் தன்மையினால் குறைந்த செலவில் கட்டுமானமில்லாத குட்டைகளை அமைக்க இயலவில்லை. அவ்விடங்களில் கற்களை கொண்டு பண்ணைகள் அமைக்க வேண்டியிருப்பதால் அவற்றின் கட்டுமானப் பணியின் செலவினம் அதிகரித்திருக்கிறது. தஞ்சை மாவட்டம் வடபாதி மங்கலம் கிராமத்தில் முன்பு கரும்பு பண்ணையாக இருந்த நிலத்தில் 100 ஏக்கர் பரப்பில் ஒரு பெரிய மீன் குஞ்சுப் பண்ணையை அமைப்பதற்காக மீன்துறை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கருத்துரு அரசின் பரிசீலனையிலுள்ளது. தொடக்கத்திலேயே சுமார் 225 இலட்சம் ரூபாய் செலவில் 20 ஹெக்டேர் பரப்பில் ஒரு மீன் குஞ்சுப் பண்ணை அமைக்கப் படும். இத்திட்டம் மாவட்ட அளவிலான மீனவர் கூட்டுறவு கட்டமைப்பு மூலமோ அல்லது ஆரம்ப மீனவ கூட்டுறவு சங்கங்களின் மூலமோ ஐரோப்பிய பொருளாதார கழகத்தின் உதவியை தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் பெற்று நிறைவேற்றப்படும். மேலும் தஞ்சை, திருச்சி, தருமபுரி, மதுரை மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களிலுள்ள மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு கட்டி வரும் மீன் குஞ்சுப் பண்ணைகள் முடிவுற்றபின், மாநிலத்தில் மீன் குஞ்சு உற்பத்தி கூடுதலாக வாய்ப்புள்ளது.

**5 2 3 சீனமுறையில் குஞ்சு பொரிப்பு :**

சமீப ஆண்டுகளில் மீன் குஞ்சு உற்பத்தியைப் பெருக்குவதற்கு சீன முறையில் குஞ்சு பொரிப்பு நடைமுறை வெகுவாக உதவி உள்ளது. ஒரு குஞ்சு பொரிப்பு அமைப்பிற்கான செலவு ரூ. 3.50 இலட்சம். இதில் ஆண்டொன்றுக்கு 40 மில்லியன் நுண் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யலாம். அவற்றைப் பெரு நீர்த் தேக்கங்களில் இருப்பு செய்வதற்கு முன் வளர்ப்புக் குட்டைகளில் விட்டு வளர்க்க வேண்டும் இதனைப் பயிற்சி பெற்ற தனியார் அமைக்கவும் இயக்கவும் இயலும். மேற்கு மலை தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இதுபோன்ற ஒரு குஞ்சு பொரிப்பு அமைப்பு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டம் ஒகேனக்கலில் ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. வட ஆற்காடு மாவட்டதிலுள்ள சாத்தனூர் அணை, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள பாலார் பொறந்தலார் மற்றும் பெரியார் மாவட்டத்திலுள்ள பவானிசாகர் ஆகிய இடங்களில் மேலும் 3 குஞ்சு பொரிப்பு அமைப்புகளின் கட்டுமானப் பணி பல்வேறு நிலைகளில் கட்டி முடிவடையும்

தருவாயிலுள்ளது. தென்னாற்காடு மாவட்டம், லால் பேட்டையில் ரூ. 3.50 இலட்சம் செலவில் கட்டுமானப் பணிக்கு 1988–89ஆம் ஆண்டு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. 1987–88ஆம் ஆண்டில் மீன்பண்ணைக் கட்டுமானப் பணிக்கு இரண்டு தனியார் மீன் குஞ்சு உற்பத்தியாளர்களுக்கு 20 சதவிகிதம் உதவி தொகை அளிக்கப்பட்டுள்ளது. 1988–89ஆம் ஆண்டில் சீன முறை குஞ்சு பொரிப்பு அமைப்பைத் தனியார் துறை அமைப்பதற்கு 20 சத விகிதம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இத்துறை அமைத்துள்ள சீனமுறை மீன் குஞ்சு பொரிப்புப் பிரிவில் உற்பத்தி செய்யப்பட்ட நுண் மீன் குஞ்சுகளை வளர்க்கும் பொருட்டு, வைகை அணையில் தற்போதுள்ள மீன் வளர்ப்பு வசதியை விரிவாக்கக் கருதப்பட்டுள்ளது. அம்மீன் குஞ்சுகளை வளர்ப்பதற்குரிய இடங்களைக் கட்டப்படுவதுடன் 1989–90-ல் அம்மீன் குஞ்சுகளை வளர்த்தெடுக்க 80 மிதவைக் கூடுகளை வாங்கி அமைப்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. அவைகளிலிருந்து கூடுதலாக 10 மில்லியன் தரமான மீன் குஞ்சுகள் வளர்க்கவும் மாநிலத்திலுள்ள நீர்த் தேக்கங்களில் இருப்பு செய்யவும் முடியும். இது மீன் பண்ணைகளின் செயல் திறனை மேம்படுத்தும்.

5.2.4. மீன் பண்ணையின் செயல் திறனை அபிவிருத்தி செய்தல் :

மீன் பண்ணைப் பகுதியை விரிவுபடுத்த பணிச் செலவினம் அதிகரித்துக் கொண்டே செல்வதால், தற்சமயம் உள்ள மீன் பண்ணையில் வளர்ப்புத் தொட்டிகளில் காற்றை அழுத்தி செலுத்துவது போன்ற நவீன தொழில் நுட்பமுறை மூலம் அதன் செயல் திறனை மேம்படுதத உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டப் பணி ஒவ்வொன்றும் ரூ. 5.00 இலட்சம் செலவில் மணிமுத்தாறு மற்றும் மேட்டூர் மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. இப் புதிய வசதிகள் 1989–90ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டு செயலுக்கு வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

5.3. நீர் தேக்க மீனளம் :

மாநில மீனளத் துறை தனது மேற்பார்வையில் 42 பல் நோக்கு நீர்த் தேக்கங்களில் மீன் வளத்தை மேம்படுத்தி வருகின்றது. இந்நீர்த் தேக்கங்களில் தரமான, விரைவில் வளரும் மீன் குஞ்சுகள் ஆண்டு தோறும் விட்டு வளர்த்து வரப் படுகிறது. அவை நீர்மட்டத் தன்மைக்கேற்ப குறிப்பிட்ட காலம் வளர்க்கப்பட்டு ஆரம்ப நிலை மீனவர் கூட்டுறவு சங்கங்களின் மீனவர்களைக் கொண்டு பங்கு அடிப்படையில் மீன் பிடிப்பு நடத்தப்படுகிறது. மாநில மீன்வள மேற்பார்வை யின்கீழ் இயங்கும் இந்நீர்த் தேக்கங்களிலிருந்து நல்ல தரமான மீன்கள் ஆண்டுக்குச் சுமார் 1,700 டன் அளவில் பிடிக்கப் பட்டு வருகின்றன.

## 5.4. தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் விற்பனைத் திட்டம்:

உள்நாட்டு மீன் வளர்ப்புக்கு அதிக அளவில் பாசன குளங்களைப் பயன்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, மதுரை மற்றும் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள 32,000 ஹெக்டேர் பரப்பளவுள்ள இம் மாதிரி நீர் நிலைகள் இத் திட்டத்தின் கீழ எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மீனளத் துறை தரமான, விரைவில் வளரக்கூடிய மீன் குஞ்சுகளை இந் நீர் நிலைகளில் விட்டு அந்தந்தப் பகுதியிலுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களைக் கொண்டு பங்கு அடிப்படையில் மீன் பிடிப்பு நடத்தப்பட்டு வருகிறது. இதனால் சுமார் 4,500 மீனவர் பயன் அடைந்து வருகின்றனர். 1988-89ஆம் ஆண்டில் இந்நீர் நிலைகளில் 33 இலட்சம் மீன் குஞ்சுகள் விட்டு வைக்கப்பட்டு 2.10 இலட்சம் கிலோ மீன்கள் பிடிக்கப்பட்டு அதன் மூலம் 1.05 இலட்சம் கிலோ மீனவர்களுக்கு அவர்களின் பங்காக கொடுக்கப்பட்டுள்ளது. இந்நீர் நிலைகளில் விரைவாக வளரக் கூடிய மீன் குஞ்சுகளை விட்டு வளர்ப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

## 5.5. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு :

5.5.1. ஹெக்டேர் ஒன்றுக்கு 1,000 கிலோ அல்லது அதற்கு மேலும் மீன் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற முக்கிய நோக்கத்துடன் மைய அரசு உதவிபெறும் திட்டத்தின்கீழ் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இம்மாதிரி 13 அமைப்புகள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. இவற்றில் 11 அமைப்புகள் மைய அரசு உதவித் திட்டத்துடனும், மீதமுள்ள 2 அமைபபுகள் மாநில அரசு நிதியுதவியுடனும் இயங்கி வருகின்றன.

5.5.2. இத்திட்டத்தின் கீழ் 10 ஹெக்டேருக்கு குறைவாக உள்ள ஏரிகளும் குளங்களும் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து எடுத்து கொள்ளப்பட்டு பிறகு நீண்டகால குத்தகைக்கு ஒரு மீன் வளர்ப்போருக்கு 2 ஹெக்டேர் வரை வழங்கப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட மீன் வளர்ப்போர்களுக்கு கூட்டு இன மீன் வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்படுவதுடன், குளத்தை சீரமைப்பதற்காக கடன் மற்றும் அரசு நிதிஉதவிகள் பெற்றுத் தரப்படுகிறது. இவ்வகை மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்புகள் தேவையான அளவு மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்காக மிதவைக் கூடு முறையில் மீன் வளர்க்கின்றன. ஒவ்வொரு அமைப்பிலும், சில குறிப்பிட்ட குளங்கள் முன்மாதிரி மீன் வளர்ப்பு குளங்களாக இருக்கும் பொருட்டு அனைத்து இடுபொருள்களையும் பயன்படுத்துவதன் மூலமாக சிறந்த முறையில் மேம்படுத்தப்பட்டுள்ளன. இவ்வகைப் பண்ணைகளில் ஹெக்டேருக்கு 3,000 கிலோ வீதம் மீன்கள் உற்பத்தி செய்து, இத்திட்டத்திற்கு ஒரு முன்னுதாரணமாக

**1999 மே 2]**

திகழ்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் தேவையானபோது விவசாயத்திற்கு உதவியாகவும், விரைவாக வளரும் மீன்களை வளர்ப்பதற்குமான இரண்டு குறிக்கோள்களை அடையும் நோக்குடன் ''பண்ணைக் குளங்கள்'' என்ற புதிய திட்டம் குறிப்பாக ஆற்றின் கடைமடைப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய வேளாண்மை கிராம வளர்ச்சி வங்கி, இதனை வங்கி உதவி செய்வதற்கு ஏற்ற பொருளாதாரத் திட்டமொன்று கருதி, இதற்கு மறுநிதி வசதி அளித்து வருகிறது. தவிர தேசியமய மாக்கப்பட்ட வங்கிகள் இதுவரை இதற்காக 9 தனிப்பட்ட தொழில் முனைவோருக்கு நிதி உதவி அளித்துள்ளது. வருங் காலத்தில் இந்த உதவி மேலும் பல மீன் வளர்ப்போருக்கு வழங்கப்படும்.

தமிழ் நாட்டில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு திட்டத்தின் மூலம் அடைந்த சாதனைகள் கீழே தெரிவிக்கப் பட்டுள்ளன :—

| | |
|---|---|
| | ஹெக்டேர். |
| 1. மீன் வளர்ப்பிற்கு எடுத்துக் கொள்ளப் பட்ட நீர்நிலைகளின் பரப்பளவு. | 4,000 |
| 2. பயனடைந்தோர் : | |
| ஆதி திராவிடர் .. .. .. | 946 |
| பழங்குடியினர் .. .. .. | 19 |
| மற்றவர்கள் .. .. .. .. | 3,448 |
| மொத்தம் .. | 4,413 |
| 3. மீன்குஞ்சு இருப்பு செய்த விவரம்— | |
| | இலட்சம் |
| 1987-88-ல் .. .. .. .. | 97 |
| 1988-89-ல் .. .. .. .. | 109.5 |
| 4. பிடித்த மீனின் அளவு— | |
| | டன்கள். |
| 1987-88-ல் .. .. .. .. | 1,073.2 |
| 1988-89-ல் .. .. .. .. | 1,841 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## 6. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு.

6.1. கடந்த பல வருடங்களாக ஆயிரக்கணக்கான விசைப் படகுகள் மற்றும் நாட்டுப் படகுகள் தொடர்ந்து இழுவலை பயன்படுத்தியதால், தமிழ் நாட்டின் கடலில் இறால் மீன் பிடித்தல் தேக்க நிலையை அடைந்ததுடன, புதிதாக இறால் கிடைக்கும் இடங்கள் குறைந்துள்ளது. வளர்ந்து வரும் ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுத் தேவையை ஈடு செய்யும் நோக்குடன், தமிழ் நாட்டில் பரந்து கிடக்கும் உவர்நீர் பரப்புகளில் இறால்களை உற்பத்தி செய்வது இனறியமையாததாகிறது. மாநில மீன் துறை மைய அமைப்புகளுடன் கலந்து உவர்நீர் பரப்புகளில் இறால் மற்றும் மீன் உற்பத்தியைத் தக்க தொழில் நுட்பத்துடன் அபிவிருத்தி செய்திருக்கிறது. இறால் வளர்ப்போர்டையே இத்தொழில் நுட்பத்தை எடுத்துரைக்கவும், நவீன முறைகளைப் பின்பற்றி இறால வளர்ப்பை மேற்கொள்ளுமாறு ஊக்குவிக்கவும், இத்துறை 6 கடலோர மாவட்டங்களில் 9 இடங்களில் மாதிரி இறால் பண்ணைகளை அமைத்துள்ளது. மேலும், செங்கை—அண்ணா மாவட்டத்தில் பழவேற்காட்டிலும், தென்னாற்காடு மாவட்டத்தில கிள்ளை மற்றும் பரங்கிப் பேட்டையிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் காரங்காடு மற்றும் அரியாங்குண்டு ஆகிய இடங்களிலும் சிறிய மற்றும் நடுத்தர அளவு இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

6.2. மாநிலத்திலுள்ள உவர்நீர் பகுதிகளை கண்டறியவும் உவர் நீர்ப் பரப்பு குறித்து மதிப்பிடவும் இராமநாதபுரம் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் உவர் நீர் உள்ள பகுதிகள் ஆய்வு—விரிவாக்கப் பணி நிலையங்கள செயல்படுகின்றன. மற்றும் 200 ஹெக்டேர் கடலோரப் பகுதியில் இறால் வளர்ப்பு அபிவிருத்தி செய்ய நுண் அளவு ஆய்வுப் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

6.3. மாநிலத்தில் பரந்துள்ள உவர்நீர்ப் பரப்புகளை உகந்த வகையில் பயன்படுத்துவதற்காக அரசு தனது வன மீன் துறையின் 25-4-1988 ஆம் நாளிட்ட 474 ஆம் எண். ஆணையில் பலதரப் பட்ட மக்களுக்கும் இறால் வளர்ப்பிற்கான உவர் நீர் பரப்புகளை ஒதுக்கீடு செய்வதற்கான ஒரு கொள்கையை மத்திய அரசு அறிவுரைகளைக் கருத்திற் கொண்டு அறிவித்துள்ளது. அந்த அரசாணையின்படி உவர் நிர்ப்பரப்புகளைக் கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்ய வேண்டும்:—

(அ) மொத்தம் உள்ள நிலத்தில் 60 விழுக்காடு நிலத்தை மீனவர், சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் இலக்கு வகையினர் ஆகியோருக்கு வழங்க வேண்டுமெனவும், குறிப்பாகக் குறைந்த முதலீட்டில் இறால் வளர்க்கத் தகுந்த நிலங்களை இவர்களுக்கு முன்னுரிமை அடிப்படை வழியில் குத்தகைக்கு வழங்க வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

1989 மே 2]

(ஆ) தீவிரமாகவும், ஓரளவு தீவிரமாகவும் உவர் நீர்ப் பண்ணை அமைக்கத் தொழில் நுட்ப உதவியும் நிதி வசதியும் உடைய நடுத்தரத் தொழில் முனைவோருக்கு நடுத்தர அளவில் மூலதனம் தேவைப்படும் நிலங்களில் சுமார் 20 சதவீதம் பரப்பினை குத்தகைக்கு விடபபட வேண்டும்; மற்றும்

(இ) நவீன தொழில் நுட்பத்தைக் கையாண்டு தீவிர முயற்சியின் மூலம் மீன் உற்பத்தியை பெருக்கும் நோக்குடைய நிதி வசதியும் நிருவாகத் திறமையும் கொண்ட தொழில் முனைவோருக்கு அதிக மூலதனம் தேவைப்படும் மீதமுள்ள உவர் நீர்ப் பரப்புகளைக் குத்தகைக்கு விட வேண்டும்.

மேற்கண்ட முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழி முறைகளின் வரைவு, அரசின் பரிசீலனையிலுள்ளது; அரசின் ஒப்புதல் பெற்றதும், ஒப்பளிக்கப்பட்ட வழிமுறைகளுக்கேற்ப நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்படும். இந் நிலங்களை ஒதுக்கீடு செய்யக் கோரி, இத்துறைக்கு ஏற்கனவே, மீனவர், மீன் வளர்ப் போர் முனைவோரிடமிருந்து 557 விண்ணப்பங்கள் வரப் பெற்றுள்ளன.

6.4.1. இததுடன் அரசு, வனம் மீன்துறையின் 1988 ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாளிட்ட 590 ஆம் எண் அரசு ஆணையில் தனியாருக்குச் சொந்தமான நிலங்களில் உவர் நீர் இறால் வளர்ப்பை ஊக்கப்படுத்தும் ஒரு திட்டத்திற்கு ஒப்புத லலித்துள்ளது. இத் திட்டத்தின் அடிப்படையில், ஒரு ஹெக்டேர் நிலத்தில் மீன் வளர்ப்பதற்கு 20 சதவீத மானியமாக, அதிக பட்சம் ரூ 20,000 ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும். இதற் கென, 1988-89 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில், ரூ 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. மீனவர் நல்வாழ்வு நடவடிக்கைகள்:

7.1. மீனவர்களுக்கு இலவச வீடுகள்:

1975-76 ஆம் ஆண்டு முதல் மீனவர்களுக்கு இலவசமாக வீடு கட்டித் தரும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் 1989 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை அரசு 12,090 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளது இவற்றில் 11,378 வீடுகள் 114 மீனவர் குப்பங் களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்சமயம் மீனவர்களுக்காக 248 சதுர அடி பரப்புள்ள ஒரு வீடு கட்ட ரூ. 21,000 செல வாகிறது.

7.2. தேசிய மீனவர் நல நிதித் திட்டம் :

இது மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டமாகும். இத் திட்டத்தில் மீனவர்களுக்கு வீட்டு வசதிக்கும் சமுதாயக் கூடங்கள் அமைத்தல், குடிநீர் வசதிக்கு ஆதார நிதி உதவி போன்ற ஏனைய இன்றியமையாத வசதிகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. இது வரை தமிழ்நாட்டில் ஐந்து மீனவர் குப்பங்களில் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மீனவர்களுக்கான வீடு கட்டு வதற்கு மத்திய அரசின் கணக்குப்படி ஒரு வீட்டிற்கான செலவு ரூ. 10,800 ஆகும். இதில் 50 சதவீதத்தை அது உதவித் தொகையாக வழங்குகிறது. (ஆனால் நமது மாநிலத்தில் அவ் வீடுகளுக்கு ஆகும் செலவு இதைவிட அதிகமாகும்.) மைய அரசு எஞ்சிய 50 சதவீத உதவித் தொகையும் பிற வசதிகளுக்காக வழங்குகிறது. ஐந்து குப்பங்களில் வீடுகளைக் கட்டி இதர வசதிகளை செய்து கொடுக்க ரூ 1,41.59 இலட்சமாகும்.

7.30 இணைப்புச் சாலைகள் :

மீனவர்கள் பிடித்து வந்த மீன்களை அருகிலுள்ள அங்காடி களுக்கு எளிதில் எடுத்துச் செல்லும் பொருட்டு மீனவர் குப்பங் களை முக்கிய சாலைகளுடன் இணைப்பதற்கு ரூ. 3,00.90 இலட்சம் மதிப்பீட்டில் 167 கிலோ மீட்டர் தொலைவுள்ள 113 இணைப்புச் சாலைகளை அமைக்க அரசு அனுமதியளித்துள்ளது. அவற்றுள் ரூ. 1,95.69 இலட்சம் செலவில் 146 கிலோ மீட்டர் நீளமுள்ள 98 சாலைகள் பணி முடிக்கப்பட்டுள்ளது.

7.4. சேமிப்பு நிவாரண நிதி :

மீன்பிடித் தொழில் நடைபெறாத பருவ காலத்தில் கரையோர மீனவர்களின் துயரங்களைக் களையும் பொருட்டு மீனவர் சேமிப்பு நிவாரண திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின் கீழ், மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினராக உள்ள ஒவ்வொரு மீனவரிடமிருந்தும் மாதம் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் ஓராண்டில் 9 மாதங்களுக்கு வசூலிக்கப்படுகிறது. மொத்த முள்ள ரூ 90 உடன் அரசின் சமபங்காக ரூ 90ம் சேர்த்து, மொத்தமுள்ள ரூ. 180 அவ்வாண்டில் மீன்பிடி தொழில் நடை பெறாத மூன்று மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 60 வீதம் அவர்களுக்குத் திருப்பி வழங்கப்படுகிறது. மீனவர்களுக்கு மிகுந்த பயனளிக்கக் கூடிய இத்திட்டம் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 40,391 மீனவர் கள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 மே 2]

**7.5. மீனவர்கள் விபத்துக் காப்புறுதி திட்டம் :**

இத்திட்டத்தின்கீழ், இறப்பு, விபத்து ஆகியவை குறித்த காப்புறுதிக்காக ஒவ்வொரு மீனவருக்கும் ஆண்டுக்கு ரூ. 9 ப்ரீமியம் செலுத்தி, காப்புறுதி செய்யப்படுகிறது. மேற்கண்ட காப்புறுதிக்காக மீனவர்களிடமிருந்து பங்குத் தொகை எதுவும் வசூலிக்காமல், இந்த கட்டணத்தை மத்திய, மாநில அரசுகள் சம அளவில் ஏற்றுக்கொள்ளுகின்றன. மீனவர்கள் இறந்துவிட்டாலோ நிரந்தரமாக ஊனமுற்றாலோ காப்புறுதித்தொகையாக ரூ. 15,000 வழங்கப்படுகிறது. ஒரு கண் அல்லது ஒரு கை அல்லது ஒரு கால் போன்ற ஒரு பகுதி ஊனமுற்ற மீனவர்களுக்கு ரூ. 7,500 வழங்கப்படுகிறது. இது வரை இத்திட்டத்தில் 1,42,989 மீனவர்கள் சேர்ந்துள்ளனர். இத்திட்டத்தின்கீழ் 565 மீனவர் குடும்பங்கள் இது வரை பயனடைந்துள்ளன.

**7.6. கடலரிப்பு தடுப்புப் பணிகள் :**

இம்மாநிலத்தில் கடற்கரை ஓரங்களிலுள்ள சில மீனவர் குப்பங்கள் கடலரிப்பால் பாதிக்கப்படுகின்றன. இதன் காரணமாக, இக்குப்பங்களிலுள்ள சில மீனவர்கள் தங்களுடைய வீடுகள், மீன்பிடி படகுகள், ஏனைய மீன்பிடி கருவிகள் ஆகியவற்றை இழந்துள்ளனர். கடலரிப்பிலிருந்தும் இம் மீனவர் குப்பங்களை பாதுகாப்பதற்காக, கடற்கரைகளில் பெரிய பாறாங்கற்களைக் கொண்டு கடலரிப்புத் தடுப்பு அரண்கள் அமைக்க இத்துறை ஏற்பாடு செய்துள்ளது. செங்கல்பட்டு, சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள சில மீனவ குப்பங்கள் கடலரிப்பினால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன. 1984–85 முதல், 12.81 கி. மீட்டர் நீளத்திற்குக் கடலரிப்புத தடுப்பு அரண்கள் ரூ. 189.44 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. மேற்சொன்னவற்றுடன் 1988–89 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட கிராமங்களில் கடல் அரிப்புத் தடுப்பு அரண்கள் அமைப்பதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது :—

| | | (ரூபாய் இலட்சத்தில்) | (நீளம் மீட்டரில்) |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1. | நல்ல தண்ணீர் ஓடைக்குப்பம் .. | 25.00 | 600 |
| 2. | எண்ணூர் நெடுஞ்சாலை .. | 5.20 | 150 |
| 3. | திருச்சினாங்குப்பம் .. | 19.50 | 470 |
| 4. | அப்பர் நகர் .. | 15.90 | 600 |
| | மொத்தம் .. | 65.60 | 1,820 |

மேற்கண்ட நான்கு பணிகளும் தொடர்ந்து நிறைவேற்றப் பட்டு, 1989–90-ல் முடிக்கப்படும். இவற்றை நிறைவேற்றும் பொறுப்பு 1–2–1989 முதல் மீனளத் துறையிடமிருந்து மீண்டும் பொதுப் பணித் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் கடலரிப்பை நிரந்தரமாகத் தடுப்பதற்கு மாதிரி ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு பூண்டி நீரியல் - நீர்விசையியல் ஆராய்ச்சி நிறுவனத்திடம் கேட்கப்பட்டுள்ளது. இதற்கு அரசு ரூ. 2.50 இலட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

7.7. காணாமல் போகும் மீனவர்களை விமானம் மூலம் தேடுவது

ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட மீனவர்கள் காணாமற் போனால் மட்டுமே அவர்களை விமானம் மூலம் தேடுவதற்கு முதலில் ஏற்பாடு செய்யப்பட்டு வந்தது. வன-மீன் துறையின் 20–11–1987 நாளிட்ட அரசாணை எண் 1192-ன்படி, கடலில் மீனவர் காணாமல் போனாலும் விமானம் மூலம் தேடிக் கண்டு பிடிக்கும் வகையில் அரசு அதன் கொள்கையை மாற்றியுள்ளது. 1988–89-ல் 6 நிகழ்வுகளில், விமானம் மூலம் தேடும் பணி மேற்கொள்ளப்பட்டது.

8. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கடல் மீன் பிடிப்பு ஒழுங்கு முறைச்சட்டம் :

6–1–1983 முதற்கொண்டு செயலுக்கு வந்துள்ள தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கடல் மீன்பிடி ஒழுங்கு முறைச் சட்டம் தமிழ்நாடு கடற்கரைப் பகுதி முழுவதும் அல்லது அதன் ஒரு பகுதி நெடுக கடலில் மீன்பிடி கலங்களைக் கொண்டு மீன் பிடிப்பதை முறைப்படுததுதல், கட்டுப்படுத்துதல், தடை செய்தல் ஆகியவற்றிற்கு வகை செய்கிறது. இச்சட்டத்தைக் கண்டிப்பாகச் செயற்படுத்தும் பொறுப்பு, மீனளத் துறையைச் சேர்ந்ததாகும்.

இதன் கீழ் இயற்றப்பட்டச் சட்டமும் விதிகளும் பின்வருவனவற்றிற்கு வகை செய்கின்றன :—

1. மீன்பிடி கலங்களைப் பதிவு செய்தல்.

2. மீன்பிடி கலங்களுக்கு உரிமம் வழங்குதல்.

3. இச்சட்டத்தின் கீழ் இயற்றபபட்ட விதிகளுக்கு முரணாக மீன்பிடி கலங்களைப் பயன்படுத்துவதை தடை செய் தல்.

4. உரிமம் பெறாத மீன் பிடி கலங்களைத் தடை செய்தல்

5. உரிமங்களை ரத்து செய்தல், தற்காலிகமாக நிறுத்தி வைத்தல், மாற்றுதல், திருத்துதலும், பதிவுச் சான்றிதழை ரத்து செய்தலும் தற்காலிகமாக நிறுத்தி வைத்தலும்.

6. இச்சட்டத்தை மீறும் மீன்பிடி படகுகளில் சோதனை இடுதல், பறிமுதல் செய்யப்பட்ட மீன்களை விற்பனை செய்தல்.

1989 மே 2]

9. வளர்ச்சி கல்வித் திட்டம் :

மீனவ சமூகத்தினரின் சமூக பொருளாதார முன்னேற்றத்தில் வளர்ச்சி—கல்வித் திட்டம் ஒரு முக்கிய பங்கு பெற்றுள்ளது. மீனவர்களையும் தனிப்பட்ட மீன் வளர்ப்போரையும் மீன் உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபடுத்த பல்வேறு மீன் வள மேம் பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வது வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

10 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் :

10.1. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மீனவர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கின்றன. அவர்களை வளர்ச்சிப் பணியில் ஒரு முகப்படுத்த கூட்டுறவு இயக்கம் முயலுகிறது. மீன் பிடித் தொழிலுக்கு அதிக மூலதனம் தேவைப்படுவதால் தேவையான மூலதனத்திற்கான வசதியைக் கூட்டுறவு மூலம் ஒருங்கு திரட்டு வது இன்றியமையாததாகிறது. இக்கூட்டுறவுச் சங்கங்கள் மீனவர்களுக்குக் கடன் வசதி அளித்தல், மீன் பிடி கருவிகள், தளவாடங்கள், இன்றியமையாப் பொருள்கள் ஆகியவற்றை விநியோகம் செய்தல் ஆகியவற்றோடு அவர்கள் பிடிக்கும் மீன்களையும் விற்பனை செய்யவும் உதவுகின்றன. மீனவர் களின் பொருளாதார மேம்பாட்டிற்கு, கடன், இடுபொருள் வசதி, விற்பனை வசதி ஆகியவை இந்த கூட்டுறவுச் சங்கங்களில் ஒருங்கிணைக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் (30–6–1988 அன்று நிலவரப்படி) மொத்தம் 610 மீனவர் கூட்டுறவு நிறு வனங்கள் உள்ளன.

10.2. இக்கூட்டு முன்னேற்றத்திற்கு, இக்கூட்டுறவுச் சங் கங்கள் முக்கிய பங்காற்ற வேண்டுமெனில், அவை அமைப்பு ரீதியிலும் நிதி வகையிலும் வலுவுள்ளதாக இருக்க வேண்டும். அவற்றிற்கு அரசு உதவித்தொகை, பங்கு மூலதனம், கடன் போன்ற வகைகளில் நிதியுதவி அளித்துள்ளது. 1978–79 ஆம் ஆண்டிலிருந்து, கூட்டுறவு வளர்ச்சி தேசியக் கழகம், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மீன்பிடி விசைப் படகுகள், நாட்டுப் படகுகள், மீன்பிடி சாதனங்கள், மீன்களை எடுத்துச் செல் வதற்கான மோட்டார் வண்டிகள், கிடங்குகள் கட்டுதல், மீன் களைப் பதனிடுதல், விற்பனை செய்தல் போன்றவற்றிற்கு மிகப் பெரிய அளவில் நிதியுதவிகள் செய்து வருகிறது.

10.3. 1978 79 ஆம் ஆண்டு முதல் 1988–89 ஆம் ஆண்டு இறுதி வரை, 98 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 15,797 உறுப்பினர்கள் கூட்டுறவு வளர்ச்சி தேசியக் கழகத்தி மிருந்து மொத்தம் ரூ. 470.24 இலட்சம் நிதியுதவி பெற்றுள் ளனர். 6 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நாட்டு மரங்கள், வலைகள், நாட்டுப் படகுகள் வாங்குவதற்கு கூட்டுறவு வளர்ச்சி தேசியக் கழகம் ரூ. 105.93 இலட்சம் நிதியுதவி பெறுவதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

10.4. 1988–89 ஆம் ஆண்டு ஏனைய அமைப்புகளிடமிருந்து கிடைக்கும் நிதியுதவியை பயன்படுத்திக் கொள்ள இயலும் வகையில் அவற்றின் கடன் வாங்கும் சக்தியை அதிகரிக்கச்செய்ய 23 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 5 இலட்சம் பங்கு மூலதன உதவிக்கு அனுமதி அளிக்கப்பட்டது. 1989–90 ஆம் ஆண்டிலும் ஒவ்வொரு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் ரூ. 25,000-க்கு மேற்படாத பங்கு மூலதன உதவி அளிக்கக் கருதப்பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டு இதற்காக ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

10.5. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மீனவர் அல்லாதார் ஆதிக்கம் செலுத்துவதாகவும் உண்மையான சில மீனவர்களுக்கு உறுப்பினர் பதவி மறுக்கப்பட்டு வருவதாகவும் வந்துள்ள புகார்களையடுத்து, மீனவரல்லாதவர்களை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து விலக்கவும், உண்மையான மீனவர்களை உறுப்பினராகச் சேர்க்கவும் ஒரு முனைப்புச் செயல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 25,266 மீனவரல்லாத உறுப்பினர்களை இச்சங்கங்களிலிருந்து நீக்கப்பட்டும், 7,348 உண்மையான மீனவர்கள் உறுப்பினராகப் புதிதாகச் சேர்க்கப்பட்டும் உள்ளனர். 28–2–1989 நிலவரப்படி மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்தம் 1,42,524 உறுப்பினர்கள் உள்ளனர்.

## 11. மீனவ மகளிர் வளர்ச்சிப் பணித் திட்டம் :

1981 ஆம் ஆண்டு ''மீனவ மகளிர் வளர்ச்சிப் பணித் திட்டம்'' மூன்று மீனவர் குப்பங்களில் தொடங்கப்பட்டு, இம்மாநிலத்தில் 8 கடலோர மாவட்டங்களிலும் தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31–2–1988 நிலவரப்படி 6,500-க்கும் மேற்பட்ட மீனவ மகளிரை உறுப்பினராகக் கொண்ட 46 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும் ஒரு சில மகளிர் மன்றங்களும் இச்சிறப்புத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்கு மூலதன உதவி அளிப்பதற்கான நிதி ஒதுக்கத்திலிருந்து, இச்சங்கங்களுக்கு அரசு பங்கு மூலதன உதவியும் தொடக்க நிதி உதவியும் அளித்து வருகிறது. மீன் விற்பனைக்கான கடன் வசதி, சேமிப்பு, கைத்திறத் தொழில் பயிற்சி, நியாய விலைக் கடைகள் மூலம் இன்றியமையாப் பொருட்களை வழங்குதல், மருத்துவ வசதிகள், முதியோர் கல்வித் திட்டம், வேலை வாய்ப்பு, மழலைகள் இல்லங்கள் மூலம் குழந்தைகளைக் கவனித்தல், பகல் நேர பாதுகாப்பு மையங்கள், குழந்தை காப்பகங்கள், சமூக நலப் பயிற்சி முகாம்கள் போன்ற பலதரப்பட்ட பணிகளை செயல் படுத்தி வருகின்றன. இதனால் மீனவ மகளிர் இடைத்தரகர்களின் பிடியிலிருந்து விடுபட்டு, பொருளாதார பாதுகாப்பு அடைவதுடன், கூடுதல் வருமானத்துக்கான வழி வகையறிந்து, விழிப்புணர்ச்சி கொண்டு,

1989 மே 2]

எழுத்தறிவு பெற்று ஓரளவு சமுதாய ஏற்றம் அடைகின்றனர். இது போன்று மேலும் பல மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

11.2. மீன் அங்காடிக் குத்தகை, நியாய விலைக் கடைகளை நடத்தல், மீன் போக்குவரத்து வண்டி வசதி ஆகியவை இத் திட்டத்தின் கீழ் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் எய்தியுள்ள சில சாதனைகளாகும். மீனவ சமுதாயத்திற்குத் தூண்டுகோலாக அமைய இச்சமுதாயத்திலிருந்து 900 மீனவ மகளிரைத் தெரிந்தெடுத்து அந்நிய உதவியுடன் தொடர்புப் பணியில் பயிற்சியளிப்பதற்கான திட்டம் வெளிநாட்டு உதவி பெற மத்திய அரசுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்நிய நன்கொடையாளரான நெதர்லாந்து அரசின் உதவி பெறப்பட்டதும் இத் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 12. வட்டார நிர்வாகம்

12.1. தற்போது மாவட்டங்கள் அளவில் எல்லா வகையான மீன்வள அபிவிருத்திப் பணிகளும் வட்டார மீன் துறைத் துணை இயக்குநர்களுடைய நேரடி மேற்பார்வையிலும், கட்டுப்பாட்டிலும் நடைபெறுகின்றன. உள்நாடு மற்றும் கடல் மீன்வள அபிவிருத்தி திட்டங்களுடன் மீனவர்களுடைய சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் இவர்கள் பொறுப்பாவார்கள். எல்லா வகையான மீன்வள அபிவிருத்தித திட்டங்களுக்கும் திட்டமிடுதல், மேற்பார்வை இடுதல், வழிகாட்டுதல் மற்றும் திட்ட முன்னேற்றத்தை கண்காணித்தல் ஆகியவற்றிற்கு இவர்கள் பொறுப்பாவார்கள். எனவே, எங்கெங்கு எப்பொழுதெல்லாம் சிக்கல்கள் தோன்றுகின்றனவோ அப்பொழுதெல்லாம் அவற்றை தீர்த்து வைக்க நிவாரண நடவடிக்கைகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கவும், திட்டங்களை உரிய முறையிலும் விரைவாகவும் செயல் படுத்தவும் இவர்கள் அடிக்கடி தங்கள் மாவட்டங்களில் பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் பணிகளையும் இவர்கள் மேற்பார்வையிட்டு, எக்டேர் ஒன்றுக்கான மீன் உற்பத்தியைப் பெருக்கவும், அவற்றை விற்பனை செய்வதற்கும், தொழில் நுணுக்க ஆலோசனைகளை நல்குகிறார்கள். கடல் மீன் பிடிப்பு ஒழுங்கு படுத்தும் சட்டத்தைச் செயல் படுத்துவதிலும் இவர்கள் நடுவர்களாகப் பணியாற்றுகிறார்கள். மீனவர்களிடையே ஏற்படும் சச்சரவுகளைத் தீர்ப்பதிலும், மீனவர்களிடையே அமைதியை நிலை நாட்டுவதிலும், இயற்கைச் சீற்றங்களின் போது மீனவர்களுக்கு நிவாரணம் கிடைக்கச் செய்வதிலும், மீனவர்களிடையே எழும் சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலும், அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுடன் இணைந்து செயலாற்றுகிறார்கள்.

12.2. அதே போல் மாவட்டங்களில் எல்லா வகையான மீன் வளப் பணிகளையும் போதுமான தொழில் நுட்ப அறிவுடன் மேற் கொள்வதற்குத் துறையின் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் மீனளத் துறை துணை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் சென்னையில் இயங்கிவரும் பணியாளர் பயிற்சி நிலையம் ஈடுபட்டுள்ளது. புதிதாக பணியில் சேருவோருக்குப் பயிற்சியளிப்பதுடன், துறையின் பணியாளர்களுக்கு நினைவு கூர் பயிற்சியும் அளிக்கிறது. தவிரவும் மீன்பிடி கருவிகளுக்கான தொழில் நுட்பம், உவர் நீர் மீன் வளர்ப்பு ஆகியவற்றிலும் இந்நிலையம் பயிற்சியளிக்கிறது.

12.3. இவ்வாறு அதிகரித்து வரும் துறையின் பணிகள், மற்றும் மீனவர்களின் தேவையை மேலும் நல்ல முறையில் அணுக வேண்டியதன் அவசியம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, வட்டார நிர்வாகத்தை ஓர் தொழில் நுட்பம் வாய்ந்த அலுவலரிடம் ஒப்படைப்பது மிகவும் அவசியமும், அவசரமும் ஆகும். எனவே, 1989–90-ல் வட்டார மீன் துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர் பயிற்சி நிலைய முதல்வர் ஆகிய பதவிகளை துணை இயக்குநர்கள் பதவித் தரத்திலிருந்து இணை இயக்குநர்கள் பதவித் தரங்களாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள்.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும். தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக 1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இது பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனம் ஆகும். அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 500 இலட்சமும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 292 இலட்சமும் ஆகும்.

### 2. குறிக்கோள்கள் :

2.1. கீழ்க்காணும் திட்டங்களை உருவாக்குதல், தீர்மானித்தல் முறைப்படுத்தல், நிர்வகித்தல், பராமரித்தல், மேம்படுத்தல ஆகியவை இந்நிறுவனத்தின் நோக்கங்களாகும்.

1. பெரிய வகை இழுவை நாவாய்கள் பெரிய இயந்திரப் படகுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஆழ்கடல் மீன பிடிப் பணிகளை மேற்கொள்ளுதல்.

2. உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் வளர்த்துப் பிடித்தல்; மற்றும்

3. அனைத்து விதமான மீன் பிடித்தொழிலுக்கும் மீன் வளர்ப்பிற்கும் சம்பந்தப்பட்ட எல்லாவிதமான பணிகளையும் உதவிகளையும் செய்தல்.

இக்கழகம் தற்போது கீழ்க்காணும் திட்டங்களைச் செயல் படுத்திவருகிறது:—

1. கிழக்குக் கடற்கரையில் ஆழ்கடல் இறால் மீன் பிடி நாவாய்கள் இரண்டை இயக்குதல் ;

2. எட்டு நீர்த் தேக்கங்களில் மீன் குஞ்சுகளை வளர்த்து மீன்பிடித்தல் ;

3. தூண்டுதல் முறை இனவிருத்தி மூலம் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்தல்;

4. இறால் மற்றும் மீன்களை பதப்படுத்தும் வசதிகளை கொண்ட குளிர்பதன நிலையங்கள் மற்றும் பனிக்கட்டு நிலையங்களைப் பராமரித்தல் ;

5. சென்னை மற்றும் முக்கிய நகரங்களில் சில்லறை மீன் விற்பனை நிலையங்களின் மூலம் தரமான மீன்களை சுகாதாரமான முறையில் நியாயமான விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்தல் ;

6. தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளிலும் மற்றும் வெளி மாலநிங்களில் உள்ள மீனவர்களுக்கு வழங்குவதற்காக மீன் பிடி வலைகளை உற்பத்தி செய்தல்;

7. கடல் இரா மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து வழங்குதல் ;

8. கூட்டுத் துறை நிறுவனத்தின் மூலம் கண்ணாடி நாரிழைப் படகுகளை கட்டி மீனவர்களுக்கு வழங்குதல் ;

9. மீனவர்கள் இயந்திரப் படகுகளை இயக்குவதற்காக மீன் பிடி துறைமுகங்களில் தோணித் துறைகளில் உள்ள கடைகள் மூலம் டீசல் விற்பனை செய்தல்.

## 3. கடல் மீன் பிடிப்பு :

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தஞ்சை மற்றும் நெல்லை எனும் இரு மெக்சிகன் இறால் மீன் பிடி நாவாய்களின் மூலம் விசாகபட்டினத்தை ஆதாரமாக கொண்டு கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடிப்பு நடத்தி வருகிறது. இவ்விரு நாவாய்கள் மூலம் பிடிக்கப்பட்ட இறால்களின் விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு. | பிடிக்கப்பட்ட இறால் (டன்களில்). | பிடிக்கப்பட்ட பிற மீன்கள் (டன்களில்). | விற்பனை மூலம் ஈட்டிய வருவாய். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1987–88 | 42.13 | 58.85 | 44.90 |
| 1988–89 (28-2-89 வரை) | 52.65 | 51.79 | 40.72 |

இவ்விரு நாவாய்கள் தொடர்ந்து கிழக்கு கடற்கரையில் மீன் பிடிப்பு நடத்தி வரும்.

மேலும் ரூ. 2.5 கோடி மதிப்புள்ள 16 மீட்டர் நீளமுள்ள 5 மீன்பிடி நாவாய்களை ஆழ்கடல் மீன் பிடிப்புக்காக வரும் ஆண்டில் நிறுவன நிதி உதவி மூலமாக வாங்க கருதப்பட்டுள்ளது.

4. உள்நாட்டு மீன்வளம் :

4.1. தமிழ்நாட்டில் 8 நீர்த் தேக்கங்கள் இந்நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவற்றில் முறையாக மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு பிடிக்கப்படும் மீன்களில் பங்கு என்ற அடிப்படையில் மீனவர்களைக் கொண்டு மீன்பிடிப்பு நடத்தப்பட்டு வருகிறது. 1987–88 ஆம் ஆண்டில் 333 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு அவை ரூ. 29.25 இலட்சத்திற்கு விற்கப்பட்டன. 1988–89 ஆம் ஆண்டில் 641 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு அவை ரூ. 54.41 இலட்சத்திற்கு, விற்கப்பட்டன. இப்பணி மேலும் தொடர்ந்து மேம்பாடடைய உள்ளது.

4.2. மீன் குஞ்சு உற்பத்தி :

சாத்தனூர் அணை மற்றும் ஆளியாறு ஆகிய இடங்களில் இக்கழகம் மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களைப் பராமரித்து வருகிறது. மேலும் அமராவதி, திருமூர்த்தி, மஞ்சளாறு, பாலாறு பொரந்தலாறு மற்றும் உப்பாறு பண்ணைகளில் மீன் குஞ்சு வளர்ப்புப் பணிகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட மீன் குஞ்சுகள் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதுடன், மீன்துறை, மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகவரமைப்புகள் மற்றும் தனியாருக்கும் வழங்கப்படுகின்றன. 1987–88 ஆம் ஆண்டில் 577 இலட்சம் நுண் மீன் குஞ்சுகளும், 1988–89-ல் 625 இலட்சம் நுண் மீன் குஞ்சுகளும் இந்நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்டன. இப்பணி 1989–90 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

4.3. கூண்டு மீன் வளர்ப்பு :

இக்கழகம் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தூண்டுதல் முறையில் உற்பத்தி செய்யப்பட்ட நுண் மீன் குஞ்சுகளை மிதக்கும் கூண்டுகள் மூலம் மீன் குஞ்சுகளை வளர்க்கும் முறையை நல்ல முறையில் செயல்படுத்தி வருகிறது. தனிப்பட்ட மீன் வளர்ப்போர் இம் முறையை கையாண்டு வருவாயைப் பெருக்கி கொள்ள முடியும் என இவ்வாராய்ச்சி முடிவுகளின் மூலம் தெரிய வருகிறது. இம் முடிவின்படி தனிப்பட்ட மீன் வளர்ப்போர் மேற் கொள்ள வேண்டிய வழி முறைகள் வகுக்கப்பட்டு, மிதவைக் கூண்டுகளில் மீன் குஞ்சு வளர்ப்பு ஊக்குவிக்கப்படும்.

1989 மே 2]

## 5. மீன் பதப்படுத்தும் நிலையங்கள் :

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் இம்மாநிலத்தில் 5 பனிக்கட்டி உற்பத்தி நிலையங்களையும் மூன்று மீன் பதப் படுத்தும் நிலையங்களையும் நடத்தி வருகிறது. இந்த 5 பனிக்கட்டி உற்பத்தி நிலையங்களும் தினசரி 40 டன் எடையுள்ள பனிக்கட்டிகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை. 1988–89 ஆம் ஆண்டில் 6,484 டன் பனிக்கட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. சென்னை, மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் அமைந்துள்ள மீன்பதப்படுத்தும் மூன்று நிலையங்கள் தினசரி 26 டன் மீன்களை பதப்படுத்தும் திறன் கொண்டவை. இவற்றில் 150 டன் எடையுள்ள பதப் படுத்திய மீன்களை சேமித்து வைக்க முடியும். 1988–89 ஆண் டில் இந்த மூன்று மீன் பதப்படுத்தும் நிலையங்களும் குத்தகைக்கு விடப்பட்டு, அதனால் ரூபாய் 10.4 இலட்சம் பெறப்பட்டுள்ளது. சென்னை மீன்பிடித் துறை முகத்தில் தினசரி 100 டன் உற்பத் தித் திறன் உள்ள பனிக்கட்டி நிலையமும் 150 டன் குளிர்பதன நிலையமும், 300 டன் மீன் பதப்படுத்தும் நிலையமும் ரூபாய் 62 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. இந் நிலை யம் 1989 ஆம் ஆண்டு 'மே' திங்களில் செயல்படத் துவங்கும்.

## 6. மீன் விற்பனை நிலையம் :

இக்கழகம் சென்னை மாநகரம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, ஈரோடு, வட ஆற்காடு மற்றும் புதுக்கோட்டை நகரங் களில் 1976ஆம் ஆண்டிலிருந்து மீன் விற்பனையை தொடங் கியது. 1988–89ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் 34 மீன் விற்பனை நிலையங்களும், 12 வறுவல் மீன் விற்பனை நிலையங் களும் செயல்பட்டு வருகின்றன. இதே போன்று மற்ற நகரங் களில் 28 மீன் விற்பனை நிலையங்களும், 14 வறுவல் மீன் விற் பனை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. 1987–88ஆம் ஆண்டில் 578 டன் எடையுள்ள மீன்கள் ரூபாய் 90.35 இலட் சத்திற்கு விற்கப்பட்டன. 1988–89ஆம் ஆண்டில் 729.29 டன் எடையுள்ள மீன்கள் ரூ. 112.62 இலட்சத்திற்கு விற்கப்பட்டன.

## 7. உவர் மீன் கிடங்கு:

கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி மேம்பாட்டுக் குழு நிறுவனத்தால் தூத்துக்குடியில் கட்டப்பட்ட உவர் மீன் கிடங்கை இக்கழகம் பொறுப்பேற்று நடத்தி வருகிறது. இக் கிடங்கு கள் 12 உவர் மீன் ஏற்றுமதியாளர்களுக்கு ஒருவருக்கு மாத வாடகை ரூபாய் 600 என்ற வீதத்தில் வாடகைக்கு விடப்பட் டுள்ளது. மீன் விற்பனையை மேம்பாடு அடையச் செய்வதற் காக இந்திய அரசிடமிருந்து இக் கழகம் ரூபாய் 50 இலட்சம் மானியமாக பெற்றுள்ளது. இது தவிர ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழும் முழு மான்யத் திட்டத்தின்கீழ் ரூபாய் 21.65 இலட்சம் பெற்றுள்ளது.

## 8. மீன் வலை தயாரித்தல் :

இராயபுரத்தில் முன்னாளைய மா. சிங்காரவேலர் படகு கட்டும் நிலையத்தில் ஆண்டு ஒன்றுக்கு 54 டன் மீன் வலை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று இக்கழகத்தால் நடத்தப் பட்டு வருகிறது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் இத் தொழிற்சாலையை 1986 செப்டம்பர் முதல் நடத்தி வருகிறது. 1987–88ஆம் ஆண்டில் ரூபாய் 63 இலட்சம் மதிப்புள்ள 59 டன் வலைகள் இத் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டுள்ளன. 1988-89 ஆம் ஆண்டில் 28--2--1989 வரை ரூபாய் 54.50 இலட் சம் மதிப்புள்ள 46.10 டன் எடையுள்ள வகைகள் தயாரிக்கப்பட் டுள்ளன.

## 9. கடலோர மீன் வளர்ப்பு :

### 9.1. இறால் மீன்குஞ்சு பொறிப்பகம் :

இக்கழகம், சென்னைக்கு தெற்கே 25. கி. மீட்டர் தூரத்தி லுள்ள நீலங்கரையில் ரூபாய் 21.00 இலட்சம் செலவில் ஆண்டு தோறும் 12 மில்லியன் உற்பத்தித் திறனுடைய இறால் மீன்குஞ்சு பொறிப்பகம் ஒன்றை நிறுவியுள்ளது. இப்பொறிப்பகத்தின் உற்பத்தித் திறனை மேலும் உயர்த்தும் வகையில் இப் பொறிப் பகத்தை விரிவாக்குவதற்குக் கடல் பொருள் ஏற்றுமதி அபி விருத்தி மேம்பாட்டுக் குழு ரூபாய் 5 இலட்சம் மான்யமாக வழங் கியுள்ளது. இறுதியில் இதன் திறன் 50 மில்லியன் குஞ்சு களாக உயர்த்தப்படும். 1987–88 ஆம் ஆண்டில் இப்பொறிப் பகம் 5.6 இலட்சம் இறால் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்தது. 1988–89ஆம் ஆண்டில் ரூபாய் 0.51 இலட்சம் மதிப்புள்ள 6.43 இலட்சம் இறால் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு மீன் வளர்ப்போருக்கு விநியோகிக்கப்பட்டது.

9.2. தஞ்சை மாவட்டம் பழஞ்சூரில் ரூபாய் 58.40 இலட் சம் செலவில் 44 ஹெக்டேர் பரப்பில் உவர் நீர் மீன்பண்ணை ஒன்றை நிறுவ இக்கழகம் கருதுகிறது. மேலும், அதே ஊரில் 100 ஹெக்டேர் பரப்பளவில் மற்றொரு இறால் பண்ணை ஒன் றை கூட்டு முயற்சியாக நிறுவ ஒரு நிறுவனத்தைப் பதிவு செய்ய இக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

## 10. கூட்டுத் துறை :

கடலோரப் பகுதியில் மீன் பிடிப்பதற்கு உகந்த சிறிய கண் ணாடி இழைப் படகுகளை உற்பத்தி செய்யும் நோக்குடன் டென் மார்க் நாட்டு 'மார்வின் பிளாஸ்ட்' 'ஜார்ஜ் மெய்ஜோ', 'அக்வா மரைன்' ஆகிய நிறுவனங்களுடன் சேர்ந்து கூட்டு முயற்சியாக தமிழ்நாடு 'மரைன பிளாஸ்ட்' என்ற நிருவனத்தை கூட்டு துறை யில் இக்கழகம் நிறுவியுள்ளது. இந்நிறுவனம் 1985 ஆகஸ்ட் திங்களில் செயல்படத் தொடங்கியுள்ளது. 1985–86 முதல்

1989 மே 2]

1987–88 வரை இந்நிறுவனம் 45 கண்ணாடி நாரிழைப் படகுகளை தயாரித்தது. மேலும் 22 அடி நீளமுள்ள 10 படகுகள் தற்போது தயாரிக்கப்பட உள்ளன.

11. டீசல் விற்பனை நிலையங்கள்:

இக்கழகம், இராயபுரம், மல்லிப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மீன் பிடி விசைப்படகுகளை இயக்குபவர்களின் நன்மைக்காக 4 டீசல் சில்லறை விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. 1987–88ஆம் ஆண்டில் 7,421 கிலோ லிட்டர் டீசல் விசைப்படகுதாரர்களுக்கு இந்த விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டது. 1988–89ஆம் ஆண்டில் 28—2—1989 வரை 8,080 கிலோ லிட்டர் டீசல் விற்கப்பட்டது.

12. இக்கழகத்தின் நிதி நிலை:

1987-88ஆம் ஆண்டில் இக்கழகம் ரூபாய் 300.37 இலட்சம் செலவினத்திற்கு ரூபாய் 291.19 இலட்சம் வருமானமாக ஈட்டியது. ஆக நிகர இழப்பு ரூபாய் 9.18 இலட்சமாகும். 1988-89 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 1989 முடிய) மொத்த வரவாகிய ரூபாய் 306.95 இலட்சத்தில் செலவுத் தொகை ரூபாய் 284.87 இலட்சம் போக நிகர வருமானமாக ரூபாய் 21.98 இலட்சம் ஈட்டப்பட்டது.

[1989 மே 2

## வரவு-செலவு ஒரு கண்ணோட்டம்.

| விவரம். | கணக்குகள் 1987-88. திட்டம். | திட்டத்தில் சேராதது. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1988-89. திட்டம். | திட்டத்தில் சேராதது. |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| மானியக் கோரிக்கை எண் 21—மீனளம்— | | | | |
| வருவாய் .. | 378.82 | 459.34 | 300.39 | 507.70 |
| மானியக் கோரிக்கை எண் 41.—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு— | | | | |
| வருவாய் | .. | 7.56 | .. | 56.01 |
| மானியக் கோரிக்கை எண் 58.—பல்வகை மூலதனச் செலவு— | | | | |
| மூலதனம் .. | 273.03 | 2.02 | 267.90 | 0.01 |
| மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணமும்— | | | | |
| கடன்கள் .. | 22.85 | 0.77 | 6.44 | 0.30 |
| மொத்தம் .. | 674.70 | 469.69 | 574.73 | 564.02 |

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 மே 2]

| | திருத்திய மதிப்பீடு 1988-89 | | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1989-90. | |
|---|---|---|---|---|
| | திட்டம். | திட்டத்தில் சேராதது, | திட்டம். | திட்டத்தில் சேராதது. |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| மானியக் கோரிக்கை எண்.21— மீனளம். | | | | |
| வருவாய் | 348.22 | 514.97 | 391.33 | 541.58 |
| மானியக் கோரிக்கை எண். 41— இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு— | | | | |
| வருவாய் | .. | 16.55 | .. | 76.48 |
| மானியக் கோரிக்கை எண். 58— பல்வகை மூலதனச் செலவு— | | | | |
| மூலதனம் | 154.67 | 1.52 | 149.11 | 0.01 |
| மானியக் கோரிக்கை எண். 59— மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணமும்— | | | | |
| கடன்கள் | 14.38 | 74.59 | 0.03 | 0.30 |
| மொத்தம்.. | 517.27 | 607.63 | 540.47 | 618.37 |

[1989 மே 2

# இணைப்பு

## கால்நடைப் பராமரிப்பு கொள்கை விளக்கக் குறிப்பு.

## கோரிக்கை எண். 22.

## 1989–90

## பகுதி 1.

### பொது விவரங்கள்.

**1. முன்னுரை :**

வேளாண்மையும், கால்நடைப் பராமரிப்பும் மனித நாகரீகத்தைப் போன்று மிகப் பழமையானவை. மக்கள் உயிர் வாழக் கால்நடைகள் எவ்வளவு அவசியம் என்பதை வலியுறுத்திக் கூற வேண்டியதில்லை. கால்நடைகள் மக்களுக்குத் தேவையான சத்துணவைக் கொடுப்பதுடன் உடை, உழைப்பு, சக்தி போன்ற இதர பல வசதிகளையும் அளிக்கின்றன. கிராமப் பொருளாதாரத்தில் கால்நடைகள் வகிக்கும் பங்கு பற்றிய பெரும் விழிப்புணர்வு சமீப காலத்தில் ஏற்பட்டதின் பயனாக, நம் நாட்டில் கால்நடைகளின் தரத்தையும் அவற்றின் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதற்கான சீரிய முயற்சிகள் அனைத்து நிலைகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியா ஒரு விவசாய நாடாக இருப்பதால், நம் மக்கள் தொகையில் 75 சதவிகிதம் பேர் கிராமங்களில் வாழ்கின்றனர். அவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்கு வேளாண்மையையும், கால்நடைப் பராமரிப்பையும் சார்ந்திருக்கின்றனர். ஆதலால் இவ்விரண்டையும் பேண வேண்டியது இன்றியமையாததாகும். இதன் பொருட்டு கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம் மற்றும் கேந்திர கிராமத் திட்டம் ஆகியவற்றை அரசு செயல் படுத்துகிறது. மேலும், சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், சிறப்பு மத்திய உதவித் திட்டம் மற்றும் பல திட்டங்களின் மூலம் கால்நடைப் பராமரிப்புத் திட்டங்கள் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலமாக செயல்படுத்தப்படுகின்றன. வெற்றியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டங்களின் பலனை சமுதாயத்தின் நலிந்த வகுப்பினர் குறிப்பாக சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் ஆகியோர் பெறுகின்றனர் என்பது நிச்சயம்.

1989 மே 2]

தமிழகத்தில் கால்நடை வளர்ப்பில் மேற்கொள்ளப்பட்ட பெரும் முயற்சிகளின் விளைவாக 1977–78-ல் 1.68 மில்லியன் டன்னாக இருந்த பால் உற்பத்தி 1987–88-ல் 3.1 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது. 1977–78-ல் 682 மில்லியனாக இருந்த முட்டை உற்பத்தி 1987–88-ல் 2,197 மில்லியனாக உயர்ந்துள்ளது. அதைப்போன்று, 1977–78 ஆம் ஆண்டில் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு கிடைத்து வந்த 98 கிராம் பால், 1987–88-ல் 160 கிராமாக உயர்ந்துள்ளது. நபர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு 1977–78-ல் 16 ஆக இருந்த முட்டை 1987–88-ல் 41 ஆக அதிகரித்துள்ளது.

கீழே கண்டுள்ள உற்பத்தி அளவு 1989–90 ஆம் ஆண்டின் குறியீடு ஆகும் :—

| | | |
|---|---|---|
| பால் | .. | 3,3000 ('000' மி. டன்) |
| முட்டை | .. | 2,300 (மில்லியன் எண்ணிக்கை). |
| இறைச்சி | .. | 36.00 (மில்லியன் கிலோ). |

பகுதி 2.

கால்நடைப் பராமரிப்புத் துறையின் முக்கியப் பணிகள்.

1. ஆவின அபிவிருத்தி :

1982 ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாடு மொத்தம் 26·18 மில்லியன் கால்நடை எண்ணிக்கையைக் கொண்டுள்ளது. இதில், மாடுகளின் எண்ணிக்கை 13·58 மில்லியனாகும். இனப் பெருக்கத்திற்கு உகந்த பசுக்களும், பெண் எருமைகளும் முறையே 3.49 மற்றும் 1·72 மில்லியன் ஆகும். நாட்டு ஆவினம்-எருமையினம் ஆகியவற்றின் பால் உற்பத்தி மிகக் குறைவானது. ஆதலால், வருங்கால சந்ததிகளின் பால் கொடுக்கும் ஆற்றலை மேம்படுத்தும்பொருட்டு, நாட்டு ஆவினம், சிறந்த பால்வர்க்க இனங்களான ஜெர்ஸி, ஹோல்ஸ்டீன் ப்ரீஷியன் காளைகளைக் கொண்டும் எருமையினம் முர்ரா காளைகளைக் கொண்டும் கலப்பின விருத்தி மூலம் தரம் உயர்த்தப்படுகிறது.

2 கால்நடை வளர்ப்புக் கொள்கை :

(1) காங்கேயம், உம்பளாச்சேரி ஹலிக்கார் ஆகியவற்றின் தெரிவு செய்யப்பட்ட இனவிருத்தியை இம்மாநிலத்தில் இவை மிகுதியாக வாழுமிடங்களில அதாவது, காங்கேயம், சேலம், திருச்சிராப்பள்ளி, மற்றும் கோயம்பத்தூர் மாவட்டங்களிலும், உம்பளாச்சேரி, தஞ்சாவூர் மாவட்டத்திலும் ஹலிக்கார் தர்மபுரி மாவட்டத்திலும் மேற்கொள்ளுதல்.

(2) எருமைகளைப் பொருத்தவரையில், உள்ளூர் எருமைகளை முர்ரா இனங்கள் மூலம் தரம் உயர்த்துதல்

(3) பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக உள்ளூர் பசுக்களைப் பொருத்தவரையில், அவை முதலில் அயலினக் காளைகளான ஜெர்ஸி அல்லது ஹோல்ஸ்டீன் ப்ரீஷியன் இனத்துடன் கலப்பினவிருத்தி செய்யப்படும். அதன் பின்னர் செய்யப்படும் கலப்பினவிருத்தி, கலப்பின முறையில் முதலில் பிறந்த காளைகளின் மூலம் மேற்கொள்ளப்படும்.

(4) மாநிலத்தில் இறைச்சி உற்பத்தியை அதிகரிக்கும்படியாக செம்மறி இனங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் இன விருத்தி செய்தல்.

(5) அடுத்த பத்து ஆண்டுகளில் மாநிலம் முழுவதிலும் உறைவிந்து முறை கையாளப்படும் வகையில் செயற்கை முறை இன விருத்தியில் படிப்படியாக உறைவிந்து முறையை விரிவு படுத்துதல்.

(6) கால்நடை வளர்ப்போடு ஒருங்கிணைந்து விளங்கும் தீவனப் பயிர் சாகுபடியை அபிவிருத்தி செய்து, புல் நறுக்குகள் மற்றும் விதை உற்பத்தியைப் பெருக்குதல்.

(7) கால்நடைகள் மற்றும் கோழிகள் அனைத்துக்கும் சிறந்த கால்நடை மருத்துவ நோய் நீக்கப் பணிகள் ஆற்றுதல் ஆகியவையாகும்.

3. <u>கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம் :</u>

(1) அதிக அளவு பால் கொடுக்கும் அயலின பால் வர்க்கத்தைச் சார்ந்த காளைகளைக் கொண்டு அறிவியல் முறைப்படி கலப்பினம் செய்வதின் மூலம் கறவை மாடுகளின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

(2) நன்முறையில் நோய் நீக்கப் பணிகள், நோய்த் தடுப்புப் பணிகள் அளித்தல் அறிவியல்படி கால்நடைகளைப் பேணுவது பற்றி விளம்பரப்படுத்துதல், மற்றும்

(3) தீவனப் பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவித்தல் ஆகியவை கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

தமிழகத்தில் தற்போது செயல்பட்டு வரும் 12 கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்களும் 4,300 கிராமங்களை அதாவது, மாநிலத்திலுள்ள, கிராமங்களில் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பங்கை உள்ளடக்கியுள்ளன. இந்த திட்டங்கள் மதுரை, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, தஞ்சா

1989 மே 2]

ஊர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, பண்ருட்டி, தாம்பரம் சிதம்பரம் உடுமலைப்பேட்டை மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இத்திட்டங்களின் கீழ் 26 மண்டல செயற்கை முறை கருத்தரிப்பு நிலையங்களும் 650 கிளை நிலையங்களும் உள்ளன. ஒவ்வொரு கிளை நிலையமும் குறைந்த பட்சம் இனப் பெருக்கத்திற்கேற்ற 1,000 பசுக்களையும், பெண் எருமைகளையும் கொண்டுள்ளது. இந்தத் திட்டங்களின் கீழ் பணி புரியும் கால்நடை உதவி மருத்துவர்களும், கால்நடை ஆய்வாளர்களும் செயற்கை முறை கருத்தரிப்பு செய்தல், சினைப் பரிசோதனை மற்றும் கன்று பரிசோதனை செய்தல், தீவனப் பயிர் அபிவிருத்தி செய்தல், உரிய காலத்தில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், குறிப்பிட்ட கால அளவில் தடுப்பூசிகள் போடுதல் போன்ற பணிகளை ஆற்றுகிறார்கள். மேலும், பல்வேறு விஸ்தரிப்பு செயல்முறைகளின் மூலம் சிறு பால் பண்ணைகளை அமைப்பது பற்றி விவசாயிகளுக்கு அறிவூட்டும் முயற்சிகளையும் மேற்கொள்ளுகிறார்கள்.

1988-89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) இத் திட்டத்தின் கீழ் ஆற்றப்பட்ட பணிகள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| 1. செயற்கை முறை கருவூட்டல்களின் எண்ணிக்கை. | 4,66,241 |
| 2. கன்றுகள் பிறப்பும் சோதிக்கப்பட்டவையும் | 1,01,523 |
| 3. பசுந்தீவன நறுக்குகள் விநியோகிக்கப் பட்டவை. | 97,49,150 |
| 4. பசுந்தீவன மரக் கன்றுகள் விநியோகிக்கப் பட்டவை. | 6,39,132 |
| 5. பசுந்தீவன விதைகள் விநியோகிக்கப் பட்டவை. | 5,07,753 (கிலோ) |

1989—90 ஆம் ஆண்டில் 100 கூடுதலான கிளை நிலையங்களுக்கு உறைவிந்து வசதிகளை விரிவுபடுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

4. கேந்திர கிராமத் திட்டம்.

வருங்கால தலை முறைகளின் பால் கொடுக்கும் திறனை மேம்படுத்தும் பொருட்டு, சிறந்த இன பால் வர்க்கக் காளைகளைக் கொண்டு நாட்டு ஆவினம் மற்றும் எருமையினங்களை இனப் பெருக்கம் செய்வதே கேந்திர கிராமத் திட்டத்தின் நோக்கமாகும். கால் நடை வளர்ப்பில் ஏக காலத்தில் சிறந்த இன விருத்தி, தரமுள்ள தீவனமிடுதல், சீரிய முறையில் நோய்த்

[1989 மே 2

தடுப்பு நட வடிக்கைகள் மேற் கொள்ளுதல் மற்றும் அறிவியல் படி கால்நடைகளைப் பராமரித்தல் போன்ற பல கூறுகள் இத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. ஒருங்கிணைந்த அமைப்பினையுடைய பகுதிகளில் இத் திட்டம் இயங்குகின்றது. ஒவ்வொரு பகுதியிலும் இன விருத்திக்கு உகந்த மொத்தம் 10,000 ஆவினங்களும் எருமையினங்களும் உள்ளன.

தமிழகத்தில் தற்போது 62 கேந்திர கிராமத் திட்டங்கள் 620 கிளை நிலையங்களுடன், இனப் பெருக்கத்திற்கு உகந்த சுமார் 9.3 இலட்சம் ஆவினங்கள் மற்றும் எருமையினங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இயங்கி வருகின்றன.

நாகர்கோவில், திருநெல்வேலி, சிவகங்கை, இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி மற்றும் மன்னார்குடி ஆகிய எட்டு இடங்களில் கேந்திர கிராமத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

1988—89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) இத் திட்டத்தின் கீழ் ஆற்றப்பட்ட பணிகள் பின் வருமாறு:—

1. செயற்கை முறை கருவூட்டல்களின் எண்ணிக்கை 2,83,987

2. கன்றுகள் பிறப்பும், சோதிக்கப்பட்டவையும் 66,540

நடப்பு ஆண்டில் செயற்கை முறை இன விருத்திப் பணியைத் தீவிரப்படுத்தவும், 1989—90ஆம் ஆண்டில் கூடுதல் கிளை நிலையங்களுக்கு உறைவிந்து வசதிகளை விரிவுப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 5. பொலி காளை நிலையங்கள் :

செயற்கை முறைக் கருத்தரிப்பு நிலையங்களுக்குத் தேவையான குளிர்ந்த விந்தை தயாரித்து அனுப்பும் பொருட்டு, சிறந்த மரபுடைய பொலி காளைகள், பொலி காளை நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றன. ஜெர்ஸி, ப்ரீசியன், காங்கேயம், முர்ரா எருமையினம் ஆகிய காளைகள் இந்நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளன. இக் காளைகளிலிருந்து சேகரிக்கப்படும் விந்து பதப்படுத்தப்பட்டு குளிர்ந்த நிலையில் ஆவினங்களுக்கும், எருமையினங்களுக்கும், செயற்கை முறை இன விருத்தி செய்யும்படி பல்வேறு கிளை நிலையங்களுக்கும் அனுப்பபடுகின்றது.

மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் தற்போது 56 பொலி காளை நிலையங்கள் உள்ளன. இங்கு மொத்தம் 488 காளைகள் பராமரிக்கப்படுகின்றன். இவற்றில் அயலினக் காளைகள் 216, கலப்பினக் காளை ஒன்று, இந்திய இனக் காளைகள் 38 மற்றும் முர்ரா இனக் காளைகள் 233 ஆகும்.

1989 மே 2]

6. உறைவிந்து முறை விஸ்தரிப்பு :

சிறந்த பொலி காளைகளை நன் முறையில் பயன்படுத்துவதற்கான பெரும் வாய்ப்புகளை அளிக்கும் உறை விந்து முறை கால் நடை வளர்ப்பில் நிறைந்த பலனுள்ள நவீன உக்தியாகும். இம் முறையினால் விந்தை நீண்ட காலத்திற்குப் பாதுகாப்பதும், தூர இடங்களுக்கு அனுப்புவதும் ஏதுவாகும். உறைவிந்துமுறை வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு, உறை விந்தைப பாதுகாப்பதற்கான திரவ நைட்டிரஜன் அத்தியாவசியமாகும். தேவையான திரவ நைட்டிரஜனைத் தயாரிப்பதற்காக ஈச்சங்கோட்டையில் உள்ள அயலின கால்நடை வளர்ப்புப் பண்ணையில் நான்கு ஏனங்களும், அபிஷேகப்பட்டியிலுள்ள மாவட்ட கால்நடை பண்ணையில் மூன்று ஏனங்களுமாக மொத்தம் ஏழு திரவநைட்டிரஜன் தயாரிக்கும் ஏனங்கள் நிறுவப்பட்டு, இயங்கி வருகின்றன.

மாநில திட்டப் பணிகள், ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் போன்றவற்றின் மூலம் உறைவிந்து முறை செயற்கை இனவிருத்தி மேற்கொள்ளப்படுகின்றன.

மாநிலத்தின் 1,719 நிலையங்களில் உறை விந்துச் செயற்கை இனவிருத்தி வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. 1989—90-ல் மேலும் 100 கூடுதல் நிலையங்களுக்கு ரூபாய் 11.04 இலட்சம் செலவில் இவ்வசதிகளை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

1988—89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) ஈச்சங்கோட்டை மற்றும் அபிஷேகப்பட்டியிலுள்ள உறைவிந்து விஸ்தரிப்பு நிலையங்களில் 3.69 இலட்சம் உறைவிந்துக் குழல்கள் தயாரிக்கப்பட்டன.

1989—90 ஆம் ஆண்டில் ஈச்சங்கோட்டை, அபிஷேகப்பட்டி நிலையங்களிலுள்ள பொலிகாளைகளின் எண்ணிக்கையை அதிகரித்து, அதன் மூலம் உறைவிந்து குழல்களின் உற்பத்தியை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர, வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் ஒசூரிலும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், உதமகண்டலத்திலும், நிறுவப்பட்டுள்ள உறைவிந்து நிலையங்களில் உறைவிந்து உற்பத்தி துவக்கப்படும். தற்போது தயாரிக்கப்படும் ஜெர்ஸி, ப்ரீஸியன் மற்றும் முர்ரா விந்து தவிர, கலப்பினக் காளைகளின் விந்து தயாரிப்பும் 1989—90 முதல் துவக்கப்படும். ப்ரீசியன் இனப் பசுக்கள் ஒரு முறை ஈன்ற பின் 10,000 கிலோ கிராமுக்குக் குறையாமல் பால் கொடுக்கும். ஜெர்ஸி இனப் பசுக்கள் 5,000 கிலோ கிராமுக்குக் குறையாமல் பால் கொடுக்கும். ஆகையால் ப்ரீசியன் இனக் காளைகளை இறக்குமதி செய்து, இந்த இனக் காளைகளிலிருந்து பெறப்படும் விந்துவை செயற்கை முறை கருத்தரிப்பிற்கு பயன்படுத்தப்படும் . இது மாநிலத்திலுள்ள உள்நாட்டு பசுக்களின் தரம் உயர்த்த பெரிதும் உதவியாக இருக்கும்.

7. உட்கரு மாற்றல் நுணுக்கத்தினை அறிமுகப்படுத்தல் :

தமிழகத்தில் கால்நடை உற்பத்தியில் செயற்கை முறை இன விருத்தியினை அறிமுகப்படுத்தியதின் மூலம், புரட்சிகரமான அளவில் கலப்பின கன்றுகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் தற்பொழுது உள்ள சிறந்த பொலி காளைகள் இப் பணிக்காக அதிக அளவில் உபயோகப்படுத்தப்பட்டு சிறந்த தரமான கலப்பின கன்றுகள் உருவாக்கப்பட்டுள்ளன. கரு மாற்றல் நுணுக்கம் என்பது, வருடத்திற்கு ஒரு கன்று தரும் ஒரு நல்ல தாயிடமிருந்து 6 முதல் 8 கன்றுகள் உற்பத்தி செய்வதற்கு வழி வகுக்க, மிகச் சிறந்த பசுக்கள் செயற்கை முறையில் கருவூட்டப்பட்டு அக்கருவானது தரம் குறைந்த பசுவின் கர்ப்பப் பையில் மாற்றப்படுகிறது. இதனால் அதிக எண்ணிக்கையில் தரமான கன்றுகள் உற்பத்தி செய்யப்படும். இந்தக் கருமாற்றம் நுணுக்கமானது 1989–90 ஆம் ஆண்டில் கால்நடைப் பாரமரிப்புத் துறையினால் ரூ. 5.42 இலட்சத்தில் செயல்படுத்தப்பட உள்ளது.

8. வம்சாவழி ஆய்வுத் திட்டம் :

வம்சாவழி ஆவினங்களில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, முறையான இன விருத்தி செய்யும்படி காளைகள் அவற்றின் சிறந்த ஆற்றலை, பின் தலைமுறைக்கு மாற்றக் கூடிய இயல்புடையதா என்பதை சரியானபடி மதிப்பீடு செய்ய வேண்டியது அவசியம். ஆகவே, இனப் பெருக்குத் திட்டங்களின் கீழ் காளைகள் பெருமளவில் பயன்படுத்தப்படுவதற்கு முன்னர் அவற்றின் இயல்பு மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

சிவப்பு சிந்தி காளைகளின் இன விருத்தி ஆற்றலை மதிப்பீடு செய்யும் வம்சாவழி ஆய்வுத் திட்டம் ஒசூரிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் செயல்படுகிறது. இங்கு சிறந்த காளைகளிலிருந்து விந்து சேகரிக்கப்பட்டு வருங்கால உபயோகத்திற்காக உறைவிந்து வங்கியில் பாதுகாக்கப்படுகிறது.

இத்தகைய திட்டமொன்று முர்ரா எருமையினத்திற்காக ஒரத்த நாட்டிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் செயல்படுகிறது.

9. மக்கள் தொடர்பு முகாம் :

கால்நடைப் பாராமரிப்பு செயற்பாடுகளைக் கிராம மக்கள் அறிவதற்காக களப்பணியாளர்கள் கிராம அளவில் மக்கள் தொடர்பு முகாம்களை முறையாக நடத்தி வருகின்றனர். சிகிச்சை அளித்தல், பயனற்ற காளைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்தல், தடுப்பூசிகள் போடுதல், கன்றுகள், செம்மறியாடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்தல் போன்ற வழக்கமான பணிகளை

1989 மே 2]

ஆற்றுவதுடன், கால்நடைப் பராமரிப்பினைப் பற்றி அறிவுறுத்தும் சாதனமாகவும் மக்கள் தொடர்பு முகாம் பயன்படுகிறது. 1988–89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் மொத்தம் 8,694 மக்கள்தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த 100 இளைஞர்களுக்கு செயற்கை முறை கருவூட்டலில் 1989–90 ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இளைஞர்களுக்கு கால் நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் செயல்படும் தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையில் உள்ள உறைவித்து வங்கியிலும், திருநெல்வேலி மாவட்டம் அபிஷேகப்பட்டியிலுள்ள உறைவிந்து வங்கியிலும் இப் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியின் முடிவில் ஒவ்வொரு இளைஞர்களுக்கும் உறைவிந்து குச்சிகளை வைத்துக் கொள்ள ஐந்து லிட்டர் கொள்ளளவு உள்ள நைட்ரஜன் குடுவை ஒன்று இலவசமாக வழங்கப்படும். அக் குடுவையில், நைட்ரஜன் திரவத்தை கால்நடைப் பராமரிப்புத் துறையே இலவசமாக அவ்வப்போது நிரப்பித் தரும். எனினும் உறை விந்து குச்சிகளுக்கு, ஒரு உறை விந்து குச்சிக்கு ரூ. 5 என்ற வீதத்தில் இத் துறை கட்டணம் வசூலிக்கும். இவர்கள் இந்த செயற்கை முறை கருவூட்டலினை கூடுதல் தொகையுடன் வசூலித்து அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பால் பண்ணையாளர்களின் இருப்பிடங்களிலேயே செயல்படுத்த அதிகாரம் அளிக்கப்படுகிறது. கூடுதலாக வசூலிக்கப்படும் தொகை பற்றி அரசு அங்கீகாரம் அளிக்கும். அவர்கள் சுய வேலை வாய்ப்பு பெற்ற கருவூட்டலாளராக செயல்படுவார்கள்.

10. செம்மறி ஆடு வளர்ப்பு :

ஆடு வளர்ப்பு எளிய மக்களுக்கு ஆண்டு முழுவதும் ஆதாயம் அளிக்கும் தொழிலாக இருப்பதால், அது ஏழை விவசாயிகளியையே செல்வாக்கு பெற்றுள்ளது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடனும், அரசிடமிருந்து ரொக்க மானியமும் பெறுவதில் விவசாயிகளுக்கு உதவி செய்வதின் மூலம் ஆடு வளர்ப்பை அவர்கள் மேற் கொள்ளும்படி ஊக்கமளிக்கப்படுகிறது. செம்மறி ஆடு அபிவிருத்திக்காகக் கால்நடைப் பராமரிப்புத்துறையினால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் பின்வருமாறு:

(அ) சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம்.

(ஆ) சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டம்.

(இ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்.

(ஈ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

சின்ன சேலத்தில் ஒன்றும், சாத்தூரில் ஒன்றும் ஆக இரண்டு செம்மறி ஆட்டுப் பண்ணைகள் இம் மாநிலத்தில் உள்ளது. இது தவிர, ஓசூர், புதுக்கோட்டை, செட்டிநாடு, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைகளுடன் இணைக்கப்பட்டுள்ள நான்கு செம்மறி ஆட்டுப் பிரிவுகளும் உள்ளன. மேச்சேரி, கீழக்கரிசல், இராமநாதபுரம், வெள்ளை, வேம்பூர் மற்றும் மாண்டியா ஆகியவை இந்நிலையங்களில் பராமரிக்கப் படும் முக்கிய நாட்டினங்கள் ஆகும். இந்நிலையங்களின் நோக்கம் இறைச்சி இன நாட்டு செம்மறியாடுகளின் தரத்தை உயர்த்துவதும், சிறந்த கடாக்களை பெருகச் செய்து, ஆடு வளர்ப்போருக்கு வழங்குவதும் ஆகும்.

1988–89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) 786 கடாக்கள் இந்நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்டு, அவற்றில 580 கடாக்கள் ஆடு வளர்ப்போருக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 11. செம்மறி ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்.

கிராமப்புற மக்கள் தொகையில் பெரும்பான்மையோர் சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் ஆவர். கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதிலும் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடைபெறும் ஆடு வளர்ப்புத் தொழில் மிகப் பயனுடையதாக உள்ளது என்பது கண்கூடு. இச்சங்கங்களின் உறுப்பினர்கள் வளர்க்கும்படியாக ஆடு வளர்ப்புப் பிரிவுகள் வழங்கப்படுகின்றன. கால்நடைப் பராமரிப்புத் துறை விரிவாக்க அலுவலர்களால் ஆடுகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்தல், தடுப்பூசிகள் போடுதல் போன்ற நோய்நீக்கப் பணிகள் ஆற்றப்படுகின்றன. இதுவரை 1,507 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு திட்டங்களின் கீழ் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில், வேளாண்மை மறுநிதி அபிவிருத்திக் கழகத்தின் கீழ் 39 சங்கங்களும், சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டங்களின் கீழ் 8 சங்கங்களும், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் 187 சங்கங்களும், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 4 சங்கங்களும், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 3 சங்கங்களும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 897 சங்கங்களும், திட்டங்களற்ற பகுதிகளில் 290 சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

## 12. செம்மறி ஆடுகளுக்குத் தீவிர நோய் நீக்கப் பணிகள் அளிக்கும் திட்டம் :

கிராமங்களிலுள்ள எண்ணிறைந்த எளிய குடும்பங்களுக்குச் செம்மறி ஆடு வளர்ப்பு ஆதாயத் தொழிலாக உள்ளது என்பது உண்மையே, எனினும், ஆடுகளின் உடல் எடை மிகக்

1989 மே 2]

குறைவாக இருப்பதால், ஆடு வளர்ப்பின் மூலம் கிடைக்கும், ஆதாயமும் வரம்புக்குட்பட்டதாகவே உள்ளது. ஆதலால், ஆட்டின் உடல் எடையை அதிகரிக்கச் செய்வதின் மூலம் இறைச்சி உற்பத்தியைப் பெருக்குவதற்குப் போதுமான தொடர் பணிகளை நிறைவேற்றுவதற்காக, செம்மறி ஆடுகளுக்குத் தீவிர நோய் நீக்கப் பணிகள் அளிக்கும் திட்டம் சேலம், தென்னாற்காடு, வடாற்காடு, திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தப் பட்டு வருகிறது. 1988-89 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் குடற்புழு நீக்க மருந்துகள் வாங்குவதற்காக ரூ. 30.49 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படும்.

13. ஐரோப்பிய பொருளாதார வளர்ச்சிக்குழு நிதி உதவியுடன் ஆடு வளர்ப்புத் திட்டம் :

செங்கை-அண்ணா, வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம் மற்றும் தர்மபுரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஆடு வளர்ப்புக் காக அரசால் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு செயல்பட உள்ளது. இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ. 1,366.94 இலட்சங்கள் ஆகும். இத்திட்டத்திற்காக ரூ. 931.30 இலட்சங்கள் செலவை ஐரோப்பியப் பொருளாதார குழு ஏற்கும். இத்திட்டத்தை செயலாக்கம் செய்ய மாநில அரசு ரூ. 435.64 இலட்சங்கள் செலவு செய்யவுள்ளது.

'டார்செட்' என்னும் உயரின ஆடுகளை அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து அவைகளை ஓசூரில் உள்ள ஆடு வளர்ப்புப் பண்ணையில் முதலில் வளர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பண்ணையில் கலப்பினக் கிடாக்களை உற்பத்தி செய்து அதன் மூலம் மேற்கொண்டும் ஆட்டுக் கிடாக்களை இனப் பெருக்கம் செய்வது சின்னசேலம் மற்றும் வட ஆற்காடு மாவட்டத்தில் அமைக்கவிருக்கும் மையத்திலும் மேற்கொள்ளப்படும்.

மேற்படி மாவட்டங்களில் உள்ள ஆடு வளர்ப்போர், உயரின ஆடுகளை வளர்ப்பதன் மூலம் பயனடைவர். தற்போதுள்ள உள்நாட்டு ஆட்டுக் கிடாக்களின் ஒவ்வொன்றின் சராசரி எடை 20 கிலோ ஆகும். ஆனால் இத்திட்டத்தின் மூலம் கலப்பின முறையில் இனப்பெருக்கம் செய்யப்படும் கிடாக்களின் சராசரி எடை ஒவ்வொன்றிற்கும் 35 கிலோ முதல் 40 கிலோ வரை இருக்கும். இதனால் ஒரு ஆட்டின் எடை 15 முதல் 20 கிலோ கூடும். விரைவில் நிறைவேற்றப்பட உள்ள இத்திட்டததின் மூலம் ஏழை மற்றும அடித்தள மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு வழிவகை ஏற்படும். இதன் மூலம் 20,100 விவசாய குடிமக்கள் பயனடைவார்கள்.

## 14. வெள்ளாடு வளர்ப்பு :

வெள்ளாடு, இறைச்சி, பால் போன்ற பொருட்களைத் தரும் பல பயன் உடையதாகும். வெள்ளாட்டின் தோல் மற்றும் உரோமத்தை ஏற்றுமதி செய்வதின் மூலம் நாட்டிற்கு அந்நிய செலவாணியாக நல்ல வருவாய் கிடைக்கிறது.

உள்ளூர் இன வெள்ளாடுகளை மேம்படுத்தும் நோக்குடன், புதுக்கோட்டையிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தலைச்சேரி வெள்ளாடுகளும், சின்னசேலத்திலுள்ள ஆட்டுப் பண்ணையில் ஜமுனாபாரி வெள்ளாடுகளும் வளர்க்கப்படுகின்றன. இந்த இனங்களின் கிடாக்கள் தெரிவு செய்யப்பட்ட கால்நடை மருத்துவ நிலையிகளில் பராமரிக்கப்பட்டு, உள்ளூர் வெள்ளாடுகளுடன் கலபின விருத்தி செய்யப்படுகிறது. மேலும், இந்த இனக் கிடாக்கள், உள்ளூர் வெள்ளாடுகளை இனப் பெருக்கம் செய்வதற்காக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

*1988–89* ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) மேற்படி பண்ணைகளில் 110 தலைச்சேரி குட்டிகளும், 33 ஜமுனாபாரி குட்டிகளும் பிறந்துள்ளன, 72 தலைச்சேரிகிடாக்களும் 28 ஜமுனாபாரி கிடாக்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 15. கோழி வளர்ப்பு.

நவீன கோழி வளர்ப்பு முறைகளை விவசாயிகளிடையே பரவச் செய்வதற்காகவும், கோழி வளர்ப்பை துணைத் தொழிலாக ஏற்பதில் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிப்பதற்காகவும் கோழி விரிவாக்க நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது, காட்டுப்பாக்கத்திலுள்ள கோழிப் பண்ணையில் ஒன்றும்; ஒசூரிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் மற்றொன்றுமாக இரண்டு குஞ்சு பொரிக்கும் நிலையங்களும் 28 கோழி விரிவாக்க நிலையங்களும் இம்மாநிலத்தில் உள்ளன.

குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் தூய வெள்ளை லெக்கான் கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்து, அவற்றை 12 வாரங்கள் வரை வளர்த்து அதன் பின்னர் விவசாயிகளுக்கு விற்பதற்காகக் கோழி விரிவாக்க நிலையங்களுக்கு அனுப்பி வைக்கின்றன குஞ்சு பொரிக்கும் நிலையங்களில் சில வருடங்களுக்கு முன் வாங்கப் பட்ட தாய்க் கோழிகள், பெங்களூரிலுள்ள ஹசர் கட்டா பண்ணையிலிருந்து மத்திய அரசின் மூலம் வாங்கப்பட்ட தாய் கோழிகளான எச். எச். 260 கோழிகளைக், கொண்டு மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றின் குஞ்சுகளும். கோழி விரிவாக்க நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1989 மே 2]

எச்.எச். 260 குஞ்சுகள் அதிக முட்டையிடும் ஆற்றல்கொண்டவையும் கோழி வளர்ப்போருக்கு கூடுதல் வருவாய் கொடுக்கக் கூடியவையுமாகும்.

16. கோழி நோய் கண்டறிதல் :

மாநிலத்தில் கோழிப்பண்ணைகள் பெருகி வருவதால் கோழிகள் அதிகமாக உள்ள ஈரோட்டில் கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கூடத்தின் மூலம் கோழி நோய்களைக் கண்டறிவதற்கான ஏற்ற வசதிகள் விவசாயிகளுக்கு அளிக்கப்படுவதுடன், தகுந்த நோய்த் தடுப்பு, மற்றும் நோய் நீக்க வழிமுறைகளும் தெரிவிக்கப்படுகிறது. விவசாயிகளின் நலனுக்காகத் தீவனப் பரிசோதனையும் இக் கூடத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

1988—89-ம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) 356 கிராமங்களும், 762 தனியார் கோழிப் பண்ணைகளும் பார்வையிடப்பட்டு, 2,361 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. கோழி நோய் திடீர்க் கிளர்ச்சிகள் ஏதும் களப்பணியாளர்களால் பெறப்படவில்லை.

17. பன்றி வளர்ப்பு :

பன்றிகள், சாதாரணமாக, சிறிய மற்றும் எளிய விவசாயிகளால் வளர்க்கப்படுகின்றன.

தமிழகத்தில் ஐந்து பன்றி வளர்ப்புப் பிரிவுகளில், நான்கு பிரிவுகள் ஒசூர், புதுக்கோட்டை, செட்டிநாடு மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைகளிலும், ஒரு பிரிவு சைதாப்பேட்டையிலுள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்திலும் உள்ளன. இப்பிரிவுகளில் பெரிய வெள்ளை யார்க்ஷையர் இனப் பன்றிகள் வளர்க்கப்படுகின்றன. நல்ல தரமான ஆண் மற்றும் பெண் பன்றிகள், உள்ளூர் பன்றிகளின் தரத்தை உயர்த்தும் பொருட்டும், பன்றி இறைச்சி உட்கொள்ளுவதை ஏற்றம் பெறச் செய்யும் பொருட்டும் பல்வேறு திட்டங்களின் மூலம் இந்நிலையங்களிலிருந்து விநியோகிக்கப்படுகின்றன.

1988—89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) உள்ளூர் பன்றிகளின் தரமுயர்த்துவதற்காக 266 பன்றிகள் விற்கப்பட்டுள்ளன.

18. பசுந்தீவனப் பயிர் வளர்ப்பு :

தமிழ்நாடு மிகுந்த கால்நடைகளைக் கொண்டுள்ளது. 1982-ம் ஆண்டின் கால்நடைக் கணக்கெடுப்பின்படி, ஆவினங்கள் மற்றும் எருமையினங்கள் 13.58 மில்லியனும், செம்மறி

[1989 மே 2

யாடுகளும் வெள்ளாடுகளும் 10.78 மில்லியனும், பன்றிகளும் இதர கால்நடைகளும் 0.78 மில்லியனும் இருந்தன. கால் நடை தொகையின் வளர்ச்சிக்கு வரையறை இல்லாததால், அதி கரித்து வரும் கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பசுந்தீவன வளம் போதியதாக இல்லை.

பொருளாதார ரீதியில் பால் உற்பத்தியை வளப்படுத்தும் பொருட்டு, பால் கொடுக்கும் பசுக்களுக்கு கூடுதல் பச்சைத் தீவனப்பயிர் கொடுப்பதின் மூலம் அவறின் தீவனத் தன்மையை மேம்படுத்துவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன தீவனப் பயிர் அபிவிருத்தியை வளப்படுத்துவதற்காக அனைத்து அரசு கால் நடைப் பண்ணைகளிலும் தீவனப் பயிர் விதைகள் மற்றும் நறுக்குகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம் மற்றும் கேந்திர கிராமத் திட்டத்தின் கீழ் பசுந்தீவனப் பயிர் விதைகளும், நறுக்கு களும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

இவை தவிர, எட்டுத் தீவனப் பயிர் விதை உற்பத்தி நிலையங் கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. 1988-89-ம் ஆண் டில் (டிசம்பர் 1988 வரை) இந்நிலையங்களிலிருந்து, 76.57 இலட்சம் பசுந்தீவனப் பயிர் நறுக்குகளும், 10 மெட்ரிக் டன் விதைகளும், 1.31 இலட்சம் தீவன மரக் கன்றுகளும் விவசாயி கள் பசுந்தீவனப் பயிர் சாகுபடி செய்வதற்காக வழங்கப்பட்டன.

## 19. சிறப்புத் திட்டங்கள் :

சிறு குறுநில விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள் போன்ற சமுதாயத்தில் நலிந்த வகுப்பினருக்கு துணைமை வாழ்க்கைத் தொழில் அளிப்பதே சிறப்புத் திட்டங்களின் நோக்க மாகும். கால்நடைப் பராமரிப்புத் துறையில் செயல்படுத்தப் படும் சிறப்புத் திட்டங்களின் சுருக்கம் பின்வருமாறு:—

### 19.1 சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் உப திட்டங்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| துணை திட்டம். | செயல்படுத்தும் நிறுவனம். | திட்டம் செயல்படும் மாவட்டங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (அ) செம்மறியாடு உற்பத்தி | கால்நடைப் பராமரிப்புத் துறை. | வடாற்காடு<br>சேலம்<br>திருநெல்வேலி<br>கட்டபொம்மன்,<br>சிதம்பரனார். |
| (ஆ) பன்றி உற்பத்தி | கால்நடைப் பராமரிப்புத் துறை. | மதுரை |

1989 மே 2]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| (இ) கன்று வளர்ப்பு | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தி இணையம். | வடாற்காடு தென்னாற்காடு, சேலம், கோயம்புத்தூர், மதுரை. |
| (ஈ) கோழி உற்பத்தி. | தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம். | செங்கை-அண்ணா, வடாற்காடு சேலம், மதுரை. |

(அ) செம்மறியாடு உற்பத்தித் திட்டம்;

இத்திட்டத்தை வடாற்காடு, சேலம், திருநெல்வேலி, கட்ட பொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் கால் நடை பராமரிப்புத் துறை செயல்படுத்துகிறது. ரூ. 7,000 மொத்த கிரயமுள்ள 20 பெட்டை ஆடுகளும், 1 கடாவும் அடங்கிய ஆடு வளர்ப்புப் பிரிவு ஒன்றை அமைத்துக் கொள்ள ஒவ்வொரு விவசாயிக்கும் உதவியளிக்கப்படுகிறது. 1976–77 முதல் 1987—88 வரை 21,044 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற் படுத்திக் கொடுக்கப்பட்டு, ரூபாய் 250.85 இலட்சம் மானிய மாக வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழுள்ள ஆடுகளுக் குக் கால்நடைப் பராமரிப்புத் துறை நோய் நீக்கப் பணிகளை அளிக்கிறது. 1988–89ஆம் ஆண்டில் ஏற்படுத்தும்படி உத்தே சிக்கப்பட்ட இலக்கு 900 பிரிவுகளாகும்.

(ஆ) பன்றி உற்பத்தித் திட்டம் :

இத் திட்டத்தின் கீழ் ரூ. 6,000 கிரயமுள்ள பன்றி வளர்ப்புப் பிரிவுகளை ஏற்படுத்திக் கொடுக்க உதவியளிக்கப்படுகிறது. இத் தொகையில் ரூ. 1,500 சிறு விவசாயிகளுக்கும், ரூ. 2,000 குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களுக்கும் மானியமாகக் கொடுக்கப்படுகிறது. 1981–82ஆம் ஆண்டு முதல் 1987–88 வரை 250 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத் தப்பட்டு, ரூ. 4,055 இலட்சம் மானியமாகக் கொடுக்கப்பட் டுள்ளது.

1988–89ஆம் ஆண்டில் ரூ. 2.17 இலட்சம் மொத்தச் செலவில் 25 பன்றி வளர்ப்பு அலகுகள் அமைக்கப்பட்டு உள்ளன.

(இ) கன்று வளர்ப்புத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் 1977–78 ஆம் ஆண்டு முதல் 1987–88 வரை 46,852 கன்றுகள் சேர்க்கப்பட்டு, ரூ. 565.703 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

1988–89 ஆம் ஆண்டில் வடாற்காடு தென்னாற்காடு, சேலம், கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களிலிருந்து 2,013 கன்றுகள் ரூ. 44.503 இலட்சம் செலவில் சேர்க்கப்பட்டுள்ளன.

(ஈ) கோழி உற்பத்தித் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் 1976–77 முதல் 1987–88 வரை ரூ. 108.12 இலட்சம் செலவில் 3,098 புதிய கோழி வளர்ப்புப் பிரிவுகள் அமைக்கப்பட்டு, 1,841 பழைய பிரிவுகள் மாற்றப் பட்டு உள்ளன. 1987–88 ஆம் ஆண்டுக்காக ஒப்பளிக்கப்பட்டு 720 இறைச்சிக் கோழி வளர்ப்புப் பிரிவுகளில் 109 பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

19.2. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் பசுந் தீவனப் பயிர் நறுக்குகள் மற்றும் விதைகளை விநியோகிக்கும்படியான பசுந் தீவனப் பயிர் அபிவிருத்தித் திட்டத்தை செயல்படுத்தும்படி 1987–88-ல் ரூ. 1.00 இலட்சத்துக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 50 சதவீத மானியத்தில் கோயம்புத்தூர், பெரியார், திண்டுக்கல் காயிதேமில்லத், மதுரை, காமராஜர், திருநெல்வேலி, கட்டபொம்மன் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு இதுவரை மொத்தத் தொகையும் செலவு செய்யப்பட்டது.

மேலும், மதுரை மாவட்டத்திலுள்ள உத்தமபாளையம் தாலுக்காவில் உள்ள பூதிபுரத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று ஏற்படுத்துவதற்கு ரூ. 2.95 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. 1988–89 ஆம் ஆண்டில் 50 சதவீதம் மானியத்தில் பசுந் தீவன நறுக்குகளையும் விதைகளையும் வாங்கி விநியோகிப்பதற்காக ரூ. 1.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

19.3. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

உயர் இன மாடுகள் வளர்ப்பதற்கு ஏற்ற சூழ்நிலை உள்ள மலைப் பகுதிகளின் அபிவிருத்திக்காக அடிப்படை வசதிகளை அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1987–88 ஆம் ஆண்டில் உதக மண்டலத்திலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் உறை விந்து வங்கி நிறுவுவதற்கான மொத்தச் செலவாகிய ரூ. 109.49 இலட்சத்தில், கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 24.25 இலட்சத்திற்கு ஒப்புதல் அறிவிக்கப் பட்டுள்ளது.

[1989 மே 2]

1988–89 இல் மேற்படி உறை விந்து வங்கிக்காக ரூ. 50 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## 19.4. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகள், குறுநில விவாசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள், குறிப்பாக, விவசாயமற்ற காலங்களில் கூடுதல் வருவாய் பெறும்படி 50 சதவீதம் மத்திய நிதி உதவியுடன் தரமுள்ள கறவை மாடுகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள், பன்றிகள் போன்றவைகள் விநியோகிக்கப்படுகின்றன. இதற்காக, சிறு விவசாயிகளுக்கு 25 சதவீதம் மானியமும் குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களுக்கு 33/1/3 சதவீதம் மானியமும் வழங்கப் படுகிறது.

1987–88 ஆம் ஆண்டில் ஆற்றப்பட்ட திட்டப் பணிகளின் விவரம் பின்வருமாறு :—

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | கறவை மாடுகள் விநியோகிக்கப்பட்டவை .. | 27,084 |
| 2. | செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டவை. | 61,866 |
| 3. | வெள்ளாடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டவை. | 23,792 |
| 4. | கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டவை | 443 |
| 5. | வாத்து வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டவை. | 101 |
| 6. | பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டவை. | 22 |

## 19.5. வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளிலுள்ள விவசாயிகளின் இன்னல்களைக் குறைக்கும் பொருட்டு இத்திட்டம் இராமநாதபுரம், காமராஜர், பசும்பொன் தேவர் திருமகன், தர்மபுரி, புதுக்கோட்டை, சிதம்பரனார், திருநெல்வேலி, கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் 50 சதவீதம் மத்திய நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1988–89 ஆம் ஆண்டிலும் மேற்கண்ட மாவட்டங்களில் கால்நடைப் பாராமரிப்புத் திட்டங்களை செயல்படுத்தும் படி ரூ. 5.43 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 19.6. கன்று வளர்ப்புத் திட்டம்:

கால்நடைப் பராமரிப்புத் துறை மாநிலத்தில் கால்நடை வளர்ப்பில் மேற்கொண்டுள்ள முயற்சிகளின் பலனாக, குறிப்பாகக் கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்கள் மற்றும் கேந்திர கிராம திட்டங்கள் செயல்படும் பகுதிகளில் கலப்பினக் கன்றுகள் பெருமளவில் பெருகியுள்ளன. எனினும், கிராமப்ங்களிலுள்ள எளிய விவசாயிகள் பல்வேறு இன்னல்களின் காரணமாக இக்கன்றுகளை நல்ல பசுக்களாக வளர்த்தெடுக்க முடியாத நிலையிலுள்ளனர். எனவே, விவசாயிகள் தேசிய வங்கிகளிலிருந்து நிதி உதவி பெற்றுக் கலப்பினக் கிடேரிக் கன்றுகளை வளர்ப்பதற்கு உதவும்படியாக தமிழக அரசு கன்று வளர்ப்புத் திட்டம் ஒன்றை மாநிலத்தில் செயல்படுத்தியுள்ளது. ஐந்து கன்றுகள் அடங்கிய ஒவ்வொரு பிரிவுக்கும் விவசாயி ஒருவர் கன்றுகளின் கிரயம் மற்றும் அவை கன்றுஈனும் வரை தீவனச் செலவுக்காக ரூ. 15,270 வங்கியிலிருந்து கடனாகப் பெறுகிறார். இத்திட்டத்திலுள்ள கன்றுகளுக்கான நோய் நீக்கப் பணிகளைக் கால்நடை பராமரிப்புத் துறை அளிக்கிறது. மாநிலத்திலுள்ள விவசாயிகளிடையே இத் திட்டம் செல்வாக்கு பெற்றுள்ளது. இதுவரை மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் 743 பிரிவுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

## 19.7. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்.

பழங்குடியினர் துணைத் திட்டத்தில் கால்நடைப் பராமரிப்பு பிரிவின் கீழ் பழங்குடியினர் குடும்பங்களின், குறிப்பாக நிலமற்ற மற்றும் சிறிய விவசாயிகளின் வருவாயை உயர்த்தி, அதன் மூலம் அவர்கள் வறுமைக் கோட்டைத் தாண்ட உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இது தவிர புரத சத்துக் குறைவினால் வாடும் பழங்குடியினர் கால்நடைகளிலிருந்து பெரும் சத்துணவை உடகொள்ள வாய்ப்புண்டாகிறது. இதனால், அவர்களுடைய சத்துணவு உட்கொள்ளும் நிலையும் ஏற்றம் பெறுகிறது.

உபதிட்டப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் விவசாயத்தைச் சார்ந்திருந்த போதிலும், அவர்கள் கால்நடைகளைப் பேணும் பாரம்பரியம் உடையவர்களே. அவர்கள் ஆண்டு முழுவதும் வேளாண்மையைச் சார்ந்திருக்க முடியாததால், கால்நடை வளர்ப்பு அவர்களுக்கு உபவருவாய் அளிக்கும் தொழிலாகும். பழங்குடியினர் வாழும் பகுதிகளான

சேலம், தர்மபுரி, தொன்னாற்காடு, வடாற்காடு மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில், கல்ராயன்மலை, ஏற்காடுமலை, பச்சமலை, அருனுத்துமலை, சித்தேரி மலை மற்றும் ஐவ்வாது மலை சூழ்ந்த பகுதிகளில் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டம் 1976 ஆம் ஆண்டு முதல் செயல்படுகிறது. 1988–89 ஆம் ஆண்டில் 669 குடும்பங்கள் பயனடையும்படியாக பழங்குடியினர் உப திட்டத்தின் கீழ் கால்நடைப் பராமரிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ரூ. 58.79 இலட்சத்திற்கு அரசு ஒப்பு தலளித்துள்ளது. இதுவரை 482 குடும்பங்கள் பயனடைந் துள்ளன.

20. ஒருங்கிணைந்த மாதிரி அளவீடுத் திட்டம் (மாநில அளவில்):

இத் திட்டம் 1977–78 ஆம் ஆண்டு முதல் இம் மாநிலத்தில் செயல்படுகிறது. இதன் கீழ், பால், முட்டை, கம்பளம், இறைச்சி போன்ற முக்கிய கால்நடை உற்பத்திப் பொருட்களின் மதிப்பீடு செய்யப்பட்டு, கால்நடைகளைப் பேணும் செயல் முறைகள் ஆய்வு செய்யப்படுகிறது. இத் திட்டத்தின் துவக்கம் முதல் 1987–88 வரை 2,565 கிராமங்களில் அளவீடுகள் முடிவடைந்துள்ளன. 1988–89 (எட்டு மாதங்களுக்கு) ஆண்டின் மதிப்பீட்டின் முடிவுகள் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| (அ) பால் உற்பத்தி ('000' டன்கள்) | .. | 2,163.74 |
| (ஆ) முட்டை உற்பத்தி (மில்லியனில்) | .. | 1,336 |
| (இ) இறைச்சி உற்பத்தி (மில்லியனில் கிலோ) | | 21.24 |

1988–89-ஆம் ஆண்டிற்கான அளவீடு பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. இது 1989–90 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

21. மாதிரி அளவீடுத் திட்டம் (மாவட்ட அளவில்):

1983–84 ஆம் ஆண்டிலிருந்து இந்த அளவீடு மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் பால், முட்டை, கம்பளம், இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தியை அளவீடு செய்வதும், அதனை மாநில அளவீடுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்வதும், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் பால், முட்டை ஆகியவற்றின் உற்பத்திச் செலவை ஆய்வு செய்வதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்த அளவீடு பெரியார், மதுரை, தஞ்சாவூர் மற்றும் வடாற்காடு ஆகிய நான்கு மாவட்டங்களில் எடுக்கப் பட்டு வருகிறது.

## 22. கால்நடை இடைக்காலக் கணக்கெடுப்பு (மாநில அளவில்):

1982 ஆம் ஆண்டிலிருந்து இந்தக் கணக்கெடுப்பு இம் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை எடுக்கப்படும் கால்நடை கணக்கெடுப்புகளுக்கு இடைப்பட்ட ஆண்டுகளில், கால்நடைகளின் எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றங்கள், ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றை மதிப்பீடு செய்வதே இக்கணப்பெடுப்பின் நோக்கமாகும்.

## பகுதி III.

### கால்நடைப் பண்ணைகள்.

மாநிலத்தில் ஒன்பது கால்நடைப் பண்ணைகள் உள்ளன. இப் பண்ணைகளில் மூல இருப்பாக, நாட்டு இனங்களும், அயலின் மற்றும் கலப்பினக் கால்நடைகளும் பராமரிக்கப் படுகின்றன. எருமையினத்தில் முர்ரா எருமைகள் உள்ளன. இவை தவிர, செம்மறியாடுகள், வெள்ளாடுகள், பன்றிகள் மற்றும் கோழிகளும் பராமரிக்கப்படுகின்றன. விவசாயிகளுக்குத் தேவையான பசுந்தீவன விதைப் பொருள்களையும் இப்பண்ணைகள் விநியோகிக்கின்றன. கால்நடை பண்ணைகளின் இருப்பிடங்கள் பின்வருமாறு :—

(அ) அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணை, ஈச்சங்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

(ஆ) மாவட்டக் கால்நடைப் பண்ணைகள், ஒரத்தநாடு, கொருக்கை, ஓசூர், புதுக்கோட்டை, செட்டிநாடு, அபிஷேகப் பட்டி, உதகமண்டலம், மற்றும்

(இ) அரசு பால் பண்ணை, மாதவரம்.

ஆட்டுப் பண்ணைகள் காமராஜர் மாவட்டத்திலுள்ள சாத்தூரிலும், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சின்ன சேலத்திலும், கோழிப்பண்ணை செங்கை-அண்ணா மாவட்டத்திலுள்ள காட்டுப்பாக்கத்திலும் உள்ளன.

1988-89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) 6,59,454.58 கிலோ பாலும், 519 கன்றுகளும், 8,299.049 மெட்ரிக் டன் பசுந்தீவனமும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

ஆடு வளர்ப்பு நிலையங்களில் 1,447 குட்டிகள் பிறந்துள்ளன. 828 செம்மறியாடுகள் இனவிருத்திக்காக விநியோகிக்கப்பட்டுள்ளன. பன்றி வளர்ப்புப் பிரிவுகளில் 419 பன்றிக் குட்டிகள் பிறந்துள்ளன. 434 பன்றிகள் பொது மக்களுக்கு விற்கப்பட்டுள்ளன.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 மே 2]

அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணை, ஈச்சங்கோட்டை

இப்பண்ணையின் நோக்கம், கலப்பின அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செயற்கை முறைப் பணியாற்றுவதற்குத் தேவையான தூய ஜெர்சி காளைகளைப் பெருக்கி, விநியோகிப்பதேயாகும். படிப்படியாக உறைவிந்து முறையை சுற்றிலுமுள்ள கால்நடை மருத்துவ நிலையங்கள், கிளை நிலையங்கள் ஆகியவற்றிற்கு விஸ்தரிப்பதற்குத் தேவையான உறைவிந்து குழல்களையும் திரவ நைட்ரஜனையும் இப்பண்ணையில் இயங்கும் உறைவிந்து வங்கி தயாரிக்கிறது.

1987-88 ஆம் ஆண்டில் இப்பண்ணையில் 38,201 லிட்டர் திரவ நைட்டிரஜனும், 3,78,112 உறைவிந்து குழல்களும் தயாரிக்கப்பட்டன. 1988–89-ல் (டிசம்பர் 1988 வரை) 51,813 லிட்டர் திரவ நைட்டிரஜனும் 3,69,539 உறைவிந்து குழம்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

அரசு பால் பண்ணை, மாதவரம் :

இப்பண்ணை முதன்முதலில் சென்னை மாநகரத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட கால்நடைகளை வைத்துப் பராமரிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. தற்போது குறைந்த வாடகையில் தனியார் மாடுகளைப் பராமரிப்பதற்கான உரிமம் பெற்ற பகுதிகள் உள்ளன. இங்குள்ள மாடுகளுக்குத் தீவன பயிர் கிடைப்பதற்கான வசதிகள் உண்டு. கால்நடை உரிமையாளர்கள் தங்குவதற்கான குடியிருப்புகளும் குறைந்த வாடகையில் உள்ளன.

(அ) இப்பண்ணையில் ஒங்கோல் மாடு வளர்ப்புப் பிரிவு ஒன்று உள்ளது. இரட்டைப் பயனுள்ள (பாலும், உழைப்புத் திறனும்) ஒங்கோல் மாடுகளைப் பெருக்கி, அவற்றை விவசாயிகளுக்கு விநியோகிப்பதே இப்பிரிவின் நோக்கமாகும். அடிப்படை இருப்பாகிய இருபது ஒங்கோல் மாடுகளிலிருந்து தற்போது 85 மாடுகளாக அதிகரித்துள்ளது.

(ஆ) இப்பண்ணையில் பால்வற்றிய பசு, எருமைகளின் காப்பகம் ஒன்றும் உள்ளது. 1988–89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) 14 மாடுகள் இதில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

## பகுதி—IV.

### கால்நடை நலப் பணிகள்.

**1. கால்நடை மருத்துவ நிலையங்கள் :—**

(அ) கால்நடை மருந்தகங்கள், கிளை நிலையங்கள் முதலியன:

போதிய நோய் நீக்கப் பணிகள் ஆற்றப்படாவிட்டால், கால்நடைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்த எடுக்கப் படும் முயற்சிகள் அனைத்தும் வீணாகக் கூடும். எனவே, மாநிலத்திலுள்ள எல்லாக் கால்நடைகளுக்கும் நோய் நீக்கப் பணி கிடைக்கச் செய்யும் வகையில் கால்நடைப் பராமரிப்புத் துறை பல்வேறு வசதிகளைச் செய்துள்ளது. நோயுள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், பல்வேறு விஷநோய், தொற்று நோய்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள், பயனற்ற கால்நடைகளுக்கு ஆண்மை நிக்கம் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாநிலத்தில் மொத்தம் 806 கால்நடை மருத்துவ நிலையங்கள் உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | பிரதம மருத்துவ நிலையங்கள் .. | 22 |
| 2. | கால்நடை மருத்துவமனை கூடிய கேந்திர கிராம நிலையங்கள். | 2 |
| 3. | கால்நடை மருத்துவமனைகள் .. | 55 |
| 4. | கால்நடை மருந்தகம் கூடிய கேந்திர கிராம நிலையங்கள். | 24 |
| 5. | கால்நடை மருந்தகங்கள் .. .. | 703 |
| | மொத்தம் .. | 806 |

1989–90-ஆம் ஆண்டில் ரூ. 11.00 இலட்சம் செலவில் மேலும் 10 கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது.

இது தவிர, கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம், கேந்திர கிராமத் திட்டம் மற்றும் இதர பகுதிகளிலும் சேர்ந்து மொத்தம் 2,226 கிளை நிலையங்கள் உள்ளன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 மே 2]

1988–89-ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) 87.08 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 3.94 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யப் பட்டுள்ளது. 136.5 இலட்சம் கால்நடைகள் மற்றும் கோழி களுக்குத் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

(ஆ) கால்டை நோய் புலனாய்வுப் பிரிவுகள் :

ஒரு மாவட்டத்தில் தோன்றும் கால்நடை நோயின் தன்மையைக் கண்டுபிடித்து களப்பணியாளர்களை எச்சரிப் பதற்காகவும், அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி அவர்களுக்கு ஆலோசனை அளித்து அதன் மூலம் நோய் தோன்றுவதையே தடுப்பதற்காகவும் 12 கால்நடை நோய்ப்புலனாய்வு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, இயங்கி வருகின்றன.

1988–89 இல் (டிசம்பர் 1988 வரை) இப்பிரிவுகளின் வேலை விவரம் பின்வருமாறு:—

| | |
|---|---|
| 1. மாதிரிகள் சோதிக்கப்பட்டவை | 2,37,653 |
| 2. காசநோய் சோதனை செய்யப்பட்டவை | 1,524 |
| 3. கருச்சிதைவு சோதனை செய்யப்பட்டவை | 5,693 |

4. இவை தவிர, பரிசோதனைக்காக இராணிப்பேட்டை யிலுள்ள கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையத்திற்கும் சென்னை கால்நடை கல்லூரிக்கும் முறையே 290 மற்றும் 266 மாதிரிகள் அனுப்பப்பட்டன.

(இ) நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் :

கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் செயற்படுத்தப் படும் பல்வேறு திட்டங்களின் கீழ் 50 நடமாடும் மருத்துவப் பிரிவுகள் உள்ளன. இவை, உள்ளமைந்த கிராமங்களிலுள்ள விவசாயிகளின் இல்லங்களுக்குச் சென்று நோய் நீக்கபணிகள் ஆற்றுகின்றன.

1988-89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) இப்பிரிவின் வேலை விவரம் பின்வருமாறு:—

| | எண்ணிக்கை. |
|---|---|
| 1. சிகிச்சையளிக்கப்பட்டவை .. | 2,02,282 |
| 2. ஆண்மை நீக்கம் செய்யப்பட்டவை | 29,000 |
| 3. குடற்புழு நீக்கம் செய்யப்பட்டவை .. | 4,86,434 |
| 4. தடுப்பூசிகள் போடப்பட்டவை .. | 3,12,192 |
| 5. செயற்கை முறை கருவூட்டப்பட்டவை. | 14,613 |

(ஈ) மருந்துக் கிடங்குகள்

கால்நடை மருந்துகள், இரசாயனக் கலவைகள், வளர்ப்ப மற்றும் பராமரிப்பு மருந்துகள், உயிரியல் பொருட்கள், போன்றவற்றை வாங்கி, அப்பகுதிகளிலுள்ள கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு விநியோகிக்கும் பொருட்டு மருந்துக் கிடங்குகள் ஏற்படுத்தபபட்டுள்ளன. தற்போது, நாமக்கல் கோயம்புத்தூர், திருநெல்வேலி-கட்டபொம்மன், திருச்சிராப் பள்ளி மற்றும் செங்கை-அண்ணா ஆகிய இடங்களில் மொத்தம் ஐந்து கிடங்குகள் உள்ளன. இந்த வசதிகள் படிப்படியாக மண்டல நிலைக்கு விரிவாக்கப்படும்.

1987–88 ஆம் ஆண்டில் ரூ. 1.72 இலட்சம் செலவில் மண்டல அளவிலான மருந்துக் கிடங்கு ஒன்றை அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்தது.

மாநில அளவிலான மருந்துக் கிடங்கு ஒன்றை சைதாப் பேட்டையிலுள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்திற்குள் அமைப்பதற்கான கட்டடம் கட்டுவதற்கு ரூ. 1.78 இலட்சத் திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

2. வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்:

கால்நடைகளுக்குப் பெரும் சேதத்தையும், பால் மற்றும் இறைச்சி உற்பத்தியில் குறைவையும் உண்டு பண்ணும் கொடிய தொற்று நோய் வெக்கை நோயாகும். தற்போது, கீழ்க்கண் டுள்ள நிலையங்கள் வெக்கை நோய்த் தடுப்புப் பணிகளில் ஈடு பட்டுள்ளன.—

| | | |
|---|---|---|
| (அ) மாவட்டக் குழுக்கள் | .. .. | 18 |
| (ஆ) கண்காணிப்புப் பிரிவுகள் | .. .. | 10 |
| (இ) சோதனைச் சாவடிகள் | .. .. | 10 |

(அ) வெக்கை நோய் மாவட்டக் குழுக்கள்:

வெக்கை நோயற்ற நிலையைப் பெருமளவில் உருவாக்கும் படி, எளிதில் நோய் தாக்கக்கூடிய கால்நடைகளான மாடு, செம்மறியாடு, வெள்ளாடுகள் போன்றவற்றுக்கு மாவட்டக் குழுக்கள் தடுப்பூசிகள் போடுகின்றன. கண்காணிப்புப் பிரிவுகள் இல்லாத பகுதிகளில் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை மாவட்டம் முழுவதிலும் தடுப்பூசிகள் போடும்படியாக, திட்டமிடப்பட்ட முறையில் தடுப்பூசித் திட்டம் செயல் படுத்தப்படுகிறது.

(ஆ) வெக்கை நோய் கண்காணிப்புப் பிரிவுகள்:

எல்லையைத் தாண்டி விஷக் கிருமிகள் நுழையாதபடி வடி கட்டித் தடுத்து நிறுத்தும் அரண்களைப் போல விளங்கக் கூடிய வகையில் மாநில எல்லைக்குள நோயற்றப் பகுதியை உண்டாக் கும் பொருட்டு, இரண்டு மாநிலங்களுக்கு இடைப்பட்ட பகுதி யில் 15 கி.மீ. சுற்றளவிற்கு வெக்கை நோய் தடுப்பூசிகள் போடும் பணிகளை வெக்கை நோய் கண்காணிப்புப் பிரிவுகள் மேற்கொள் ளுகின்றன.

1989 மே 2]

(இ) வெக்கை நோய் சோதனைச் சாவடிகள்:

மாநிலத்துக்குள் வரும், வெளியேறும் கால்நடைகளுக்கு வெக்கை நோய்த் தடுப்பூசிகள் போடும் பணியை சோதனைச் சாவடி அலுவலர்கள் ஆற்றுகின்றனர்.

1988–89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) மேற்படி திட்டத்தின் மூலமும் இதர துறை அலுவலர்கள் மூலமாகவும் மொத்தம் 33,43,639 கால்நடைகளுக்கு வெக்கை நோய்த் தடுபபூசிகள் போடப்பட்டுள்ளன.

(3) கோமாரி நோய்த் தடுப்புத் திட்டம்:

(அ) கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலம் செயல்படுத்தப் படுவது:

பல்வேறு திட்டங்களின் மூலம் சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் ஆகியோருக்குக் கொடுக்கப்பட்ட கால்நடைகளைக் காக்கும்படியான கோமாரி நோய்த் தடுப்புத் திட்டம், மத்திய நிதி உதவியுடன் 1976–77 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் இயங்கி வருகிறது. இத்திட்டத் திற்குப் பயன்படுத்தப்படும் பால் வேலண்ட் மருந்தின் விலையில் 50 சதவீதத்தை மத்திய, மாநில அரசுகள் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. மீதியை கால்நடை உரிமையாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். மோனோவேலண்ட் என்னும் மருந்தின் விலையை மத்திய, மாநில அரசுகள் சரிசமமாகப் பகிர்ந்துக் கொள்கின்றன. 1988–89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) 1.99 இலட்சம் கோமாரி நோய்த் தடுப்பூசிகள் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலம் போடப்பட்டுள்ளன.

(ஆ) தேசிய பால் வள அபிவிருத்தி வாரியத்தின் மூலம் செயல் படுத்துவது:

மாநிலத்தில் கோமாரி நோயைக் கட்டுப்படுத்துவதற்கான ஏழாண்டு பெருந் திட்டமொன்று தேசிய பால்வள அபிவிருத்தி வாரியத்தின் மூலம் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத் திற்கான மொத்தச் செலவு ரூ. 20 கோடியாகும். 1983–84 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் இப் பெருந்திட்டத்தின் கீழ் இலவச மாகத் தடுப்பூசிகள் போடபபடுகின்றன.

1988–89 ஆம் ஆண்டில் திருநெல்வேலி கட்டபொம்மன், இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் காம ராஜர் மாவட்டங்களும், கோயம்புத்தூர், பெரியார், மதுரை ஆகிய மாவட்டங்களின் எல்லையோரப் பகுதிகளும் இத் திட் டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

4. கால்நடை நோய்த் தீவிரக் கண்காணிப்புத் திட்டம்:

1983–84 ஆம் ஆண்டில் சென்னையில் கொள்ளை நோய் கண்காணிப்புப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இப்பிரிவு, நோய்த் தன்மைகளைக் கண்டறிதல், நோய் ஆரம்பத்தைத் தீர் மானித்தல், தொற்றும் வழிகள், பரவும் விதங்களை அறிதல், நோயினால் தாக்கப்பட்டக் கால்நடைகளைக் கண்டறிதல் போன்றவற்றை விளக்கக் கூடிய ஆய்வுகளை மேற் கொண்டுள் ளது. 1983–84 ஆம் ஆண்டு முதல் 1987–88 ஆம் ஆண்டு முடிய மேற்படி விவரங்கள் இம்மாநிலத்தில் சேகரிக்கப்பட்டுள் ளன. அதன் அடிப்படையில் வரை படங்கள் தயாரித்தல், விவரங்களைப் பகுப்பாய்தல் போன்ற பணிகள் முன்னேற்றத் திலுள்ளன.

5. தேசீய முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை நோய்களின் சீரிய கட்டுப்பாடு :

1984–85ஆம் ஆண்டில் 50 சதவீதம் மத்திய நிதி உதவி யுடன், ரூ. 35.66 இலட்சம் செலவில் தேசீய முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்தும் திட்டம் மேற் கொள்ளப்பட்டது. இத்திட்டம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத் திலும் தொடர்ந்து செயல்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பின் வரும் பணிகள் ஆற்றப்படுகின்றன.

(அ) நோயற்ற மண்டலம் ஏற்படுத்துதல் :

முதற் கட்டமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் கால்நடை நோயற்ற மண்டலத்தை உருவாக்கி, அங்கிருந்து கால்நடைகளை ஏற்றுமதி செய்வதற்கு வழிவகுப்பதே இதன் நோக்கமாகும். இப் பணி மூன்று அம்சங்களைக் கொண்டது.

(1) பெருமளவில் தடுப்பூசி போடுதல்.
(2) சோதனைச் சாவடிகள் அமைத்தல்.
(3) நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு பிரிவுகள் அமைத்தல்.

(1) பெருமளவில் தடுப்பூசி போடுதல்.—கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எல்லாக் கால்நடைகளுக்கும், மற்றும் கன்னியாகுமரியிலுள்ள காவல் கிணறு சோதனைச் சாவடி முதல், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 40 கிலோ மீட் டருக்கு உள்ளான இடைப்பட்ட மண்டலத்திலுள்ள கால்நடை களுக்கும் வெக்கை நோய், கோமாரி நோய்த் தடுப்பூசிகள் இல வசமாகப் போடப்படும்.

1988–89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) கோமாரி நோய்த் தடுப்பூசிகள் போடப்பட்ட விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| கன்னியாகுமரி மாவட்டத்தில் .. .. | 1,48,712 |
| இடைப்பட்ட மண்டலத்தில் .. .. | 95,676 |

1989 மே 2]

(2) சோதனைச் சாவடிகள் : முக்கிய கால்நடை நடமாட்டத்தைக் கவனிக்கும் படியாக மாவட்ட எல்லையோரங்களுக்கு ஊடே சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டுள்ளன. வெக்கை நோய் மற்றும் கோமாரி நோய்த்தடுப்புசிகள் போடப்பட்ட கால்நடைகளே நோயற்ற மண்டலப் பகுதிக்குள் உட்புக அனுமதிக்கப்படுகின்றன. 1988–89ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) 75,835 கோமாரி நோய்த் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

(3) நோய்க் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் :

மேற்கண்டவாறு கால்நடைகளுக்குப் பெருமளவில் தடுப்பூசிகள் போடப்பட்ட பின்னர், தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளில் நோய்த் தன்மை ஏதும் இருக்கிறதா என்பதைக் கண்டறிய வேண்டியதும் இன்றியமையாததாகும். இவ்விதம் நோயைக் கண்டறிந்து நோயின் கூறை முற்றிலும் ஒழிக்கும் பொருட்டு நோய்க் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) வெறிநாய் நோய்த் தடுப்புப் பிரிவு :

மிருகங்களிலிருந்து மனிதர்களுக்குப் பரவக் கூடியது வெறிநோயாகும். நாய்கள் அனைத்தையும் வெறிநாய் நோயிலிருந்து பாப்பதற்காக, ஆரம்ப கட்டமாக, கோயம்புத்தூர் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இங்குள்ள நாய்கள் அனைத்துக்கும் கட்டாயமாகத் தடுப்பூசிகள் போடப்பட்டு, உரிமம் வழங்கப் படுகிறது. தெருநாய்கள் பிடிக்கப்பட்டுக் கொல்லப்படுகின்றது. 1988–89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 வரை) 2,516 நாய்களுக்குத் தடுப்பூசிகள் போடப்பட்டு, 1,728 தெரு நாய்கள் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டன.

கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை

(1) தடுப்பூசி மருந்து உற்பத்தி :

மாநிலத்தில் பல்வேறு தொற்று நோய்களைத் தடுப்பதற்காக, ஒழுங்கான கால இடைவெளியில் தடுப்பூசிகள் போடுவதின் மூலம் நோய் நீக்கப் பணிகளைச் செய்வதற்கு ஏதுவாக இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் மருந்துகளைத் தயாரிக்கிறது. பல்வேறு தொற்று நோய்களிலிருந்து கால்நடைகளைக் காப்பதற்கானத் தடுப்பு மருந்துகளைத் தயாரிப்பதற்காக இந்தியாவிலேயே முதன் முதலில் ஏற்படுத்தப்பட்ட நிலையங்களில் ஒன்றான இது 1932இல் ஏற்படுத்தப்பட்டதாகும்.

[1989 மே 2

கீழே கண்டுள்ள முக்கிய நோய்களுக்கானத் தடுப்பு மருந்துகள் இந்த நிலையத்தில் தயாரிக்கப்படுகின்றன.

மாடுகளுக்கு : வெக்கை நோய், தொண்டை அடைப்பான், சப்பை நோய், அடைப்பான்.

ஆடுகளுக்கு : ஆட்டம்மை, வெக்கை நோய், துள்ளுமாரி.

நாய்கள் : டிஸ்டம்பர், வெறிநாய்க்கடி.

கோழிகள் : கோழிக் கழிச்சல், கோழி அம்மை.

இவை தவிர மாநிலத்திலுள்ள கோழிகளைக் காப்பதற்கான மேரக்ஸ் நோய்த்தடுப்பு மருந்தும், இளங் கன்றுகளை புரு செல்லா நோயிலிருந்து தடுப்பதற்கான மருந்தும் இந்நிலையத்தில் தயாரிக்கப்படுகின்றன.

குறிப்பிட்ட நோய்களை முற்றிலும் தடுப்பதில் மிகுந்த ஆற்ற லுள்ளது என இங்கு தயாரிக்கப்படும் தடுப்பு மருந்துகள் நிரு பிக்கப்பட்டுள்ளன. இங்கு தயாரிக்கப்படும் மருந்துகள் வெளி மாநிலங்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றன.

**(2) நோய் கண்டறிதல் :**

இந்நிலையத்தின் முக்கியப் பணிகளில் ஒன்று நோய்களைக் கண்டறிவதாகும். விஷத்தினால் இறப்பது உட்பட எல்லா கால் நடை நோய்களைப் பற்றியும் இந்நிலையம் ஆராய்ச்சி செய் கிறது. இதற்காக நோய் கண்டறியும் பிரிவுக்குத் தேவையான கருவிகள் அளிக்கப்பட்டு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாடுகளுக்கான நோய் காரணங்களைக் கண்டறிவதில் ஒரு உதவி ஆராய்ச்சி அலுவலரும், மற்றும் செம்மறியாடு, வெள்ளாடு, கோழிகள் ஆகியவற்றின் நோய்க் காரணங்களைக் கண்டறிய இதர இரண்டு உதவி ஆராய்ச்சி அலுவலர்களும் உள்ளனர். இவர்களுக்கு உதவி செய்ய நுண் ஆராய்ச்சியாளர், நோய்க்குறி ஆய்வு வல்லுநர் மற்றும் உயிர்வேதியியல் வல்லுநர் ஆகியோர் உள்ளனர்.

**(3) பயிற்சி :**

கால்நடை மருத்துவ நிலையங்களில் நோய்க்காப்பு மற்றும் உயிர் வேதியல் ஆராய்ச்சிக்காக நவீன உபகரணங்கள் உள்ளன. களப்பணியாளர்கள் இவற்றைப் பயன்படுத்தி சோதனைகளை மேற்கொள்வதற்காக கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் களுக்கும், கால்நடை உதவி மருத்துவர்களுக்கும் இந்நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதோடு கூட துறை அலுவலர்களுக்கு முறைப்படி பணியிறைப்பயிற்சியும் அளிக்கப்படுகிறது. கால்நடை நடை மருத்துவம் மற்றும் பொது சுகாதராம் பற்றிய பயிற்சி

1989 மே 2]

வெளி மாநிலங்களிலிருந்து வரும் விஞ்ஞானிகளுக்கு அளிக்கப் படுவதுடன் கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(4) மருந்து தயாரிக்கும் நிலையம் :

மாநிலத்திலுள்ள பல்வேறு கால்நடை மருத்துவ நிலையங் களுக்குத் தேவையான மருந்துகளைத் தயாரிப்பதையும் கால் நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் மேற்கொண்டுள்ளது. ஆரம்பக் கட்டமாக, களிம்பும், கலவைகளும், தயாரிக்கும் பணி துவக்கப்பட்டுள்ளது. சாலிசிலிக், அயோடின், துத்தநாகம் போன்ற களிம்புகள் இந்நிலையத்தில் தயாரிக்கப்படுகின்றன. இது தவிர டர்பன்டைன் தைலமும் தயாரிக்கப்பட்டு, கிளை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

நோய்களைத் தகுந்த நேரத்தில், சரியானபடி கண்டுபிடிப்ப தற்கான மருந்துகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. புருசல்லா ஆண்டிஜன், சால்மொநெல்லா ஆண்டிஜன், டியூபர்குளின், பி.பி.எல்.ஓ. ஆண்டிஜன் ஆகியவை இதில் அடங்கும்.

அரசு நிறுவனங்கள்

(அ) தமிழ்நாடு இறைச்சிக் கழகம் :

தமிழ்நாடு இறைச்சி நிறுவனம், இறைச்சிக்காக கால்நடை களை நவீன முறையில் கட்டப்பட்ட இறைச்சிக் கூடங்களில் சுகாதாரமான முறையிலும், தகுந்த பரிசோதனைக்குப் பிறகும் வெட்டி தரமான இறைச்சியினை சென்னை மற்றும் புறநகர் பகுதிகளிலும் வசிக்கும் இறைச்சி நுகர்வோருக்கு கிடைக்கச் செய் யும் பொருட்டு 1979ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

இவ்விலக்குகளை எய்தும் நோக்கத்தோடு சென்னையிலிருந்து 2, கி.மீ. தொலைவிலுள்ள கொடுவள்ளி கிராமத்தில் நவீன இறைச்சிக் கூடம் அமைப்பதென திட்டமிடப்பட்டது. இதற்கான கட்டுமானப்பணிகள் பெரும்பகுதி முடிவுற்ற நிலையில் சுற்றுப்புற சூழலினை கருத்தில் கொண்டு இத்திட்டத்தினை கைவிடுமாறு அரசு உத்தரவிட்டது.

நவீன இறைச்சிக் கூடம் அமைக்க தகுந்த மாற்றிடம் ஏதும் கிடைக்கப் பெறாமையினால் தற்பொழுது பெரம்பூரில் இயங்கி வரும் இறைச்சிக் கூடத்தினை ரூ. 200 இலட்சம் செல வில் நவீன படுத்துவதென திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் முதற் கட்டமாக மாடுகள் அறுவைக் கூடத் தினை ரூ. 60.00 இலட்சம் செலவில் நவீனப்படுத்தித் திட்ட மிடப்பட்டு இதன் சரிபாதி நிதி உதவியான ரூ. 30 இலட்சத்தினை வழங்கக்கோரி மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பெரம்பூர், வில்லிவாக்கம், சைதாப்பேட்டை மற்றும் பேசின்பாலம் ஆகிய இடங்களில் இயங்கி வரும் இறைச்சிக் கூடங்களை சென்னை மாநகராட்சியிடமிருந்து குத்தகை அடிப்படையில் ஏற்று இந்நிறுவனம் நடத்தி நன்முறையில் பராமரித்தும் வருகிறது.

சென்னை மாநகரத்தில் வசிக்கும் இறைச்சி நுகர்வோருக்கு தரமான இறைச்சியினை நியாயமான விலையில் வழங்கும் பொருட்டு இந்நிலையம் அண்ணாநகர், நந்தனம், அசோக் நகர் மற்றும் தண்டையார்பேட்டை ஆகிய இடங்களில் சில்லரை அங்காடிகளை அமைத்து நிர்வகித்து வருகிறது. மேலும் இதனை நகரத்தில் இதர பகுதிகளுக்கு விரிவுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் இவ்விறைச்சி நிறுவனத்தினை தமிழ்நாடு கோழி வளர்ச்சி, கழகத்துடன் இணைப்பதென அரசு முடிவெடுத்துள்ளது. இதன்மீது ''கம்பெனி லா போர்டுடைய'' இணக்கம் பெறப்பட்டதும் உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும். தற்பொழுது இவ்விரு நிறுவனங்களும், ஒரே தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

## (ஆ) தமிழ்நாடு கோழியின் வளர்ச்சிக் கழகம்.

தமிழ்நாடு கோழியின் வளர்ச்சிக் கழகம் 12-7-1973-ல் தமிழ்நாட்டில் கோழி வளர்ப்பை அபிவிருத்தி செய்ய ரூ. 100 இலட்சம் மூலதனத்துடன் அரசு நிறுவனமாகத் துவங்கப்பட்டது.

டாப்கோ நிறுவனம் குஞ்சு பெரிப்பகத்தின் மூலம் வீரிய இன முட்டை கோழிக் குஞ்சுகள், பிராய்லர் (இறைச்சி) கோழிக்குஞ்சுகள் உற்பத்தி மற்றும் தரமான கோழித் தீவனம் தயாரித்தல் மற்றும் முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி விற்பனை செய்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது.

'டாப்கோ' குஞ்சு பொரிப்பகங்கள் அரசூர் (கோவை மாவட்டம்) மற்றும் கப்பலூர் (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் உள்ளன. இங்கு 'பாப்பாக்' வீரிய இன முட்டை கோழிக் குஞ்சுகளும், 'காப்' எனப்படும் பிராய்லர் குஞ்சுகளும் உற்பத்தி செய்யப்பட்டு கோழிப் பண்ணையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தற்பொழுது உள்ள 9,000 தாய் கோழிகள் இருப்பினை (Parent Stock) 19 9—90-ம் ஆண்டில் 19,500 ஆக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. திருச்சியில் 1989–90-ம் ஆண்டில் ரூ. 51.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு குஞ்சு பொரிப்பகம் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலை பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயன் பெறுவோருக்

காக, கோயம்புத்தூர் மாவட்டம் அரசூரிலுள்ள குஞ்சு பொரிப்பகத்தில் கூடுதலாக மற்றமொரு பிரிவு தொடங்க 1989–90-ம் ஆண்டில் ரூ. 20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு கூடுதல் குஞ்சு பொரிப்பு நிலையங்களை அமைப்பதன் மூலம் கோழிக் குஞ்சுகளின் உற்பத்தி தற்போதுள்ள 20 லட்சம் எண்ணிக்கையிலிருந்து ஆண்டொன்றுக்கு 45 இலட்சம் அளவுக்கு உயரும்.

தற்பொழுது 'டாப்கோ' தீவனக் கலவை நிலையங்கள், நந்தனம், திருப்பூர், கப்பலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. சென்ற ஆண்டில் புதிய நிலையம் எதுவும் தொடங்கப்படவில்லை.

1989–90-ம் ஆண்டில் தீவனக் கலவை உற்பத்தியினை தற்போதுள்ள 4,000 மெ.டன் அளவிலிருந்து ஆண்டிற்கு 7,000 மெ. டன் அளவிற்கு அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1989-ம் 90ம் ஆண்டில் மாநிலத்தில் தீவனத்தின் திற்பனையை அதிகரிக்க முகவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். மேலும் நந்தனம் தீவனக் கலவை நிலையத்திலுள்ள மிகவும் பழைய இயந்திரங்களை மாற்றி ரூ. 21 இலட்சம் மதிப்பீட்டில் புதிய இயந்திரங்கள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

டாப்கோவின் விற்பனை நிலையங்கள் சென்னை (அடையாறு) வேலூர், சேலம், கோவை, திருச்சி, மதுரை, தர்மபுரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்படுகின்றன. மேலும் சென்ற இரண்டு ஆண்டுகளில் மாநிலத்திலுள்ள ராணுவப் பாதுகாப்புப் பிரிவுகளுக்கும், அந்தமான், நிக்கோபார் தீவுகளுக்கும் ஒப்பந்தங்களின் மூலம் முட்டைகளையும், கோழி இறைச்சியும் வழங்கியுள்ளது. வேலையில்லா பட்டதாரிகளுக்கும், ஊனமுற்றோர்களுக்கும் சுயவேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு 'டாப்கோ' பொருட்களை விற்பனை செய்ய முகவர்கள் நியமனம் செய்தும் ஏஜென்சி வழங்கியும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தியுள்ளது. இதுகாறும் 73 நபர்களுக்கும் இதுபோன்று டாப்கோ வேலைவாய்ப்பு வழங்கியுள்ளது.

சென்னையில் மேலும் நான்கு விற்பனைப் பிரிவுகள் நிறுவி, அவைகள் மூலம் அரசு மருத்துவ மனைகளுக்கு சில்லரை மற்றும் மொத்த வியாபாரக் கடைகளுக்கும் முட்டை மற்றும் கோழி இறைச்சி ஆகியவற்றை நியாய விலையில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. முட்டைகள், கோழி இறைச்சி ஆகியவற்றைப் பதப்படுத்தி, அவைகளை உடன் உண்ணும் நிலையில் (Fast Food) சென்னை நகர மக்களுக்கு டாப்கோ விற்பனைப் பிரிவுகள் மூலம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய அரசினால் அனுமதியளிக்கப்பட்ட நிதி மூலம் அடையாரில் ரூ. 10.23 இலட்சம் மதிப்பீட்டில் குளிர் சாதனப் பதப்படுத்தும் பிரிவு நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது.

செங்கை-அண்ணா மாவட்டத்தில் 1988–89 ஆம் ஆண்டில் காடைக் குஞ்சு பொரிப்பகம் நிறுவப்பட்டு காடைகள் விற்பனை செய்யத் தொடங்கும் நிலையில் உள்ளது.

1989–90ம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் தெக்குபாளையத்தில், காடைக் குஞ்சு பொரிப்பகம் ரூ. 3 இலட்ச மதிப்பீட்டில் நிறுவப்பட உள்ளது.

கோழித் தீவனத்திற்குத் தேவையான தாதுப் பொருட்கள் வெளிச் சந்தையில் வாங்கப்படுகின்றன. கோழிப் பண்ணையாளர்களின் தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கோடு நல்ல தரமான தாதுப் பொருளை உற்பத்தி செய்ய 1989–90-ம் ஆண்டில் சேஷன்சாவடியில் ரூ. 1.78 இலட்சத்தில் தாதுப்பொருள் நிலையம் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

கோழிப் பண்ணை உபகரணங்கள் வெளிச் சந்தையில் மட்டும் கிடைக்கின்றன. ஆதலால், அரசுத் திட்டங்களில் பயன்பெறும் கோழிப் பண்ணையாளர்கள், கோழிப் பண்ணை அமைக்கும் சாதனங்கள் அவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையில் வாங்குவதற்கு இயலவில்லை. எனவே அவர்களுடைய துன்பங்களை நீக்க 1989–90 ஆம் ஆண்டில் ரூ. 0.80 இலட்சம் மதிப்பீட்டில், செங்கல் பட்டில் கோழிப் பண்ணை அமைப்பதற்குத் தேவையான உபகரணங்கள் தயாரிக்கும் நிலையம் நிறுவப்பட உள்ளது.

1986 ஆம் ஆண்டிலிருந்து 'கோழி கூவுது' எனும் தமிழ்மாத இதழ் டாப்கோ நிறுவனத்தால் வெளியிடப்பட்டு வருகிறது.

1988–89 ஆம் ஆண்டில் 'டாப்கோ' நிறுவனம் 25,500 மெ. டன் அளவிலான இறக்குமதி செய்யப்பட்ட உதவி மக்காச்சோளத்தினை கோழிப் பண்ணையளார்களுக்கு வழங்கியுள்ளது. இதன் மூலம் கோழித் தீவனத்தின் விலை கணிசமாகக் குறைந்துள்ளது. டாப்கோ செயல்படுத்தும் இத்திட்டம் நாட்டிலேயே சிறந்த முறையில் செயல்படுத்தப்படும் திட்டமென்று பாராட்டப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டிலும் இதே போன்று உதவி மக்காச்சோளம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

---